மாநகராட்சிக்கு சொந்தமான 17 விற்பனை நிலையங்கள் மற்றும் 13 மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் மூலம் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விற்பனையைப் பொறுத்தவரை , அரசாங்க நிறுவனங்களுக்கு (ஆயுர்வேத மருத்துவமனைகள் மற்றும் பிரதேச இலவச ஆயுர்வேத மையங்கள்) அதிக விற்பனை செய்யப்பட்டது. அதன்படி , மொத்த விற்பனை மதிப்பு ரூ.1,218 மில்லியன் மற்றும் முந்தைய ஆண்டு மதிப்புடன் ஒப்பிடும் போது இது 29% அதிகரிப்பு ஆகும்.

iii. புதிய தயாரிப்புகளின் அறிமுகம்

அருளு மாத்திரைகள், சுவ தராணி காப்ஸ் யூல்கள் , பஞ்ச லலகுதிராக்ஷகாஷ்ய மாத்திரைகள், ஏரண்ட சப்த ககஷாய மாத்திரைகள் இதந்தி மூலடிகாஷாய மாத்திரைகள் , கார்ப்பரேஷன் முதலுதவி பெட்டி, கார்ப்பரேஷன் ஆயில் பேக், தவிலிபொட்டானியா (நாராயண /பண்டா / நிர்குந்தியடிகள் போன்றவை) , காஞ்சனாரா 5000 கிராம் சுர்ணய (500g) பொருட்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் அனைத்து வகையான மாத்திரைகள் , குலி மற்றும் காப்ஸ்யூல்களை கொப்புளப் பொதியில் சந்தைக்கு வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

iv.மூலதன திட்டங்கள்

நிறுவனத்தின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக 02 ஹீட்ஷ்ரிங்க் பொதி கட்டல் இயந்திரங்கள் மற்றும் ஒரு தானியங்கி மாத்திரை எண்ணும் இயந்திரம் நிறுவப்பட்டது.

v.மூலிகைத் தோட்டங்களின் வளர்ச்சி (ஓசு உயன)

தங்கல்லை, ரந்தேனிகம மற்றும் மெதவாச்சியிலுள்ள மூலிகைத்தோட்டங்களின் விற்பனை வருமானம் பின்வருமாறு:

மூலிகை தோட்டம்	ஆண்டு வருமானம் (ரூ.)
தங்கல்ல	4,588,489.85
ரந்தெனிகம	4,387,444.88
மதவாச்சியா	24,512.00
மொத்தம்	**8,800,446.73**

vi. புதிய ஆயுர்வேத விற்பனை மையங்கள் திறப்பு

இலங்கை ஆயுர்வேத மருந்துக்கூட்டுத்தாபனத்தின் அனுராதபுர விற்பனைநிலையம் 15.06.2023 அன்று புதிய இடத்தில் நிறுவப்பட்டதுடன் வட மத்திய மாகாணத்தில் விளைவிக்கப்படும் அனைத்து வகையான உலர் மருந்துப்பொருட்களையும் சேகரிக்கும் நிலையம் மற்றும் மூலிகைப்பொருட்களை கொள்வனவு செய்யும் நிலையமும் நிறுவப்பட்டது

vii. www.sladc.lk இணையத்தளத்திற்கான விருது

ஆயுர்வேத மருந்துக்கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.sladc.lk ஆனது 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த இணையத்தளத் தெரிவு விருதுகளில் சிறந்த சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய இணையத்தளம் என்ற பிரிவின் கீழ் வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.

viii. தரஉத்தரவாதம் (ISO)

தர முகாமைத்துவ முறைமைக்காக நாவின்னவில் உள்ள பிரதான உற்பத்தி ஆலையிலும் பத்திரகொடையில் உள்ள புதிய உற்பத்தி ஆலையிலும் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் படி இலங்கை தர நிலை நிறுவனம் (ISO9001:2015) சரியான முறையில் இந்த உற்பத்தி ஆலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளது.

ix. "ரசபெஹத்" தொழிற்சாலை தொடங்குதல்

இத்திட்டத்தை செயல்படுத்தும் போது ஏற்பட்ட சிக்கல் சூழ்நிலையால் இத்திட்டத்தின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு 2023 ல் மீண்டும் துவங்கப்பட்டு 2024 ம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

x. அரைக்கும் இயந்திரத்தை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல்

2020ல் வாங்கப்பட்ட இந்த இயந்திரம் ரூ.5,049,166.67, 2023 இல் நிறுவப்பட்டு உற்பத்தி செயல்முறைக்கு பயன்படுத்தப்பட்டது. மருத்துவ மூலப் பொருட்களின் முன் செயலாக்கத்தில் இது திறமையாக செய்யப்பட்டது

xi. வெற்று பாட்டில்கள் சேகரிப்பு மற்றும் செலவு கட்டுப்பாடு

தூக்கி எறியப்பட்ட பாட்டில்களை மறுசுழற்சி செய்து செலவைக் குறைப்பதன் மூலம் அவற்றை மீண்டும் பயன்படுத்துதல். 2023 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பாட்டில்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 350,000 ஆகும்

xii. உற்பத்தி ஆலையில் காலியிடங்களை நிரப்புதல்

நீண்ட காலமாக காலியாக உள்ள உற்பத்தி நிலைய ஊழியர்களின் 50 உற்பத்தி உதவியாளர் பணியிடங்களை நிரப்ப இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இது உற்பத்தி திறனை அதிகரிக்கவும் உற்பத்தி செயல்முறையை திறம்பட செய்யவும் உதவியது.

xiii. ஈ ஆர் பி (ERP) கணினி மென்பொருள் அமைப்பை நிறுவுதல்

தற்போது பயன்படுத்தப்படும் கணினி மென்பொருள் அமைப்புக்கு அப்பால் ஒவ்வொரு துறையையும் இணைக்கும் வகையில் நவீன மயமாக்கப்பட்ட ஈ ஆர் பி கணினி மென்பொருள் அமைப்பை அதிக வசதிகளுடன் நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.இப்பணிக்கு ஏற்ற நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான கொள்முதல் செயல்முறை தொடங்கப்பட்டு டிசம்பரில் ஏல மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.இந்தஈஆர்பிமுறையை 2024 ல் தீவிரமாக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

31.12.2023 நிலவரப்படி சுதேச மருத்துவத் துறையின் நிதி முன்னேற்றம்

வாக்கு பேரேடு விவரங்கள்	ஒதுக்கீடு (ரூ.)	செலவு (ரூ.)	செலவினத்தின் சதவீதம் (%)
மீள் செலவீனம்	**359,600,000.00**	**355,755,914.86**	**98.93**
பொதுநிர்வாகம் / பிற திட்டங்கள்	307,600,000.00	304,522,930.76	99.00
• அரசு நிறுவனங்கள்			
ஹோமியோபதி மருத்துவ கவுன்சில்	30,000,000.00	29,744,614.32	99.15
ஹோமியோபதி மருத்துவமனை	22,000,000.00	21,488,369.78	97.67
மூலதனசெலவு	**14,400,000.00**	**11,178,409.96**	**77.63**
பொது நிர்வாகம் / பிற திட்டங்கள்	5,400,000.00	4,363,189.96	80.80
• சுதேச மருத்துவ பாதுகாப்பு கவுன்சில்	3,000,000.00	2,650,868.59	88.36
• ஹோமியோபதி கவுன்சில்	1,000,000.00	390,140.00	39.01
• ஹோமியோபதி முறைகளின் வளர்ச்சி	2,5000,000.00	2,498,311.41	99.93
• போஷண மந்திரா (சத்துணவு இல்லங்கள்) நிறுவுதல்	2,500,000.00	1,275,900.00	51.04
மொத்தம்	**374,000,000.00**	**366,934,324.82**	**98.11**

வாக்கு பேரேடு விவரங்கள்	ஒதுக்கீடு (ரூ.)	செலவு (ரூ.)	செலவினத்தின் சதவீதம் (%)
மற்றவை	20,000,000.00	18,262,431,92	91.31
• ஆயுர்வேதத்துடன் கூட்டுறவு பராமரிப்பு •	10,000,000.00	9,354,537.45	93.55
• தொற்றா நோய்களின் கட்டுப்பாடு •	10,000,000.00	8,907,894.47	89.08
மொத்த தொகை	394,000,000.00	385,196,756.74	97.77

எதிர்கால இலக்குகள்

(i) சுதேச மருத்துவக் கொள்கை அறிமுகம் செய்தல்

(ii) சுதேச மருத்துவ துறை தொடர்பான சட்ட கட்டமைப்பின் ஒழுங்குபடுத்தும் திறனை விரிவுபடுத்துதல்

(iii) தேசிய சுகாதார அமைப்பில் அதிக பங்களிப்பிற்காக மருத்துவமனை அமைப்பை மேம்படுத்துதல்

(iv) உள்நாட்டு மருந்துவதுறை உள்ள ஆற்றல்கள் மூலம் அந்நியசெலாவணியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

(v) மருத்துவ தாவரங்களை வளர்ப்பதன் மூலம் மருந்துகளை இறக்குமதி செய்வதில் அந்நிய செலாவணியை குறைத்தல்

(vi) பாரம்பரிய மருத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்

(vii) நஞ்சற்ற மற்றும் சத்துள்ள உணவுகளை பெறுவதை ஊக்குவித்தல்

(viii) மத்திய மருந்துக்களஞ்சியத்தை நிறுவுதல் மற்றும் பயிரிடப்பட்ட மருத்துவ தாவரங்களை வாங்குவதற்கான வழிமுறையை உருவாக்குதல்

(ix) பாரம்பரிய மருத்துவ முறைக்கு சுற்றுலா பயணிகளை கவர நடவடிக்கை எடுத்தல்

(x) முக்கிய சுற்றுலாப் பகுதிகளில் ஆரோக்கிய மையங்களை நிறுவுதல்

(xi) யக்கலையில் ஆயுர்வேத வலய அபிவிருத்தி

(xii) ற்போதுள்ள மூலிகைத் தோட்டங்களை அதிக பட்ச திறனில் நடத்தி அந் மூலிகை தோட்டங்களில் இருந்து மருத்துவமனைகளுக்கு மூலிகை பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல்

(xiii) அடையாளம் காணப்பட்ட மூலிகை தோட்டங்களில் மருத்துவ சுற்றுலா தொடங்குதல்

(xiv) மேற்கத்திய மருத்துவத்துடன் இணைந்து ஆயுர்வே சிகிச்சை சேவைகளில் நோய்தீர்க்கும் சேவைகள்

(xv) தொற்றக்கூடிய மற்றும் தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் பல மூலோபாய முறைகளை நடைமுறைப்படுத்துதல்

(xvi) சுதேச மருத்துவத்துடன் தொடர்புடைய சரியான நேரத்தில் தேவைப்படும் மற்றும் டைமுறைபடிப்புகளை அறிமுகப்படுத்துதல்

(xvii) பாரம்பரிய மருத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்

(xviii) மாற்றுமுறையாக ஹோமியோபதி முறையை பொதுமக்களுக்கு கிடைக்க டவடிக்கை எடுத்தல்

(xix) ஆயுர்வேத மருந்து உற்பத்தியின் விரிவாக்கம் மற்றும் பல்வகைப்படுத்தல்

(xx) ஆயுர்வே ஆராய்ச்சி உட்பட ஒரு கருத்தரங்கு மற்றும் தேசிய கண்காட்சியை டத்துதல்

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

.....

செயலாளர்
சுகாதார அமைச்சகம்
2024.10.03

அத்தியாயம் 3

வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

எசீஎ- எப்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023		குறிப்பு	உண்மை நிலை 2023	2022	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஎ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		292,150,453,218	157,927,902,245	ஏசீஎ-3
-	வைப்புகள்		1,334,716,489	784,200,755	ஏசீஎ-4
-	முற்பணக் கணக்குகள்		1,141,199,128	1,232,790,489	ஏசீஎ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		294,626,368,835	159,944,893,489	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		294,626,368,835	159,944,893,489	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		875,322,682	125,153,299	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		293,751,046,153	159,819,740,190	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
116,459,228,032	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	114,689,616,415	111,126,392,855	
183,946,853,968	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	170,109,814,212	89,891,540,715	ஏசீஎ-2(ii)
12,119,968,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	8,454,093,900	6,438,236,327	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
312,526,050,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		293,253,524,527	207,456,169,897	
	மூலதன செலவினம்				
13,529,300,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	8,891,609,411	3,160,082,684	
38,524,010,789	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	11,605,503,841	13,761,753,193	
218,000,000	மூலதன மாற்றல்கள்	12	154,200,869	204,252,921	ஏசீஎ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
2,282,944,676	நிறன் விருத்தி	14	2,065,306,252	1,477,231,808	
9,948,866,895	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	3,347,513,899	14,792,707,200	
64,503,122,360	மொத்த மூலதனம் செலவினம் (எ)		26,064,134,272	33,396,027,805	
	வைப்புக் கொடுப்பனவுகள்		1,213,249,048	659,752,806	ஏசீஎ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		1,264,445,494	1,084,003,608	ஏசீஎ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		2,477,694,541	1,743,756,413	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		321,795,353,341	242,595,954,115	
377,029,172,360	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(28,044,307,188)	(82,776,213,925)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(28,044,672,640)	(82,776,579,377)	ஏசீஎ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		365,452	365,452	ஏசீஎ-3
			(28,044,307,188)	(82,776,213,925)	

3.3 நிதி நிலை அறிக்கை

ஏசீஏ 3

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உள்ளவாறு நிலவரம் 2023 ரூ.ஈ	2022 ரூ.ஈ
நிதி சொத்துக்கள் அல்லாத			
அசையா, பொறிஞ் தொழில் மற்றும் உபகரணம்	ஏசீஏ 6	204,292,957,237	200,118,271,330
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5(அ)	3,597,321,387	3,574,075,021
வங்கி மற்றும் காசுக்குச் சமமானவை	ஏசீஏ 3	365,452	365,452
மொத்த சொத்துக்கள்		207,990,644,076	203,692,711,803
நிதிப் பொறுப்புக்கள் / உரிமைப் பங்கு			
திரும்பளிக்கத் தேவில்லை சொத்துக்கள்		1,717,664,315	1,715,885,391
அசையா, பொறிஞ் தொழில் மற்றும் உபகரண ஒதுக்கம்		204,292,957,237	200,118,271,330
வாடகை மற்றும் பணி மூப்பு ஒதுக்கம்	ஏசீஏ-5(ம)		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	1,979,637,071	1,858,189,630
இருக்கும்படி வருமான நிதி	ஏசீஏ-3	365,452	365,452
மொத்தப் பொறுப்புக்கள்		207,990,644,076	203,692,711,803

[illegible] நிதி நிலைமைக் கூற்று [illegible] ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையுள்ள பார்சீய கொள்கைகள் மற்றும் விளக்கங்களுடன் மற்றும் [illegible] சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும். இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு இங்கு இருந்த [illegible] கணக்குகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் [illegible] வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இருந்த் கணக்குகளின் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள [illegible] கொள்கைகளுக்கு இணங்கி நாம் [illegible] நிதி நிலைமைகளில் [illegible] முறை நிதிக்கூற்றுகளின் குறிப்புகளின் முறை கொள்ளப்படுகிறது. மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மதிப்பீடுகள் [illegible] நியாயமானவை. மேலேயுள்ள நிதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் நிறைவேற்று முகாமைத்துவத்தின் சிறப்பான செயற்பாட்டினை [illegible] வரையறுப்பதாக அமைவதோடு அவர் தொடர்பான [illegible] எல்லாவற்றையும் இத்தால் சமர்ப்பித்துள்ளோம்.

நிதி நிருவாகத்தினால் வினைத்திறனுடன் உள்ள நிருவாகச் செயற்பாடுகளை நிர்வகித்தில் கணப்படுகின்ற வகை நிதி நிருவாகத்திற்காக உரிய நிருவாக சொத்துகளில் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அதற்கு அவசியமான அதற்கு தொடர்பான வினைத்திறனுடன் முகாமைத்துவதற்குத் தேவையான மற்றவைகளை மேற்கொள்ளுதல் தொடர்பான பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு இதனால் சமர்ப்பிக்கிறோம்.

பிரதான கணக்கு உத்தியோகத்தர்
பெ.மு:
பதவி:
திகதி: 22/02/2024

கணக்குப் பகுதி உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி: 21/02/2024

பிரதான நிதி உத்தியோகத்தர்
பணியாளர் நிதி ஆலோசனையாளர்(நிதி)
பெயர்:
திகதி: 21/02/2024

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

G.S.Karunarathn
Chief Finance Office
Ministry of Health

3.4 பணப் புழக்கங்களின் அறிக்கை

ஏசிட்-ச

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
பொருட்களின் விற்பனைகள்	-	-
கட்டணங்கள், தரகுப்பணங்கள், நிர்வாகச் சேவைகள் மற்றும் உற்பத்திப் பற்றுரைகள் (நிகரம்)	-	-
வருமானம் அல்லது வருமதிகள்	-	-
முகாமை செய்யும் தரகர்களுக்காக சேகரிக்கப்பட்ட வரிகளைத் தவிர்த்து	6,339,574,137	4,871,281,260
வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணம்	292,150,287,766	157,922,769,231
முதலாளிகளை குறித்து	1,157,300,968	1,301,228,473
வரிப்பற்றின் பிறவாக	1,334,716,480	777,245,765
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	300,961,679,351	164,826,521,789
கழி - பயிரதளிக்கப்பட்ட காசு		
வழங்குநர்கட்கான கொடுப்பனவுகள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகள்	276,29 ,170,141	193,134,187,374
வரிகளுக்கும் மற்றும் கொடுப்பனவுகளும்	3,211,118,919	1,607,599,059
முகாமை செலவுகளுக்காக செலுத்தப்பட்ட வரிகளைத்	293,284,965	(43,33 ,831,429)
நிலைமாற்றுக் கிரக்கப்பட்ட வரிமுறைகள்	875,999,683	125,153,299
முற்கால கொடுப்பனவு	1,764,259,101	1,092,346,241
வரிப்பற் கொடுப்பனவு	1,2 3,2 9,268	544,62 ,262
தொழிற்பாடுகளுக்கு பயிற்றுவிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	283,055,354,857	155,262,085,806
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	17,906,325,094	9,564,435,983
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமைப் பேற்ற முகாமை மற்றும் சொத்தீட்டு மேம்படுத்தல்களின் விற்பனை	-	-
கூட்டு வணிகங் கூட்டுக்களில்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (உ)	-	-
கழி - பிரிந்தளிக்கப்பட்ட காசு		
மூலதன செலவினம்		
முதலீட்டுச் சொத்துகளுக்கு முகமைப்பட்ட மொத்தக் காசு (ஊ)	17,906,325,094	9,568,203,486
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான நிகர காசுப் பாய்ச்சல் (எ)=(உ)-(ஊ)	17,906,325,094	9,568,203,486
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(எ)	(17,906,325,094)	(9,568,203,486)
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		(3,767,503)
உரிமைத் தடங்கல்	-	-
கொடுப்பனவுத் தடங்கல்	-	-
பிற நடவடிக்கைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பயிரதளிக்கப்பட்ட காசு		
உரிமைத் தடங்கல் நிதியல் மீளக் கொடுப்பனவுகள்	-	-
கொடுப்பனவுத் தடங்கல் நிதிய மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பயிற்றுவிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஏ)-(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அலைவு (இ)+(ஈ)+(ஏ)		(3,767,502)
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மிதி	365,452	4,132,954
டிசம்பர் 31ஆம் திகதியுள்ளவாறான மூடுக் காசு மிதி	365,452	365,452

3.5 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

இல்லை

3.6 வருவாய் சேகரிப்பின் செயல்திறன்

ரூபா/மில்லியன்

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
20.02.01.01	அரசாங்க கட்டிடங்களுக்கான வாடகை	175.00	175.00	263.53	151
20.02.01.99	அரசாங்கம் சொத்துக்கள் மீதான வருவாய் பிற வாடகைக் கட்டணங்கள்	18.00	18.00	30.36	169
20.02.02.99	ஏனைய வட்டிகள்	103.80	103.80	103.09	99
20.03.01.00	விற்பனை வருமானம் மற்றும் கட்டணங்கள் - திணைக்களங்களின் விற்பனை	30.00	30.00	75.03	250
20.03.02.99	விற்பனை வருமானம் மற்றும் கட்டணங்கள் - நிர்வாகக் கட்டணங்கள் மற்றும் இதர பொருட்களுக்கான கட்டணங்கள்	35.00	35.00	62.71	179
20.03.03.02	விற்பனை வருமானம் மற்றும் கட்டணங்கள் - அபராதங்களும்ஏனைய இழப்புக்களும்	8.00	8.00	89.22	1115
20.03.99.00	விற்பனை வருமானம் மற்றும் கட்டணங்கள் - மற்ற ரசீதுகள்	815.00	1,500.00	2,736.00	182
20.05.99.00		0	0	0	0
20.06.02.00		0	0	0	0
20.06.02.02	மூலதன சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வருவாய் – ஏனையவை	0	0	2.88	0

3.7 ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயல்திறன்

ரூபா.,000

ஒதுக்கீடு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவு	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீடு பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	*245,550,000*	*312,526,050*	*293,253,524*	*94*
மூலதனம்	*54,940,000*	*64,503,122*	*26,064,134*	*40*

3.8 நி.பி. குறிப்பு இன் அடிப்படையில் 208, இதற்கான செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்ற அமைச்சகங்கள்/ துறைகளின் முகவராக திணைக்களம்

ரூபா.,000

தொடர் இல.	எவ் அமைச்சு/ திணைக்களத்திலிருந்து ஒதுக்கீடு பெறப்பட்டது	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவு	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீடு பயன்பாடு
			அசல்	இறுதி		
01	*228 – நீதிமன்ற நிர்வாகம்*	சட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு எரிபொருள் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு செலுத்துதல்	*20,000*	*16,500*	*15,418*	*93*

3.9 நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையின் செயல் திறன்

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	*31.12.2023* திகதி சுற்றாய்வுச் சபை அறிக்கைபடி மீதி	*31.12.2023* திகதி நிதி நிலைமை அறிக்கைபடி மீதி	எதிர்காலத் தில் கணக்கிட வேண்டியது	அறிக்கை யிடல் முன்னே ற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	*69,985,283,027.79*	*69,985,283,027.79*		
9152	போக்குவரத்து உபகரணங்கள்	*67,124,483,112.82*	*67,124,483,112.82*		
9153	காணி	*52,771,735,512.00*	*52,771,735,512.00*		
9154	புலனாகாத சொத்துக்கள்	*99,326,825.91*	*99,326,825.91*		
9160	நடந்து கொண்டிருக்கிம் வேலை	*27,348,131,535.28*	*27,348,131,535.28*		
	மொத்தம்	***217,328,960,013.80***	***217,328,960,013.80***		

MED/B/MH/02/2023/92
2024 ஜூலை 04 ஆம் திகதி

செயலாளர்,
சுகாதார அமைச்சு

சுகாதார அமைச்சின் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று அறிக்கைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை

சுகாதார அமைச்சின் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்திறன் அறிக்கை மற்றும் காசுப் பாய்ச்சல் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று அறிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் விதிகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் விதிமுறைகளுக்கு அமைய எனது வழிகாட்டுதலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11 (1) இன் படி சமர்ப்பிக்கப்படுவதுடன், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 39 இன் படி நடவடிக்கை எடுத்து இந்த அறிக்கை தினத்தில் இருந்து 03 மாதங்களுக்குள் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அல்லது பரிசீலிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் எனக்கு அறிக்கையிடல் வேண்டும். இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் அல்லது விடயங்கள் தொடர்பாக செயற்படுத்தல் அல்லது செயற்படுத்தாமைக்கான காரணங்கள் இருப்பின் அது குறித்து எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

1.2 நிதிக்கூற்று தொடர்பான கருத்துகள்

1.2.1. நிதிக்கூற்று தயாரிப்பில் உள்ள பிழைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்		பரிந்துரை	பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்
(அ)	2023 ஆம் ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின்படி செலவினக்கூற்று ACA 2(ii) படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு செலவினங்களினதும் தேறிய ஏற்பாடு மற்றும் உண்மைச் செலவினத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்திற்கான காரணமாக குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை ஏற்க முடியாதென்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு		
	i. 111-01-02-1-1508-02 மருத்துவ சபை (மருத்துவ சபை சட்டம்) செலவின விடயத்திற்காக ரூ. 2.000 ஒதுக்கப்பட்டபோதிலும் 2021 ஆம் ஆண்டு முதல் இந்த ஒதுக்கீடு முழுமையாக மீதமாக இருந்தது. மருத்துவ சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதால் அமைச்சினால் இந்த செலவின விடயத்திற்காக மதிப்பீடு சமர்ப்பிக்காத போதிலும் திறைசேரியினால் நிதி ஒதுக்கப்பட்ட காரணத்தால் நிதி மீதமாகியது என அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும், இந்த ஒதுக்கீட்டை மதிப்பீட்டிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செலவிட எதிர்பார்க்காத செலவு விடயங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடாது.	அவதானிப்புகளுடன் இணங்குகிறேன். இந்த செலவு விடயத்திற்காக செலவு வரைபு மதிப்பீடு செய்யாதிருக்குமாறும், வரவு செலவு பேச்சுவார்த்தைகளின் போது இந்த ஒதுக்கீட்டை நீக்குமாறு அறிவிக்கப்பட்டதாகவும், எனினும் இது ஒரு அரசாணை என்பதால் பாராளுமன்ற அனுமதி தேவை எனவும் திறைசேரியினால் கூறப்பட்டதாக இது குறித்து திறைசேரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும்
	ii. 111-01-02-1-1508-04 குணப்படுத்த முடியாத நோயாளர்களுக்கான விக்டோரியா இல்லத்திற்கான செலவு விடயத்திற்கு ரூ. 3,000,000 ஒதுக்கப்பட்டபோதிலும் ஒதுக்கீடு முழுமையாக மீதமாக இருந்ததுடன், உரிய கோரிக்கை சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் இவ்வாறு 100	-அவ்வாறே-	இது ஒரு மானியம் என்பதால், சுமார் 02 வருடங்களாக அதனை பெறவில்லை எனவும் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதை தவிர்க்குமாறு

	சதவீதமும் மீதமாகியது என குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட முழு ஒதுக்கீடும் மேற்படி காரணத்தால் வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி இந்த மீதத்திற்குக் காரணம் கோரிக்கை சமர்ப்பிக்கப்படவில்லையா அல்லது வேறு ஏதாவது காரணங்களா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.		
	iii. 111-02-13-178-2001 (13) மற்றும் சுகாதார அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி) இற்கான செலவின விடயத்திற்காக 675,000,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், முழு ஒதுக்கீடும் முழுமையாக மீதமாக இருந்ததுடன், முற்பணம் போதியளவு சமர்ப்பிக்காமை, அரச செலவினங்களைக் குறைத்தல், சிவில் வேலை ஒப்பந்தங்களில் முன்னேற்றம் குறைந்த வேகத்தில் காணப்பட்டமை என்பன ஒதுக்கீடு 100 சதவீதமும் மீதமானதற்கான காரணமாக குறிப்பிட்டுள்ளது. எனினும், 1990 சுவசெரிய நிறுவனத்திற்காக ஆம்புலன்ஸ் (Ambulance) கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இந்த ஒதுக்கீடு முறையான விலைமனுக்கள் கிடைக்காத காரணத்தால் ஒதுக்கீடு முழுமையாக மீதமாகியது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாக
	iv. 111-02-13-178-2103 (12) மற்றும் 111-02-13-177-2103(17) கோவிட் 19 தடுப்பூசி ஏற்றல் திட்டத்தை வலுபடுத்தும் திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி) இற்கான செலவின விடயத்திற்காக முறையே 475,000,000 மற்றும் 70,000,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் முழு ஒதுக்கீடும் மீதமாக இருந்ததுடன், முற்பணம் போதியளவு சமர்ப்பிக்காமை, அரச செலவினங்களைக் குறைத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் ஆண்டினுள் இடைநிறுத்தப் பட்டதால் இவ்வாறு ஒதுக்கீடு 100 சதவீதமும் மீதமானதற்கான காரணமாக குறிப்பிட்டுள்ளது. எனினும், உத்தேசித்தபடி தடுப்பூசி ஏற்றுவதற்கு பொதுமக்கள் முன்வராத காரணத்தால் கோவிட் 19 தடுப்பூசி ஏற்றல் திட்டத்திற்காக வழங்கப்பட்ட முழு ஒதுக்கீடும் மீதமாகியது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாக

(ஆ)	ACA 2 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள 111-02-02-1409, 111-01-21-1101, 111-01-21-1203, 111-01-21-1002, 111-01-21-1403, 111-01-21-1506, 111-02-17-1409, 111-02-20-1-1101, 111-02-15-2401, 111-02-26-012-2509(13), 111-02-26-013, 111-02-26-014-2509(13) விடயங்களில் ஆரம்ப மதிப்பீட்டுக்கும் திருத்தப்பட்ட மதிப்பீட்டுக்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான காரணத்தை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.	ஆரம்ப மதிப்பீட்டுக்கும் திருத்தப்பட்ட மதிப்பீட்டுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுக்கு தாக்கம் செலுத்தும் சரியான காரணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	அரச நிர்வாக சுற்றறிக்கை 02/2018 இன்படி, ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றை தயாரித்து அதன்படி உண்மையான மதிப்பீட்டை தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என

1.2.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

1.2.2.1 நடைமுறையில்லா சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்		பரிந்துரை	பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்
(அ)	2018 ஆம் ஆண்டில் நடைமுறையில்லா சொத்துக்களின் செலவினம் 46,940.73 மில்லியன் ரூபா குறைவாக காட்டப்பட்டுள்ளதுடன், 7,102.99 மில்லியன் ரூபா 2019 ஆம் ஆண்டில் ஒரு காணியை கையகப்படுத்தல் என குறிப்பிடப்பட்டுள்ளது.	இந்த பிழையை சரி செய்து 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், அமைச்சினால் பராமரிக்கப்படும் CIGAS நிகழ்ச்சித் திட்டம் மற்றும் திறைசேரி அச்சு குறிப்புகளின் முழு தகவல்கள், சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் CIGAS தகவல்களுடன் பொருத்தும் போது நிறைய சிக்கல்கள் தற்போது அடையாளம் காணப்பட்டது. அந்த சிக்கல்களை அரச கணக்கு திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்ப்பதற்கு 61 சுகாதார நிறுவனங்களின் மாதாந்த கணக்கு சுருக்கத்தினை களஞ்சிய கணக்கெடுப்பு பிரிவிற்கு மாதாந்தம் பெற்று

			சொத்து கணக்கு வைத்தல் சரிபார்க்கப்படுகிறது எனவும், இந்த செயல்முறை 2023 ஜனவரி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த சிக்கல்கள் 2024.05.13 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழுவின் உத்தரவின் பிரகாரம் 06 மாதத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்
(ஆ)	2018 ஆம் ஆண்டில் மூலதன சொத்துகளை கையகப்படுத்தல் ரூபா 14,793.13 மில்லியன் குறைவாக காட்டப்பட்டிருந்ததால் 2019 டிசம்பர் 31 இற்கு மூலதன சொத்து அதற்கு சமமான பெறுமதியில் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(இ)	திறைசேரி கணக்கு அறிக்கையின் படி, 2019 ஆம் ஆண்டில் கையகப்படுத்தப்பட்ட கட்டிட கட்டுமான செலவு ரூபா மில்லியன் 6,501,94 நடைமுறையில்லா சொத்துக்கள் என அறிக்கையில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2019 ஆம் ஆண்டினுள் கையகப்படுத்தப்படாதிருந்த சொத்துக்களின் செலவு ரூபா மில்லியன் 2,967.27 இனை கூடுதலாக கணக்கு வைத்த காரணத்தால் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையில்லா சொத்து அந்த மதிப்பில் கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஈ)	திறைசேரியினால் பராமரிக்கப்படும் எஸ்ஏ 80 எனும் நடைமுறையில்லா சொத்து கணக்குகளின் மாதாந்த சுருக்கம் மற்றும் எஸ்ஏ 82 எனும் மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கையின்படி, 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையில்லா சொத்துக்களின் செலவினமாக காட்டப்பட்ட ரூபா மில்லியன் 19,789.44 இற்கான வித்தியாசத்தை கண்டறிந்து தேவையான சரி செய்தல் செய்திருக்கவில்லை.	வேறுபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சரி செய்தல்களை மேற்கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான சரியான நிதிக்கூற்றை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.	-அவ்வாறே-

(உ)	2021 டிசம்பர் 31 ஆம் திகதி நிதிக்கூற்றின்படி, 2021 ஜனவரி 01 ஆம் திகதிக்கு சொத்து, பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவு ரூபா மில்லியன் 192,229.15 என்ற போதிலும், திறைசேரியினால் பராமரிக்கப்படும் நடைமுறையில்லா சொத்து கணக்குகளின் மாதாந்த சுருக்கம் (SA 80) மற்றும் மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கை (SA 82) இன்படி அந்த செலவு முறையே ரூபா மில்லியன் 172,439.71 மற்றும் ரூபா மில்லியன் 184,327.77 ஆக இருந்த முறையே ரூபா மில்லியன் 19,789.44 மற்றும் ரூபா மில்லியன் 7,901.38 வித்தியாசத்திற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஊ)	2021 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின்படி செலவினக்கூற்று (ACA-2(i) படிவம்) மற்றும் திறைசேரியினால் பராமரிக்கப்பட்ட மாதாந்த செலவின சுருக்கம் (SA 10) இன்படி, மதிப்பாய்வு ஆண்டில் நிதி சார் சொத்துகள் கையகப்படுத்தல் மற்றும் திறைசேரியினால் பராமரிக்கப்பட்ட திரட்டப்பட்ட நிதிசாரா சொத்துக்கள் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அந்த பெறுமதிக்கிடையே ரூபா மில்லியன் 16,877.89 வித்தியாசத்திற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(எ)	2020 ஆம் ஆண்டில் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் நபர்களினால் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பல்வேறு துறைகளுக்கு நிதிசாரா நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புகளாக ரூபா மில்லியன் 1,339.25 மதிப்புள்ள பொருட்கள் மற்றும் மருத்துவ விநியோகங்களும் பெறுமதி குறிப்பிடப்படாத 2,444 அலகு பொருட்கள் மற்றும் மருத்துவ விநியோகங்களும் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவற்றின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்வாங்கப்படவில்லை.	கணக்கு வைக்கப்படாத அனைத்து சொத்துக்களையும் கண்டறிந்து கணக்கு வைத்து 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.	-அவ்வாறே-
(ஏ)	2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவித் திட்டங்கள் 54 இற்காக செலவிடப்பட்ட ரூபா மில்லியன் 7,603.09 செலவினத்தில் உள்வாங்கப்பட்ட நடைமுறையில்லா சொத்துகள் கையகப்படுத்தல் மற்றும் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட நடைமுறையில்லா சொத்துகளின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை.	திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட அனைத்து சொத்துகளும் கணக்கு வைக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகளை அவசரமாக	-அவ்வாறே-

		கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	
(ஐ)	2021 டிசம்பர் 31 ஆம் திகதி நிதிக்கூற்று மற்றும் திறைசேரியினால் பராமரிக்கப்படும் மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கை (SA 82) இன்படி அன்றைய தினம் நடைமுறையில்லா சொத்துகளுக்கான பெறுமதி மற்றும் 2022 ஆம் ஆண்டில் திறைசேரியினால் பராமரிக்கப்படும் மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கை (SA 82) இற்கு அமைய 2022 ஜனவரி 01 ஆம் திகதி நிலவரப்படி அந்த பெறுமதி ரூபா மில்லியன் 5,244.56 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன், அந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை.	வேறுபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சரி செய்தல்களை மேற்கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான சரியான நிதிக்கூற்றை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.	-அவ்வாறே-
(ஒ)	2022 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின்படி செலவுக்கூற்று (ACA 2(i) படிவம்) மற்றும் திறைசேரி அச்சு குறிப்பு SA-10 இன்படி, 2022 ஆம் ஆண்டில் நிதிசார் சொத்துக்களை கையகப்படுத்தல் மற்றும் திறைசேரியினால் பராமரிக்கப்படும் மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கை (SA 82) இற்கு அமைய அந்த பெறுமதிகளுக்கிடையே ரூபா மில்லியன் 11,423.16 வித்தியாசம் காணப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஓ)	கோவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்பை தயார்படுத்தும் திட்டத்தினால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா மில்லியன் 6,326.05 இற்கான நடைமுறையில்லா சொத்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த சொத்துகளின் செலவினம் அமைச்சின் நடைமுறையில்லா சொத்து கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை.	திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட அனைத்து சொத்துகளும் கணக்கு வைக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகளை அவசரமாக கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	-அவ்வாறே-
(ஔ)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 59 நிறுவனங்களுக்கான 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துகள் தொடர்பாக விபரங்களை குறிக்கும் கணினி மென் பிரதிகளின்படி 25 வைத்தியசாலைகள்/ நிறுவனங்களின் காணிகள்	துரிதமாக இந்த சொத்துகளை மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்	-அவ்வாறே-

	மற்றும் 05 வைத்தியசாலைகள்/ நிறுவனங்களின் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
(க)	இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு மற்றும் சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு உரிமம் வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களின் செலவினம் ரூபா. 11,550,000 இனை 2022 டிசம்பர் 31 நிலவரப்படி சுகாதார அமைச்சின் நிதி கூற்றுகளில் உள்வாங்கப்பட்டுள்ளது.	இதனை சரி செய்து அதனை கணக்காய்விற்கு உறுதி செய்தல் வேண்டும்.	-அவ்வாறே-
(ங)	கணக்காய்வில் கோரப்பட்ட தகவல்கள் சில நிறுவனங்களினால் வழங்கப்படவில்லை. அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள், பிற சுகாதார நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் 11 இற்கு 2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளுக்கான 2,66 மில்லியன் ரூபா மொத்த செலவினம் கொண்ட பொருட்கள் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு உரிய செலவினத்தை குறிப்பிடாது பொருட்கள் பதிவேட்டிலிருந்து வெட்டி நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த அழிக்கப்பட்ட பொருட்களுக்கான செலவினம் அமைச்சின் நிதிக்கூற்றுகளில் நடைமுறையில்லா சொத்துகளில் உள்வாங்கப்பட்டதா என்பது குறித்தும் மற்றும் அழித்தலின் பின்னர் அந்த மதிப்பு நடைமுறையில்லா சொத்துகளில் இருந்து நீக்கப்பட்டதா என்பது குறித்தும் கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கவில்லை. மேலும் சில வைத்தியசாலைகளில் அழித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்யாத சந்தர்ப்பங்களும்,நியமிக்கப்பட்ட அழித்தல் சபையினால் உரிய அழித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்யாத சந்தர்ப்பங்களும், வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் உரிய பற்றாக்குறைகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகள் 752 (2) இன்படி செயற்படுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	கணக்காய்வில் கோரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தையும் நிறுவனத்தினால் வழங்கப்படல் வேண்டும் என்பதுடன், அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு உரிய சரி செய்தல்கள் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் கணக்கெடுப்பு சபை அறிக்கை பெறப்பட்ட பின்னர் முரண்பாடுகள், பற்றாக்குறைகள் மற்றும் காணமல் போதல் என்பன இருப்பின் நி. ஒ 757(2) இன்படி செயற்படுத்தல் வேண்டும்.	-அவ்வாறே-
(ச)	நிறுவனங்கள்/வைத்தியசாலைகள் மற்றும் 31 பிரிவுகளுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா மில்லியன் 2,588.30 மதிப்புள்ள பொருட்கள் மற்றும் நிறுவனங்கள்/ வைத்தியசாலைகள் மற்றும் 30 பிரிவுகளுக்கு 2057 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட பெறுமதி பற்றிய விபரங்கள் சேர்க்கப்படாத பொருட்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கு சேர்த்ததற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.	அனைத்து மானியங்களும் உரிய முறையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-அவ்வாறே-

(ஞ)	2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றின்படி 2023 ஜனவரி 01 ஆம் திகதிக்கு சொத்துகள், பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா மில்லியன் 195.221.42 ஆக இருந்தது. எனினும் திறைசேரி அச்சு, நடைமுறையில்லா சொத்துகள் கணக்கு மாத சுருக்கம் (SA-80) இல் 2023 ஜனவரி 01 ஆம் திகதிக்கு ஆரம்ப இருப்பு ரூபா மில்லியன் 200,118.27 ஆக இருந்தது.	வேறுபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சரி செய்தல்களை மேற்கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான சரியான நிதிக்கூற்றை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், களஞ்சிய கணக்கெடுப்பு பிரிவினால் தகவல்கள் சேகரிக்கும் போது CIGAS அமைப்பில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் மாத்திரம் தகவல்களை மாத்திரம் பெற்று கணக்கு வைக்கப்படுவதுடன், அரச கணக்கு திணைக்களத்தினால் (SA 80) தயாரிக்கும் போது வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் பெறப்பட்ட தகவல்களுக்கு மேலதிகமாக திட்டங்கள் மற்றும் TOD இன் மூலம் அமைச்சிற்கு வழங்கப்படும் செலவின மதிப்பை பாவித்துள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த பிழையை சரி செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்
(ட)	2022 ஆண்டின் மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கை (SA 82) இன்படி 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 200,118.27 என்பதுடன், 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையில் 2023 ஜனவரி 01 ஆம் திகதிக்கு அந்த பெறுமதி 195,221.42 மில்லியன் ரூபாவாக இருந்தது. அதன்படி 4,896.85 மில்லியன் ரூபா வித்தியாசம் காணப்பட்டதுடன், அந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், SA 82 தயாரித்தல் அரச கணக்கு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், முன்னைய ஆண்டின் வருட இறுதி இருப்பு இந்த ஆண்டின் ஆரம்ப இருப்பு என சமநிலை செய்யாமைக்கான காரணம் அரச கணக்கு திணைக்களத்தினூடாக உறுதி செய்து அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்
(ண)	2022 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின்படி செலவுக்கூற்று (ACA 2(i) படிவம்) மற்றும் திறைசேரி அச்சு குறிப்பு SA-10 இன்படி, 2023 ஆம் ஆண்டில் நடைமுறையல்லா சொத்துகள் கையகப்படுத்தலுக்கான செலவு ரூபா மில்லியன் 11,605.50 என்றபோதிலும் திறைசேரியினால் பராமரிக்கப்படும் மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கை (SA 82) இன்படி மதிப்பாய்வு ஆண்டில் சொத்துகள் கொள்வனவு செய்தல் ரூபா மில்லியன்	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், ஆரம்ப இருப்பு (காணி மற்றும் கட்டிடம்) சரி செய்யப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் அனைத்து கொள்முதல் மூலதனமயமாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2024.07.31 ஆம் திகதியாகும்

	3,698.37 இல் சொத்துகளின் செலவினம் ரூபா மில்லியன் 7,907.13 குறைவாக காட்டப்பட்டுள்ளது.		போது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்
(த)	அமைச்சின் நிதிக்கூற்றின்படி, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 204,292.96 ஆக இருந்தபோதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 63 நிறுவனங்களுக்கான 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துகள் தொடர்பாக விபரங்களை குறிக்கும் கணினி மென் பிரதிகளின்படி அந்த சொத்துகளின் பெறுமதி ரூபா மில்லியன் 215,870.86 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி 11,577.90 மில்லியன் ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 204,292.96 ஆக இருந்தபோதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 63 நிறுவனங்களுக்கான 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துகள் தொடர்பாக விபரங்களை குறிக்கும் கணினி மென் பிரதிகளின்படி அந்த சொத்துகளின் பெறுமதி ரூபா மில்லியன் 215,870.86 என்பதுடன் 11,577.90 மில்லியன் ரூபா வித்தியாசம் தொடர்பாக சரிபார்த்து வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சரிசெய்தல் மேற்கொண்டு சரியான விபரங்கள் சமர்ப்பிக்கப்படும் எனவும்
(ந)	2024 மார்ச் 25 நிலவரப்படி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 05 திட்டங்களுக்கான நிதிக்கூற்றின்படி, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்தம் 6,620.90 மில்லியன் ரூபாவில் நடைமுறையல்லா சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும் அந்த சொத்துக்களின் செலவினம் ரூபா மில்லியன் 3,385.32 சொத்துகள் மாத்திரம் சுகாதார அமைச்சின் நடைமுறையில்லா சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	இந்த பிழைகளை சரி செய்து 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், அதன்படி வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சரிசெய்தல் மேற்கொண்டு சரியான விபரங்கள் நிதிக்கூற்றுகளில் சமர்ப்பிக்கப்படும் எனவும்
(ப)	2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 63 நிறுவனங்களுக்கான நடைமுறையில்லா சொத்துகள் தொடர்பாக விபரங்களை குறிக்கும் கணினி மென் பிரதிகளின்படி 27 வைத்தியசாலைகள் / நிறுவனங்களின் காணிகள் மற்றும் 04 வைத்தியசாலைகள் /	துரிதமாக இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024.04.30 ஆம் திகதியாகும் போது மதிப்பீட்டு திணைக்களம் ஊடாக சுகாதார அமைச்சிற்குரிய நிறுவனங்களில் மதிப்பீடு

	நிறுவனங்களின் கட்டிடங்கள் மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	செய்யப்பட்டுள்ள அனைத்து காணி மற்றும் கட்டிட சொத்துக்கள் கணக்குகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளது எனவும்
(ம)	2018 ஆம் ஆண்டின் பின்னர் பேராதனை வைத்தியசாலை வளாகத்தில் சிறுநீரக சிகிச்சை பிரிவொன்றும் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 03 மாடிகள் கொண்ட சத்திர சிகிச்சை வாட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அந்த கட்டிடத்தின் பெறுமதியை கண்டறிந்து கணக்கு வைக்கப்படவில்லை.	-அவ்வாறே-	அந்த கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளில் உள்வாங்கி கணக்கை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இந்த வைத்தியசாலை வளாகத்தில் சிறுநீரக சிகிச்சை பிரிவொன்றும் 03 மாடிகள் கொண்ட சத்திர சிகிச்சை வாட்டுத் தொகுதி உட்பட வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை ஆராய்ந்து தற்போதைய விலைகளின் கீழ் மதிப்பீடு செய்து மதிப்பீட்டு அறிக்கை பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளது எனவும், ஆனாலும் இதுவரை அதற்கான பதில்கள் கிடைக்கவில்லை எனவும், ஆகையால் புதிய மதிப்பீட்டு பெறுமதியை கண்டறியும் வரை அந்த கட்டிடத்தின் பெறுமதியை கணக்கு வைக்க முடியாது.

1.2.3. பணி முற்பண கணக்கு

கணக்காய்வு அவதானிப்புகள்	**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
1997 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் முன்னோக்கி கொண்டுவரப்படும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய ரூ. 362,702 பணி முற்பண இருப்பு 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாத பணி முற்பண இருப்பு என பணி முற்பண கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதுடன், அந்த இருப்பு மதிப்பாய்வு ஆண்டிலும் தீர்க்கப்படவில்லை.	இந்த பணி முற்பண இருப்பை அவசரமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய ரூ. 362,702 ஆன தீர்க்கப்படாத பணி முற்பண இருப்பை தீர்ப்பதற்கான அடுத்த கட்ட

		நடவடிக்கைகளுக்காக சுகாதார அமைச்சின் பிரதான சட்ட அலுவலர் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது எனவும்

1.2.4 கணக்காய்விற்கு ஆதாரங்கள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்புகள்	**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
மொத்த செலவினம் ரூபா மில்லியன் 204,292.96 ஆன நடைமுறையல்லா சொத்துகள் தொடர்பான விரிவான உப அட்டவணை பொருட்கள் கணக்கெடுப்பு மற்றும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின்படி குறிப்பிடப்படும் சொத்துகள் பற்றிய தகவல்கள், கடந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு காணப்பட்ட சொத்துக்கள் இருப்புக்கு சரி செய்யப்பட்ட 20,775.78 மில்லியன் ரூபாவிற்கு, மதிப்பாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 3,698.37 மில்லியன் ரூபா சொத்துக்கள் கொள்வனவிற்கும் மற்றும் 6,944.27 மில்லியன் ரூபா சொத்துக்கள் அழித்தல் தொடர்பான விரிவான உப அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த பெறுமதி திருப்திகரமாக சரிபார்க்க முடியாது. மேலும், துணை மருத்துவ சேவைக்கு உட்பட்ட 08 பதவிகளுக்குரிய 238 உத்தியோகத்தர்கள் மற்றும் நிறைவுகாண் மருத்துவ சேவைக்கு உட்பட்ட 03 பதவிகளுக்குரிய 111 உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ளனரா அல்லது இல்லையா மற்றும் சேவையில் இருப்பின் எந்த சேவை நிலையத்தில் அவர்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இடமாற்றம் பெற்றுச்சென்ற, பதவி நீக்கப்பட்ட, பதவி வெறிதாக்கப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற 69 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 14,301,604 மில்லியன் ரூபா இற்கான உரிய சொத்து/ வாகன கடன் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அமைச்சில் உள்ள வாகனங்களின் பயன்பாடு தொடர்பாக செயற்திறன் மதிப்பீட்டுக்காக தேவையான 2021, 2022 மற்றும் 2023 ஆகிய மூன்று வருடங்களுக்கான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்க்கவில்லை என்பதுடன், இதைத்தவிர பல்வேறு விடயங்கள் தொடர்பாக 34		

தகவல் கோரல் கடிதங்கள் மூலம் கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் கோரப்பட்ட போதிலும் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதியிலும் சமர்ப்பிக்காமை மற்றும் முழுமையான தகவல்கள் சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களினால் உரிய துறைகள் முறைப்படி கணக்காய்வு செய்ய முடியவில்லை. சில தகவல் கோரல் கடிதங்கள் அனுப்பப்பட்டு 30 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளது. இதுகுறித்த விரிவான விபரங்கள் பின்வருமாறு			
(அ)	2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக்கூற்றுகளில் நடைமுறையல்லா சொத்துகள் தொடர்பான கூற்று (ACA 6 படிவம்) இற்காக இணைக்கப்பட்டிருந்த திறைசேரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள SA 80 மற்றும் SA 82 ஆகிய படிவங்களின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள சொத்துகள், அமைச்சின் புதிய CIGAS திட்டத்தின்படி காட்டப்படும் சொத்துகளுடன் ஒப்பீட்டைச் சரிபார்க்க புதிய CIGAS திட்டத்தின்படி காட்டப்படும் சொத்துகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்ட போதிலும் அந்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணத்தால் அமைச்சினால் உண்மையாக பராமரிக்கப்படும் நடைமுறையல்லா சொத்துகள் எவை என்பதை சரிபார்க்க முடியவில்லை.	அமைச்சின் புதிய CIGAS திட்டத்தின்படி காட்டப்படும் சொத்துகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், அதன்படி 2023 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய செலவின கூற்றுக்காக திறைசேரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள SA 80 மற்றும் SA 82 இன்படி காட்டப்பட்டுள்ள சொத்துகளை, அமைச்சின் புதிய CIGAS திட்டத்தின்படி காட்டப்படும் சொத்துகளுடன் ஒப்பீட்டைச் சரிபார்க்க அமைச்சினால் உண்மையாக பராமரிக்கப்படும் நடைமுறையல்லா சொத்துகள் எவை என்பது குறித்தும் மற்றும் மதிப்பாய்வு ஆண்டில் பிற நிறுவனங்களினால் அமைச்சிற்கு மாற்றப்பட்ட சொத்துகள் முறையாக கையகப்படுத்தப்பட்டதா மற்றும் பௌதீக ரீதியில் உள்ளனவா என்பது தொடர்பான தேவையான தகவல்களை ஆராய்ந்து 2024.07.31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும்
(ஆ)	திறைசேரி அச்சு மொத்த நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கை (SA 82) இற்கு அமைய கடந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு காணப்பட்ட சொத்து இருப்பு சரி செய்யப்பட்ட 20,775.78 மில்லியன் ரூபாவிற்கு, மதிப்பாய்வு ஆண்டில் செய்யப்பட்ட 3,698.37 மில்லியன் ரூபா சொத்து கொள்வனவு செய்தல் மற்றும் 6,944.27	அனைத்து தகவல்களும் அடங்கும் வகையில் உப அட்டவணை தயாரித்து நிதிக்கூற்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.	CIGAS இல் சொத்துகள் கணக்கு வைக்கும் module மூலம் சரி செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொருள் கணக்கெடுப்பு செய்வதற்கு

	மில்லியன் ரூபா சொத்துக்கள் அழித்தல் தொடர்பான மதிப்பாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக்கூற்றின்படி காணப்பட்ட ரூபா மில்லியன் 204,292.96 ஆன நடைமுறையில்லா சொத்து இருப்புக்குரிய விரிவான உப அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த பெறுமதி கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்க்க முடியாது		எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது எனவும்
(இ)	மதிப்பாய்வு ஆண்டினுள் பிற நிறுவனங்களினால் அமைச்சிற்கு மாற்றப்பட்ட 613.19 மில்லியன் ரூபா சொத்துகள் உள்ளனவா என்பது விரிவான உப அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த சொத்துகள் முறையாக கையகப்படுத்தப்பட்டதா அல்லது பௌதீக ரீதியில் நிறுவனத்தின் வசம் உள்ளனவா என்பது குறித்து சரிபார்க்க முடியவில்லை.	-அவ்வாறே-	வருடாந்த கணக்காய்வில் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், கணக்கு திணைக்களத்துடன் இணைந்து CIGAS இன் கீழ் தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்
(ஈ)	சுகாதார அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்காக 2023 ஆண்டுக்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் கணக்கெடுப்பு அறிக்கை 2024 மார்ச் 19 ஆம் திகதியிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், 2022 ஆண்டுக்கான சுகாதார அமைச்சிற்குரிய 36 வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் மட்டுமே 2024 மார்ச் 26 ஆம் திகதியில் பொருள் கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. எனினும் இதில் 28 வைத்தியசாலைகள்/நிறுவனங்கள் பொது, சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் ஆகிய அனைத்து பிரிவுகளுக்கான கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்த தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42 (அ) பிரிவின்படி கணக்காய்வாளர் நாயகத்தினால் கோரப்படும் தகவல்கள் மற்றும் பிற சான்றுகளை வழங்காத அனைவரும் குற்றம் இழைத்தவர்களாக கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், அதன்படி 2023 ஆம் ஆண்டின் பொருள் கணக்கெடுப்பிற்காக அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக ஏற்கனவே பொருள் கணக்கெடுப்பு சபை நியமிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கான பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2024 ஜூன் 15 நிலவரப்படி அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்து பொருள் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது 04 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் கணக்கெடுப்பு அறிக்கை

			கணக்காய்விற்கு சமரப்பிக்கப்பட்டுள்ளது எனவும்
(உ)	துணை மருத்துவ சேவைக்குரித்தான 08 பதவிகளுக்குரிய 238 உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ளனரா அல்லது இல்லையா மற்றும் சேவையில் இருப்பின் எந்த சேவை நிலையத்தில் அவர்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறித்த தகவல்கள் அமைச்சில் இல்லை என பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் 3) இனால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி அவதானிக்கப்பட்டது.	அமைச்சினால் ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து பதவிகளுக்கும் உரிய அனைத்து தகவல்களும் உள்ளிட்ட முறையான தகவல் அமைப்பினை தயாரித்து புதுப்பித்து பராமரிக்கப்படல் வேண்டும்.	துணை மருத்துவ சேவைக்குரித்தான 08 பதவிகளுக்குரிய 238 உத்தியோகத்தர்கள் தொடர்பாக சில வருடங்களுக்குரிய தகவல்கள் நிர்வாக நிறுவன கிளையில் பராமரிக்கப்படும் டெம்ப்ளேட் கோப்புகளில் கண்டறிவது கடினமாக உள்ளதுடன் அந்த உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புகளை பராமரிக்கும் சுகாதார அமைச்சிற்குரிய (மத்திய அரசிற்குரிய) வைத்தியசாலை நிறுவனத்திடம் கேட்டு உரிய தகவல்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது எனவும், ஏற்கனவே துணை மருத்துவ சேவைக்குரிய பதவிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதுடன், இதைத்தவிர இந்த தகவல்கள் தொடர்பாக எதிர்காலத்தில் முறையான ஒரு தரவு அமைப்பை புதுப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் மத்திய அரசினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மாகாண சபைகளுக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புகள் மாகாண சபையினால் பராமரிக்கப்படுவதால் அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் மத்திய அரசிற்குரிய அமைச்சில் இல்லை.

(ஊ)	நிறைவுகாண் மருத்துவ சேவைக்கு உட்பட்ட 03 பதவிகளுக்குரிய 111 உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ளனரா அல்லது இல்லையா மற்றும் சேவையில் இருப்பின் எந்த சேவை நிலையத்தில் அவர்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறித்த தகவல்கள் அமைச்சில் இல்லை என பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் 3) இனால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(எ)	இடமாற்றம் பெற்றுச்சென்ற 40 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ. 9,164,419 இற்கான சொத்து/வாகன கடனுக்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த நிலுவைகளின் துல்லியத்தை சரிபார்க்க முடியவில்லை.	இந்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42 (அ) பிரிவின்படி கணக்காய்வாளர் நாயகத்தினால் கோரப்படும் தகவல்கள் மற்றும் பிற சான்றுகளை வழங்காத அனைவரும் குற்றம் இழைத்தவர்களாக கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	11 உத்தியோகத்தர்களுக்குரிய சொத்து மற்றும் வாகன கடன் கோவைகள் ஏற்கனவே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் சொத்து மற்றும் வாகன கடன் கோவைகளை இதுவரை சமர்ப்பிக்காத நிறுவனங்களுக்கு அவற்றை சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், 03 மாத காலத்தினுள் உரிய சொத்து மற்றும் வாகன கடன் கோவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படாவிடின் விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஏ)	பணி நீக்கம் செய்யப்பட்ட 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ. 3,420,632 இற்கான கடன் நிலுவைகள் தொடர்பான சொத்து/வாகன கடனுக்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த நிலுவைகளின் துல்லியத்தை சரிபார்க்க முடியவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஐ)	பதவி வெறிதாக்கப்பட்ட 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ. 1,204,198 இற்கான சொத்து/வாகன கடனுக்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த நிலுவைகளின் துல்லியத்தை சரிபார்க்க முடியவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஒ)	ஓய்வு பெற்றுச்சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ. 512,355 இற்கான சொத்து/வாகன கடனுக்குரிய	-அவ்வாறே-	-அவ்வாறே-

	கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த நிலுவைகளின் துல்லியத்தை சரிபார்க்க முடியவில்லை.		
(ஓ)	2021, 2022 மற்றும் 2023 ஆகிய மூன்று வருடங்களில் அமைச்சில் உள்ள வாகனங்களின் பயன்பாடு தொடர்பாக கணக்காய்வினால் கோரப்பட்ட தகவல்கள் 2024 ஏப்ரல் 03 திகதி வரை கணக்காய்விற்கு சமரப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	2023/28 எனும் தகவல் சேகரிப்பதற்காக 02 நிறுவனங்களுக்குரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய அனைத்து தகவல்களும் மற்றும் MED/A/MH/01/INFO/2021/33 மற்றும் MED/B/MH/01/INFO/2023/28 இற்கு உரிய அனைத்து தகவல்களும் அவசரமாக பெறுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும்

1.2.5. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட வேண்டிய சான்றுறுதி

அவதானிப்பு	**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவையான விதத்தில் குறிப்பிட்ட காலத்தினுள் அனைத்து கணக்காய்வு வினவல்களுக்கும் உரிய பதில்கள் வழங்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் 2024 ஏப்ரல் 04 நிலவரப்படி பதிலளிக்கப்படாத மொத்த கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை 70 என்பதுடன், ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் எடுத்துள்ளதுடன் பதில் வழங்கப்படாத வினவல்களின் எண்ணிக்கை 6 ஆகும்.	அனைத்து கணக்காய்வு வினவல்களுக்கும் உரிய குறிப்பிட்ட காலத்தினுள் பதில்கள் வழங்கப்பட வேண்டும்.	இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு வினவல்களில் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட 06 வினவல்களுக்கு பதில் வழங்க வேண்டியுள்ளதுடன் எதிர்காலத்தில் அவசரமாக அந்த வினவல்களுக்கு பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் ஏனைய கணக்காய்வு வினவல்களுக்கும் அமைச்சு அதனுடன் தொடர்புடைய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து துரிதமாக பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

1.2.6 **சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இணங்காமை**

அவதானிப்பு				**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பற்றி		**பெறுமதி ரூ.மில்லியன்**	**இணங்காமை**		
(அ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை				
	i. நிதி ஒழுங்குவிதி 138	4.336	கொடுப்பனவு வவுச்சர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் செலவுகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு உறுதிப்படுத்தும் போது நிதி ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 09 வரையான பந்திகளுக்கு விஷேட அவதானம் செலுத்தப்பட்டு அந்த விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து திருப்தியடைந்த பின்னர் செலவுகளை உறுதிப்படுத்துவது செலவுகளை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பொறுப்பாகும். எனினும் களுத்துறை போதனா வைத்தியசாலையில் 2023 மே மற்றும் ஜூன் மாதங்களில் 06 கொடுப்பனவு வவுச்சர்களுக்கான கொடுப்பனவு தொகையான ரூபா 4,336.611 இற்கு செலவினங்களை உறுதிப்படுத்தல் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது.	நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கு இணங்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உத்தியோகத்தர்களின் கடன் செலுத்துதல் மற்றும் பில் செலுத்துதலுக்கான உரிய செலவுகளை உறுதிப்படுத்த கணக்காளர் மறுப்பதால் வைத்தியசாலை பணிப்பாளரினால் செலவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

	ii. நிதி ஒழுங்குவிதி 138, 139 (1), 257, 141 (3) (அ) மற்றும் (ஈ)		களுத்துறை போதனா வைத்தியசாலையில் 2023 மே மாதத்திற்கான 02 கொடுப்பனவு வவுச்சர்களுக்கான 58 துணை வவுச்சர்களின் மொத்த கொடுப்பனவுத் தொகையான ரூபா 14,511,536 இனை கொடுப்பனவு அனுமதித்தல், செலவுகளை உறுதிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் ஆகிய அனைத்து செயற்பாடுகளும் வைத்தியசாலை பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது நி.ஒ 135 இன்படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்பட்ட நிதி அதிகாரங்களை பயன்படுத்தும் போது பின்பற்றப்பட வேண்டிய 138, 139 மற்றும் 257 ஆகிய நிதி ஒழுங்குவிதிகள் மீறிப்படுவதுடன் காசோலைகளில் இரண்டாவது கையொப்பதாரியாக கையொப்பமிட்டுள்ள கையொப்பதாரியான வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தரினாலும் 138, 139 (1), 257, 141 (3) (அ) மற்றும் (ஈ) ஆகிய நிதி ஒழுங்குவிதிகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	iii. நிதி ஒழுங்குவிதி 110		சகல நிறுவனங்களும் நி.ஒ 102 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பு தொடர்பான விபர குறிப்புகளை பராமரிப்பதற்காக பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். எனினும் களுத்துறை போதனா வைத்தியசாலையில் இழப்பு மற்றும் நட்டங்களை அறிக்கையிடும் பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை.	நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும்	தற்போது இந்த வைத்தியசாலையில் இழப்பு மற்றும் நட்டங்களை அறிக்கையிடும் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது.
(ஆ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XII வது அத்தியாயத்தின் பிரிவு 16.5	23.973	கற்றல் அல்லது தொழிலுக்காக சம்பளமற்ற லீவில் சென்ற உத்தியோகத்தர்கள் மீள சேவைக்கு திரும்பாமை மற்றும் குறைந்த சேவைக்காலம் சேவையாற்றாத நிலையில் உரிய உத்தியோகத்தர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த பிணை பெறுமதியை அரசிற்கு அறவிடப்பட வேண்டும். எனினும், மாத்தறை பொது வைத்தியசாலை அதற்கு இணங்க செயற்படவில்லை என்பதுடன், கணக்காய்வுத் தினமான 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியாகும் போது 07 மாதம் முதல் 11 வருடமும் 03 மாதங்கள் வரை சேவைக்கு சமூகமளிக்காத 14 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் ரூ.23,973,868 பெறுமதியான பிணை அறவிடப்படவில்லை என்பதுடன், உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால்	அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் உரிய ஒப்பந்தத்தை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிதியை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	ஒப்பந்த பிணை அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பெறுமதி குறித்து காணப்படும் பலவீனங்கள் கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் அரச கணக்கு சபையிலும் அவதானம் செலுத்தப்பட்டது என்பதால் இது தொடர்பாக காணப்படும் உள்ளக நிர்வாகத்தை வலுப்படுத்தும் நோக்கில் அதற்கான ஒரு குழுவை நியமித்து அதன்படி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

			கணக்காய்வுத் தினம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், மாத்தறை பொது வைத்தியசாலையினால் ஒரு மருத்துவ உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 8,916,181 பெறுமதியான பிணையை அறவிடல் தொடர்பாக 2018 ஜூன் 14 ஆம் திகதியின் பின்னர் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		
(இ)	2021 டிசம்பர் 24 ஆம் திகதிய 26/2021 எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 03	0.148	2023 ஆம் ஆண்டினுள் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விஷேட முற்பணம் அதே ஆண்டில் அறவிட்டு முடிக்க வேண்டும் என்றபோதிலும், 2023 டிசம்பர் 31 நிலவரப்படி 112 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிப்பட வேண்டிய விஷேட முற்பண நிலுவை 148,450 ரூபா ஆகும்.	சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படல் வேண்டும்	அவதானிப்புகளுடன் இணங்குகிறேன் எனவும், சேவையிலிருந்து விலகிய, பணி நீக்கம் செய்யப்பட்ட, அனுமதியின்றி வெளிநாடு செல்லல் தற்காலிக சம்பள இடைநிறுத்தம் போன்ற காரணங்களால் இறுதி தவணைகள் அறவிட முடியாமற்போனதுடன், தற்போது அறவிடப்பட்டுள்ளது எனவும்.
(ஈ)	1989 மார்ச் 23 ஆம் திகதிய 19/89 எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 03(3) ஆம் பந்தியின்படி		அலுவலக ஊழியர்களுக்கு மு.ப 8.30 மணிக்கு முன்னர் மேலதிக வேலைக்கு அங்கீகாரம் வழங்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சுகாதார அமைச்சின் அலுவலக ஊழியர்களுக்கு மு.ப 8.30 மணிக்கு முன்னர் மேலதிக வேலைக்கு அங்கீகாரம் வழங்கி	சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு இணங்காமல் செயற்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று	சாதாரண வேலை நேரத்தினுள் அனைத்து கடமை பணிகளையும் நிறைவேற்ற முடியாததால் மேலதிக நேர கொடுப்பனவின் அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்த நேரிடுவதாக

			அதற்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	

1.2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை வளாகத்தில் வாடகை அல்லது கட்டணம் செலுத்தாமல் வெளி ஒப்பந்ததாரர்கள் மூவரும் ஒரு நிறுவனத்தினால் அனுமதியின்றி வேலைத் தளங்கள் மற்றும் அலுவலகங்கள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், அதற்காக வைத்தியசாலை வளாகத்தில் சுமார் 1177 சதுர மீட்டர் நிலப்பரப்பு பயன்படுத்தப்படுவதும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு வைத்தியசாலை வளாகத்தில் அனுமதியின்றி தங்கியிருக்கும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் மின்சாரத்திற்காக கட்டணங்கள் எவையும் அரசிற்கு செலுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி அவர்களினால் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் மின்சாரத்திற்கான கட்டணங்கள் வைத்தியசாலையினால் செலுத்தப்படுவது அவதானிக்கப்பட்டதுடன், அதன் மூலம் அரசாங்க நிதி துஷ்பிரயோகம் மற்றும் தவறாக பயன்படுத்துவதற்கு வைத்தியசாலையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் இடமளிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், ஒப்பந்ததாரர்களை வைத்தியசாலை வளாகத்தில் இருந்து வெளியேறுமாறு ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும், அதன்படி எதிர்காலத்தில் ஒப்பந்ததாரர்களினால் நீர் மற்றும் மின்சார செலவு வைத்தியசாலைக்கு ஏற்படுவதில்லை எனவும், ஒப்பந்ததாரர்களினால் வைத்தியசாலையில் வேலைத் தளங்களில் நீர் மற்றும் மின்சாரத்தை வைத்தியசாலை பராமரிப்புக்கான ஒப்பந்த பணிகளுக்காகவே பயன்படுத்தப்பட்டது எனவும், அதற்காக அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து பில்களிலும் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் மின்சாரத்திற்காக பில் பெறுமதியில் 1 சதவீத நிதி அறவிடப்பட்டுள்ளது எனவும்.
(ஆ)	சுகாதார அமைச்சின் செயலாளரினால் வருடாந்தம் வெளியிடப்படும் நிதி முகாமைத்துவ அதிகாரமளித்தல் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் 2023 ஜூன் 23 ஆம் திகதிய 02-2/2023 இன் பிரகாரம் உணவகத்தின் வாடகை	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், உணவகத்தின் வாடகை வருமானம் மற்றும் பிற சேவை வாடகை வருமானம் அரச வருமானத்தில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன எனவும்.

	வருமானம் மற்றும் பிற சேவை வாடகை வருமானம் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட வேண்டும் எனினும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை அதற்கிணங்க செயற்படாமல் மொத்தம் 2,560.806 ரூபா அரசாங்க வருமானம் கணக்காய்வு தினமான 2023 ஜூன் 02 திகதி நிலவரப்படி முறையாக அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்காமல் நலன்புரி கணக்குகளில் வைப்பு வைப்பதற்கும் மற்றும் விநியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
(இ)	உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவதற்கான மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவுகள் தொடர்பாக 2016 மார்ச் 09 ஆம் திகதி வெளியிடப்பட்ட 05/2016 எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரிவு 04 இற்கு இணங்காமல் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் உத்தியோகபூர்வ வானங்களுக்கான மாதாந்த போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் பெறும் உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வுத் தினம் வரை 22 சந்தர்ப்பங்களில் முன்பதிவு வாகனங்களை உபயோகித்ததாக மொத்தம் 252,626 ரூபா பெறுமதியான எரிபொருள் செலவிடப்பட்டுள்ளது. மேலும் முன்பதிவு வாகனங்களை பயன்படுத்திய ஒரு சட்ட மருத்துவ நிபுணர் கராப்பிட்டிய மருத்துவ பீடத்தில் பணியாற்றும் ஒரு உத்தியோகத்தர் என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், எரிபொருள் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகள் பெறும் சட்ட மருத்துவ நிபுணர்களின் முன்பதிவு வாகனங்களை பயன்படுத்திய காரணத்தால் ரூ. 252,626 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும், இது தொடர்பாக வைத்தியசாலை விஷேட வைத்திய நிபுணருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், ஒரு சட்ட மருத்துவ நிபுணர் ருஹுனு பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி வருவதால், ருஹுனு பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு அறவிட்டு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், எனினும் அறவிட முடியவில்லை எனவும், 30.04.2002 ஆம் திகதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DDG(MS) 46/2002 எனும் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 12 இன்படி சட்ட மருத்துவ நடவடிக்கைகளுக்காக விஞ்ஞான ரீதியில் குற்றவியல் உண்மைகளை ஆய்வு செய்வதற்கான விடயங்களை சேகரிப்பதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை வைத்தியசாலையினால் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், அதன்படி நிதி அறவிடுவது சிக்கலானது எனவும்.

(ஈ)	உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக எரிபொருள் வழங்குவது தொடர்பாக 2021 டிசம்பர் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட 13/2008(vi) எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்காது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் உத்தியோகபூர்வ வாகன உரிமைகள் உள்ள இரண்டு (02) சட்ட மருத்துவ நிபுணர்களுக்கு லங்கா ஒடோ டீசல் விலைகளுக்கு பதிலாக லங்கா சுப்பர் டீசல் விலைகளின் அடிப்படையில் எரிபொருள் கொடுப்பனவு கணிப்பீடு செய்துள்ள காரணத்தால் மொத்தம் 127,380 ரூபா கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி சுற்றறிக்கைக்கு இணங்காமல் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையை துரிதமாக அறவிட்டு அரச வருமானத்தில் கணக்கு வைக்கப்பட வேண்டும் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.		
(உ)	கண்டி தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவின் விஷேட மருத்துவ நிபுணர் ஒருவர் 2022 ஆகஸ்ட் 06 முதல் 2022 டிசம்பர் 06 வரையான காலத்தில் நாட்குறிப்பேட்டை புதுப்பிக்காது இருந்ததுடன், 2022 ஆகஸ்ட் 06 ஆம் திகதியின் பின்னர் லீவு பதிவேட்டிலும் எந்த குறிப்புகளும் பதிவு செய்யப்படவில்லை. வைத்தியசாலையினால் பராமரிக்கப்படும் வெளிநாட்டு லீவு பெற்று நாட்டை விட்டு வெளியேறும் போது பதிவு செய்ய வேண்டிய பதிவேட்டிலும் பதியப்படவில்லை. அதன்படி, இந்த வைத்தியர் உண்மையில் அந்த காலப்பகுதியில் கடமையில் இருந்தாரா இல்லையா என்பது குறித்து உறுதிப்படுத்தாமல் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டுள்ளதுடன் கூடுதலாக வழங்கப்பட்ட சம்பளம் ரூ. 161,209 இனை இன்னும் அறவிடப்படாமல் காணப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறிவிடப்பட வேண்டிய ரூ. 161,209 இனை கண்டி தேசிய வைத்தியசாலையின் சரப் பிரிவிற்கு செலுத்தி அதற்கான ரசீதை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு மின்னஞ்சல் ஊடாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை எவ்வித பதிலும் அளிக்ககாததால் இதனை பெறுவதற்கு சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும்.
(ஊ)	கண்டி தேசிய வைத்தியசாலையின் மருத்துவ உத்தியோகத்தர்களின் விடுதியின் தரை தளத்தில் அந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பகல்நேர	-அவ்வாறே	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கடிதம் ஊடாக தலைவர், மருத்துவ அலுவலர்களுக்கான நலன்புரி சங்கம், தேசிய வைத்தியசாலை கண்டி இற்கு

	பராமரிப்பு நிலையமொன்றும் மற்றும் முன்பள்ளியொன்றும் நடத்துவதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதிய KD/RG/3954 எனும் இலக்க மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை மூலம் மாத வாடகை ரூபா 78,500 என மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் உரிய தனியார் நிறுவனத்திடமிருந்து மாத வாடகையை அறவிடுவதற்கு எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இதன் காரணமாக 2021 நவம்பர் முதல் மதிப்பாய்வு ஆண்டின் இறுதித் தினம் வரையான 26 மாதங்களில் மாத்திரம் அரசாங்கம் ரூ. 2,041,000 வருமானத்தை இழந்துள்ளது.		கட்டிடத்தின் மாதாந்தம் மதிப்பீட்டுத் தொகையான ரூபா 78,500 இனை செலுத்துமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், GMOA தலையிட்டு சுகாதார செயலாளருடன் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதாக மருத்துவ அலுவலர்களுக்கான நலன்புரி சங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அதுவரை இடைக்கால நடவடிக்கையாக மாதாந்தம் ரூ. 25,000 வீதம் செலுத்துவதற்கு இணங்கி 04 மாதத்திற்காக ரூ. 100,000 இனை வைத்தியசாலையின் சரப் பிரிவிற்கு செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதன் பின்னர் எந்த கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் மருத்துவ அலுவலர்களின் தலைவருக்கு உரிய கட்டிடத்தின் நிலுவைத் தொகை மற்றும் மாத வாடகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும்.
(எ)	பேராதனை போதனா வைத்தியசாலையின் மருத்துவ அலுவலர்கள் தங்கும் விடுதியின் தரைத்தளத்தில் அந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்காக 2475 சதுர அடி நிலப்பரப்பில் முன்பள்ளியொன்றும் மற்றும் பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றும் நடத்துவதற்கு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது 2007 ஆம் ஆண்டு முதல் இயங்கிவந்த போதிலும், அதற்கான முறையான அனுமதி எவையும் பெறப்படவில்லை. 2022 பெப்ரவரி 10 ஆம் திகதிய KD/RG/3969 எனும் இலக்க மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை மூலம் மாத வாடகை ரூபா 50,000 என மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், இது ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டு முதல் 2023 ஜனவரி 31 ஆம் திகதி வரை எந்த வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், பேராதனை போதனா வைத்தியசாலையின் மருத்துவ அலுவலர்கள் தங்கும் விடுதியின் தரைத்தளத்தில் அந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்காக பராமரிக்கப்படும் முன்பள்ளி மற்றும் பகல்நேர பராமரிப்பு நிலையத்திற்கான 2022 பெப்ரவரி 10 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின்படி ரூ.50,000 மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் இல MH/DEV/WF/01/2023 மற்றும் 2023.05.31 கடிதத்தில் மதிப்பீட்டுத் தொகையில் 50 வீதமான ரூபா 25,000 இனை மாதாந்தம் அறவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி 2023 ஜனவரி மாதம் முதல் ரூபா 25,000 வீதம் மாதாந்த வாடகையை அறவிட்டு 2002-01-01 வருமான தலைப்பில் மாதாந்த கணக்கு சுருக்கம் ஊடாக கணக்கு வைக்க வேண்டும் எனவும்.
(ஏ)	கண்டி தேசிய வைத்தியசாலையினால் விலைமனு கோருவதற்காக வைத்தியசாலையினால் சமரப்பிக்கப்பட்ட தேவையான ஆவணங்களுக்கு அமைய 2022/2023 ஆம்	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலைக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் போது கொள்ளல் செயல்முறைகளில்

	ஆண்டுக்கான மரக்கறிகள், பழங்கள், கோழி இறைச்சி, அரிசி மற்றும் தானிய வகைகள் என்பவற்றின் மாதாந்த தேவை முறையே கிலோ கிராம் 26322, 15906,1284, 38520 மற்றும் 1284 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் உண்மையில் 10 மாதங்களுக்கு செய்யப்பட்ட ஆர்டர்களை பொதுவான கணக்கெடுப்பு செய்த போது ஆர்டர் செய்யப்பட்டிருந்த மாதாந்தம் முறையே கிலோ கிராம் 5213, 1661, 70.5, 10725 மற்றும் 303 ஆகும். அதன்படி, உலர் உணவுப் பொருட்கள் ஆர்டர் செய்யும் போது உணவு, பழங்கள் மற்றும் ஏனைய பல பொருட்கள் ஆர்டர் செய்யப்படவில்லை மற்றும் சில பொருட்களின் மாதாந்த தேவை மிக குறைந்த அளவு அதாவது 5 வீதத்தில் இருந்து 28 வீதத்திற்கு இடைப்பட்ட அளவு மாத்திரமே ஆர்டர் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, எவ்வித தர்க்க முறையும் இல்லாமல் மாதாந்த தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.		ஏற்படும் இந்த குறைகளை நிவர்த்தி செய்வதற்காக தர்க்க ரீதியான ஒரு முறையின் கீழ் இது குறித்த விஷேட அறிவு கொண்ட குழுவின் ஊடாக தற்போதைய நோயாளர் பராமரிப்பு சேவைக்குரிய பகுப்பாய்வு செய்து நுகர்வோருக்குத் பொருந்தும் வகையில் உலர் உணவு பொருட்கள் மதிப்பீட்டை மீளாய்வு செய்வதற்கு ஒரு குழுவை நியமித்து அந்த குழுவின் பரிந்துரையை எதிர் காலத்தில் விலைமனு கோரும் போது பரிசீலித்துப் பார்ப்பதற்கு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (கொள்ளல்) இற்கு அனுப்பவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும்.
(ஐ)	மாத்தறை பொது வைத்தியசாலையில் எலும்பியல் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் இருவர் பணியாற்றி வந்ததுடன், கணக்காய்வுத் தினமான 2023 நவம்பர் 30 நிலவரப்படி காத்திருத்தல் பட்டியலில் உள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 227 ஆகும். அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. மாத்தறை பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கூடம் A இன் எலும்பியல் சத்திரசிகிச்சை A பெயர்ப்பட்டியலின்படி 2023 நவம்பர் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட TKR (Total Knee Replacement) சத்திர சிகிச்சைக்காக வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் காணப்பட்ட TKR Implant பயன்படுத்தப்பட்ட போதும், நோயாளிகளின் சொந்த பணத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்து வைத்தியசாலைக்கு வழங்கும் சத்திர சிகிச்சை TKR Implant இனை நோயாளியின் சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்படுவதாக குறிப்பிட்டு ரூ. 550,000 இனை	-அவ்வாறே-	நோயாளி ஒருவர் தனது விருப்பப்படி தனது சத்திர சிகிச்சைக்காக அல்லது மற்ற நோயாளியின் பயன்பாட்டுக்காக நன்கொடையாக அல்லது குறைபாடாக உள்ள ஏதேனும் பொருட்களை வழங்கினால் அதனை முறையாக நோயாளிக்கு சிகிச்சையளிப்பதற்கு பயன்படுத்துவதற்கும் அல்லது பொது பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்படும் எனவும், TKR Implant மருத்துவ விநியோகப்பிரிவின் ஊடாக வைத்தியசாலைக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் சில வேளைகளில் அவை தட்டுப்பாடாகும் போது சில நோயாளர்கள் தமது செலவில் அந்த சாதனத்தை கொள்வனவு செய்து தனது

	தனியார் விநியோகத்தருக்கு செலுத்தியதற்காக உரிய மருத்துவ நிபுணர் மற்றும் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய உரிய TKR Implant வைத்தியசாலை களஞ்சியத்தில் இருந்தபோதும் தனியார் விநியோகத்தருக்கு ரூ.550,000 இனை செலுத்துவதற்கு நோயாளியை வற்புறுத்துவதன் மூலம் முறையற்ற பரிவர்தனை உருவாக்கப்பட்டுள்ளது.		சத்திர சிகிச்சைக்காக வழங்கப்படுவதுடன் அது நேரடியாக மீண்டும் பொருத்தப்படும். எனினும் அது ஒரு நன்கொடை என்பதால் அது உரிய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் பிரிவினால் பதியப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், ஆனாலும், வைத்தியசாலையில் அந்த நேரத்தில் அந்த சாதனம் இருப்பின் அந்த சாதனத்தை பயன்படுத்தி சத்திர சிகிச்சை செய்தல் இன்றியமையாத விடயம் என்பதால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	ii. எனினும், தணிக்கைக்கு இரண்டு நாட்களின் பின்னர் அதாவது சத்திர சிகிச்சைக்கு 02 நாட்களுக்குப் பின்னர் விநியோகத்தரினால் TKR Implant இற்குப் பதிலாக ரூ.566,000 மதிப்புள்ள வேறு எலும்பியல் சத்திர சிகிச்சை பொருட்கள் 22 வழங்கியமைக்கான ஒரு விலைப் பட்டியலை நோயாளிக்கு கொடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் மொத்தம் ரூ.216,000 பெறுமதியான TKR Implant அல்லாத வேறு எலும்பியல் சத்திர சிகிச்சை பொருட்கள் 12 இனை எலும்பியல் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணரினால் பெறப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், தனியார் விநியோகத்தர் ஒருவரினால் நோயாளியின் பெயரில் வழங்கப்பட்ட விலைப்பட்டியலின் அடிப்படையில் சத்திர சிகிச்சைப் பொருட்கள் எலும்பியல் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணரினால் வைத்தியசாலைக்கு ஏற்றுக்கொள்வதற்கு தாக்கம் செலுத்திய காரணம் கணக்காய்வில் கண்டறிய முடியாதுள்ளதுடன், அது வைத்தியசாலையில் செயற்படுத்தப்படும் சுவஸ்தா நிர்வாக அமைப்பிற்கு அல்லது உள்ளக நிர்வாக அமைப்பிற்கு இணங்காத ஒரு நிலைமை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	வேறு எலும்பியல் சத்திர சிகிச்சை பொருட்கள் உரிய நிறுவனத்தினால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப் பட்டிருந்தாலும் வைத்தியசாலை அறிக்கையின்படி இந்த வைத்தியசாலைக்கு கிடைக்கவில்லை என எலும்பியல் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணரின் அறிக்கைகள், பிரதான மருந்தாளரின் மற்றும் சத்திர சிகிச்சை கூடம் A இன் பொறுப்பு தாதியர் சகோதரியின் அறிக்கைகள் மூலம் கண்டறியப்பட்டன எனவும்.

	iii. வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெறும் மானியங்கள் மற்றும் நன்கொடைகள் வைத்தியசாலை பணிப்பாளரின் முன் ஒப்புதலுக்கமைய மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரண களஞ்சிய அலுவலரின் மேற்பார்வையின் கீழ் பதியப்பட்ட பின்னர் முறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும், இதற்கு இணங்காமல் நோயாளியின் பெயரில் வழங்கப்பட்ட விலைப்பட்டியலின் அடிப்படையில் விநியோகத்தரினால் வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்ட 12 எலும்பியல் சத்திர சிகிச்சை பொருட்கள் எலும்பியல் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணரினால் ஏற்கப்பட்டமை வைத்தியசாலை உள்ளக நிர்வாக அமைப்பிற்கு முரண்பட்டது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இலங்கையில் சுகாதார அமைப்பை தொடர்ச்சியாக பராமரிப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடைகள், மானியங்கள், உதவிகள் தொடர்ந்து கிடைப்பது இயல்பானது என்பதுடன், அது தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சுகாதார சேவையை பராமரிக்க பாரியளவில் உதவியது எனவும், சத்திர சிகிச்சைக்கூடத்தில் சத்திர சிகிச்சைகள் நோயாளியின் நோய் நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபடுவதுடன், காத்திருத்தல் பட்டியல் பதிவேடானது ஒவ்வொரு நோயாளியின் நோய் நிலையின் அடிப்படையில் உரிய மருத்துவ நிபுணரினால் கையாளப்படுவதால் அது தொடர்பான நடவடிக்கைகள் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு புறம்பானது எனவும், காத்திருத்தல் பட்டியலில் காத்திருக்கும் எந்த நோயாளருக்கும் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பொருட்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அந்த சத்திர சிகிச்சைப் பொருட்களை பயன்படுத்தி உரிய சத்திர சிகிச்சையை மேற்கொள்வது வைத்தியசாலையின் பொறுப்பு எனவும், நீங்கள் குறிப்பிட்ட சமபந்தப்பட்ட நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் எலும்பியல் சத்திர சிகிச்சை பொருட்கள் வைத்தியசாலை களஞ்சியத்திற்கு கிடைக்கவில்லை என பிரதான சத்திர சிகிச்சை மருந்தாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும்.
	iv. எலும்பியல் விஷேட மருத்துவ நிபுணர்கள் எப்போதும் அவரிடம் சிகிச்சை பெறும் நோயாளிகளை பரிசோதிப்பதற்காக வைத்தியசாலை வாட்டினை நாளாந்தம் கண்காணிப்பதாகவும், ஆலோசணைகள் வழங்குவதாகவும் வைத்தியர்களின் நாள் குறிப்பேடுகளை சரிபார்த்த போது அவதானிக்கப்பட்டது. எனினும், வைத்தியசாலை வாட்டு இலக்கம் 19 மற்றும் 21 இற்கு பொறுப்பான எலும்பியல் விஷேட மருத்துவ நிபுணர் அதற்கு	-அவ்வாறே-	விஷேட எலும்பியல் மருத்துவராக அவருக்கு சத்திர சிகிச்சை வாட்டு, வைத்தியசாலை நாளாந்த அவசர விபத்து வாட்டு, சிறுவர் அவசர விபத்துகள் குறித்து அவதானித்தல், அதற்குப்பிறகு ஒரு நாளில் எலும்பியல் நோயாளர்களை பரிசோதித்தல், செவ்வாய், வெள்ளி நாட்களிலும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை புதன் மற்றும் சனிக்கிழமை நாட்களில் சத்திர சிகிச்சைகளில் கலந்து கொள்ளல், வைத்தியசாலையின் அவசர விபத்து வாட்டு, தீவிர சிகிச்சை பிரிவுகள் மற்றும்

	மாறாக செயற்படுவதாக நோயாளர்கள் மற்றும் வாட்டு ஊழியர்களுடன் கலந்துரையாடும் போது கண்டறியப்பட்டது. இந்த நிலைமை காரணமாக எலும்பியல் விஷேட மருத்துவ நிபுணர் வரும்வரை நோயாளர்கள் குறித்த தினதை விடவும் அதிக நாட்கள் வைத்தியசாலையில் இருக்க நேரிடுவதாக உரிய வாட்டு தொடர்பான மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் அவதானிக்கப்பட்டது. இவ்வாறான காரணத்தால் நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுவது மேலும் அவதானிக்கப்பட்டது.		ஏனைய வாட்டுகளில் இருந்து வரும் நோயாளர்களின் referral பரிசோதணையில் கலந்து கொள்ளல், வைத்தியசாலை மருத்துவ சபையில் கலந்து கொள்ளல் மற்றும் வேறு கூட்டங்களில் கலந்து கொள்ளல், நோயாளிகள் குறித்து பலதரப்பட்ட கலந்துரையாடல்கள்(MDT), நோயாளிகளின் CT மற்றும் MRI தொடர்பான விஷேட மருத்துவ சந்திப்புகள், நுண்ணுயிர் நிபுணத்துவ சந்திப்புகள் மற்றும் நோயியல் விஷேட மருத்துவ சத்திர சிகிச்சை சந்திப்புகளில் கலந்து கொள்ள நேரிடுகிறது எனவும், எலும்பியல் சத்திர சிகிச்சை வாட்டுக்கு நாளாந்தம் பரிசோதிப்பதற்கு சிரேஷ்ட சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவர் இருப்பதுடன் நோயாளியின் சத்திர சிகிச்சையின் பின்னர் நோயாளியின் நிலைமை சாதாரண நிலையில் இருக்குமாயின் ஒரு முறை அல்லது இருமுறை எலும்பியல் விஷேட மருத்துவ நிபுணரினால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் சத்திர சிகிச்சையுடன் தொடர்பான சிக்கல்கள் இல்லை எனின் நோயாளியை வாட்டிலிருந்து வெளியேற்றுவது பொதுவாக நடைபெறுகிறது எனவும்.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புகள்	**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
நிதி ஒழுங்குவிதிகள் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகள்		

தயாரிக்கப்படவில்லை என்பதை பின்வரும் அவதானிப்புகளின்படி உறுதிப்படுத்தப்பட்டன.			
(அ)	2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் ஊடாக 2 மீண்டுவரும் செலவினங்களுக்காக தயாரிக்கப்பட்ட 2.5 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீடு, நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் ஊடாக வேறு செலவு விடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.	நிதி ஒழுங்குவிதிகள் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், 2023 ஆம் ஆண்டுக்காக அத்தியவசிய செலவினங்களுக்காக வரைபு செய்யப்பட்ட முழு மொத்த மதிப்பீடு திறைசேரியினால் வழங்கப்படாத காரணத்தால் உரிய செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு போதுமானதாக இருக்கவில்லை எனவும், மேலும் 2023 ஆம் ஆண்டில் நிலவிய பொருளாதார ஸ்தீரமற்ற நிலைமை காரணமாக 2023.01.27 ஆம் திகதி தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் 02 வது பிரிவின்படி அரச நிதியை முகாமைத்துவம் செய்தல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஒதுக்கீட்டை முகாமைத்துவம் செய்ய கடுமையான அறிவுறுத்தல்கள் பெறப்பட்டதுடன், அதன்படி அந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் செலவு முகாமைத்துவம் எனும் தலைப்பில் 2023.02.13 ஆம் திகதி ஒரு உள்ளக சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டது எனவும், அதன்படி பிற்போடக்கூடிய விடயங்களை பிற்போடல் மற்றும் அத்தியவசியமான விடயங்களை செயற்படுத்துவதற்கு மீதமாகிய செலவு விடயங்கள் ஊடாக மாற்றம் செய்து சுகாதார சேவையை தடையின்றி பராமரிக்கப்படுவதாக.
(ஆ)	2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் ஊடாக 4 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் மூலதன செலவினங்களுக்காக தயாரிக்கப்பட்ட 200 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீட்டில் 67 சதவீதம் முதல் 97 சதவீதத்திற்கு இடைப்பட்ட ஒதுக்கீடுகள், நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் ஊடாக வேறு செலவு விடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.	-அவ்வாறே-	-அவ்வாறே-

(இ)	2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் ஊடாக 6 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 9 மூலதன செலவினங்களுக்காக தயாரிக்கப்பட்ட முறையே 27.641 மில்லியன் ரூபா மற்றும் 2.458 மில்லியன் ரூபா ஆக 30.099 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீடு, துணை ஒதுக்கீட்டின் ஊடாக மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் 66 இன் ஊடாக முறையே 52,974.78 மில்லியன் ரூபா மற்றும் 2,626.64 ஆக 100 முதல் 750 சதவீதம் வரையான ஒதுக்கீடுகள் வேறு செலவு விடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஈ)	5 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 24 மூலதன செலவினங்கள் உட்பட 29 செலவின விடயங்களுக்காக தயாரிக்கப்பட்ட மொத்தம் 13,411 மில்லியன் ரூபா ஆரம்ப ஒதுக்கீடும் மீதமாக உள்ளன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(உ)	51 மூலதன செலவினங்கள் மற்றும் 14 மீண்டுவரும் செலவின விடயங்களுக்காக தயாரிக்கப்பட்ட மொத்தம் 34,439.10 மில்லியன் ரூபாவான ஆரம்ப ஒதுக்கீட்டில் 7,178.67 மில்லியன் ரூபா வேறு செலவு விடங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் மீதமாக உள்ள 27,260.42 மில்லியன் ரூபா மொத்த நிகர ஒதுக்கீட்டில் 21,041.81 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டை பயன்படுத்தப்படவில்லை. அந்த மீதமுள்ள தொகையின் சதவீதம் மேலதிக ஒதுக்கீட்டின் 49 சதவீதம் முதல் 114 சதவீதம் வரை இருந்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஊ)	02 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் நிதி ஒழுங்குவிதி 66 இன் ஊடாக தயாரிக்கப்பட்ட 79 மில்லியன் ரூபா மேலதிக ஒதுக்கீடு முழுமையாக மற்றும் ஆரம்ப மதிப்பீட்டின் ஒரு பகுதியும் மீதமாக இருந்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

2.2 கடப்பாடு மற்றும் பொறுப்புகள்

கணக்காய்வு அவதானிப்புகள்		பரிந்துரை	பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்
சுகாதார அமைச்சினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட செலவுத் தலைப்பு இலக்கம் 111 இன் கீழ் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு (iii) படிவத்தின்படி (திறைசேரியினால் சமரப்பிக்கப்பட்ட மொத்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை – SA 92) 2023 டிசம்பர் 31 நிலவரப்படி காணப்பட்ட பொறுப்புகளின் இருப்பு முறையே 5,519,647.978 ரூபா என்பதுடன், கடப்பாடுகளின் இருப்பு 607,956,560 ரூபா ஆகும். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.			
(அ)	நிதி ஒழுங்குவிதிகள் 94 (i) இன்படி, வேறு விதமான ஏற்பாடுகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான நிதி ஒதுக்கீடு இருப்பின் எந்தவொரு திணைக்களத்தினாலும் பணி, சேவை அல்லது வழங்கலுக்கும் எந்தவொரு செலவு அல்லது கடப்பாடுகளுக்கும் கட்டுப்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன், ஏற்கும் பொறுப்புகள் மற்றும் செலவினங்களின் அளவு ஒருபோதும் நிதி ஆண்டுக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவை விட மேற்படாதிருத்தல் வேண்டும். எனினும் அமைச்சிற்கு உரித்தான நிறுவனங்களினால் செயல்பாட்டுத் திட்டத்தின் கீழ் 17 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் மீதியை மீறி 1,395.07 மில்லியன் ரூபா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 5 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் மீதியை மீறி 81.71 மில்லியன் ரூபா என மொத்தம் 1,476.78 ஒதுக்கீட்டை மீறி பொறுப்புகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.	நிதி ஒழுங்குவிதிகளின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இணங்குவதாகவும், சம்பந்தப்பட்ட ஆண்டுக்காக வரைவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது வைத்தியசாலை மற்றும் அனைத்து நிறுவனங்களின் பொறுப்புகளையும் பெற்று அதனை கருத்தில் கொண்டு செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகிறது எனவும், எனினும் திறைசேரியினால் வரைவு மதிப்பீட்டுக்காக கோரப்படும் முழு ஒதுக்கீடும் வழங்கப்படுவதில்லை என்பதுடன் கடந்த ஆண்டின் உண்மை செலவின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன எனவும், மேலும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் மூலம் பொது மக்களுக்கு தொடர்ச்சியாக சுகாதார சேவைகளை வழங்குவதற்காக கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் மற்றும் விநியோகங்களை மேற்கொள்ள நேரிடுகின்றது எனவும், இதன்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது நடைமுறை ரீதியில் கடினம் எனவும், எனினும் இனிமேல் ஒதுக்கீட்டை மீறி கடப்பாடு

			மற்றும் பொறுப்புகளை ஏற்காதிருக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும்.
(ஆ)	வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் உள்வாங்கப்பட்ட அல்லது புதிதாக சேர்க்கப்படும் செலவு விடயங்கள் தவிர்ந்த, செயற்பாட்டு மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகளின் கீழ் 15 செலவின விடயங்களுக்காக 79.18 மில்லியன் ரூபா பொறுப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.	கடப்பாடு மற்றும் பொறுப்புகளை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இணங்குவதாகவும், சுகாதார அமைச்சிற்கு உரித்தான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் பெருமளவிலான பொறுப்புகளை உள்ளிடுவதில் ஏற்பட்ட தவறுகளின் காரணமாக பல செலவு விடயங்கள் தவறாக பதிவு செய்யப்பட்டன. எனவே, இதுபோன்ற தவறுகள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது எனவும்.
(இ)	மருத்துவ விநியோகப் பிரிவிற்காக அந்த பிரிவின் பிரதான கணக்காளரினால் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடு மற்றும் பொறுப்புகள் பற்றிய கூற்றுகளின்படி கடப்பாடு நிலுவை ரூ.79,784.95 என்றபோதிலும், அமைச்சின் நிதிக் கூற்றுகளின்படி அந்த நிலுவை 1,274.91 மில்லியன் ரூபா என குறிப்பிடப்பட்டுள்ளதால் 78,510.04 மில்லியன் ரூபா கடப்பாடு நிதிக்கூற்றுகளில் குறைவாக காட்டப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், 2024.04.29 ஆம் திகதிய எனது இலக்கம் FBL/මූල්‍ය ලේඛණ/2022 எனும் கடிதத்தினூடாக இது குறித்து மருத்துவ விநியோகப் பிரிவிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதுடன், அதற்கான பதில் கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதாகவும், இருப்பினும் தற்போதுள்ள ஒதுக்கீடுகளின் அடிப்படையில் பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும்.
(ஈ)	கண்டி தேசிய வைத்தியசாலைக்கு நீர் வசதிகளை வழங்கும் கண்டி மாநகர சபையினால் மதிப்பாய்வு ஆண்டில் டிசம்பர் மாதத்திற்காக வழங்கப்பட்ட நீர் கட்டண பட்டியலில் மதிப்பாய்வு ஆண்டின் கடைசி தினத்திற்கு ரூ. 27,883,003 நிலுவை இருப்பு தொகை காணப்பட்ட போதிலும், அந்த நிலுவையை நிதிக்கூற்றுகளில் கடப்பாடு என அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், அந்த நிலுவை இருப்பு கடந்த ஆண்டுகளுக்குரிய ரூ.10,610,220 இனை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், வைத்தியசாலைக்கான நீர் வசதிகள் வழங்கியமைக்காக கண்டி மாநகர சபைக்கு 2023.12.31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய நீர் கட்டணத்திற்குரிய கடப்பாடு மற்றும் பொறுப்புகளின் பெறுமதியின் அடிப்படையில் வருடாந்த நிதிக் கூற்று (1) இல் கண்டி மாநகர சபையின் பெயரில் செலவின தலைப்பு 111-1-5-0-1403 (11) நீர் மற்றும் மின்சாரத்தின் கீழ் ரூ.23,460,515 என பதியப்பட்டுள்ளது எனவும், மேலும், பொறுப்புகள் படிவத்தின் கடப்பாடு

			பற்றிய விபரங்கள் நெடுவரிசையில் தவறாக வரி செலுத்துதல் என அச்சிடப்பட்டுள்ளதுடன், அதனை நீர் கட்டணம் செலுத்துதல் என சரி செய்யப்படல் வேண்டும்.
(உ)	மதிப்பாய்வு ஆண்டில் மருத்துவ விநியோகப் பிரிவின் கடப்பாடு பற்றிய கூற்றின்படி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்துகள் உற்பத்தி கூட்டுத்தாபனம் ஆகிய இரு நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய நிதி மற்றும் அந்த இரு நிறுவனங்களின் நிதிக்கூற்றுகளின்படி மருத்துவ விநியோகப் பிரிவிலிருந்து அறவிட வேண்டிய நிதிக்கு இடையே 26,685.72 மில்லியன் ரூபா வித்தியாசம் உள்ளது.	இந்நிலுவைகளை சரிசெய்து நிறுவனங்களுக்கிடையே இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.	ரூ.மில்லியன் 67,908.15 மதிப்பு (SPC மற்றும் SPMC) தவறாக கடப்பாடு என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது SPC மற்றும் SPMC ஆகிய நிறுவனங்களுக்குரிய செலவு விடயங்களுக்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட முற்பணத்திற்கு ஏற்ப செலுத்தவிருந்த பெறுமதி எனவும், 2023 ஆம் ஆண்டில் திறைசேரியினால் வழங்கப்பட்ட முற்பணம் நேரடியாக செலவின விடயங்களுக்கு கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு மாறாக செலுத்தாமல் வைத்திருந்த வவுச்சர்களின் பெறுமதி இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும்.

2.3 **முற்பணம் வழங்குதல் மற்றும் செலுத்துதல்**

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 எனும் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் திருத்திய நிதி ஒழுங்குவிதிகள் 371 (2) (ஆ) இன் படி, ஒரு விஷேட பணிக்காக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் அதிகபட்சமாக ரூபா 1000,000 இனை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கமுடியும். எனினும், 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதி ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கு ரூபா	நிதி ஒழுங்குவிதிகளின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இணங்குவதாகவும், பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 1000,000 முற்பணமாக வழங்கப்பட்டாலும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட மேற்பட்ட தொகை சில எதிர்பாராத செலவினங்களின் விளைவாக ஏற்படும் செலவினங்களுக்கான தொகையை மீள பெறுவதற்காக முறையான அனுமதியுடன்

	1000,000 இனை முற்பணம் வழங்கி 124,800 ரூபா செலவினம் காரணமாக ரூபா 24,800 மீள் வழங்கப்பட்டுள்ளது.		சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்கள் எப்போதாவது எதிர்பாராத விதமாக நடக்கும்.
(ஆ)	மேற்படி சுற்றறிக்கையின் திருத்திய நிதி ஒழுங்குவிதிகள் 371 (5) இன் படி, பணிகளை பணிகளை நிறைவு செய்து 10 நாட்களுக்குள் பெற்றுக்கொண்ட உப முற்பணக் கணக்கு தீர்க்கப்பட வேண்டும் என்றபோதிலும், மதிப்பாய்வு ஆண்டில் 67 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்தம் 3.12 மில்லியன் ரூபா இற்கான துணை முற்பணம் உரிய பணிகள் நிறைவுற்று 01 முதல் 02 மாதங்கள் வரையான கால தாமத்தின் பின்னரே தீர்க்கப்பட்டுள்ளது.	பணி நிறைவுற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.	வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த பல்வேறு நிகழ்ச்சித திட்டங்களுக்காக பெறப்படும் பணி, உப முற்பணம் மற்றும் எரிபொருள் முற்பணத்திற்கான உரிய பணிகள் நிறைவுற்றதும் அல்லது பணிகள் நிறைவுற்று 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு துறைகளிலும் காணப்படும் மனித வள பற்றாக்குறை, தொடர்ச்சியாக நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துதல், கொழும்பிற்கு வெளியே தூரப் பிரதேசங்களில் நிகழ்ச்சித் தொடர்கள் நடத்துதல், பதவி நிலை உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வெளியே புற பகுதிகளில் பணிகளில் பங்கேற்றல் போன்ற காரணங்களால் தாமதங்கள் ஏற்படுவதாக அந்ததந்த துறைகளினால் குறிப்பிட்டுள்ளன எனவும், முற்பணம் உரிய காலத்தில் தீர்ப்பது தொடர்பான அறிவுறுத்தல் வாய்மொழி மூலம் மற்றும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் இந்த சிக்கல்களை தீர்ப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை மேலும் சீராக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
(இ)	2023 ஆம் ஆண்டின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் முற்பணம் பணி முடிவடைந்த உடனேயே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும், மதிப்பாய்வு ஆண்டினுள் 24 சந்தர்ப்பங்களுக்குரிய ரூ.630,477 இனை 01 முதல் 02 மாதங்கள் வரையான கால தாமத்தின் பின்னரே தீர்க்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஈ)	மதிப்பாய்வு ஆண்டில் 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்தம் 542,235 ரூபா இற்கான துணை முற்பணம் உரிய பணிகள் நிறைவுற்று 01 முதல் 22 நாட்கள் வரையான காலம் தன்னிடம் வைத்திருந்த பின்னரே தீர்க்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

(உ)	மதிப்பாய்வு ஆண்டில் 85 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்தம் 1,337,545 ரூபா இற்கான துணை முற்பணம் உரிய பணிகள் நிறைவுற்று 02 முதல் 86 நாட்கள் வரையான கால தாமத்தின் பின்னரே தீர்க்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஊ)	மதிப்பாய்வு ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட 2,010,700 ரூபாவில் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்ட பின்னர் மீதமுள்ள ரூ. 678,095 இனை 39 முதல் 81 நாட்கள் வரையான கால தாமத்தின் பின்னரே தீர்க்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுவதன் காரணமாக மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் முற்பணம் மற்றும் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்ட பின்னர் பணிகள் நிறைவுற்ற உடனேயே மீதமுள்ள பணத்தை திருப்பிச் செலுத்துமாறு ஒவ்வொரு துறைகளுக்குமான தலைவர்களுக்கு அறிவித்துள்ள போதிலும், நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரு நாளைக்கு மாத்திரம் மட்டுப்படாமல் பல நாட்கள் நடைபெறுவதால் மீள செலுத்துவதற்கு தாமதம் ஏற்படுகிறது எனவும்.
(எ)	மதிப்பாய்வு ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட 200,060 ரூபா இற்கான துணை முற்பணம் உரிய பணிகளுக்காக 50 சதவீதத்திற்கும் குறைவாக பயன்படுத்தி 04 முதல் 11 நாட்கள் வரையான காலம் தன்னிடம் வைத்திருந்த பின்னரே தீர்க்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	நிகழ்ச்சித் திட்டங்களுக்கான துணை முற்பணம் வழங்கும் போது மிகவும் யதார்த்தமான மதிப்பீடு தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், உரிய பணிகளுக்காக 50 சதவீதத்திற்கும் குறைந்த துணை முற்பணம் பயன்படுத்தியமை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் 10 நாட்களுக்குள் மீள செலுத்தாததற்கான காரணங்களை ஒவ்வொரு பிரிவிடமும் தனியாக கோரப்பட்டுள்ளது எனவும்.
(ஏ)	2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப் பட்ட ஏனைய முற்பணத்தின் (7000-0-0-111-0-002) கீழ் மருத்துவ விநியோகப் பிரிவிற்கு பல ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட 1,222,599,026 ரூபா முற்பணம் மதிப்பாய்வு ஆண்டிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தீர்க்கப்படாத முற்பணம் உரியவாறு கணக்கு வைக்கப்பட வேண்டும் என்பதுடன் இந்த முற்பணம் உடனடியாக தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	மருத்துவ விநியோகப் பிரிற்குரிய தீர்க்கப்படாத செயலற்ற முற்பண கணக்கை தீர்ப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை பெற அரச கணக்கு திணைக்களத்தின் அறிவுறுத்தலின்படி ஒரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு ஏற்கனவே கூடி இது தொடர்பான விடயங்களை ஆழமாக ஆய்வு செய்துள்ளதுடன், இந்த தீர்க்கப்படாத முற்பண நிலுவை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட முற்பணம் தீர்த்தல் கணக்கில்

			கணக்கு வைக்க முடியாது எனவும், இதற்கு பணம் செலுத்தவோ அல்லது அறவிடுவதற்கோ அவசியமில்லை என்பதும் உறுதி செய்துள்ளது எனவும், ஆகையால் 2024 ஆம் ஆண்டினுள் பெயரளவிலான ஒரு ஒதுக்கீட்டைப் பெற்று இந்த செயலற்ற முற்பண நிலுவையை தீர்ப்பது பொருத்தமானது என மேற்படி குழு பரிந்துரை செய்துள்ளது எனவும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.
(ஐ)	இலங்கை பல் வைத்தியசாலை மற்றும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 2002 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற பணக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான இழப்புகளை ஈடுசெய்வதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட பணத்தில் 2023 டிசம்பர் 31 நிலவரப்படி தீர்க்கப்படாத முறையே ரூ. 2,288,037 மற்றும் ரூ. 6,321,785 முற்பணம் நிதிக்கூற்றுகளில் (ACA 5) பல்வேறு முற்பணங்களின் கீழ் பதியப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், இந்த மதிப்பு திறைசேரி அச்சு குறிப்புகளில் 111 செலவினத் தலைப்பின் கீழ் சேர்க்கப்படவில்லை எனவும்.

2.4 அரச ஊழியர்களுக்கு முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் "B" கணக்கில் சீராக்கல் அறிக்கை தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.			
(அ)	சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து 2023 டிசம்பர் 31 நிலவரப்படி அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூ. 1,310,515 ஆன கடன் நிலுவைகளுடன் தொடர்புடைய 07 உத்தியோகத்தர்களின் பதவிகள் குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மொத்தம் ரூ. 903,283 ஆன கடன் நிலுவைகளுடன் தொடர்புடைய 12 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.	இந்த விபரங்களை உள்ளிட்டு 2024 ஆம் ஆண்டுக்கான சீராக்கல் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதுடன், 2024 ஆம் ஆண்டு இறுதியில் அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் "B" கணக்கு தயாரிக்கும் போது அனைத்து உத்தியோகத்தர்களினதும் பதவி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் உள்ளிடப் படும் எனவும்.
(ஆ)	2023 டிசம்பர் 31 நிலவரப்படி சேவையிலுள்ள 264 உத்தியோகத்தர்களுடன் தொடர்பான 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில்	இந்த உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரினதும் கடன்	அவதானிப்புகளுடன் இணங்குகிறேன்.

	காணப்பட்ட கடன் நிலவை 2023 ஆம் ஆண்டிலும் அறவிடவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி, இந்த உத்தியோகத்தர்களின் உண்மையிலே சேவையில் உள்ள உத்தியோகத்தர்களா என்பது குறித்த சந்தேகம் கணக்காய்வின் போது எழுந்துள்ளது.	நிலுவை அறவிடாததற்கு காரணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	
(இ)	2023 டிசம்பர் 31 நிலவரப்படி சேவையிலுள்ள 3,203 உத்தியோகத்தர்களுடன் தொடர்பான இடர் கடன், சொத்துக் கடன் உட்பட 2022 இறுதியில் காணப்பட்ட கடன் நிலவை 2023 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட தொகை தொடர்பில் கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.	இந்த உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரினதும் கடன் நிலுவையை அறவிடுவதற்கான துல்லியம் குறித்து கணக்காய்விற்கு உறுதி செய்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2023 ஆம் ஆண்டுக்கான இடர் கடன், சொத்துக் கடன் உட்பட 2022 இறுதியில் காணப்பட்ட கடன் நிலவை நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய விதத்தில் 12 மாதங்களும் அறவிடப்பட்டுள்ளதுடன், அந்த தவணைகள் மிக குறைந்த மதிப்பாக இருந்தமைக்குக் காரணம், உரிய கடன் வழங்கப்பட்ட காலத்தில் அந்த உத்தியோகத்தர்களின் அடிப்படை சம்பளம் தற்போதுள்ளதை விட குறைவாக காணப்பட்ட காரணத்தால் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையின் அளவும் குறைவாக இருந்தது எனவும்.
(ஈ)	2023 டிசம்பர் 31 நிலவரப்படி சேவையிலுள்ள 406 உத்தியோகத்தர்களுடன் தொடர்பான இடர் கடன் நிலுவை 2023 ஆம் ஆண்டினுள் அறவிடப்படவில்லை என்பதுடன், ஏற்றுக்கொள்ள முடியாத மதிப்பில் இடர் கடன் நிலுவை மற்றும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் மொத்த கடன் நிலுவை அதிகரித்துள்ளது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த உத்தியோகத்தர்களின் நிர்ணயிக்கப்பட்ட தவணைகள் குறித்த ஆண்டினுள் அறவிடப்பட்டுள்ளதுடன், ஆண்டினுள் அந்த உத்தியோகத்தர்களினால் கடன் நிலுவை மீண்டும் புதுப்பிக்கப்பட்டதால் கடன் நிலுவையும் அதிகரித்துள்ளது எனவும்.
(உ)	சீராக்கல் அறிக்கையின் இணைப்பு 3 இன்படி, வேறு அரசாங்க அமைச்சுகள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு உள்ள கடன் நிலுவை ரூபா 59,915,683 ஆகும். 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய இலக்கம் 118 எனும் வரவு செலவு சுற்றறிக்கையின்படி, உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் கடன் நிலுவைத் தொகையை செலுத்தவில்லை என்றால், இடமாற்றம் பெற்றுச்சென்ற திணைக்களத்தில் அவர் பணியாற்றுவதை உறுதி செய்து அந்த திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். மூன்றாவது	தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்ற 03 மாதங்களுக்குள் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள் 03 மாதங்களுக்குள் தீர்க்கப்படுவதாகவும், 2020 ஆம் ஆண்டு முதல் உள்ளக இடமாற்றம் பெற்று சென்ற மற்றும் வந்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள் பிரதான அலுவலகத்திற்கு பெறப்பட்டு அந்த ஆண்டினுள் தீர்க்கப்படுகிறது

	மாதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்ட திணைக்களத்தினால் மாத கணக்குச்சுருக்கத்தின் மூலம் குறிப்பிட்ட கடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், மூன்று மாதங்களின் பின்னர் அந்த கடன் நிலுவைத்தொகையை காட்டாதிருப்பதற்கு பொறுப்புக்கூற வேண்டும். எனினும் 2023 டிசம்பர் 31 நிலவரப்படி சுகாதார அமைச்சிற்குரிய நிறுவனங்கள் மற்றும் 61 பிரிவுகளுடன் தொடர்பான 59,915,683 ரூபா கடன் நிலுவை தொடர்பாக மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 1:6 மற்றும் 1:7 ஆகிய பிரிவுகளின் பிரகாரமும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த கடன் நிலுவையில் ரூபா 42,228,351 ஆன கடன் நிலுவைகள் 5 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் என்பதுடன், இது மொத்த கடன் நிலுவையில் சுமார் 70 சதவீதமாகும். மிகுதி கடன் நிலுவைகளில் ரூபா 14,456,909 கடன் நிலுவை 03 மாதங்களை தாண்டிய கடன் நிலுவைகள் ஆகும். அதன்படி, மொத்த கடன் நிலுவையில் ரூபா 56,685,260 அதாவது, 95 சதவீதம் உத்தியோகத்தர்களின் கவனயீனம் எழுந்த கடன் நிலுவை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		எனவும், 2020 இன் பின்னர் அமைச்சின் உள்ளே கடன் நிலுவைகள் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படுவதில்லை என்பதுடன், பழைய கடன் நிலுவைகள் தொடர்பான தகவல்களை கண்டறிந்து தீர்க்கப்பட்டு வருவதாகவும், மாகாண சபைகளில் இருந்து அமைச்சிற்கு வரும் உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை அவசரமாக தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட மாகாண சபை நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டு தீர்ப்பதற்கான நடவடிகைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
(ஊ)	சீராக்கல் அறிக்கையின் உப அட்டவணை இலக்கம் 3.2.1 இல் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் இருந்து வேறு அரசாங்க அமைச்சுகள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 870.142 கடன் நிலுவையில் ரூ.108,700 கடன் நிலுவைக்குரிய உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.	உத்தியோகத்தர்களை கண்டிப்பாக அடையாளம் காணக்கூடியவாறு இந்த தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024 ஆண்டின் இறுதி அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் “B” கணக்கு தயாரிக்கும் போது அனைத்து உத்தியோகத்தர்களினதும் தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளிடப்படும் எனவும்.
(எ)	சீராக்கல் அறிக்கையின் உப அட்டவணை இலக்கம் 3.2.2 இல் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை மொத்தம் ரூ.1,152,635 இல் கடன் நிலுவைக்குரிய 27 இற்குரிய இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் பதவிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ரூ. 12,131,232 கடன் நிலுவைக்குரிய 185 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.	உத்தியோகத்தர்களை கண்டிப்பாக அடையாளம் காணக்கூடியவாறு இந்த தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024 ஆண்டின் இறுதி அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் “B” கணக்கு தயாரிக்கும் போது அனைத்து உத்தியோகத்தர்களினதும் தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளிடப்படும் எனவும்.

(ஏ)	உப அட்டவணை 3.3 இன்படி மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 46,708,940 கடன் நிலுவையில் ரூ. 2,062,255ஆன கடன் நிலுவைக்குரிய 16 இற்குரிய இடமாற்றம் பெற்றச்சென்ற நிறுவனங்கள் குறிப்பிடப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த உத்தியோகத்தர்களுக்குரிய கடன் நிலுவைகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் நிலுவைகள் என்பதால் தகவல்களை கண்டறிவது சிரமம் என்பதுடன், 2024.06.30 கணக்கு தயாரிக்கும் போது அனைத்து உத்தியோகத்தர்களினதும் இடமாற்றம் பெற்று வந்த நிறுவனங்களை உள்ளிடுவதாகவும்.
(ஐ)	உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 6,855,286 கடனில் நிலுவையில் உள்ள 92 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை. மேலும் அதில் 36,034,920 ரூபா கடன் நிலுவையில் 560 இற்குரிய உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த உத்தியோகத்தர்களுக்குரிய கடன் நிலுவைகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் நிலுவைகள் என்பதுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் முற்பண கணக்கு B தயாரிக்கும் போது அனைத்து உத்தியோகத்தர்களினதும் பதவி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களை உள்ளிடுவதாகவும்.
(ஒ)	உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் ரூ. 2,454,852 கடன் நிலுவையில் 40 நிலுவைகள் சுகாதார அமைச்சிற்குரிய நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ஆகும்.	இதற்கு நிலைமைக்கு காரணமான விடயத்தை அடையாளம் கண்டு சீராக்கல்களை உடனே செய்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கடன் நிலுவையின் சரியான இணைப்பில் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் முற்பண கணக்கு B தயாரிக்கும் போது உள்ளிடுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும்.
(ஓ)	உப அட்டவணை இலக்கம் 3.2.2 உள்ளிடப்பட்ட 2023 டிசம்பர் 31 நிலவரப்படி அறவிடப்பட வேண்டிய ரூபா 12,336,602 கடன் நிலுவை சுகாதார அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகள் ஆகும். 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆகிய நான்கு ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கையின் ஊடாக இந்த நிலைமை தங்களின் அவதானத்திற்கு உட்படுத்துவதுடன், ஒரே செலவின தலைப்பில் உள்ள நிறுவனங்களுக்கு இடையே கடனாளி மற்றும் கடன்நிலுவைகள் இருக்கமுடியாது என்பதால் இந்த கடன் நிலுவைகள் குறித்து ஆய்வு செய்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த கடன் நிலுவைகளை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2020 ஆம் ஆண்டு முதல் உள்ளக இடமாற்றம் பெற்று சென்ற மற்றும் வந்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள் பிரதான அலுவலகத்திற்கு பெறப்பட்டு அந்த ஆண்டிலேயே தீர்க்கப்படுகிறது எனவும், எனவே 2020 இன் பின்னர் அமைச்சின் உள்ளே கடனாளி மற்றும் கடன்நிலுவைகள் இருக்க இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், பழைய கடன் நிலுவைகள் குறித்து தகவல்களை கண்டறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

(ஓ)	சீராக்கல் அறிக்கையின் உப அட்டவணை இலக்கம் 3.2.2 உள்ளிடப்பட்ட சுகாதார அமைச்சிற்குரிய நிறுவனங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வந்த 7 உத்தியோகத்தர்களின் செலுத்த வேண்டிய கடன் நிலுவை மொத்தம் 234,840 ரூபா ஆகும். ஒரே செலவின தலைப்பில் உள்ள நிறுவனங்களுக்கு இடையே கடன்நிலுவைகள் இருக்கமுடியாது என்பதால் இந்த கடன் நிலுவைகளின் துல்லியம் குறித்து கணக்காய்வில் சிக்கலாக உள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஔ)	பதவி நீக்கப்பட்ட 271 உத்தியோகத்தர்களிடமிருந்து 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்படவேண்டிய கடன் நிலுவை ரூபா 11,216,174 என்பதுடன், அதில் ரூ. 7,480,476 அதாவது 67 சதவீதத்திற்கு நிகரான 5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைகள் என்பதுடன், ரூ.9,486,261 அதாவது 85 சதவீதம் 7.26 ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய நிலுவைகள் ஆகும்.	தாபன விதிக்கோவையின் விதிகளுக்கு ஏற்ப உடனடியாக கடன்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், பணி இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு தேர்தல் ஆணையாளரிடம் இருந்து உத்தியோகத்தர்களின் தற்போதைய முகவரிகளை பெற்று, கடன் நிலுவைகளை தீர்க்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல், கிராம உத்தியோகத்தர் ஊடாக அறிவித்தல், பிராந்தியத்திற்குரிய காவல் நிலையத்திற்கு அறிவித்தல் போன்ற செயல்முறைகள் மூலம் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(க)	மொத்தம் 500,334 ரூபா கொண்ட பதவி வெறிதாக்கப்பட்ட 08 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மொத்தம் ரூபா 6,993,834 ஆன 122 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை	உத்தியோகத்தர்களை சரியாக அடையாளம் காணும் விதத்தில் இந்த தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு B தயாரிக்கும் போது உத்தியோகத்தர்களின் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பதவிகள் உள்ளிடப்படும் எனவும்.
(ங)	சேவையை வெறிதாக்கிய 1121 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் 34,903,560 ரூபா கடன் நிலுவை அறவிட வேண்டிய இருந்ததுடன் அதில் 11,765,191 ரூபா அதாவது 34 சதவீதமான கடன் நிலுவைகள் 5 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் என்பதுடன், 22,401,077 ரூபா அதாவது 64 சதவீதம் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் நிலுவைகள் ஆகும். இந்த நிலுவைகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து	தாபன விதிக்கோவையின் விதிமுறைகளின்படி உடனடியாக கடன்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், சேவையை வெறிதாக்கிய உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு தேர்தல் ஆணையாளரிடம் இருந்து உத்தியோகத்தர்களின் தற்போதைய முகவரிகளை பெற்று, கடன் நிலுவைகளை

	அதிகரித்து வருவதுடன், கடனை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை.		தீர்க்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல், கிராம உத்தியோகத்தர் ஊடாக அறிவித்தல், பிராந்தியத்திற்குரிய காவல் நிலையத்திற்கு அறிவித்தல், பிணையாளிகளுக்கு அறிவித்தல் போன்ற செயல்முறைகள் மூலம் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ச)	மொத்தம் 2,636,421 ரூபா கொண்ட சேவையில் இருந்து விலகிய 80 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மொத்தம் ரூபா 12,732,979 ஆன 459 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை	உத்தியோகத்தர்களை சரியாக அடையாளம் காணும் விதத்தில் இந்த தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு B தயாரிக்கும் போது உத்தியோகத்தர்களின் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பதவிகள் உள்ளிடப்படும் எனவும்.
(ஞ)	ஓய்வுபெற்ற 423 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ரூபா 19,996,087 என்பதுடன் அதில் 7,853,389 ரூபா அதாவது 39 சதவீதமான கடன் நிலுவைகள் ஒரு வருடத்திற்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும்.	தாபன விதிக்கோவையின் விதிமுறைகளின்படி உடனடியாக கடன்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் நீண்ட காலமாக அறவிடாத ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவையை குறைப்பதற்கு ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறிவித்து கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும், மரணித்த உத்தியோகத்தர்களின் இறப்பு பணிக்கொடை இதுவரை தீர்க்கப்படாமல் உள்ள உத்தியோகத்தர்களின் வாரிசுகளுக்கு அறிவித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் ஏனைய ஏற்பாடுகளின்படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது எனவும், ஓய்வு பெற்ற மற்றும் மரணித்த

			உத்தியோகத்தர்களின் வாரிசுகள் ஓய்வூதிய உதவித் தொகை மற்றும் இறப்பு பணிக்கொடை பெறுவதற்காக முன்வராததால் கடன் நிலுவைகளை அறவிடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது எனவும், எனினும் கடன் அறவிடும் சம்பளத்தைப் பொறுத்து வாரிசுகள் முன்வராத உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய உதவித் தொகை மற்றும் இறப்பு பணிக்கொடையை தயாரித்து கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன எனவும்.
(ட)	மொத்தம் 2,557,390 ரூபா கொண்ட ஓய்வு பெற்ற 31 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மொத்தம் ரூபா 1,613,738 ஆன 42 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை	உத்தியோகத்தர்களை சரியாக அடையாளம் காணும் விதத்தில் இந்த தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு B தயாரிக்கும் போது உத்தியோகத்தர்களின் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பதவிகள் உள்ளிடப்படும் எனவும்.
(ண)	மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவை தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 4.4 தொடக்கம் 4.6 வரையான பிரிவுகளின் விதிமுறைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் என்றபோதிலும், அவ்வாறு செயற்படாத காரணத்தால் 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகை 7,038,713 ரூபா ஆகும். அதில் 33 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்த தொகை ரூபா 1,614,341 அதாவது 23 சதவீதமான கடன் நிலுவைகள் 05 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும். மேலும், இந்த கடன் நிலுவைகளில் ரூபா 4,827,157 அதாவது 69 சதவீதமான கடன் நிலுவைகள் ஒரு வருடத்திற்கு மேலான நிலுவைகள் ஆகும்.	தாபன விதிக்கோவையின் விதிமுறைகளின்படி உடனடியாக கடன்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும்

(த)	மரணித்த 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 126,049 கடன் நிலுவைகளில் உரிய உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மரணித்த 19 உத்தியோகத்தர்களளிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 581,481 ஆன கடன் நிலுவைகளில் உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை	உத்தியோகத்தர்களை சரியாக அடையாளம் காணும் விதத்தில் இந்த தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு B தயாரிக்கும் போது உத்தியோகத்தர்களின் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பதவிகள் உள்ளிடப்படும் எனவும்.
(ந)	பேராதனை போதனா வைத்தியசாலையில் சேவையாற்றிக் கொண்டிருக்கையில் மரணித்த சாரதி ஆர்.ஏ.கே.யு. ரணசிங்க அவர்களின் சொத்துக் கடனுக்கான கடன் கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், நிலுவையை உறுதிப்படுத்தும் கோவையொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடன் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டு இரண்டு வாரங்களில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் மரணித்த காரணத்தால் இறப்பு பணிக்கொடை அறவிடப்பட்ட பின்னர் மீதமுள்ள 191,345 ரூபா கடன் நிலுவையை 21 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாத நிலுவையாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. கடனாளியின் மரண சான்றிதழின்படி திறந்த முடிவு வழங்கப்பட்டதன் அடிப்படையில் அக்ரகாரா காப்புறுதியில் காப்புறுதித் தொகை வழங்க மறுக்கப்பட்டது. சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளரின் இலக்கம் FCC/05/අය ලෝ.ණයගෙති/2009 எனும் 2009 ஜூன் 12 ஆம் திகதிய கடிதத்தின்படி, சொத்து கடனுக்கு உரிய ஆவணங்களை ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காது உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு உத்தரவுகள் வழங்கப்பட்டாலும், அந்த நடவடிக்கைகள் 2023 மே 31 ஆம் திகதியிலும் மேற்கொள்ளப்படவில்லை.	இது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், பேராதனை போதனை வைத்தியசாலையின் சேவையில் இருந்த போது மரணித்த மரணித்த சாரதி ஆர்.ஏ.கே.யு. ரணசிங்க அவர்களின் சொத்துக் கடனுக்கான கடன் கோவை காணாமல் போனதால் கடன் கோவையை சமர்ப்பிக்க முடியவில்லை எனவும், எனினும் அவ்வாறு கோப்புகள் காணாமல் போக முடியாது என்பதால் அது தொடர்பில் விசாரணை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், மேலும் மேற்படி விடயங்களை தவிர இவர் சம்பந்தப்பட்ட கடனை 2001.02.28 ஆம் திகதி பெற்றுள்ளார் என்பதுடன், அதன்பின்னர் அதற்கு நெருங்கிய திகதியில் திடீரென கடுமையாக நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் 2001.03.23 ஆம் திகதி மரணித்த காரணத்தால் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு சரியான காணி பத்திரத்தின் பிரதியை அல்லது கடன் தொகையில் எவ்வித கொடுக்கல் வாங்கல்கள், தகவல்களைப் பெற முடியாமல் போனதாலும் மற்றும் மரணத்திற்கான காரணமாக ஒரு திறந்த தீர்ப்பு வழங்கப்பட்டதால் காப்பீட்டு கடன் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் திடீரென மரணித்த அவரின் கடனை விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு செலுத்துமாறு கூறுவது நியாயமற்றது எனவும்.

(ப)	மாகாண சபையின் கீழுள்ள பொலன்னறுவை பொது வைத்தியசாலை 2010 ஆகஸ்ட் 01 ஆம் திகதி மத்திய அரசிற்கு கையகப்படுத்தப்பட்டதன் பின்னர் பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த திரு என்.ஜீ சோமவீர அவர்களின் ரூ. 93,458 கடன் நிலுவை வட மத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு செலுத்தப்பட போதிலும், 2011 ஆம் ஆண்டில் மெதிரிகிரிய பிரதேச சபையினால் உரிய கடன் தொகையை செலுத்தவில்லை என செய்யப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வட மத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து மீண்டும் ஒருமுறை பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பொலன்னறுவை பொது வைத்தியசாலையினால் உரிய கடன் தொகையை மெதிரிகிரிய பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டது. கடன் நிலுவை தீர்க்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் கடன் நிலுவையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கவனக்குறைவாக மேற்கொள்ளப்பட்ட இந்த கொடுப்பனவு தொடர்பில் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமை கணக்காய்வில் சிக்கலாக இருந்தது. மேலும் 2023 ஜூலை கணக்காய்வு தின நிலவரப்படி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் உரிய பணத்தை தீர்த்தல் தொடர்பில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், திரு என்.ஜீ சோமவீர அவர்களின் போதனா வைத்தியசாலை – பொலன்னறுவைக்கு இடமாற்றம் பெற்ற வந்த ஒரு உத்தியோகத்தர் என்பதுடன் அந்த கடன் தொகையை போதனா வைத்தியசாலை – பொலன்னறுவை 2010-08.01 ஆம் திகதி மத்திய அரசிற்கு பொறுப்பேற்ற வேளையில், செலுத்துகை வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், ஆனாலும், 2013 ஆம் ஆண்டிலும் அந்த கடன் தொகை தீர்க்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த நிறுவனத்தினால் உரிய தொகைக்காக காசோலையொன்று மெதிரிகிரிய பிரதேச சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுடன், அந்த கடன் நிலுவைக்கு உரிய தொகையை வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலவலகத்தினால் எமக்கு வழங்குமாறு கோரப்பட்டது எனவும், ஆனாலும் அந்த பணத்தை இதுவரை செலுத்தவோ அல்லது அந்த பணம் செலுத்தப்பட்ட விதம் தொடர்பிலோ எவ்வித அறிவித்தல்களும் இதுவரை எமக்கு வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலவலகத்தினால் செய்யவில்லை எனவும், இது தொடர்பில் பல தடவைகள் வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலவலகம் மற்றும் வட மத்திய மாகாண செயலகம் ஆகிய நிறுவனங்களுக்கு அறிவித்த போதிலும் எந்த நிறுவனத்தினாலும் சம்பந்தப்பட்ட எந்த தகவலும் எமக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், அந்த கடன் தொகை மெதிரிகிரிய பிரதேச சபையினால் வழங்கப்பட்டதால் போதனா வைத்தியசாலை –

			பொலன்னறுவை வைத்தியசாலையிடம் அந்த கடன் கோவை இல்லை எனவும்.

2.5. வைப்பு நிலுவைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மாதாந்த கணக்கு சுருக்கம் மற்றும் சுகாதார அமைச்சின் நிலுவைகள் கணக்கு சுருக்கத்திற்கும் இடையே ரூ. 16,485,076 நிகர வேறுபாடு காணப்பட்டது.	இந்த வேறுபாடுக்கான காணத்தை அடையாளம் கண்டு உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.	சுகாதார அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் பொது வைப்பு நிலுவைகள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒற்றை இருப்புகளுடன் ஒப்பிடப்படுவதுடன், மாதாந்த மற்றும் வருடாந்த பற்றுக் கடன் பெறுமதி ஒப்பிடப்படும் எனவும், மேற்படி வேறுபாட்டுக்கான காரணம் 2016 ஆம் ஆண்டில் பழைய பொது வைப்புக் கணக்கு இருப்பு அரச வருமானத்தில் கணக்கு வைக்கும் போது பழைய இருப்பு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றும் போது ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக ஏற்பட்ட வேறுபாடாக இருக்கலாம் என ஊகிக்க முடியும் எனவும், திறைசேரி கணக்கு சுருக்கம் அச்சுப் பிரதியில் தொடக்க இருப்பில் காணப்படும் இருப்பை சரி செய்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறு திறைசேரி நெறிப்படுத்தல் திணைக்களத்துடனும் கலந்துரையாடப்பட்டது எனவும், எவ்வாறாயினும் அனைத்து பொது வைப்புகளும் மீண்டும் மதிப்பாய்வு செய்து

			வேறுபாட்டை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ஆ)	நிதி ஒழுங்குவிதிகள் 571 (3) இன்படி, அமைச்சின் கீழுள்ள 15 நிறுவனங்களுக்குரிய 02 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா. மில்லியன் 1,144.89 இற்கான வைப்பு நிலுவைகள் தீர்ப்பதற்கு அல்லது அரச வருவாயில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நிதி ஒழுங்குவிதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	எதிர் காலத்தில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும்
(இ)	சுகாதார அமைச்சினால் பராமரிக்கப்படும் வைப்பு லெட்ஜரின்படி கல்முனை ஆதார வைத்தியசாலைக்குரிய கணக்கு இலக்கம் 16/99 இல் வரவுகள் பக்கத்தில் மொத்தம் ரூ. 450,000 கூடுதலாக பதியப்பட்டுள்ளது.	பொறுப்புடன் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கை செய்தல் வேண்டும்.	சரியான தொகை ரூ. 2,054,277 என்பதுடன் தவறுதலாக ரூ. 2,504,277 என பதியப்பட்டமை இதற்கான காரணம் எனவும், இனிமேல் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் சரியாக கணக்கு வைப்பதற்கு கவனம் செலுத்தப்படும் எனவும்.

2.6 வங்கிக் கணக்குகளை நிர்வகித்தல்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்காமல் 06 மாதத்திற்கு மேற்பட்ட காசோலை தொடர்பில் நி.ஒ 396 (ஈ) இன்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனினும், 24 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூ.1,085,852 மதிப்புள்ள 30 காசோலைகள் தொடர்பாக அவ்வாறு செய்யவில்லை.	நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாக
(ஆ)	3 வைத்தியசாலைகளுக்குரிய 04 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட ஆனால் இணைவு இல்லாமல் காணப்பட்ட காசோலைகளின் மதிப்பு ரூ.4,424 ஆகும். 01 மாதம் முதல் 05 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் காசோலை இணைவு இல்லாமல் காணப்பட்டது.	இது குறித்து ஆராய்ந்து தேவையான சீராக்கல்கள் செய்ய வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாக

(இ)	தேசிய கண் வைத்தியசாலையுடன் தொடர்புடைய ரூ. 92,510 மதிப்புள்ள இணங்காண முடியாத பெறுகைகள் 07 சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாக
(ஈ)	திறைசேரி நெறிப்படுத்தல் திணைக்களத்தினால் 2024 மார்ச் 04 ஆம் திகதி சுகாதார அமைச்சின் பிரதான நிதி அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் மூலம் சுகாதார அமைச்சினால் இலங்கை வங்கிக் கணக்கு இலக்கம் 7040278 இன் கீழ் பராமரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ கணக்கு முடக்கப்பட்டுள்ளது எனவும் அதனை தொடர்ந்து பராமரிப்பதற்கான தேவை இல்லையெனின் அதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி இந்த கணக்கு மூடப்படவில்லை எனினும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உரித்தான வழங்கப்பட்ட வங்கி சீராக்களுடன் அமைச்சினால் பராமரிக்கப்படும் வங்கி கணக்கு பட்டியலில் இந்த கணக்கும் காட்டப்பட்டுள்ளது.	சரியான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த கணக்கில் 2020 இன் பின்னர் கொடுக்கல் வாங்கல்கள் எவையும் நடைபெறவில்லை என்பதுடன், முடக்கப்பட்ட இந்த கணக்கு தொடர்பான விபரங்கள் தவறுதலாக 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட வங்கி சீராக்கல் அறிக்கையில் காட்டப்படவில்லை எனவும், இந்த முடக்கப்பட்ட வங்கி கணக்கை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

3 செயற்பாட்டு ஆய்வு

3.1 செயற்திறன்

3.1.1 பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்புகள் ----------		**பரிந்துரை** ----------	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்** ----------
(அ)	மனிதவள முகாமைத்துவ பிரிவு		

	i. தேசிய சுகாதார மூலோபாய முதன்மை திட்டம் 2016 – 2025 இல் சுகாதார நிர்வாகம் மற்றும் சுகாதார மனிதவளம் பற்றிய கருப்பொருள் பிரதான 2 பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட சுகாதார மனிதவள பிரச்சனைகளாக குறைந்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் விதிமுறைகள் (Norms) தரநிலைகளின் அளவுகோல்களுக்கு அமைய திருத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (சேவை தேவை/ வேலை அளவு/ மக்கள் தொகை/ புவியியல் மற்றும் பூமி காரணிகள் / சர்வதேச தரநிலை போன்ற) சிக்கல்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட உத்திகளாக சுகாதார மனிதவள கொள்கை மேம்படுத்தல் (திட்டமிடல் / ஆட்சேர்ப்பு/ பயிற்சிகள் / ஈடுபடுத்தல் / தொழில் முன்னேற்றம்) குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மனிதவள மூலோபாய திட்டம் மேம்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட போதிலும் மீண்டும் வரைவு செய்யபப்பட்டு விஷேட கருத்துகள் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் கருத்துகளை பெறுவதற்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன் ஆண்டின் இறுதி வரையிலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்படவில்லை.	இந்த திட்டம் திட்டமிட்டவாறு முடிக்க வேண்டும்.	இணங்குவதாகவும், உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கை முகவர் அலுவலகத்தின் ஊடாக இந்த திட்டம் தயாரிக்கப்படுதுடன், அது இறுதி கட்டத்தில் உள்ளது எனவும், அந்த அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட விஷேட குழுவினால் இது மேற்கொள்ளபடுவதுடன், அதற்குத் தேவையான ஒதுக்கீடு அவர்களினால் வழங்கப்படுவதாகவும், இந்த விடயம் இவ்வாறு இருக்கும் போது இலங்கை முகங்கொடுத்த சமூக பொருளாதார சவால்கள் காரணமாக மனித வளம் முகாமைத்துவம் உட்பட புதிய போக்குகளை கருத்தில் கொண்டு இந்த வரைவு புதுப்பித்தல் மற்றும் அதன் அடிப்படையில் மனித வளம் செயற்பாட்டு திட்டம் (Human Resource for health Master Plan 2025 - 2035) தயாரிப்பதற்கும் தற்போது ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், எனவே இவ்விரு திட்டங்களையும் ஆண்டினுள் தயாரித்து நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
	ii. 2019/2020 ஆம் ஆண்டுகளில் உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்களில் இருந்து மாணவ தாதியர் 2021 குழுவை 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியாகும் போது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 2023 ஒக்டோபர் நிலவரப்படி விண்ணப்பங்கள் மாத்திரம் கோரப்பட்டுள்ளதுடன் நேர்முகப் பரீட்சை 2024 இல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், 2018 ஆம் ஆண்டு முதல் தாதி, நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ போன்ற சேவைகளுக்கான கற்கை நெறிக்கு மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆன்லைன் முறை ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு மாணவர்களை தெரிவு செய்தல் மனிதவள முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது எனவும்.
	iii. 2018/2019 ஆம் ஆண்டுகளில் உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்களில் இருந்து நிறைவுகாண் மருத்துவ ஊழியர்கள் 2021 குழுவை 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியாகும் போது	-அவ்வாறே-	இணங்குவதாகவும், மேற்படி இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதும் சம்பந்தப்பட்ட நிர்வாக பிரிவின் கோரிக்கைக்கு அமைவாக எனவும்.

	ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டு இறுதியாகும் போது வர்த்தமானி அறிவித்தல் வரைவு செய்தல் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.		
	iv. 2018/2019 ஆம் ஆண்டுகளில் உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்களில் இருந்து குடும்பநல உத்தியோகத்தர்கள் மாணவ பயிற்சிக்கு 2021 குழுவை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை 2023 ஆகஸ்ட் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024 மார்ச் 31 திகதியில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த விடயத்தை மேற்கொள்ளாது முன்னைய குழுவில் தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் 2 வது குழுவினராக 1000 மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன எனவும்.
(ஆ)	சுகாதார சேவை நிலைமை மற்றும் பாதுகாப்பு		
	i. முக்கியமான பதவியணி (மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் நிறைவுகாண் மருத்துவ) குழுவினர் இளங்கலை பட்டதாரிகளாக உள்வாங்குவதற்கான சுகாதார பாதுகாப்பு நிலைமை மற்றும் பாதுகாப்பு மொடியுலர் மேம்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட போதிலும் அது ஆரம்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	பதில் வழங்கவில்லை
	ii. 2023 ஆண்டில் மருத்துவ சம்மேளனம் மற்றும் தொழிற்கல்வி கல்லூரிகளுடன் இணைந்து கிளினிக் நிர்வாகம் (Cilnical Governance) தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்து மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டு இறுதியாகும் போது திட்ட முன்மொழிவுக்கான ஒப்புதலைப் பெற்று வரவு செலவு அனுமதிக்காக மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	பதில் வழங்கவில்லை

(இ)	குடும்நல பணியகம் குடும்பநல திட்ட வழிகாட்டல் மற்றும் தர செயற்பாட்டு செயல்முறை (SOP) நிறைவு செய்து அச்சிடுவதற்கு திட்டமிட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், குடும்பநல திட்ட வழிகாட்டல் மற்றும் தர செயற்பாட்டு செயல்முறை (SOP) திருத்த செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப உதவிகள் பெறப்படுவது உலக சுகாதார நிறுவனத்தினால் (WHO) தயாரிக்கப்படும் புதிய ஆவணங்களில் இருந்து எனவும், எனினும், அந்த சர்வதேச வழிகாட்டல்கள் எமக்கு 2023 ஒக்டோபர் மாதம் வரை கிடைப்பதற்கு தாமதமானதால் அந்த பணி எதிர்பார்க்கப்பட்டவாறு மேற்கொள்ள முடியவில்லை எனவும், 2024 இல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ஈ)	சுதேச மருத்துவ பிரிவு தொற்றா நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அடிக்கடி பயன்படுத்தப்படும் இறக்குமதி பொருட்களுக்காக மாற்றீடு செய்யமுடியுமான மூலப்பொருட்களின் இயற்பியல் வேதியல் அளவுருக்களை பகுப்பாய்வு செய்வதற்கு 2023 இல் திட்டமிட்ட போதிலும், அந்த பணியை செய்வதற்கு தேவையான மாதிரிகள் சேகரிப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை
(உ)	HIV/AIDS Control Programme under GFATM Funds இந்த திட்டத்தின் கீழ் 287 விடயங்கள் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டது. அதில் 69 விடயங்கள் அதாவது 24 சதவீதம் ஆரம்பிக்கப்படவில்லை என்பதுடன், 109 விடயங்கள் அதாவது 38 சதவீதமானவை 25 சத வீதத்திற்கும் குறைவான முன்னேற்றத்திலேயே காணப்பட்டது.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை
(ஊ)	Health System Enhancement Project (ADB)	-அவ்வாறே-	சுகாதார அமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம் ஊடாக முதல் கட்டத்தின் கீழ் 43 ஆரம்ப வைத்தியசாலைகளின் சிவில் வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ளன

	மத்திய, ஊவா, வடமத்திய, சபரகமுவ மாகாணங்களில் ஆரம்ப சுகாதார சேவை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் 42 ஆரம்ப சுகாதார சேவை சிவில் வேலைகளை மேம்படுத்த இத்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்டது. ஆதில் 21 வைத்தியசாலைகள் முன்னேற்றம் வரை இருக்கவில்லை என்பதுடன், 127 சுகாதார துறை நிலையங்கள் மறுசீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதில் 95 நிலையங்கள் முன்னேற்றம் காணவில்லை.		எனவும், 2 வைத்தியசாலைகளில் மாத்திரம் சிவில் வேலைகள் நடைபெற்று வருவதாகவும், இரண்டாம் கட்டத்தின் கீழ் 50 ஆரம்ப வைத்தியசாலைகளில் சிவில் வேலைகளை செய்வதற்கு திட்டமிடப்பட்டது எனவும், அதில் 21 வைத்தியசாலைகளின் வேலைகள் ஏற்கனவே நிறைவு செய்துள்ளதுடன், 25 வைத்தியசாலைகளின் வேலைகள் செய்யப்பட்டு வருவதாகவும், மேலும் ஒரு வைத்தியசாலையில் சிவில் வேலைக்குப் பதிலாக ஒப்பந்தத்தை வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுமதியை எதிர்பார்த்து உள்ளதாகவும், 3 வைத்தியசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் போதியளவு ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தால் செய்யவில்லை எனவும், இந்த திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சிவில் அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான அத்தியவசியமானவை ஏற்கனவே நிறைவு செய்துள்ளன. சுகாதார துறை நிலையங்கள் 21 இன் அபிவிருத்தி செயற்பாடுகள் நிதியின்மை காரணமாக செய்யாதிருக்க தீர்மானிக்கப்பட்டது.
(எ)	புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை உருவாக்கப்பட்ட புகையிலை வரி சூத்திரம் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் மதுபான வரி சூத்திரம் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டு இறுதியிலும் அது மேற்கொள்ளப்படவில்லை.	-அவ்வாறே-	மேம்படுத்தப்பட்ட வரி சூத்திரம் தொடர்பில் தொடர்ந்து கலந்துரையாடப்பட்டு நடைமுறைப் படுத்துவதற்கு நடைவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், 2023 பிற்பாதியில் மதுபானத்திற்கான வரி சூத்திரம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும்.

3.1.2 எதிர்பார்த்த நிறைவு மட்டத்தை அடையாமை

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	கண்டி தேசிய வைத்தியசாலையின் அதி புரோட்டீன்/ அதி சக்தி கொண்ட உணவுகள் தேவைப்படும் நோயாளர்கள், நீரிழிவு நோயாளிகள், சிறுநீரக நோயாளிகளுக்கு நாளாந்தம் பழங்கள் பரிந்துரைக்கப்பட்டு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அந்த பழங்களை வழங்குவதற்கு விநியோகத்தர் தவறியுள்ளார். 2023 ஜூலை மாதத்தில் ஆர்டர் செய்யப்பட்ட பப்பாளி கி.கி 180.45 இல் 48.3 கி.கி உம், வாழைப்பழம் கி.கி 512.15 இல் 14.5 கி.கி மட்டுமே விநியோகத்தரினால் வழங்கப்பட்டிருந்ததுடன், ஆர்டர் செய்யப்பட்ட 941 தோடம்பழங்கள், 50 அவகாடோ, 14 மாம்பழங்கள், 22 ஆப்பிள் பழங்கள், 2.2 கி.கி திராட்சை விநியோகத்தறினால் வழங்கப்படவில்லை. மேலும் 2023 ஜூலை மாதத்திற்காக சாதாரண பால்மா (ஆடையுடன் கூடிய) கி.கி 277 உம், குழந்தை பால்மா 31 கி.கி ஆர்டர் செய்திருந்த போதிலும் பால் மா எவையும் வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை. இதனால் நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட உணவுகளை வழங்க முடியவில்லை.	இந்த நிலையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டவாறு வைத்தியசாலையினால் ஆர்டர் செய்த அளவில் பழங்களை விநியோகிக்குமாறு தொடர்ந்து வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் உரிய ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்ட போதிலும், விநியோகத்தரினால் சில உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்பதுடன், சில உணவுப் பொருட்கள் குறைந்த அளவில் வழங்கப்படுகிறது எனவும், இந்த குறைபாடுகளை சரி செய்யுமாறு விநியோகத்தருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இது குறித்து நல்ல முடிவு கிடைக்கவில்லை எனவும், அதனால் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் தொடர்பில் அடுத்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கான கொள்ளல் நடவடிக்கைகளில் வைத்தியசாலையினால் ஆர்டர் செய்யப்படும் அனைத்து உணவுப் பொருட்களையும் தேவையான முழு அளவில் விநியோகிக்கத் தவறும் சந்தர்ப்பங்களில் ஏதாவது தண்டப்பணம் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுக்கக்கூடியவாறு உடன்படிக்கைக்குரிய ஒப்பந்தத்தில் சேர்ப்பது பொருத்தமானது என பரிந்துரைத்துள்ளது எனவும்.

(ஆ)	தொற்றா நோய்த் தடுப்பு பிரிவு இந்த பிரிவின் ஆலோசனைகள், கூட்டாண்மை மற்றும் தலைமை ஆகிய உப பிரிவுகளின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் பெறப்படாமைக்கான காரணங்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.		
	i. தேசிய தொற்றா நோய் பேரவை (National NCD Council) 06 மாத்திற்கு ஒரு முறை கூட வேண்டும் என்ற போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஒரு முறையாவது கூடவில்லை.	திட்டமிட்டவாறு உரிய காலத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும்.
	ii. ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை தொற்றா நோய்கள் வழிகாட்டல் குழு கூட்டப்பட வேண்டும் என்ற போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஒரு முறை மாத்திரமே கூடியது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iii. 03 மாதங்களுக்கும் ஒருமுறை தொற்றா நோய்கள் தொடர்பான தேசிய ஆலோசனைக் குழு (NABNCD) கூட வேண்டும் என்ற போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஒரு முறை மட்டுமே நடைபெற்றது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv. தேசிய மட்டத்தில் வருடாந்த ஆலோசனை திட்டம் மற்றும் மாவட்ட திட்டம் தொடர்பாக வழிகாட்டல்கள் தயாரிப்பதற்காக கூட்டங்களை கூட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2023 ஜூன் 28 ஆம் திகதி மட்டுமே கூட்டம் நடைபெற்றுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v. ஒன்றிணைந்த கண் பாதுகாப்பு தொடர்பான தேசிய மூலோபாய திட்டம் மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு 2023 ஆண்டினுள் திட்டமிடப்பட்ட போதிலும் அந்த பணி குறித்த ஆண்டினுள் நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vi. ஆஸ்மா மற்றும் நாள்பட்ட சுவாச நோய்களுக்கான (Asthma & COPD) தேசிய நோய்ப் பதிவேட்டை(National Disease Registry) மேம்படுத்துவதற்காக ஆலோசனை	-அவ்வாறே-	-அவ்வாறே-

		கூட்டம் நடத்துவதற்கு 2023 ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்டதுடன், பணிப்பாளர் நாயகம் மற்றும் தொழில்துறை கல்லூரிகளுடன் ஆரம்ப கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றுள்ளன.		
	vii.	காணங்களைத் தடுப்பதற்கான தேசிய பேரவை (National Injury Prevention Council – NIPC) நிறுவப்பட்டு ஒரு வருடத்திற்கு 02 முறை கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு 2023 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட போதும் அவ்வாறு நடைபெறவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	viii.	நீரில் மூழ்குதலை தடுப்பதற்கு தேசிய மூலோபாய திட்டமொன்று தயாரிப்பதற்கு 2023 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட போதும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	ix.	அனைத்து வகைக்குரிய செயற்கை நீச்சல் குளங்களுக்கான பாதுகாப்பு தரங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்க திட்டமிடப்பட்ட போதிலும் அதனை நிறைவு செய்யவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	x.	பாடசாலைகளின் செயற்கை நீச்சல் குளங்களுக்கான பாதுகாப்பு தரங்களை இனங்காண்பதற்கான தயாரிக்க திட்டமிடப்பட்ட போதிலும் அதனை நிறைவு செய்யவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xi.	தேசிய சிறுவர் பாதுகாப்பு மூலோபாயத்தை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதனை நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xii.	பாடசாலை பகல் பாதுகாப்பு நிலையம் மற்றும் முன்பள்ளிகளுக்கான பாதுகாப்பு திட்டம் குறித்த பட்டியல் பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிட்ட போதிலும் அந்த பணி 2023 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	xiii.	எதிர்ப்பார்த்த பிரச்சனைகளை அறிக்கையிட "பாடசாலை பாதுகாப்பு பதிவேட்டு (School Safety Register) இனை மேம்டுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட போதும் அவ்வாறு நிறைவேற்றப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xiv.	புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல காயங்கள் (விஷங்கள் மற்றும் விஷ பாம்புக்கடி) (National Action Plan on Neglected Tropical Injuries (Poisoning Venomous Snake Bites) மீதான தேசிய செயல் திட்டம் தயாரிப்பதற்கு எதிர் பார்க்கப்பட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xv.	வயதானவர்களிடையே விழுவதை தடுப்பதற்கான மூலோபாயம் தயாரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xvi.	பணியிட பாதுகாப்பு சோதனைப் பட்டியலை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xvii.	முதியோர் இல்ல பாதுகாப்பு சோதனைப் பட்டியலை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xviii.	சுகாதார சேவைகள் வழங்குவதற்கான ஒவ்வொரு மட்டத்திற்குமான (ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை) காயங்கள், அவசர முகாமைத்தும் தொடர்பில் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் மருந்துகள் பட்டியலொன்று தயாரிக்க எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xix.	வைத்தியசாலைகளுக்கு இடையேயான இடமாற்றத்திற்கான குறைந்பட்ச தரநிலை (Minimum Standard for Inter Hospital Transfer) இனை மேம்பாட்டுக்கான திட்டம் வகுக்கப்பட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	

	xx. முதலுதவிக்கான தேசிய மூலோபாய திட்டம் வகுக்கப்பட்ட போதிலும் அது ஆரம்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(இ)	தேசிய புற்று நோய்த் தடுப்பு திட்டம்		
	i. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய புற்று நோய் பதிவேடு அச்சிடுவதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டுக்கான பதிவேடு மட்டுமே அச்சிடப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	ii. HHIMS இல் பைலட்டிங் புற்றுநோய் பதிவு மொடியுலர் (Pilotting Cancer Register Module of HHIMS) தயாரிப்பதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. இதற்கான ஆரம்ப திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன், ICTA நிறுவனத்தினால் சுகாதார அமைச்சின் சுகாதார தகவல் பிரிவின் ஊடாக HHIMS இன் அடிப்படையிலான மின் மொடியுலர் உரிய நேரத்தில் மேம்படுத்தப்படாததால் புற்றுநோய் பதியும் மொடியுலரை நிறைவு செய்ய முடியவில்லை என அறிவித்துள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஈ)	கொள்கை பகுப்பாய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவு இலங்கை மனித இரத்தப்போக்கு ஆரம்ப உயிரணு மாற்றுதல் மற்றும் உயிரணு சிகிச்சை குறித்த தேசிய கொள்கை (National Policy on Human Hematopoietic Stem Cell Transplantation and Cellular Therapy in Sri Lanka) இனை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு 2023 ஆம் ஆண்டில் கடைசி கொள்கை ஆவணங்கள் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கொள்கை வரைவு மட்டுமே தயாரிக்கப்பட்டிரந்தது.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.
(உ)	உலக வங்கி உதவியின் கீழ் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் வரை செயல்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார சேவை அமைப்பை வலுப்படுத்தும் திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் 1,445 மில்லியன் ரூபா ஒதுக்கீடு வடமத்திய மாகாண சுகாதார சேவைகள்		

	திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்த ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பொது வைத்தியசாலைகளின் ஆரம்ப சுகாதார பிரிவுகளுக்கு இணைக்கப்பட்ட மக்கள் தொகையில் உள்ள 35 வயதிற்கு மேற்பட்ட மக்கள் தொகை அதாவது 25 சதவீதமானவர்கள் பதிவு செய்யப்பட்ட தொற்றா நோய்களை இனங்காண்பதற்காக அனுப்பப்படல் வேண்டும் எனினும், 2019 முதல் 2023 செப்டெம்பர் 15 வரையான காலத்தினுள் அனுராதபுரம் மாவட்டத்தில் 13 வைத்தியசாலைகளில் 35 வயதிற்கு மேல் இனங்காணப்பட்ட மொத்த மக்கள் தொகையில் பதிவு செய்து சிகிச்சை பெற்ற சராசரி சதவீதம் 20.4 ஆக காணப்பட்டது.	திட்டத்தின் எதிர் பார்க்கப்படும் நோக்கத்தினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இந்த DLI காட்டியை தற்போது அணுகி உள்ளது.
	ii. இந்த திட்டத்தின் கீழ் இருக்க வேண்டிய தெளிவான ஆர்வ குறிகாட்டி (DLI) இல 08 இன்படி, 35 – 45 வயதுக்கு இடைப்பட்ட மொத்த பெண்கள் உள்ளடங்கும் வகையில் கருப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகளில் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் 35 வயதான மொத்த பெண்களில் கருப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டவர்கள் 48 – 70 சதவீதம் என்பதுடன், அது 2022 இல் 50.3 சதவீதம் வரை குறைந்துள்ளது.	-அவ்வாறே-	DLI இல 8 இற்குரிய தரவுகளைக் காட்டும் அறிக்கை சமர்ப்பித்துள்ளது எனவும்.
	iii. 2022 ஆம் ஆண்டில் மொத்த சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் 05 சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆய்வுகளின்படி அந்த சதவீதம் 22 – 40 வரை காணப்பட்டதுடன், 15 சுகாதார மருத்துவ அதிகாரி	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.

		அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆய்வுகளின்படி 45 வயதான மொத்த பெண்களில் கருப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பெண்களின் சதவீதம் 05 – 36 வரை காணப்பட்டது. அதன்படி திட்டத்தின் இருக்க வேண்டிய தெளிவான ஆர்வ குறிகாட்டி (DLI) இலக்கம் மிக குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையானது, இலக்கு நோக்கம் முழுமையடையவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
	iv.	தமுத்தேகம ஆதார வைத்தியசாலையில் காணப்படும் லெபரொஸ்கொபி (Laparoscopy) இயந்திரம் பழைய மற்றும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் புதிய ஒரு இயந்தரத்தை வைத்தியசாலைக்கு பெற்றுத்தருமாறு வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகரினால் கோரப்பட்டுள்ளது. அதன்படி, அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஆரம்ப சுகாதார சேவை வலுப்படுத்தல் திட்டத்தின் கீழ் (PSSP) 2022 ஆம் ஆண்டின் இலக்கம் 631-70-04-2102-25(iii) எனும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் செலவு தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், எவ்வித கொள்வனவுகளும் மேற்கொள்ளாது 2023 ஆம் ஆண்டில் மேற்படி அதே திட்டத்தின் கீழ் ரூ.47,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2024 ஜனவரி 12 கணக்காய்வு திகதியிலும் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதன்படி, லெபரொஸ்கொபி இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 02 வருட காலமாக எந்த பணிகளுக்கும் பயன்படுத்தப்படாமை மற்றும் காணப்பட்ட இயந்திரத்தை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியமை நோயாளர் பராமரிப்பு சேவையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இதன் மூலம் இழக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதுடன், முறையான கொள்ளல் முறையை பின்பற்றி தமுத்தேகம ஆதார வைத்தியசாலைக்கு லெபரொஸ்கொபி (Laparoscopy) இயந்திரத்தை பல சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், இது குறித்து சரியான அவதானம் செலுத்தப்பட்டு தற்போதைய நிலையை சரி செய்து நோயாளர் பராமரிப்பு சேவையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

3.1.3 எதிர்பார்க்கப்படும் பயன்களை (Outcome) பெறாமை

கணக்காய்வு அவதானிப்புகள்		பரிந்துரை	பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்
(அ)	பேராதனை போதனா வைத்தியசாலையில் மகப்பேறு பிரிவில் 2018 ஆம் ஆண்டில் புதிய சத்திர சிகிச்சை அறையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குத் தேவையான பௌதீக வளங்களான சத்திர சிகிச்சை படுக்கை, மயக்க மருந்து இயந்திரம், மொனிட்டர் இயந்திரம் போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்ட போதிலும், புதிய சத்திர சிகிச்சை அறையின் செயற்பாடுகள் 2023 ஒக்டோபர் 22 ஆம் திகதியிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	திட்டங்களைத் திட்டமிடும் போது அந்தத் திட்டங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான மனித வளங்களை பெறுவதற்கான திறனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த வைத்தியசாலையின் மகப்பேறு பிரிவு நிர்மாணிக்கப்பட்டு தேவையான உபகரணங்களை வழங்கியிருந்த போதிலும், அந்த புதிய சத்திர சிகிச்சை அறையை பராமரிப்பதற்குத் தேவையான ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக பழைய சத்திர சிகிச்சை அறையில் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும்.
(ஆ)	மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் ரூ. 45.28 மில்லியன் மதிப்பீட்டில் அதன் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதில் ஆராய்ச்சிகளுக்காக 5 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கியிருந்தது. நிறைவு செய்யப்பட்ட ஆய்வுப் பணிகளுக்காக மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக சுமார் 2.46 மில்லியன் ரூபா இத்தொகையில் செலவு செய்துள்ளது. அதன்படி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	ஆராய்ச்சிகளுக்கு போதிய கவனம் செலுத்த வேண்டும்.	திட்டமிட்டபடி திறைசேரியினால் தேவையான தொகையை ஒதுக்காததால் ஒதுக்கப்பட்ட தொகையை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும்.
(இ)	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளை வலையமைக்கும் தொழில்நுட்ப செயல் திட்டத்தை அனுராதபுரம் மாவட்டத்தில் செயற்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டில் விலாச்சிய மற்றும் எலயாபத்துவ பிரதேச வைத்தியசாலைகளுக்கு 5,574,780 ரூபா மொத்த பெறுமதியான கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் கெப்பிதிகொல்லாவ,	இது குறித்து விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன், கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை திறம்பட	சுரியான தர பகுப்பாய்வை மேற்கொள்ளாமல் 2012 தயட்ட கிருள்ள திட்டத்திற்கு இணையாக இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது எனவும், இதன் விளைவாக திட்டம் வெற்றிபெறவில்லை என்பதுடன், எவ்வாறாயினும் திறமையின்மையை குறைத்து பயனை அதிகரிப்பதை கருத்தில் கொண்டு கணினிகள் மற்றும் பிற அலுவலக உபகரணங்களை வேறு

	பதவிய மற்றும் கெகிராவ ஆதார வைத்தியசாலைகளுக்கும் வழங்கப்பட்ட 3,107,897 ரூபா மொத்த பெறுமதியான கணினி பாகங்கள் 05 வருடங்களுக்கு மேலாக செயலிழந்து காணப்படுவதால் இத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.	பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பல வைத்தியசாலைகளில் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது எனவும், எனினும், 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் டிஜிட்டல் மயமாக்கல் (Digital) திட்டம் தாமதித்து தொடங்கப்பட்டாலும் வலையமைப்பு திட்டம் தற்போது அலுவலகங்களில் செயற்படுத்தப்படுகிறது.

3.1.4 திட்டத்தை நிறைவு செய்யாது கைவிடல்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	தேசிய ECMO மையப் பிரிவை நிர்மாணிப்பதற்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் தனியார் நிறுவனத்துடன் ரூ.21,002,903 பெறுமதிக்கு 2021 டிசம்பர் 27 ஆம் திகதி ஒப்பந்தம் செய்துள்ளது. வைத்தியசாலையின் இருதய மற்றும் மார்பு அறுவை சிகிச்சை தீவிர சிகிச்சை பிரிவிற்கு அருகில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு இடைநடுவில் நிறுத்தப்பட்ட இந்த கட்டுமான பணிக்காக கணக்காய்வு தின நிலவரப்படி ஒப்பந்ததாரருக்கு மொத்தம் 7,319,097 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2022 ஜூன் 28 ஆம் திகதியாகும் போது ஒப்பந்ததாரரினால் கட்டுமான பணிகளை நிறைவு செய்து கட்டிடத்தை வைத்தியசாலைக்கு ஒப்படைக்க வேண்டும் எனினும், அதற்கு இணங்காமல் செயற்பட்டதால் கணக்காய்வுத் தினமாகும் போது ஒப்பந்ததாரருக்கு 03 கொடுப்பனவு வவுச்சர்கள் ஊடாக செலுத்தப்பட்ட மொத்த தொகை 7,319,097 ரூபா வீணான செலவாக காணப்பட்டது.	இத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட நிதியை திறம்பட பயன்படுத்த எரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக GELSA எனும் அமைப்பு நன்கொடை வழங்குவதற்கும் இணங்கியுள்ளதால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும், ஒப்பந்தத்தை இடைநிறுத்தும் வரை ஒப்பந்ததாரரினால் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக 02

			பில்களில் உரிய பணம் செலுத்தப்பட்டது எனவும்.
	ii. இருப்பினும், ஒப்பந்ததாரரின் வேண்டுகோளின்படி, வைத்தியசாலை பணிப்பாளரின் 2022 ஜூன் 28 ஆம் திகதிய THKA/AC/03/53/2021 எனும் இலக்க கடிதத்தின்படி மூலப்பொருட்களின் விலைகள் மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகைக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாது என்ற கோரிக்கையின்படி தயாரிக்கப்பட்ட புதிய மதிப்பீட்டு பெறுமதி ரூ. 40,918,214 அதாவது 194 சதவீதம் அதிகம் என்பதால் 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கூடிய கொள்ளல் குழு ஒப்பந்தத்தை நிறுத்த முடிவு செய்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iii. அதன்படி, ஒப்பந்த மதிப்பில் கட்டுமான பணியை முடிக்க இயலாது என அறிவிக்கப்பட்ட திகதியாகும் போது ஒப்பந்ததாரரினால் நிறைவு செய்யப்பட்ட வேலைகளை தனித்தனியாகக் கண்டறிந்து, மீதமுள்ள வேலைகளுக்கு மாத்திரம் புதிய மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டும் என்பதால் அந்த மதிப்பீடுகளின் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் விலை மாறுபாடு தொடர்பில் சிக்கல்கள் உள்ளமை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது.	இந்த தகவல்கள் அனைத்தும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.	-அவ்வாறே-
	iv. கணக்காய்வின் பௌதீக ஆய்வு தினமாகும் போது ஒப்பந்ததாரரினால் கட்டிடத்தின் தரைத் தளத்தின் அடித்தளம், Slab மட்டம் வரை தூண்கள் மற்றும் Slab இடல் மாத்திரமே முடிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்ததாரரினால் பணி ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களுக்குப் பிறகு அதாவது ஒப்பந்தத்தின்படி வேலையை நிறைவு செய்ய வேண்டிய திகதியாகும் போது ஒப்பந்ததாரரின் கட்டுமானங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 35 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரரின் கட்டுமானப் பணிகளில் அசாதாரண தாமதம் காரணமாக முதல் மதிப்பீட்டின்படி கட்டுமான பணிகளை நிறைவு செய்ய	இது தொடர்பில் ஆராய்ந்து பொறுப்பதிகாரிகளுக்கெதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-அவ்வாறே-

	முடியவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன்படி, வைத்தியசாலையின் பொறுப்பதிகாரிகளின் கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக உரிய தினத்தில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யமுடியவில்லை என்பதும் அதன் காரணமாக புதிய மதிப்பீட்டின் கீழ் பணிகளை நிறைவு செய்வதற்கு அரசாங்கம் அதிகளவு செலவு செய்ய நேரிடும் என்பதும் அவதானிக்கப்பட்டது.		
	v. இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் உள்ள சிரேஷ்ட இருதய சத்திர சிகிச்சை நிபுணரின் எந்தவொரு ஊழியர்கள் அல்லது ஏனைய ஊழியர்களின் ஒப்புதலின்றி மற்றும் தற்போதுள்ள இருதய சத்திர சிகிச்சை தீவிர பிரிவின் கிளினிக் மற்றும் கட்டடக்கலை சூழலை அழித்து இந்த ECMO மையத்தின் கட்டுமானம் தொடங்கப்பட்டது என சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து எழுத்து மற்றும் வாய்மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டமை உரிய கட்டுமானம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையில், அங்கீகரிக்கப்பட்ட கட்டடக்கலை திட்டங்களில் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் கட்டுமானத்திற்காக பெறப்பட்ட தொழில்நுட்ப மற்றும் மருத்துவ பரிந்துரைகளில் மற்றும் முறையான ஒப்புதல் பெறப்பட்ட கடிதங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vi. இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் உள்ள சிரேஷ்ட இருதய சத்திர சிகிச்சை நிபுணரால் தொடர்ந்து இந்த ECMO பிரிவை நிர்மாணிப்பதன் மூலம் இருதய சத்திர சிகிச்சை தீவிர பிரிவிற்கு மற்றும் சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்படும் தீங்கான நிலைமைகள் குறித்து வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்துமூலமாக தொடர்ந் அறிவிக்கப்பட்ட போதிலும், அது குறித்து முறையான எந்த விசாரணையும் அல்லது சாத்தியக்கூறு அறிக்கை மூலம் விபரங்களை வெளிப்படுத்தாமல் இந்த கட்டுமானம் செய்யப்பட்டது எனவும், இது இருதய மார்பு நோயாளர்களுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதும் அவதானிக்கப்பட்டது என்பதுடன், இருதய மார்பு சத்திர சிகிச்சைப் பிரிவின் விஷேட மருத்துவ நிபுணருடன் கணக்காய்வில்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	மேற்கொண்ட கலந்துரையாடலில் மற்றும் பெறப்பட்ட எழுத்து மற்றும் வாய்மொழி மூல சாட்சிகளின்படி அது தெளிவாகிறது என்பதும் அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	செலவின இலக்கம் 111-2-13-69-2104 இன் கீழ் முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் தேசிய பக்கவாத சிகிச்சை நிலையத்தை (National Stroke Treatment Centre) நிர்மாணிப்பதற்கு 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்பந்ததாரருடன் விலை பொருந்தாததால் கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்ட பில்களைத் தீர்ப்பதற்காக ரூ.26,412,267 செலவிடப்பட்டுள்ளது.	இது தொடர்பில் கண்டறிந்து செலவிடப்பட்ட தொகையை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.
(இ)	செலவின இலக்கம் 111-02-13-012-2104(11) இன் கீழ் மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவு (ETU) அபிவிருத்தி செய்வதற்கு 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வழங்கப்பட்ட 07 கட்டுமானத் திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.
(ஈ)	61 மில்லியன் ரூபா செலவில் களுத்துறை போதனா வைத்தியசாலையில் மருத்துவ வாட்டு தொகுதியின் கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் 25 மில்லியன் ரூபா செலவில் சிலாபம் பொது வைத்தியசாலையின் 6 மாடிகளைக் கொண்ட மருத்துவ வாட்டு தொகுதியின் கட்டுமான பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	களுத்துறை போதனா வைத்தியசாலையின் மருத்துவ வாட்டுத் தொகுதியின் கட்டுமான பணிகள் பொறியியல் பணிகள் தொடர்பான ஆலோசனைப் பணியகத்துடன் கலந்துரையாடப்பட்டு மீண்டும் பணிகளை ஆரம்பிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், அதற்கமைய வழங்கப்பட்ட முற்பணத் தொகைக்கு ஏற்க பணிகளை ஆரம்பித்து மீதமுள்ள பணிகளை 2025 அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது எனவும், சிலாபம் பொது வைத்தியசாலையின் 6 மாடிகள் கொண்ட மருத்துவ வாட்டுத் தொகுதி பேராசிரியர் பிரிவாக நிறுவ தனியார் முதலீட்டாளருடன் கலந்துரையாடப் பட்டுள்ளதுடன், அந்த

			முதலிட்டாளர் கட்டிடத்தின் மீதமுள்ள பணிகளை நிறைவு செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும், அதன்படி முடிவு கிடைக்கும் வரை கட்டிடத்தின் கட்டுமான பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டிற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும்.

3.1.5 திட்டம் செயற்படுத்துவதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்புகள் ----------		**பரிந்துரை** ----------	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்** ----------
(அ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் இரத்தக் கசிவு வடிகட்டும் பிரிவு மற்றும் சிறுநீரக இரத்த நாள மாற்றுப்பிரிவு என்பவற்றை அமைப்பதற்காக ரூ. 790,081,600 மதிப்பில் 8 மாடிகள் கொண்ட கட்டிடமொன்று அமைப்பதற்கு 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2023 ஜூன் மாதம் 02 ஆம் திகதி கணக்காய்வு தினமாகும் போது கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 08 வருடங்கள் கடந்துள்ள போதிலும் மதிப்பீட்டின்படி நிர்மாணப் பணிகள் நிறைவடையாத நிலையில் காணப்பட்டதுடன், கட்டிடம் முறையாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு ஒப்படைப்பதற்கான அதன் ஒப்பந்ததாரரினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதி தொடங்கி 2016 பெப்ரவரி 13 ஆம் திகதி முடிக்கப்பட வேண்டியிருந்தாலும், உரிய தினத்தில் பணிகள் முடிக்கப்படவில்லை. வைத்தியசாலை பணிப்பாளரின் 2019 டிசம்பர்	இந்த திட்டத்தின் பணிகளை துரிதமாக நிறைவு செய்து பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், இரத்தக் கசிவு வடிகட்டும் பிரிவு மற்றும் சிறுநீரக இரத்த நாள மாற்றுப்பிரிவு என்பவற்றின் கட்டுமானம் தொடர்பான

	06 ஆம் திகதிய AC/03/2014 எனும் இலக்க கடிதத்தின் பந்தி 02 இன்படி இந்த கட்டிடம் 2018 ஜனவரி 03 ஆம் திகதியன்று திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், உரிய திகதியில் பணிகளை நிறைவு செய்ய முடியாமையினால் 2020 டிசம்பர் 30 ஆம் திகதி கட்டிடத்தை வைத்தியசாலையிடம் ஒப்படைக்கபட இருந்தது. அன்றைய திகதியிலும் ஒப்பந்ததாரர் பணிகளை நிறைவு செய்து வைத்தியசாலைக்கு ஒப்படைக்கவில்லை என்பதுடன், ஒப்பந்த காலத்தை நீடிக்க ஒப்புதல் வழங்குவதற்கான எழுத்துமூல ஆதாரங்கள் அல்லது கால நீடிப்பு காலத்தினுள் பணிகளை நிறைவு செய்வதற்கான திட்டம் குறித்த ஆதாரங்கள் எவையும் கோவையில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		ஒப்பந்தக் கட்டுப்பாடு சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன் எமது வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கும் இந்த கட்டிடம் தொடர்பில் எமது கண்காணிப்புகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே அமைச்சிற்கு வழங்கப்படும் எனவும், இரத்தக் கசிவு வடிகட்டும் பிரிவு மற்றும் சிறுநீரக இரத்த நாள மாற்றுப்பிரிவு 2018.01.08 ஆம் திகதி திறக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சின் பொது சுகாதார பிரிவின் பிரதிப் பணிப்பாளரின் 2017.06.08 ஆம் திகதிய DDG(PHS)/01/P/1/2017 எனும் கடிதத்தில் அறிவிக்கப்பட்டது எனவும், அதன்படி வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்களைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன எனவும், உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்ட போதிலும் எதிர்பார்த்தபடி கட்டிடத்தின் கட்டுமான பணிகள் நிறைவு செய்து வைத்தியசாலைக்கு ஒப்படைக்காததால் இந்த பிரிவு ஆரம்பிக்கும் வரை அந்தந்த இடத்திலேயே பிரிவுகளை வைத்திருக்க நேரிட்டது எனவும், சத்திர சிகிச்சை அறையிலும் பல குறைபாடுகள் காணப்பட்ட காரணத்தால் சத்திர சிகிச்சை அறையையும் தொடங்க முடியாமல் உள்ளது எனவும், நாட்டில் ஏற்பட்ட கோவிட் நோய்த் தொற்று நிலைமையும் இந்த இரண்டு பிரிவுகளையும் ஆரம்பிப்பதில் தாமத்தை ஏற்படுத்தியது எனவும், கட்டிட பணிகள் 98 சதவீதம் நிறைவு செய்யப்பட்ட பிறகு, தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைப் பிரிவு தவிர மீதமுள்ள ஏனைய பகுதிகளை முறையாக வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனவும், மீதமுள்ள சிறு

			பணிகளும் நிறைவு செய்யப்பட்டு 2024 ஈம் ஆண்டினுள் நிறைவு செய்து அனைத்து பிரிவுகளும் வைத்தியசாலைக்கு பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், மீதமுள்ள பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்கான ஒதுக்கீடுகளும் ஒதுக்கியுள்ளது எனவும், கட்டிடத்தின் மத்திய குளிரூட்டி அமைப்பின் உள்பகுதிகளில் காணப்பட்ட நீர் கசிவு தற்போது சரிசெய்யப்பட்டது எனவும், கட்டிடத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்யுமாறு ஒப்பந்ததாரருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறப்பட்ட போதிலும் நிலுவையில் உள்ள பில்களை செலுத்துவதற்கு தாமதித்த காரணத்தால் அந்த குறைபாடுகளை சரி செய்ய ஒப்பந்ததாரர் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் செலுத்த வேண்டிய நிலுவை பில்களை செலுத்திய பிறகு, பொறியியல் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தினால் தற்போது குறைபாடுகள் சரி செய்யப்பட்டன எனவும்.
	ii. கட்டிடத்தின் கட்டுமான பணிகள் நிறைவு செய்வதற்கு முன்னர் இரத்தக் கசிவு வடிகட்டும் பிரிவு மற்றும் சிறுநீரக இரத்த நாள மாற்றுப்பிரிவுக்கு தேவையான மொத்தம் 198,865,893 ரூபா பெறுமதியான சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன என்பதுடன், 2023 ஜூன் 02 கணக்காய்வு தின நிலவரப்படி அவை கட்டிடத்தின் ஒவ்வொரு இடத்திலும் குவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	iii. இரத்தக் கசிவு வடிகட்டும் பிரிவு மற்றும் சிறுநீரக இரத்த நாள மாற்றுப்பிரிவுக்காக 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 83,575,671 ரூபா பெறுமதியான 20 வகைகளுடன் தொடர்புடைய 114 சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள் 2023 ஜூன் 02 கணக்காய்வு தின நிலவரப்படி பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டதுடன், அந்த அனைத்து உபகரணங்களின் உத்தரவாத காலம் (Warranty Period) பயன்பாட்டுக்கு முன்பே காலாவதியாகிவிட்டது.	அவ்வாறே-	அவ்வாறே-
	iv. இரத்தக் கசிவு வடிகட்டும் பிரிவு மற்றும் சிறுநீரக இரத்த நாள மாற்றுப்பிரிவுக்காக கொள்வனவு செய்யப்பட்ட சில சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலையின் ஏனைய பிரிவுகள் வாட்டுகளில் மற்றும் சிகிச்சைப் பிரிவுகளில் பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ளதால் அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்கு மாறாக வேறு நோக்கங்களுக்காக முறைசாரா முறையில் பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவ்வாறே-
	v. கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த மத்திய குளிரூட்டி அமைப்பின் மூலம் கட்டிடத்தின் உள்பகுதிகளுக்கு நீர் கசிவு ஏற்பட்டுள்ளது என்பதும், அதன் விளைவாக கட்டிடத்தின் சுவர்கள், சிவிலிங் மற்றும் தரை என்பன பாதிக்கப்பட்டுள்ளதுடன் சத்திர சிகிச்சைக் கூடம், நோயாளர் சிகிச்சை வாட்டுகள், மருந்து களஞ்சியம், சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள், அலுவலக உபகரணங்களும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளமை அவதானிப்பட்டது. இந்நிலைமையானது ஒப்பந்ததாரருக்கு செலுத்திய ரூ. 73,450,329 அனது வீணான செலவு என்பது அவதானிக்கப்பட்டது.	இத்திட்டத்தின் கட்டுமானம் குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்படல் வேண்டும்.	-அவ்வாறே-
	vi. கட்டுமான திட்ட பொறியியலாளருக்கு அனுப்பப்பட்ட வைத்தியசாலை பணிப்பாளரின் 2022 மே 05 ஆம் திகதிய THKA/A/3/21/2019/11 எனும் கடிதத்தின்படி, குளிரூட்டி	அவ்வாறே-	அவ்வாறே-

	அமைப்பின் மூலம் ஏற்படும் நீர் கசிவு மற்றும் சில கட்டுமான குறைபாடுகளை சரி செய்து தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வுத் தினமான 2023 ஜூன் 02 ஆம் திகதியிலும் அந்த குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கட்டுமானமானது, தற்போது கட்டிடத்தில் இயங்கும் கிளினிக்குகளுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பல்வேறு திட்ட நிகழ்சியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மொத்தம் 4,133.5 மில்லியன் ரூபா மதிப்புள்ள 05 கட்டிடங்களுக்கு கணக்காய்வுத் திகதியின்படி ஒரு ஒப்பந்ததாரருக்கு 03 திட்டங்களுக்கு மொத்தம் 1,361.7 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதுடன், 02 திட்டங்களுக்காக இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட பணம் தொடர்பில் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. ஒப்பந்த உடன்படிக்கையின்படி, கணக்காய்வுத் தினமாகும் போது பணிகளை நிறைவு செய்து ஒப்படைக்கப்பட வேண்டிய மொத்தம் 4,133.5 மில்லியன் ரூபா மதிப்புள்ள 05 கட்டிடங்களுக்காக ஒப்பந்ததாரருக்கு ரூ. 1,361.7 மில்லியன் ரூபா செலுத்தப்பட்ட போதிலும், பணிகளை நிறைவு செய்யவில்லை என்பதுடன், 06 மாதங்கள் முதல் 34 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்ததாரருக்கு செலுத்திய தொகை வீணான செலவு என்பதை அவதானிக்க முடிந்தது.	இத்திட்டத்திற்காக செலவிடப்படும் தொகையை பயனுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	சிறுவர் வாட்டு தொகுதியின் கட்டுமானப் பணிகள் அடித்தளம் வரை நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள கட்டுமான பணிகள் பெரிய அளவிலான திட்டங்களின் மறு நிரலாக்கம் மற்றும் துரிதப்படுத்துவதற்கான அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் குழு (RAMP) இனால் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது எனவும், பல் வாட்டுத் தொகுதி கட்டுமானம் RAMP குழுவினால் கட்டிடத்தின் கட்டுமானத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியது என்பதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பில் இருந்து கட்டுமானத்தைப் பாதுகாக்க தேவையான அறிவுறுத்தல்கள் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது எனவும்,

			சிறுநீரக பிரிவின் நிர்மாணப் பணிகள் இந்த வருடத்தினுள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், சத்திர சிகிச்சை தொகுதியின் நிர்மாணப் பணிகள் சுமார் 49 சதவீதம் நிறைவடைந்துள்ளது என்பதுடன், RAMP குழுவினால் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும், எனினும் இந்த சத்திர சிகிச்சை வாட்டுத் தொகுதியின் தேவை மிகவும் வலுவாக உள்ளதால் இலக்கம் அமப/24/0150/610/006 மற்றும் 2024.02.08 ஆம் திகதிய எனும் அமைச்சரவை தீர்மானத்தின்படி மீதமுள்ள பகுதிகளின் கட்டுமானப் பணிகள் 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளதுடன், பக்கவாத பிரிவைப் பயன்படுத்தும் வகையில் 2023 ஆம் ஆண்டில் பணிகளை நிறைவு செய்து வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன், மேல் தளம் சுவாச நோய் சிகிச்சைப் பிரிவாக கட்டுவதற்கு 2024 இல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன எனவும், சிறுவர் வாட்டுத் தொகுதி தவிர ஏனைய வாட்டுத் தொகுதிகள் பயன்படுத்தக்கூடிய வகையில் கட்டிடத்தின் கட்டுமான பணிகள் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டன எனவும்.
	ii. கணக்காய்வுத் தினமாகும் போது பணிகளை நிறைவு செய்ய வேண்டிய திட்டங்களுக்காக ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட மொத்தம் 681.4 மில்லியன் ரூபா பணி முற்பணத்தில் 334.2 மில்லியன் ரூபா மீள அறவிடப்படவில்லை. அதன்படி அரசாங்க நிதி நீண்ட காலம் பயன்படுத்தப்படாமல் ஒப்பந்ததாரரிடம் காணப்பட்டது என்பதும், முற்பண பிணைகளின் கால நீடிப்பு அல்லது அரசாங்கத்திற்கு	இந்த முற்பண கணக்கை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-அவ்வாறே-

		கையகப்படுத்தல் தொடர்பில் எந்த ஆதாரங்களும் கணக்காய்விற்கு ஒப்படைக்கவில்லை.		
	iii.	கணக்காய்வுத் தினமாகும் போது பணிகள் நிறைவு செய்ய வேண்டிய மொத்தம் 3,274.6 மில்லியன் ரூபா பெறுமதியான 03 நிர்மாணத் திட்டங்களில் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டதுடன், அந்தத் திட்டங்களின் பணிகள் துரிதமாக நிறைவு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு பயன்பாட்டுக்கு எடப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இத்திட்டத்திற்காக செலவிடப்படும் தொகையை பயனுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	-அவ்வாறே-
	iv.	மேற்படி கணக்காய்வு அவதானிப்புகளின்படி, வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமான திட்டங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவடையாத காரணத்தால் அந்த திட்டங்களை ஆரம்பித்த நோக்கம் மற்றும் இலக்குகளை அடைய முடியவில்லை என்பதும், அதற்காக செலவிடப்பட்ட அரச நிதி விணாக செலவிடப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(இ)	ஆய்வுகூட சேவைகள் பிரிவின் கீழ் மாதிரிகளை கொண்டு செல்வதற்கான வழிகாட்டுதல்களை தயாரிக்க திட்டமிடப்பட்ட போதிலும் அது நிறைவு செய்யப்படவில்லை.	இத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படல் வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை
(ஈ)	இலங்கையில் யானைக்கால் நோய் தொடர்பான தேசிய கொள்கையை மேம்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் இறுதி கொள்கை ஆவணங்கள் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அது அடுத்த 02 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.	-அவ்வாறே-	யானைக் கால் ஒழிப்பு திட்டத்திற்கான இலங்கையின் யானைக் கால் நோய் தொடர்பான தேசிய கொள்கைகளை மேம்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் இறுதி கொள்கை ஆவணங்களைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதனை தயாரிக்கும் போது ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக அது தொடர்பான

			பணிகள் ஒத்திவைக்கப்பட்டது எனவும், உரிய கொள்கை அறிக்கை தயாரிக்கும் போது அடையாளம் காணப்பட்ட மாவட்டங்கள் மற்றும் தற்போது யானைக்கால் நோய் உள்ள மற்றும் இல்லாத மாவட்டங்களில் உரிய சேவைகளை மேற்கொள்வதற்கு மனித வளம் மற்றும் ஏனைய பௌதீக வளங்களில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது எனவும்.
(உ)	இலங்கையில் மனித நீர் வெறுப்பு நோய் ஒழிப்பு தொடர்பான வரைவு கொள்கை மீளாய்வு செய்வதற்கு 2023 இல் திட்டமிடப்பட்ட போதிலும் 2024 இற்கு அது ஒத்திவைக்கப்பட்டது.	-அவ்வாறு-	பதில் வழங்கப்படவில்லை.
(ஊ)	கொழும்பு கிழக்கு முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் 813 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் 07 உயர் முன்னுரிமை கட்டுமான மற்றும் புனரமைப்புத் திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன், 904 மில்லியன் ரூபா மதிப்பீட்டு செலவு கொண்ட 16 கட்டுமான மற்றும் புனரமைப்புத் திட்டங்களில் 16 திட்டங்கள் ஆண்டினுள் ஆரம்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும், 2023 ஆம் ஆண்டுக்காக இந்த வைத்தியசாலையின் வருடாந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மேற்கூறிய பணி விடயங்கள் சுகாதார அமைச்சின் ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், தேசிய திட்டம் ஒப்புதலுக்காக சுகாதார அமைச்சினால் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரிவிற்கு சமர்ப்பித்துள்ளது எனவும், அதன் அனைத்து நடவடிக்கைகளும் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது எனவும், இதில் இந்த வைத்தியசாலையின் எந்த தலையீடுகளும் இல்லை என்பதுடன், சுகாதார அமைச்சின் கோரிக்கையின்படி தேசிய திட்டமிடல் அமைப்பில் இந்த பிரிவை சேர்ப்பதற்காக இந்த வைத்தியசாலையின் நிலம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது எனவும், மேலும் 904 மில்லியன் ரூபா மதிப்பீட்டு செலவில் 16

			கட்டுமான மற்றும் புனரமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக வருடாந்த செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மேற்படி திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 800 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமாக 104 மில்லியன் ரூபா சமயலறை திருத்த வேலைகள், கழிவுநீர் அகற்றும் தொகுதியின் புனரமைப்பு மற்றும் தாதியர் விடுதியின் புனரமைப்பு பணிகள் என்பவற்றுக்காக 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதுடன் ஏனைய பணிகளுக்கு 2023 ஆம் ஆண்டினுள் ஒதுக்கீடு கிடைக்கவில்லை.
(எ)	பதுளை மாகாண பொது வைத்தியசாலையின் 10 மாடிகளைக் கொண்ட சிறுநீரக பராமரிப்புப் பிரிவிற்கான செலவு 61 மில்லியன் ரூபா என்பதுடன், அதன் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.	இத்திட்டத்திற்காக செலவிடப்படும் தொகையை பயனுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	சிறுநீரக பராமரிப்புப் பிரிவு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிரிவாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும்.
(ஏ)	339 ரூபா மில்லியன் செலவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் 20 மாடிகளைக் கொண்ட தாதியர் பீடத்தின் நிர்மாணப் பணிகளில் மோசமான முன்னேற்றம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	இதன் கட்டுமான பணிகள் RAMP குழுவினால் 2022 ஆம் ஆண்டில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது எனவும்.
(ஐ)	2022 ஆம் ஆண்டில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அனுமதிக்காக 113 சந்தர்ப்பங்களில் அனுப்பப்பட்ட மொத்தம் 15,815,499 ரூபா மதிப்புள்ள 13,785 அலகுகளுக்கு Pronto கணினி அமைப்பின் ஊடாக அனுமதி பெறுவதற்காக 02 நாட்கள் முதல் 55 நாட்கள் வரை கால தாமதம் எடுத்துள்ளதுடன், 86 சந்தர்ப்பங்களில் 136,502 அலகுகளை வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்வதற்காக 11,902,432 ரூபா பெறுமதிக்கான ஆடர்கள் விநியோகத்தர்களுக்கு வழங்கி 02 நாட்கள்	இந்த தாமத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	விஷேட மருத்துவ நிபுணர்களினால் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் மருந்தாளர்களுக்கு பிராந்திய கொள்வனவிற்காக அனுப்பப்படும் மருந்து ஆடர்கள் Pronto அமைப்பின் ஊடாக மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அனுமதிக்காக அனுப்பப்படும் எனவும், அதற்காக மருத்துவ விநியோகப் பிரிவின் அனுமதியைப் பெறும்போது 03 கட்டங்களில்

	முதல் 142 நாட்கள் வரை கால தாமதத்தின் பின்னரே வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு விநியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.		அனுமதி தேவைப்படுவதால் அதற்காக சில காலம் தேவைப்படுகிறது எனவும்.
(ஒ)	2023 ஆம் ஆண்டில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அனுமதிக்காக 72 சந்தர்ப்பங்களில் அனுப்பப்பட்ட மொத்தம் 12,203,835 ரூபா மதிப்புள்ள 27,375 அலகுகளுக்கு Pronto கணினி அமைப்பின் ஊடாக அனுமதி பெறுவதற்காக 02 நாட்கள் முதல் 42 நாட்கள் வரை கால தாமதம் எடுத்துள்ளதுடன், 72 சந்தர்ப்பங்களில் 17,128 அலகுகளை வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்வதற்காக 17,203,081 ரூபா பெறுமதிக்கான ஆடர்கள் விநியோகத்தர்களுக்கு வழங்கி 02 நாட்கள் முதல் 160 நாட்கள் வரை கால தாமதத்தின் பின்னரே வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு விநியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	விநியோகத்தரிடம் வைத்தியசாலையின் தேவைக்கு ஏற்றவாறு வழங்குவதற்கு மருந்துகள் கையிருப்பில் இல்லாத பட்சத்தில் நாங்கள் கொடுத்த ஆடர்களின்படி, மருந்து நிறுவனங்களிடமிருந்து மருந்துகளை பெற்று, வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு சிறிது காலம் எடுக்கும் எனவும், விலைமனுக்கள் கோரும் போது விநியோகத்தரிடம் மருந்துகளுக்கான இருப்பு இருந்த போதிலும் நாம் ஆடர்டர் செய்யும் வேளையில் விற்பனை செய்து முடிவடையும் காரணத்தால் தாமதம் ஏற்படுகிறது எனவும், கூடிய விரைவில் நோயாளிகளுக்கு பிராந்திய கொள்வனவு மூலம் பெறப்பட்ட மருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும், இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பொருட்களில் பெரும்பாலானவை அவசரத் தேவைகள் அற்றவை எனவும், வைத்தியசாலையில் எப்போதும் கையிருப்பில் இருக்க வேண்டிய அத்தியவசிய மருந்துகள் மருத்துவ விநியோகப் பிரிவில் இல்லாத சந்தர்ப்பங்களில் குறைந்தபட்ச இருப்பு நிலையை பராமரிக்க கொள்வனவு செய்யப்பட்டவை எனவும்.

3.1.6 நிதி ஒதுக்கீடு செய்தும் முன்னேற்றம் இல்லாத திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 1,333,707 ரூபா பெறுமதியான 15 அவசர பராமரிப்பு மற்றும் கட்டுமான திட்டங்கள் 2023 மே 30 ஆம் திகதியிலும் பூர்த்தி செய்யப்படவில்லை.	இத்திட்டத்திற்காக செலவிடப்படும் தொகையை பயனுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், இந்த காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது ஒப்பந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன எனவும், அதுவரை முடிக்கப்பட்ட பணிகளின் அளவுகளின் அடிப்படையில் CECB இன் பரிந்துரையின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது எனவும், இந்த ஒப்பந்தங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே நிதி/ முற்பண ஒதுக்கீட்டு நிலைமையை கருத்தில் கொண்டு மீண்டும் வேலைகளை ஆரம்பித்தனர் எனவும்,
(ஆ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் 63,100,000 ரூபா மதிப்பீட்டு பெறுமதியான 10 கைத்தொழில் பணிகளின் வேலைகளை நிறைவு செய்வதற்கு 2023 மே 30 ஆம் திகதியிலும் ஒப்பந்ததாரரினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், 1 - 2 வருடகாலம் முதல் இந்த கட்டுமானபணிகள் அடைநிறுத்தப்பட்டுள்ளன.	-அவ்வாறே-	-அவ்வாறே-

3.1.7 நிதி பற்றாக்குறை காரணமாக செயற்படுத்தப்படாத செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகள்**

(அ)	தேசிய இரத்த மாற்றூட்டல் நிலையம் 2023 ஆம் ஆண்டில் இரத்தம் கொண்டு செல்லல் சேவைகளை மேம்படுத்துவதற்காக 5 வாகனங்கள் (Mini Coaches) கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நிதி பற்றாக்குறை காரணமாக அவை கொள்வனவு செய்யப்படவில்லை.	இத்திட்டத்திற்காக செலவிடப்படும் தொகையை பயனுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், இந்த காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது ஒப்பந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன எனவும், அதுவரை முடிக்கப்பட்ட பணிகளின் அளவுகளின் அடிப்படையில் CECB இன் பரிந்துரையின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது எனவும், இந்த ஒப்பந்தங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே நிதி/ முற்பண ஒதுக்கீட்டு நிலைமையை கருத்தில் கொண்டு மீண்டும் வேலைகளை ஆரம்பித்தனர் எனவும்,
(ஆ)	பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலைக்கு மிகவும் அவசர தேவையாக இருந்த அனஸ்தீசியா இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கு 20 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் 4 வது காலாண்டில் வழங்கப்பட்ட ஒதுக்கீடு காரணமாக குறித்த வருடத்தினுள் கொள்வனவு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	அனஸ்தீசியா இணந்தரம் கொள்வனவு செய்வதற்காக தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனு கோரல் முறையை பின்பற்றப்பட்டதுடன், 2023.09.27 ஆம் திகதி ஏலம் திறக்கப்பட்டது எனவும், விலைகளை மதிப்பீடு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு 2023.10.04 ஆம் திகதி அனுப்பப்பட்டது எனவும், அந்த விலைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனமான Dimo இனால் NMRA சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் ஆடர்டர் செய்யுமாறு 2023.11.01 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்தது எனவும், 2023.12.22 ஆம் திகதியிலும் NMRA சான்றிதழ் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படாத காரணத்தால் அது குறித்து மீண்டும் மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது எனவும், எனினும் வருட இறுதி வரையிலும் NMRA சான்றிதழ்

			இல்லாத காரணத்தால் கடைசி காலாண்டில் இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடு கிடைத்தாலும் அந்த ஆண்டினுள் அதனை கொள்வனவு செய்வதற்கான சாத்தியம் காணப்படவில்லை.
(இ)	தேசிய சுகாதார நிறுவனத்தின் 145 திட்டங்களில் 32 திட்டங்கள் நிதி பற்றாக்குறை காரணமாக செயற்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	2023 ஆம் ஆண்டில் செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிப்பதற்காக 2022 இன் பிற்பகுதியில் தேசிய சுகாதார நிறுவனத்தின் கீழுள்ள சுகாதார நிறுவனங்கள் மற்றும் நிறுவனத்தில் உள்ள ஒவ்வொரு உள்ளக அலகுகளில் இருந்தும் அவற்றுக்கான தேவைகளை பெறப்பட்டன எனவும், பின்னர் அவற்றின் முன்னுரிமைகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தி வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது எனவும், மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திட்டங்களுக்கான முழு நிதியும் அந்த ஆண்டில் கிடைக்காததால் முன்னுரிமை அடிப்படையில் பெறப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன எனவும், அதன்போது செய்யத் தவறிய திட்டங்கள் மீண்டும் 2024 இல் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டது எனவும், தற்போது 2024 ஆம் ஆண்டுக்காக பகுதி வாரியாக அவ்வப்போது ஒள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒதுக்கீடுகள் பெறப்படுவதால் கிடைக்கும் ஒதுக்கீடுகள் மூலம் 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்ற முடியாமல் போன திட்டங்களை அதே பெயரில் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும்.

(ஈ)	பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவ சேவை 1 இன் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 19 திட்டங்கள் நிதி பற்றாக்குறை காரணமாக செயற்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.

3.2 செயல்பாட்டு பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகள்**
(அ)	சுகாதார அமைச்சினால் சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு வரும் இருதய நோயாளர்கள் இருதய சிகிச்சைக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு பரிந்துரைத்தல், அந்த நோயாளிகளுக்கு மேற்படி வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படும் இருதய சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைக்கான கட்டணங்கள், அந்த வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ விநியோகங்களின் பெறுமதியை ஈடுசெய்யும் செயல்முறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		

	i. மிகவும் வெளிப்படையான மற்றும் முறையான அமைப்பின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டிய இந்த இத்திட்டத்திற்கான நோயாளர்களை பரிந்துரைத்தல் மற்றும் கட்டணங்களை செலுத்துவதற்காக பெறப்பட்ட அங்கீகாரம் என்ன என்பது குறித்த விசாரணையில் 2014 செப்டம்பர் 19 ஆம் திகதி சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் 08 அலுவலர்களின் தலைமையில் நடைபெற்ற அரசாங்க வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிகிச்சைக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கப்பட்ட நோயாளர்களின் பில் கொடுப்பனவுகளை முறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலுக்கான கலந்துரையாடல் குறிப்பு மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த திட்டத்தை செயற்படுத்துவதற்கு கிடைத்த ஒரேயொரு அனுமதி இந்த கலந்துரையாடல் குறிப்பு மட்டுமா என்பது கணக்காய்வில் கேள்விக்குறியாக இருந்தது. இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக முறையான முறைமையை தயாரித்து அதற்கான முறையான ஒப்புதலைப் பெற்று அந்த முறைமையை இந்த செயற்பாடுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் சுற்றறிக்கையாகவோ அல்லது பிற எழுத்துபூர்வ கட்டளையாகவோ வெளியிடுவ அவசியம் எனவும், இல்லையெனின், இந்த திட்டத்தை செயற்படுத்தவதன் மூலம் பல்வேறு முறைக்கேடுகள் ஏற்படலாம் என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	வெளிப்படையான திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அத்திட்டத்தை சுற்றறிக்கையாக வெளியிடல் வேண்டும்.	அமைச்சிற்கு வரும் இருதய நோயாளர்களின் தேவைகளின் அடிப்படையில் இருதய சத்திர சிகிச்சைக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கும் போது அந்த நோயாளிகளுக்கு மேற்படி வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படும் இருதய சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைக்கான கட்டணங்கள் செலுத்துவதற்கு 2023 மே மாதம் 16 ஆம் திகதிய அமப/23/071/610/020 எனும் அமைச்சரவை தீர்மானம் மூலம் வழங்கப்பட்ட ஒப்புதலின்படி 2024 ஆம் ஆண்டு முதல் செலவினத் தலைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த ஒதுக்கீடுகளில் இருந்து இந்த ஆண்டு முதல் பில்களை செலுத்தப்படும் எனவும். மேலும் இருதய சிகிச்சைக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு முறையான நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.
	ii. 2014 செப்டம்பர் 19 ஆம் திகதி சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் 08 அலுவலர்களின் தலைமையில் நடைபெற்ற அரசாங்க வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிகிச்சைக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கப்பட்ட நோயாளர்களின் பில் கொடுப்பனவுகளை முறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலுக்கான கலந்துரையாடல் குறிப்பின்படி இந்த வேலைத் திட்டத்திற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அவ்வாறான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டதற்கான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட வேண்டும்.	2023 மே மாதம் 16 ஆம் திகதிய அமப/23/071/610/020 எனும் அமைச்சரவை தீர்மானத்தின்படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும்.
	iii. 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதிய இலங்கை தேசிய வைத்தியசாலையின் அப்போதைய பதில் பிரதிப் பணிப்பாளர்	வெளிப்படையான திட்டம் தயாரிக்கப்படல்	கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன எனவும்.

		நாயகத்தின் கடிதத்தின்படி இருதய நோய் மற்றும் இருதய மார்பு சத்திர சிகிச்சை நிபுணர்களின் பரிந்துரையின் பேரில் ஒரு வாரத்தில் ஐந்து நாட்களில் 05 நோயாளிகள் மட்டுமே பதிவுக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர் எனவும், சிலநேரங்களில் ஒவ்வொரு நோயாளர்களினதும் அவசரத் தேவையைப் பொறுத்து பதிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனவும் காணப்பட்டது. எனினும் 2014 செப்டம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடல் குறிப்பின்படி ஒரு வாரத்திற்கு 05 நோயாளர்களின் சத்திர சிகிச்சை அதாவது தேசிய வைத்தியசாலையிலிருந்து இருவர், கண்டி மற்றும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையிலிருந்தும் மற்றும் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்தும் தலா ஒரு நோயாளி என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் ஒவ்வொரு வைத்தியசாலையில் இருந்தும் தெரிவு செய்யப்படும் முறை மற்றும் அந்த தெரிவுகளை பரிந்துரைத்தல் மற்றும் அங்கீகரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	வேண்டும் என்பதுடன், அத்திட்டத்தை சுற்றறிக்கையாக வெளியிடல் வேண்டும்.	
	iv.	இந்த திட்டத்தின் கீழ் சத்திர சிகிச்சைக்கு செலவிடப்படும் பணத்தை மாத்திரம் சுகாதார அமைச்சு ஏற்கும் என்றும், சத்திர சிகிச்சைக்குப் பின்னர் நோயாளியின் சார்பாக ஏற்படும் அனைத்துச் செலவுகளையும் நோயாளியே செலுத்த வேண்டும் என்றும் 2014 செப்டம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். எனினும் அந்த தீர்மானத்திற்கு இணங்காத வகையில் மொத்த செலவையும் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அந்த மொத்த தொகையும் பில்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
	v.	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி மருத்துவ விநியோகப் பிரிவினால் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு 207 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட விலைப்பட்டியல்களில் மருந்துகள் உள்ளிட்டமருத்துவ விநியோகங்களின் பெறுமதி குறிப்பிடப்படவில்லை. இவ்வாறு அறவீடுகள் இன்றி மருத்துவ விநியோகங்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு வழங்குவதற்காக பெறப்பட்ட முறையான அனுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்தப் பொருட்களை இலவசமாக வழங்குவதற்கு முறையான அனுமதி பெறப்பட்டிருப்பின் அதனை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அனுமதி இல்லை	மருத்துவ விநியோகப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் நாயகத்தின் 2024.04.08 ஆம் திகதிய MSD/FIN/MSB/10/2023 கடிதத்தின் இணைப்பு 02 இன் ஊடாக 2015 முதல் 2023 வரை 207 சந்தர்ப்பங்கள் குறித்த விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும்.

		எனின் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	
(ஆ)	கணக்காய்வுத் தினமான 2023 மே 12 ஆம் திகதி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் மருத்துவ அலுவலர்களின் நாட்குறிப்பு புத்தகங்கள் பராமரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் 2016 மார்ச் 30 ஆம் திகதிய பொது சுற்றறிக்கை இலக்கம் 01-12/2016 இன்படி அனைத்து மருத்துவ அலுவலர்களும் நாட்குறிப்பு புத்தகத்தை பராமரிக்கும் அனைத்து நாட்களிலும் புத்தகத்தில் ஒவ்வொரு நாளும் குறிப்புகளை இட்டு பராமரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், புத்தகத்தல் பதியப்படும் அனைத்து பதிவுகளும் உள்ளிடும் போது குறுகிய கையொப்பமிட்டு ஒவ்வொரு மாதமும் முதல் வேலை நாளில் நிறுவனத்தலைவரின் ஒப்புதலுக்காக நிறுவனத்தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 37 விஷேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் 131 மருத்துவ அலுவலர்களினால் கணக்காய்வுத் தினமான 2023 மே மாதம் 12 ஆம் திகதியிலும் ஏப்ரல் மாதத்திற்காக எழுதப்பட்ட நாட்குறிப்பு புத்தகம் வைத்தியசாலை பணிப்பாளரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.	இது சம்பந்தமாக முறையான அமைப்பு தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் சரியான பின்தொடர்தல் பொறிமுறையை செயல்படுத்த வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 37 விஷேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் 131 மருத்துவ அலுவலர்களின் பூர்த்தி செய்யப்பட்ட நாட்குறிப்பு புத்தகங்கள் கணக்காய்வுத் தினத்திற்கு மறுநாள் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.
	ii. மேற்படி சுற்றறிக்கையின்படி ஒரு மருத்துவ அலுவலர்களினால் நாட்குறிப்பு புத்தகங்கள் இரண்டு பாராமரிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒரு மாதம் விட்டு ஒரு மாதம் தனித்தனியாக பதிவுகளை உள்ளிட வேண்டும். ஒரு புத்தகத்தை சரிபார்ப்பதற்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் போது தினசரி குறிப்புகளை தவறாமல் மற்ற நாட்குறிப்பு புத்தகத்தில் உள்ளிடலாம் என்பதனால் இவ்வாறு நாட்குறிப்பு புத்தகங்கள் இரண்டு பாராமரிக்கப்படுகின்றன. எனினும், 79 மருத்துவ அலுவலர்களின் 2023 மார்ச் மாதத்திற்கான புத்தகங்களை அலுவலத்தில் இருந்து பெறப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், மருத்துவ அலுவலர்களில் அப்போது கடமையில் இருந்த மருத்துவ அலுவலர்களும் கணக்காய்வுத் தினத்திற்கு மறுநாள் அலுவலகத்தில் இருந்து புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும்.

	iii. அதன்படி, சுற்றறிக்கையின் 02வது பந்தியின் பிரகாரம், 2023 மே மாதத்தில் 79 மருத்துவ அலுவலர்களின், கடமை நாள், கடமைக்கு சமூகமளிக்கும் நேரம் (காலை நேரம், மாலை நேரம், சேவை சுழற்சி கடமை), கடமையிலிருந்து திரும்பும் நேரம் (காலை நேரம், சேவையின் பின்னர், மாலையில் சேவைக்கு பின்னர், சேவை சுழற்சியின் பின்னர்), அழைப்புக் கடமை (சேவைக்கு சமூகமளிக்கும் நேரம், சேவையிலிருந்து புறப்படும் நேரம்) பற்றிய தகவல்களின் ஆதாரம் பௌதீக ஆய்வில் கணக்காய்விற்கு கிடைக்காததால் அந்த காலப்பகுதிக்கு உரிய மருத்துவ அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை சுற்றறிக்கைக்கு முரணானது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், நாட்குறிப்பு புத்தகத்தில் விஷேட மருத்துவ நிபுணரின் சிபாரிசுக்கு அமைவாக அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை உறுதி செய்யப்படுவதால் அவர்களுக்கு அந்த காலப்பகுதிக்கான சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், மேலும் இந்த காலப்பகுதியில் நோயாளர் பராமரிப்பு சேவைகளில் எந்த தடங்களும் ஏற்படவில்லை எனவும்.
	iv. சுற்றறிக்கையின் 08 வது பந்தியின் பிரகாரம், உரிய அறிவுறுத்தல்களின்படி செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நிறுவனத் தலைவரினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனினும், மேற்கூறிய 247 மருத்துவ அலுவலர் தொடர்பில் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் மருத்துவ அலுவலர்களின் நாட்குறிப்பு புத்தகங்கள் பராமரித்தல் தொடர்பான சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை அனைத்து மருத்துவ அலுவலர்களும் பின்பற்றுவதை உறுதி செய்வது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரின் மற்றும் பிரதிப் பணிப்பாளர்கள் இருவரின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை மிகவும் பலவீனமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், மருத்துவ அலுவலர்களின் நாட்குறிப்பு புத்தகங்கள் பராமரிக்கும் போது ஏற்பட்டுள்ள பிரச்சனைகளைத் தவிர்த்து பொதுச் சுற்றறிக்கை 01 – 12/2016 இன்படி நாட்குறிப்பு புத்தகங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
(இ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சை விஷேட மருத்துவ நிபுணர்களுக்கு சத்திர சிகிச்சை அறைகள் ஒதுக்கீடு செய்தல் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை என்பதுடன், விஷேட மருத்துவ நிபுணர்களின் வாய்மொழி உடன்படிக்கைக்கு அமைவாக சத்திர சிகிச்சை அறைகள் ஒதுக்கப்பட்டு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, வைத்தியசாலையின் இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சை அறைகள் 03 ஒவ்வொரு விஷேட மருத்துவ நிபுணர்களின்	மருத்துவ அறிவு கொண்ட வல்லுனர்களினால் அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகள் மேற்கொண்டு நோயாளிகளுக்கு	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், சத்திர சிகிச்சை அறைகள் வார நாட்களுக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்படுகிறது எனவும், அதன்படி வாரத்தின் உரிய தினங்கள் விஷேட மருத்துவ நிபுணர்களுக்கு ஒதுக்கப்படுகிறது எனவும், காத்திருப்போர் பட்டியலில் உள்ள நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்ய

	கீழ் பதிவு செய்யப்பட்ட காத்திருப்போர் பட்டியலில் உள்ள நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவு ஒதுக்கப்படவில்லை.	சிறந்த சேவையை வழங்கக்கூடிய அமைப்பை உருவாக்க வேண்டும்	முடியாது எனவும், மருத்துவரின் புகழ் மற்றும் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை எண்ணிக்கைகளின் அடிப்படையில் காத்திருப்பு பட்டியல் நீளமாகிறது எனவும், அந்த காத்திருப்ப பட்டியலின்படி சத்திர சிகிச்சைகள் ஒதுக்கப்பட்டால், ஏனைய இரு மருத்துவர்களுக்கும் சத்திர சிகிச்சைகளுக்கு மிக குறைந்த நேரமே மீதமாகும் எனவும், இவ்வாறு காத்திருத்தல் பட்டியலில் உள்ள நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சத்திர சிகிச்சை அறைகள் ஒதுக்குவது இலங்கை வைத்தியசாலைகளில் இடம்பெறுவதில்லை எனவும்.
(ஈ)	அதன்படி, வாரத்தில் தினமும் 01 அல்லது 02 சத்திர சிகிச்சை அறைகள் பயன்படுத்தப்படாமல் இருப்பதன் காரணமாக நோயாளிகளின் நாளாந்த சத்திர சிகிச்சைகள் தாமத்தால் காத்திருப்போர் பட்டியலில் இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சை நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிந்தது. அதன்படி, கணக்காய்வுத் தினத்திற்கு சத்திர சிகிச்சை செய்ய காத்திருப்போர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட 5,697 நோயாளர்களில் 4,784 நோயாளர்கள் அதாவது 84 சதவீதம் காத்திருப்போர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட விஷேட மருத்துவ நிபுணருக்கு வாரத்திற்கு 02 நாட்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டு 823 நோயாளர்கள் அதாவது 16 சதவீதம் காத்திருப்போர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட விஷேட மருத்துவ நிபுணர்கள் 03 பேருக்கு வாரத்தில் 03 நாட்கள் ஒதுக்கப்பட்டமையானது நியாயமான அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சை வினைத்திறனாக மற்றும் பயனுள்ள நோயாளர் பராமரிப்பு சேவைக்காக பயன்படுத்துவதற்கு வைத்தியசாலையின் பொறுப்பான தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

(உ)	2023 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் தினமான மே 15 ஆம் திகதிக்கு ஒவ்வொரு விஷேட மருத்துவ நிபுணர்களும் செய்த சத்திர சிகிச்சைகளின் பரிசோதனையின்படி விஷேட மருத்துவ நிபுணர்கள் இருவருடன் ஒப்பிடும் போது மற்றைய இரண்டு விஷேட மருத்துவ நிபுணர்களும் அசாதாரணமாக குறைந்த எண்ணிக்கையிலான அதாவது முறையே 3 மற்றும் 8 சத்திர சிகிச்சைகள் மாத்திரம் செய்திருப்பதாலும் மற்றும் அந்த மருத்துவர்களின் அறுவை சிகிச்சையின் பின்னரான நோயாளி மரண சதவீதம் 66 மற்றும் 48 சதவீதமாக இருப்பது அந்த விஷேட மருத்துவ நிபுணர்களின் சேவையின் தரம் மற்றும் செயல் திறன் தொடர்பில் சிக்கல்கள் இருப்பது கணக்காய்வில் தவிர்க்கமுடியவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், இங்கு ஒரு நிபுணரால் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளை ஒப்பிடுகையில் மற்ற இரு நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டுள்ளது எனவும், எனினும், ஒரு மருத்துவரினால் செய்யப்படும் சத்திர சிகிச்சையின் அளவு மருத்துவரின் உள்ளார்ந்த திறன் மற்றும் அனுபவம் மற்றும் அவர் சத்திர சிகிச்சைக்குத் தேர்ந்தெடுக்கும் நோயாளியின் தன்மை மற்றும் மருத்துவரிடம் நியமிக்கப்பட்ட மருத்துவ ஊழியர்களின் அனுபவம் போன்றவற்றை பொறுத்தது எனவும், இவ்வாறு மேற்கொள்ளப்படும் இருதய சத்திர சிகிச்சையின் அளவு மருத்துவரின் உள்ளார்ந்த திறன் மற்றும் அனுபவம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படும் எனவும், இந்த நிலைமை ஒரு புதிய மருத்துவரால் செய்யப்படும் சத்திர சிகிச்சையின் அளவு குறைவதற்கு காரணமாக அமைகிறது எனவும்.
(ஊ)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி கடந்த 13 ஆண்டுகளில் இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சையறைகளுக்கு இருந்த விஷேட மருத்துவ நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளின் அளவை ஆராய்ந்த போது ஒரு விஷேட மருத்துவ நிபுணர் செய்த சத்திர சிகிச்சைகளுக்கும் மற்றொரு விஷேட மருத்துவ நிபுணர் செய்த சத்திர சிகிச்சைகளுக்கும் இடையே அசாதாரண வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன்படி, ஒரு விஷேட மருத்துவ நிபுணரினால் கடந்த 13 ஆண்டுகளில் 6,933 சத்திர சிகிச்சைகள் அதாவது ஒரு வருடத்திற்கு 533 சத்திர சிகிச்சைகள் செய்திருந்த போதிலும், மற்றைய விஷேட மருத்துவ நிபுணரினால் 1,573 சத்திர சிகிச்சைகள் அதாவது ஒரு வருடத்திற்கு பொதுவாக 121 சத்திர சிகிச்சைகள் மாத்திரமே செய்யப்பட்டுள்ளது. இதன்படி, முதலாவது விஷேட மருத்துவ நிபுணரினால் செய்யப்பட்ட சத்திர	-அவ்வாறே-	-அவ்வாறே-

	சிகிச்சைகளை விடவும் 5,360 சத்திர சிகிச்சைகள் அதாவது வருடத்திற்கு 412 சத்திர சிகிச்சைகள் குறைவாகவே செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், அதற்கான நியாயமான காரணங்கள் மற்றும் ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன், மற்றொரு விஷேட மருத்துவ நிபுணரினாலும் 2022 ஆம் ஆண்டில் 94 போன்ற குறைந்த சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டதன் மூலம் நோயாளர் பராமரிப்பு சேவையின் முழு பலனையும் பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
(எ)	சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் இல TCS/B/09/2019 மற்றும் 2022/01/20, 2022/11/18 மற்றும் 2023/05/25 கடிதத்தின்படி, 06 மாதம் 06 மாதம் என குருணாகல் போதனா வைத்தியசாலையில் இருந்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்ட விஷேட மருத்துவ நிபுணர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. மூன்று சத்திர சிகிச்சை அறைகள் கொண்ட வைத்தியசாலையின் இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சை பிரிவில் மூன்று விஷேட மருத்துவ நிபுணர்கள் நிரந்திரமாக பணியமர்த்தப்பட்ட நிலையில், 2023 ஆகஸ்ட் கணக்காய்வுத் தினமாகும் போது 01 வருடமும் 09 மாத காலம் தொடர்ந்து இந்த விஷேட மருத்துவ நிபுணர் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான நியாயமான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இது தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், குருணாகல் போதனா வைத்தியசாலையில் இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சை பிரிவு இல்லாததால் இந்த விஷேட மருத்துவ நிபுணர் சுகாதார அமைச்சினால் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும்.
	ii. மருத்துவரிடம் இருந்து சத்திர சிகிச்சை செய்ய காத்திருப்போர் பட்டியலில் 66 நோயாளிகள் இருந்த போதிலும், கணக்காய்வுத் தினம் வரையான 05 மாத காலத்தில் அவரினால் 03 சத்திர சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் 02 நோயாளிகள் அதாவது சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளர்களில் 66 சதவீதம் உயிரிழந்துள்ளனர். அதன்படி சம்பந்தப்பட்ட மருத்துவரின் நோயாளி பராமரிப்பு சேவையின் தரம் மற்றும் செயல் திறன் தொடர்பில் சிக்கல்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், வைத்தியசாலையில் நிலவும் மருத்துவர்களின் பற்றாக்குறை காரணமாக இந்த விஷேட மருத்துவ நிபுணருக்கான மருத்துவர்கள் ஒதுக்கப்படவில்லை எனவும், தற்காலிக மருத்துவராக இருப்பதும் இதற்கு தாக்கம் செலுத்துகிறது எனவும், மயக்க மருந்து நிபுணர்கள் பற்றாக்குறையால் மூன்றாவது விஷேட மருத்துவ நிபுணருக்கு சத்திர சிகிச்சை அறைகள் வழங்குவதில்

			வைத்தியருக்கு குறைந்த முன்னுரிமை வழங்கப்படுகிறது எனவும், இந்த விடயமும் குறைந்தளவு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான தாக்கம் செலுத்துகிறது எனவும், தற்போது இந்த நிலை தவிர்க்கப்பட்டுள்ளது எனவும், இங்கு செய்யப்பட்ட 03 சத்திர சிகிச்சைகளில் இரு நோயாளிகளின் மரணத்தின் அடிப்படையில் தரத்தை மதிப்பிடுவது நியாயமில்லை எனவும், சத்திர சிகிச்சைத் துறையில் இருதய சத்திர சிகிச்சை மிகவும் சிக்கலான, ஆபத்தான மற்றும் அதிக இறப்பு விகிதங்களைக் கொண்ட ஒரு வகையான சத்திர சிகிச்சை எனவும், இதற்கு அறிவு, திறமை மற்றும் அனுபவம் மிகவும் முக்கியம் எனவும், இந்த மருத்துவர் இந்த துறையில் புதிய மருத்துவர் என்பதால் முழுமையான செயல் திறனைப் பெற இன்னும் காலம் எடுக்கும் எனவும்.
	iii. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட விஷேட மருத்துவ நிபுணருக்கு 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை மொத்த காத்திருப்போர் நோயாளிகள் 66 என்ற குறைந்த அளவில் இருக்கும் போது மொத்தம் 746,199 ரூபா விடுமுறை நாள் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்குவதற்கு தாக்கம் செலுத்திய நியாயமான காரணங்கள் கணக்காய்வில் அவதானிக்க முடியவில்லை. எனவே உரிய சேவைக்காலத்தினுள் மருத்துவரினால் நிறைவேற்றப்பட்ட சாதாரண கடமைகள், விடுமுறை நாள் மற்றும் மேலதிக கடமைகள் எவை என்பதை கண்டறிய முறையான குழுவொன்றினால் ஆராயப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், இது தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்றை நியமித்து விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும்.
(ஏ)	மேலே கூறப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளின்படி இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சை பிரிவில் விஷேட மருத்துவ நிபுணர்களின் பணி செயற்திறனை மதிப்பீடு செய்வது தொடர்பில் முறையான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதும், காத்திருப்போர் பட்டியலில் காணப்படும்	மருத்துவ அறிவு கொண்ட நிபுணர்களினால் அறிவியல்	பதில் வழங்கப்படவில்லை.

	நோயாளிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு சத்திர சிகிச்சைகளை துரிதப்படுத்துவதற்கான முறையான ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் நோயாளர் பராமரிப்பு சேவையை திறம்பட செய்வதற்கு நிபுணத்துவ அறிவு கொண்ட குழு ஒன்றின் ஊடாக பொருத்தமான திட்டமொன்றை தயாரிப்பதற்கு அவதானம் செலுத்தப்படல் வேண்டும் என்பதும் அவதானிக்கப்பட்டது.	அடிப்படையினாலான சோதனைகள் மேற்கொண்டு நோயாளர்களுக்கு மிக சிறந்த சேவையை வழங்குவதற்கான முறைமையொன்றை தயாரித்தல் வேண்டும்	
(ஐ)	கலஹா பத்ராவதி தேசிய பிக்குகள் மையம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. பிக்குகள் மையம் ஆரம்பத்தில் பொது அறங்காவலர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 17 – 9955 எனும் மோட்டார் கார் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருந்தது எனவும், பாதுகாப்பின்றி மேற்பட வளாகத்தில் காப்பட்டதுடன், அந்த வாகனத்தை மீண்டும் பழுதுபார்ப்பதற்கு அல்லது முறையாக அழிப்பதற்கு 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த மோட்டார் வாகனம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை துரிதமாக எடுக்கப்பட வேண்டும்.	குணக்காய்வில் கேள்விக்குட்படுத்தப்பட்ட 17 – 9955 இலக்கம் கொண்ட மோட்டார் வாகனம், பொது அறங்காவலர் திணைக்களத்திற்கு சொந்தமானது என்பதால், மையத்தின் பிக்குவிடம் விசாரித்த போது, 2023.07.29 ஆம் திகதி சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளரிடம் அறிவுறுத்தல்கள் கோரியுள்ளதாக அவரினால் தெரிவிக்கப்பட்டது எனவும், அதன்பின்னர் சுகாதார அமைச்சின் நிதி அலுவலரினால் அவரின் இல. CAIAQ/FCC 08/01/2023/139 மற்றும் 2024.02.09 ஆம் திகதியன்று எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்த வாகனத்தை பாதுகாப்பதற்கு மற்றும் அப்புறப்படுத்துவதற்கு மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) இனால் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளதாகவும் அதற்கேற்ப முன்னேற்றம் குறித்து அறிக்கையிடுமாறு தெரிவித்துள்ளது எனவும்.
	ii. கலஹா பத்ராவதி தேசிய பிக்குகள் மையத்தில், 2019 இன் பின்னர் பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை, நன்கொடையாகப் பெறப்பட்ட பொருட்கள் பொருட்கள் பதிவேட்டில் பதியப்படாமை, சேவையாற்றும் சுகாதார பணி	நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற சட்டத்தின் விதிகளின்படி அடுத்த நடவடிக்கைகள்	2022 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு 2023 செப்டெம்பர் மாதம் 14, 15 ஆகிய இரு தினங்களில் நடத்தப்பட்டதுடன், அதன்போது மையத்தின்

		உதவியாளர் முறையான மேற்பார்வையில் நிர்வகிக்கப்படாமை, உலர் உணவுப் பொருட்கள் ஆர்டர் செய்தல் மற்றும் நன்கொடையாக கிடைக்கும் உணவு மற்றும் நிதிகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மை காணப்படாமை, பிக்குகளின் சுயவிபரக் கோவைகள் முறையாக பராமரிக்கப்படாமை போன்ற பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.	பிக்குவிற்கு நன்கொடையாக பெறப்பட்ட 92 பொருட்களையும் பொருட்பதிவேட்டில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், 2023 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு எடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், சுகாதார ஊழியரின் கண்காணிப்பு, உலர் உணவுப் பொருட்கள் ஆர்டர் செய்தல், அன்னதானம் பெறுதல், நிதி நன்கொடைகள், பிக்குகளின் சுயவிபரக் கோவைகள் பராமரித்தல் போன்றவை தற்போது அந்த மையத்தின் பிக்குவின் முழு கண்காணிப்பில் மேற்கொள்ளப்படுவதுடன், 2023.07.28 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக சபை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவாறு செயலாளர் உட்பட நிர்வாக சபையின் உடன்படிக்கையுடன் அந்த நிலையத்தின் ஆவணங்களில் கையெழுத்திடும் அதிகாரத்தை மேற்படி நிலையத்தின் பிக்குவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதன்படி ஊழியர்களை கண்காணித்தல், ஆவணங்களைப் பராமரித்தல் போன்றவை அந்த பிக்குவிற்கு ஒப்படைக்கப்பட்டது எனவும்.
	iii.	பிக்குகளை இந்த மையத்தில் அனுமதிப்பது, அவர்களின் ஒழுக்காற்று விடயங்களை கையாளுவது, அவர்கள் திரும்பிச் செல்வது, திருப்பி அனுப்பப்படுவது போன்றவை சட்டரீதியில் மேற்கொள்ளும் முறைமையொன்று இந்நிலையத்தில் காணப்படவில்லை.	-அவ்வாறே-	கலஹா பத்ராவதி தேசிய பிக்குகள் மையம் தொடர்பில் 2023.07.28 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக சபை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவாறு செயலாளர் உட்பட நிர்வாக சபையின் உடன்படிக்கையுடன் அந்த நிலையத்தின் ஆவணங்களில் கையெழுத்திடும் அதிகாரத்தை மேற்படி நிலையத்தின் பிக்குவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதன்படி ஊழியர்களை கண்காணித்தல், ஆவணங்களைப் பராமரித்தல் போன்றவை

			அந்த பிக்குவிற்கு ஒப்படைக்கப்பட்டது அவதானிக்கப்பட்டதால் இந்த பிரச்சனைகள் தொடர்பில் அனைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளும் அந்த நிலையத்தின் பிக்குவிடமே எள்ளது எனவும்.
	iv. கலஹா பத்ராவதி தேசிய பிக்குகள் நிலையத்தினால் அபிருத்தி நடவடிக்கைகள், தங்கிருக்கும் பிக்குகளின் தேவைகளை வழங்குதல் மற்றும் ஊழியர்களின் நலன்புரிக்காக 2021 மே மாதம் 19 ஆம் திகதி முறையான அனுமதியின்றி ஒரு நிதியம் நிறுவப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதிகள் 381 இனை பின்பற்றாது மைய அபிவிருத்தி நிதியம் எனும் பெயரில் 2023 மார்ச் 18 ஆம் திகதி இலங்கை வங்கியில் 88617272 எனும் இலக்க கணக்கு திறக்கப்பட்டுள்ளதுடன், 2023 ஏப்ரல் 28 நிலவரப்படி அந்த கணக்கில் 944,882 ரூபா வைப்பில் இருந்தது. மேலும் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்ட பிக்குகள் மூலம் 330,000 ரூபா நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த பணம் எந்த கணக்கில் வைப்பிடப்பட்டது மற்றும் எதற்காக செலவிடப்பட்டது என்பது குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.
(ஒ)	கண்டி தேசிய வைத்தியசாலையின் 07 பிரதான மின்சார விநியோகக் கணக்குகளுக்காக 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி இலங்கை மின்சார சபைக்கு 78,045,229 ரூபா செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன், உரிய காலத்தினுள் கட்டணம் செலுத்துவதற்கு தவறிய காரணத்தால் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது 7,601,235 ரூபா தண்டப்பணம் செலுத்த நேரிட்டுள்ளது.	அபராதம் செலுத்துவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2023 டிசம்பர் மற்றும் 2024 ஜனவரி மாத்தில் பெறப்பட்ட முற்பணத்தில் 2023 டிசம்பர் வரை சமர்ப்பிக்கப்பட்ட நீர் மற்றும் மின்சார கட்டணங்கள் முறையே 23,460,515 ரூபா மற்றும் 67,653,083 ரூபா வீதம் 91,113,598 ரூபா 2024 ஜனவரி மாத்தில் செலுத்தப்பட்டது எனவும், 2023 ஜூலை மாதத்தில் இருந்து அமுலில் உள்ள மின் கட்டணங்கள் 14 நாட்களுக்குள் செலுதத் தவறினால் அபராதம் விதிக்கும் தீர்மானத்தை வாபஸ்

			பெறப்பட்டு முன்பு வழங்கப்பட்ட சலுகையை மீண்டும் தருமாறு சுகாதார செயலாளரினால் இலங்கை மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்பவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளது எனவும், எனினும் இதுவரை தண்டப்பணம் உள்ளடங்களாக மின் கட்டணம் செலுத்தப்படுகிறது எனவும்.
(ஓ)	தனியார் துறை சுகாதார சேவை ஒழுங்குறுத்துகை சபையினால் அறவிடப்படும் பதிவுக் கட்டணத்தில் இருந்து மாகாண சபைகளுக்கு செலுத்த வேண்டிய 50 சதவீதத் தொகையில் 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை 44,518,057 என்பதுடன், மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் செலுத்த வேண்டிய 13,828,250 ரூபாவும் சேர்த்து செலுத்த வேண்டிய மொத்த தொகை 58,346,307 ரூபா ஆகும். இதில் மதிப்பாய்வு ஆண்டினுள் 21,446,466 ரூபா அதாவது செலுத்த வேண்டிய தொகையின் 37 சதவீதம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. வட மத்திய, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை எதுவும் மதிப்பாய்வு ஆண்டில் செலுத்தப்படவில்லை.	சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாக.
(ஔ)	1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரிவு 1 இன்படி, அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைகள் மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் ஒரு திகதியில் இருந்து இந்த சட்டம் நடைமுறைக்கு வரும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான வர்த்தமானி அறிவித்தல் பற்றிய தகவல்கள் கண்டறிய முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டபூர்வ அதிகாரம் உள்ளதா என்பது சிக்கலாக இருந்தது. இவ்வாறான நிலைமையில் இந்த சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அனைத்து கட்டளைகள் மற்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அனைத்து விதிகளினதும் செல்லுபடி தன்மை சிக்கலாக இருந்தன.	சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் சான்றுறுதி செய்யப்பட்ட ஒரு பிரதியை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரிவு 1 இன்படி அமைச்சரினால் சட்டம் தீர்மானிக்கப்படும் திகதி உள்ளடங்கிய வர்த்தமானி வெளியிடப்பட்டது எனவும்.
(க)	1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரிவு 32(1) இன்படி, அமைச்சரினால் தயாரிக்கப்படும் அனைத்து கட்டளைகளும் பிரிவு 32(2) இன்படி அரச வர்த்தமானியில் வெளியிடப்பட ஆவண்டும் என்பதுடன், சட்டத்தின் பிரிவு 32(3) இன்படி அமைச்சரினால் தயாரிக்கப்படும் அனைத்து கட்டளைகளும் வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர் கூடிய வரைவில்	உறுதிப்படுத்தும் எழுத்துமூல ஆதாரங்கள் கணக்காய்விற்கு	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரிவு 32 இன்படி அமைச்சரினால் தயாரிக்கப்படும் கட்டளைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் அந்தக்

	அனுமதிக்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி இவ்வாறு தயாரிக்கப்பட்ட 50 கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவை எவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவில்லை. இந்நிலைமையானது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் பொறுப்புகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாத நிலைமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	காலப்பகுதியில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது பற்றிய எழுத்துமூலமான தகவல்களைக் கண்டறிவது கடினமாக இருந்தது எனவும்.
(ங)	2011 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க உணவு (திருத்தப்பட்ட) திருத்திய 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரிவு 8 (1) இன்படி, ஸ்தாபிக்கப்பட்ட 25 உறுப்பினர்களைக் கொண்ட உணவு ஆலோசனைக் குழு 2022 ஆண்டில் 09 முறை கூடியுள்ளது. இந்த ஆலோசனைக் குழுவிற்கு குழு உறுப்பினர்களின் வருகை குறைவாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற 09 குழுக் கூட்டங்களுக்கு உறுப்பினர்களின் சராசரி வருகை 43.55 சதவீதமாகவே காணப்பட்டது. சட்டத்தின் பிரிவு 11(1) இன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமை உணவு அதிகாரி என்பதுடன், அவர் உணவு ஆலோசனைக் குழு தலைவர் என்றபோதிலும் 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற 09 குழுக் கூட்டங்களில் 04 இல் மட்டுமே கலந்துகொண்டுள்ளார். ஆலோசனைக் குழு உறுப்பினரான பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவை -1), இலங்கை சுங்கத் திணைக்களப் பிரதிநிதி, உணவு ஆணையாளர் மற்றும் நுகர்வோர் பிரதிநிதி ஆகியோர் 2022 இல் நடைபெற்ற கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளவில்லை. இதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவை -1) சார்பாக ஒரு உறுப்பினரை நியமிக்கவில்லை. 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துக் கூட்டங்களிலும் 04 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.	உறுதிப்படுத்தும் எழுத்துபூர்வ ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	சட்டத்தின்படி, குழுவின் முழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 07 எனவும், 2022 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கோவிட் காலப்பகுதி என்பதுடன், அந்த காலப்பகுதியில் 09 கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டது எனவும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவை -1) சார்பாக ஒரு உறுப்பினரை நியமிக்க சாத்தியம் இருக்கவில்லை எனவும், அது தவிர மற்ற அவதானிப்புகளுடன் இணங்குவதாக எனவும்.
(ச)	களுத்துறை போதனா வைத்தியசாலையின் கிளினிக் கட்டிடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள கிளினிக் புத்தக நிலையத்தில் நெஸ்கெபே மற்றும் சிறிய சிற்றுண்டி ஒரு வகையை மாத்திரமே விற்பனை செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ள போதிலும், அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக பல வகையான சிற்றுண்டிகளை விற்பனை செய்து கனிசமான வருமானம் ஈட்டுவதற்காக 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து 2023 ஆம் ஆண்டு இறுதிவரை வைத்தியசாலை நிர்வாகத்தினால் இடமளித்துள்ளது. இவ்வாறு அரசாங்கத்திற்கு எந்த வருமானமும் பெறாமல்	இது தொடர்பில் சுயாதீன விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	வைத்தியசாலை கிளினிக் கட்டிடத்தின் முன்பாக நான்கு சக்கரங்களில் பொறுத்தப்பட்ட கிளினிக் புத்தகக் கடை, வைத்தியசாலையின் நலன்புரி சங்கத்தினால் நோயாளிகளுக்கு கிளினிக் புத்தகங்களை விற்பனை செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது எனவும், இங்கு நலன்புரி சங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற நெஸ்கெபே இயந்திரத்தை

	கொள்ளல் செயல்முறைகளுக்கு முரணாக தனியார் நபர் வருமானம் ஈட்ட நிர்வாகம் அனுமதித்தமை கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.		பாவித்து நோயாளர்களுக்கு மிகவும் குறைந்த விலைக்கு நெஸ்கெபே மற்றும் பல வகையான சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்பட்டன எனவும், இந்த கடை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் மாதத்திற்கு 1000 ரூபா வாடகையாக அரசாங்கத்திற்கு அறவிடப்பட்டது எனவும், தற்போது இது மூடப்பட்டுள்ளது எனவும்.

3.3 வெளிநாட்டு உதவித் திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்		**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகள**
இலங்கையின் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர், ஒரு சீன நிறுவனம் மற்றும் மலேசிய நிறுவனத்திற்கு இடையில் 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதி கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின்படி நிறுவதற்கு முன்மொழியப்பட்ட இலத்திரனியல் படப் பாதுகாப்பு தொடர்பாடல் கதிரியல் தகவல் அமைப்பு (PACS/RIS) தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.			
(அ)	இது போன்ற அமைப்பை சம்பந்தப்பட்ட 20 வைத்தியசாலைகளில் நிறுவித்தருமாறு மேற்படி வைத்தியசாலைகளினால் சுகாதார அமைச்சிற்கு செய்த எழுத்துமூல கோரிக்கை அல்லது இது போன்ற வேறு எந்த தரப்பினராலும் முன்வைக்கப்பட்தற்கான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த திட்டத்திற்குரிய கோவைகளில் உள்வாங்கப்படவில்லை.	இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பொறுப்பான அதிகாரிகள் நடந்து கொண்ட விதம் குறித்து முழு முறையான விசாரணை நடத்தி, அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்ப திட்டத்தை செயற்படுத்தல் தொடர்பாக	பதில் வழங்கப்படவில்லை.

		தீர்மானம் எடுத்து ஒப்பந்தத்தை திருத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	
(ஆ)	கோரப்படாத திட்ட முன்மொழிவாக சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட இத்திட்டம் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளல், திட்டத்திற்கான செலவு மதிப்பீடு தயாரித்தல் அல்லது செலவுப் பலன் பகுப்பாய்வு எதுவும் அமைச்சி மட்டத்தில் மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இந்த முன்மொழிவை சமர்ப்பிக்கும் போது அரச வைத்தியசாலை அமைப்பில் இயங்கும் HHIMS, HIMS போன்ற சில மென்பொருள்கள் மேம்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்ததுடன், இந்த மென்பொருள் இந்த இலத்திரனியல் படப் பாதுகாப்பு தொடர்பாடல் கதிரியல் தகவல் அமைப்பு (PACS/RIS) மொடியுலர் உள்ளடங்கப்பட்டுள்ளதுடன், அந்த மென்பொருளை இயக்கத் தேவையான பிற உள்கட்டமைப்பு பற்றாக்குறை மட்டுமே இருந்தது. முன்மொழியப்பட்ட புதிய அமைப்பைப் பெறுவதற்கு மற்றும் அதுவரை காணப்பட்ட மென்பொருளுக்கு இந்த இலத்திரனியல் படப் பாதுகாப்பு தொடர்பாடல் கதிரியல் தகவல் அமைப்பு (PACS/RIS) மொடியுலரை செயற்படுத்துவது சாத்தியமாக இருப்பதால் புதிய மொடியுலர் கொள்வனவு செய்வது வீணான செலவு என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(இ)	இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பொது வைத்தியசாலைகளில் இத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான செலவு 35,000,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் அதற்காக 3,360,000 அமெரிக்க டொலர் வட்டியுடன் 11 ஆண்டுகளுக்குள் செலுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதி 2017 மார்ச் 01 ஆம் திகதி அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக கோரியது. 2017 மார்ச் 21 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அந்த முன்மொழிவு தொடர்பாக நிதி அமைச்சரினால் 2017 மார்ச் 20	-அவ்வாறே-	-அவ்வாறே-

	ஆம் திகதி கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட அவதானிப்புகளைக் கருத்தில் கொண்டு திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளித்தார்.		
(ஈ)	இந்த முன்மொழிவு தொடர்பாக, நிதியமைச்சரினால் 2017 மார்ச் 20 ஆம் திகதி கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட அவதானிப்புகளைக் கருத்தில் கொண்டு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட ஒருமித்த பேச்சுவார்த்தைக் குழுவின் (CANC) கலந்துரையாடலின் பின் திருத்தப்பட்ட திட்ட முன்மொழிவுக்கான அனுமதி பெறுவதற்கு மீண்டும் அமைச்சரவை பத்திரமொன்று 2018 டிசம்பர் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, உத்தேசித்த 20 வைத்தியசாலைகளில் இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான செலவு 33,250,000 அமெரிக்க டொலர்கள் என்பதுடன் அத்தொகைக்காக வட்டி 3,360,000 அமெரிக்க டொலர்களுடன் சேர்த்து 11 ஆண்டுகளுக்குள் செலுத்தப்பட வேண்டும். எனினும், இங்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட ஒருமித்த பேச்சுவார்த்தைக் குழுவின் (CANC) இற்கு அல்லது வைத்தியசாலைகளில் செயற்படும் HHIMS, HIMS போன்ற மென்பொருள்கள் மூலம் இந்த இலத்திரனியல் படப் பாதுகாப்பு தொடர்பாடல் கதிரியல் தகவல் அமைப்பு (PACS/RIS) இனை செயற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அல்லது ஏற்கனவே உள்ள மென்பொருளை மேம்படுத்தி அதற்குத் தேவையான சேவையகங்கள் (Server), இணைய வசதிகள் மற்றும் பிற சாதனங்களை வழங்குவதற்கான செலவு மற்றும் இந்த புதிய திட்டத்தை செயற்படுத்துவதற்கான செலவு பலன் பகுப்பாய்வு போன்றவை செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(உ)	2019 ஜனவரி 14 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று தரப்பினருக்கும் இடையே எழுத்துபூர்வ ஒப்பந்தம் 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் 74 பக்கங்களைக் கொண்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட எந்தக்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	கோப்புகளிலும் 74 பக்கங்கள் சேர்க்கப்படவில்லை. மேலும், ஒப்பந்தத்தின் உள்ளடக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பக்க எண்கள் சரியாக இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இத்தகைய முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு பொறுப்பான தரப்பினர் இது குறித்து கவனம் செலுத்தியிருக்கவில்லை.		
(ஊ)	ஒப்பந்தத்தின் இணைப்பு இலக்கம் "சீ" (C) இன்படி, இந்த திட்டத்தை 03 மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கு இணங்கியுள்ள போதிலும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் திட்டத்தை செயல்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் செயல்படவில்லை. இத்திட்டம் 05 வைத்தியசாலைகளில் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததோடு, அதற்காக பெறப்பட்ட முறையான அனுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோப்புகளில் இருக்கவில்லை. முன்மொழியப்பட்ட காலக்கெடுவிற்குள் திட்டத்தை திட்டத்தை செயற்படுத்தாத காரணத்தால் கடன் தவணை செலுத்துவதற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட காலக்கெடு, தவணைத் தொகை மற்றும் வட்டி உள்ளிட்ட உப அட்டவணையை திருத்தியமைத்து ஒப்பந்தம் திருத்தப்பட்டிருக்க வேண்டும் எனினும் பொறுப்பான தரப்பினர் அது குறித்து நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. முழுத் திட்டமும் 2019 டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவடைய வேண்டிருந்தாலும், 05 வைத்தியசாலைகளில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது 2023 ஆம் ஆண்டிலும் முழுமையாக நிறைவு செய்ய தவறியுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(எ)	2019 ஒக்டோபர் மாதம் முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் 2022 ஜூலை மாதத்தில் 05 பேர் கொண்ட குழுவின் மூலம் 05 வைத்தியசாலைகள் தொடர்பாக இந்த திட்டத்தின் முதல் தவணையை செலுத்துவதற்கு முன் திட்டத்தின் செயற்திறன் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், அந்த மதிப்பீடு தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.		
	i. குழுவினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி திருப்திகரம் தொடர்பில் தனது கருத்தை வெளிப்படுத்திய 04	-அவ்வாறே-	-அவ்வாறே-

	அளவுகோல்கள் திருப்திகரமாக இல்லை (Not Satisfactory) எனவும், 38 அளவுகோல்கள் முழுமையாக திருப்தியில்லை (Partially Satisfactory) எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையின்படி, 16 அளவுகோல்கள் மட்டும் திருப்திகரமாக இருப்பதாக சான்றளிக்கப் பட்டுள்ளது. இதன்படி, மொதத்தில் 05 வைத்தியசாலைகளில் இத்திட்டத்தின் அமுலாக்கம் திருப்திகரமாக இல்லை என்பது இந்த மதிப்பீட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டது.		
	ii. இந்த சூழ்நிலையில் முதல் தவணையின் ஒரு பகுதி செலுத்துதல் (partial payment of first installment) மட்டுமே மேற்கொள்வதற்கு இந்த குழு பரிந்துரை செய்துள்ளதுடன், செலுத்தப்பட்ட சதவீதம் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள அவதானிப்புகளின்படி கொள்முதல் சட்டங்களின்படி தீர்மானிக்கப்பட வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iii. இக்குழுவின் பரிந்துரையின்படி திட்டத்தின் நோக்கம் மற்றும் செயற்படுத்தக்கூடிய காலக்கெடு முழுமையான மாற்றமடைந்ததால் ஒப்பந்த கட்டண அட்டவணையின் அடிப்படையில் தவணைகளை செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் எவையும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஏ)	2021 ஒக்டோபர் 04 ஆம் திகதி இந்த திட்டத்தின் நிலை குறித்து அமைச்சரவை பத்திரமொன்று விடயத்திற்குப் பொறுப்பு அமைச்சரினால் சமர்க்கப்பட்டதுடன், 2021 ஒக்டோபர் 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி அமைச்சரவை குறிப்பு தொடர்பில் நிதி அமைச்சரின் அவதானிப்புகள் குறித்து கவனம் செலுத்தி அதன்படி செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 2021 ஒக்டோபர் 13 நிதி	-அவ்வாறே-	-அவ்வாறே-

	அமைச்சரின் அவதானிப்புகளின்படி தற்போதுள்ள நிதி வரையறைக்குள் மீதமுள்ள 15 வைத்தியசாலைகளில் திட்டத்தை செயற்படுத்துவது பற்றி பின்னர் பரிசீலிக்கப்படுவது பொருத்தமானது என சுட்டிக்காட்டப்பட்டது. அதன்படி கடன் தவணைகளை செலுத்துவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட கட்டண அட்டவணையை திருத்துவதற்கு பொறுப்பான தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனினும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.		
(ஐ)	கடன் செலுத்தும் அட்டவணையில் திருத்தம் செய்யாமல் தற்போது இத்திட்டத்தை செயற்படுத்தி வரும் 05 வைத்தியசாலைகளுக்கு உரிய தொகையை தவணை முறையில் செலுத்துவதற்கும் மற்றும் மீதமுள்ள 15 வைத்தியசாலைகளில் திட்டத்தை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி பெறுவதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சுகாதார அமைச்சரினால் 2023 பெப்ரவரி 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, 2023 மார்ச் 20 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை பத்திரத்தின் முன்மொழிவு 3.1 இற்கு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 05 வைத்தியசாலைகள் தொடர்பாக பகுதிவாரியாக தொகையை செலுத்துவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதுடன், திட்டத்தின் எஞ்சிய செயற்பாடு தொடர்பில் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரினால் சமரப்பிக்கப்பட்ட அவதானிப்புகளின் படி நடவடிக்கை எடுக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த விடங்களை பரிசீலித்த பின்னர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் விரிவான அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சிற்கு உத்தரவிடப்பட்டது. இங்கே நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை விவகார அமைச்சர் தனது அவதானிப்பு எண் 1 இல், இந்த திட்டம் 05 வைத்தியசாலைகளில் மட்டுமே செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும், கட்டண உப அட்டவணை 20 வைத்தியசாலைகளுக்கு இத்திட்டத்தை செயற்படுத்துவதுடன் தொடர்புடையது எனவும், ஒப்பந்தத்தில் உள்ள பொறுப்புகளின்படி, திட்டத்தை		

	செயற்படுத்திய 05 வைத்தியசாலைகளுக்குரிய பகுதிகள் பணம் செலுத்த வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டிய போதிலும் அதனை கவனிக்காமல், அசல் ஒப்பந்தத்தின்படி, 20 வைத்தியசாலைகளிலும் உரிய திட்டம் 03 மாதங்களுக்குள் செயற்படுத்தப்பட்டதால், செலுத்த வேண்டிய கடனில் முதல் தவணையை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோப்புகளின்படி அவதானிக்கப்பட்டது.		
(ஒ)	அமைச்சரவை ஒப்புதலின் அடிப்படையில் அசல் ஒப்பந்தத்தின்படி 20 வைத்தியசாலைசாலைகளிலும் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்திய பின்னர் அடுத்த ஆண்டில் செலுத்த வேண்டிய தவணைத் தொகையான 3,022,727.27 அமெரிக்க டொலர்களை செலுத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குமாறு 2023 ஏப்ரல் 11 ஆம் திகதி சுகாதார செயலாளரினால் தேசிய வரவு செலவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரப்பட்டது. தேசிய வரவு செலவு திணைக்களத்தின் 2023 மே 03 ஆம் திகதிய கடிதத்தில், திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் 05 வைத்தியசாலைகள் தொடர்பான தவணைகளை மட்டுமே செலுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதால் குறித்த தவணைத் தொகையை சரியாக சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 05 வைத்தியசாலைகள் தொடர்பான செலவு மதிப்பீட்டை விநியோகத்தரினால் தயாரித்து, அந்த தொகை 5,480,018 அமெரிக்க டொலர்கள் என அடையாளம் காணப்பட்டாலும், மீண்டும் 2023 மே 10 ஆம் திகதி சுகாதார செயலாளர் தேசிய வரவு செலவு திணைக்களத்திடம் 20 வைத்தியசாலைகளுக்குமான தவணைத் தொகையை செலுத்துவதற்கான 3,022,727.27 அமெரிக்க டொலர்களை ஒதுக்கீட்டுத் தொகையாக கோரியுள்ளது. மீண்டும் தேசிய வரவு செலவு திணைக்களத்தினால் 05 வைத்தியசாலைகளின் திட்டங்களை செயற்படுத்துவதற்கான செலவு 5,480,018 அமெரிக்க டொலர்கள் எனின் அதன் அடிப்படையில் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தி மீண்டும் பரிசீலித்து செலுத்த வேண்டிய தவணைத் தொகையை குறிப்பிடுமாறு 2023 மே 15 ஆம் திகதி சுகாதார	-அவ்வாறே-	-அவ்வாறே-

	செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அதனை கவனத்திற்கொள்ளாமல் செலுத்த வேண்டிய தவணை தொகை 3,022,727.27 அமெரிக்க டொலர்கள் என 2023 மே 17 ஆம் திகதி மீண்டும் அறிவித்துள்ளது. அதன்படி சுகாதார அதிகாரிகள் பொறுப்பின்றி செயற்பட்டமை அவதானிக்கப்பட்டது.		
(ஓ)	இதன்படி, கூடுதல் ஒதுக்கீடாக 968 மில்லியன் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சினால் நியமிக்கப்பட்ட 05 பேர் கொண்ட குழுவின் பரிந்துரை, அமைச்சரவை அனுமதி அல்லது வரவு செலவு திணைக்களம் சமரப்பித்த விடயங்களை கருத்தில் கொள்ளாமல், 2023 ஜூன் 15 ஆம் திகதி வங்கி டெபிட் அறிவிப்பின்படி 3,022,727.27 அமெரிக்க டொலர்களுக்கு பதிலாக 9,984,908 ரூபா வங்கிக் கணக்குகளுடன் 1,007,484,807 ரூபா செலுத்தியுள்ளது. இது தொடர்பாக 2023 ஜூன் 28 ஆம் திகதி 968,000,000 ரூபாவிற்கான இலக்கம் C 1010 எனும் கட்டண வவுச்சரும் மற்றும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி 39,484,907 ரூபாவிற்கான இலக்கம் C 2580 எனும் கட்டண வவுச்சரும் தயார் செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய அவதானிப்புகளின்படி இந்த கொடுப்பனவு முறைப்படி அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு அல்ல என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஔ)	இத்திட்டம் செயற்படுத்தப்பட்ட 05 வைத்தியசாலைகளில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்ட சிக்கல் நிலைமைகளை தீர்ப்பதற்கு இந்த 05 வைத்தியசாலைகளுக்குமாக 63 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டை வழங்குமாறு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) இனால் 2022 ஜூன் 06 ஆம் திகதி ஆரம்ப சுகாதார அமைப்பு வலுவூட்டல் திட்டத்தின் (PSSP) பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதன்படி முறையான ஆய்வின் மூலம் உரிய திட்டத்தின் கீழ் இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டுமா என்பதை அடையாளம் காணாமலேயே இந்த 05 வைத்தியசாலைகளுக்கும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.	-அவ்வாறே-	-அவ்வாறே-

(க)	திட்டமிடல் பிரிவினால் இத்திட்டம் தொடர்பாக கணக்காய்விற்கு சமரப்பிக்கப்பட்ட கோப்புகளில் உள்ளடக்கப்பட வேண்டிய கணிசமான ஆவணங்கள் உள்ளடகப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான அதிகூடிய நிதி மதிப்புடைய திட்டங்களுடன் தொடர்பான கோப்புகளில் உள்ளடக்கப்படும் ஆவணங்கள் தொலைதல் மிகவும் பாதகமான நிலை என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

3.4 கொள்வனவுகள்

கணக்காய்வு அவதானிப்புகள் ----------		**பரிந்துரை** ----------	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்** ----------
(அ)	2021 ஒக்டோபர் 01 முதல் 2022 செப்டம்பர் 30 வரை கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதற்கு ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த காலம் முடியும் வரை அடுத்த ஆண்டுக்கான புதிய விநியோகத்தர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான கொள்ளல் நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் கொள்ளல் குழுவினால் நிறைவு செய்திருக்கவில்லை. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தரினால் வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட சந்தைப் பெயர் கொண்ட சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்களை கடந்த ஆண்டிலும் மற்றும் மதிப்பாய்வு ஆண்டிலும் வைத்தியசாலைக்கு	இது தொடர்பாக முழு முறையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக	இரசாயனப் பொருட்களை பொறுப்பேற்று பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் வைத்தியசாலை பணிப்பாளரின் 2023.02.15 ஆம் திகதிய THKA/S/4/1/04 எனும்

		வழங்கியிருக்கவில்லை என்பதுடன், விநியோகத்தரினால் டெண்டர் ஆவணங்களுடன் கொள்ளல் குழுவிற்கு சமர்ப்பித்த சந்தைப் பெயர் கொண்ட சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்களுக்குப் பதிலாக வேறு பெயர் கொண்ட இரசாயனப் பொருட்களை முறையான அனுமதியின்றி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, விநியோகத்தர் ஒப்பந்தத்திற்கு மாறாக விநியோகிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள் 2022 ஜனவரி மாதம் முதல் கணக்காய்வுத் தினமான 2023 மே 15 ஆம் திகதி வரை வழங்கியுள்ளதுடன், வைத்தியசாலை அது குறித்து விசாரிக்காமல் விநியோகத்தரின் சேவையை பெற்றுள்ளது. அதன்படி விநியோகத்தர் வழங்கிய இரசாயனப் பொருட்களின் தரம் மற்றும் இருக்க வேண்டிய இரசாயனக் கலவை குறித்து இலங்கை தொழிற்துறை தொழில்நுட்ப நிறுவனத்தினால் ((ITI) சான்றுறுதி செய்யவில்லை என்பதுடன், ஒப்பந்தத்தின்படி வழங்கப்படாத சுத்திகரிப்பு பொருட்களுக்காக 2021 ஒக்டோபர் 01 முதல் 2022 செப்டம்பர் 31 வரை ரூபா 2,402,550 உம் மற்றும் 2022 ஒக்டோபர் 01 முதல் 2022 செப்டெம்பர் 31 வரை ரூ. 599,640 உம் மொத்த தொகையாக ரூ. 3,002,190 இனை விநியோகத்தருக்கு வழங்குவதற்கும் 2023 ஜனவரி முதல் மே மாதம் வரை மொத்தம் ரூ. 7,722,000 உம் விநியோகத்தருக்கு செலுத்துவதற்காக வவுச்சர்களைத் தயாரித்தல் கொள்முதல் வழிகாட்டுதல்களின் விதிகள் மற்றும் விநியோக ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு இணங்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், இந்த கொடுப்பனவுகள் முறையற்ற செலவுகளாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.	ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இலக்க கடிதத்தின் மூலம் தொற்று கட்டுப்பாட்டு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும்.
	ii.	2022/2023 ஆம் ஆண்டுக்காக விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் IV வது பகுதியில் உள்ள தேவைகளின் அட்டவணையின் நிபந்தனை இலக்கம் 3 இன்படி மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்கான ஒப்பந்தத்தின்படி, ஒப்பந்த காலத்தினுள் சுத்திகரிப்பு சேவைகளுக்கான வருடாந்தம் வழங்கவேண்டிய மொத்தம்	-அவ்வாறே-	தினசரி சுத்திகரிப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் இந்த உபகரணங்களை வைத்தியசாலை உத்தியோகத்தரின் பொறுப்பில் வைக்கப்பட்டு வழங்குவது நடைமுறை சாத்தியமற்றது என்பதால் அந்த சுத்திகரிப்பு உபகரணங்கள்

	1,063,104 ரூபா பெறுமதியான உபகரணங்களின் பட்டியலின்படி வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட 229 யூனிட் உபகரணங்கள் வழங்கப்படவில்லை என்பதுடன், முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட வேறு வகையான மற்றும் தர நிலையற்ற தேய்ந்த, பழைய உபகரணங்கள் சுத்தம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டது என்பதும், அவை களஞ்சியங்களில் இருந்தமையும் அவதானிக்க முடிந்தது. எனவே, தரமான சுத்திகரிப்பு சேவையை விநியோகத்தர்களினால் வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை என்பது கள கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன்படி, கேள்வி விலைகள் வழங்கும் போது அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூ. 1,063,104 ஏல விலையை விநியோகத்தருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையானது ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ள முடியாது என்பதுடன், இது முறைசாரா கொடுப்பனவுகள் என்பதும் அவதானிக்கப்பட்டது.		கண்காணிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பில் உள்ளதாகவும், தேவையேற்படும் போது உபகரணங்கள் தொடர்பில் சிக்கல் எழுந்தால் அவை சரிபார்க்கப்படுவதுடன், அந்த உபகரணங்கள் வைத்தியசாலைக்கு ஏற்றுக்கொள்ளும் நிரந்தர உபகரணங்கள் (மண் வெட்டிகள், திணிகள்) அல்ல எனவும் உரிய சந்தைப் பெயரைக் கொண்டனவா என்பது பற்றி உறுதி செய்யவில்லை என்பதுடன், எனினும் உரிய உபகரணங்களை ஒப்பந்தத்தின்படி பிரிவுத் தலைவரினால் தொற்று கட்டுப்பாட்டு பிரிவிற்கு ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கும் மற்றும் பிரிவுத் தலைவர் - தொற்று கட்டுப்பாட்டு பிரிவிற்கும் பிரதியிட்டு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதாகவும், இந்த உபகரணங்களுக்கு ஒப்பந்தத்தின்படி மாதாந்த பில்கள் ஊடாக நேரடியாக கொடுப்பனவுகள் மேற்கொள்வதில்லை எனினும் பொது பணிக்களுக்கான செலவின உருப்படிகளின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியும் என்பதால் உரிய சந்தைப் பெயர்களில் அந்தந்த உபகரணங்கள் வழங்கப்படும் வரை கொடுப்பனவுகள் செலுத்துவதில்லை என்பதாகவும்.
	iii. 2022/2023 ஆம் ஆண்டுக்காக விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் IV வது பகுதியில் உள்ள தேவைகளின் அட்டவணையின் நிபந்தனை இலக்கம் 4 இன்படி மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்கான ஒப்பந்தத்தின்படி, சுத்திகரிப்பு சேவைகளுக்காக மாதாந்தம் / வருடாந்தம் வழங்கவேண்டிய உபகரணங்களின் பட்டியலின்படி வழங்கப்பட வேண்டிய உபகரணங்கள் உரிய	-அவ்வாறே-	இரசாயனப் பொருட்களை பொறுப்பேற்று பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் வைத்தியசாலை பணிப்பாளரின் 2023.02.05 ஆம் திகதிய THKA/S/4/1/04 எனும் இலக்க கடிதத்தின் மூலம் தொற்று கட்டுப்பாட்டு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி

		தரநிலையில் மற்றும் வகைகளில் வழங்கப்படவில்லை. அதன்படி, ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி செயற்படாத விநியோகத்தருக்கு ரூ. 2,050,800 இனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை ஒப்பந்தத்தின்படி செய்யமுடியாது என்பதுடன், இது முறைசாரா கொடுப்பனவுகள் என்பதும் அவதானிக்கப்பட்டது.		இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பொறுப்பேற்றல் தொடர்பாக சந்தைப் பெயர் உட்பட அனைத்து தகவல்களும் தொற்று கட்டுப்பாட்டு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது எனவும், எனினும் இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பொறுப்பேற்கும் போது அதற்கு இணங்காமல் செயற்பட்டுள்ளமை குறித்து கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், உரிய இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விநியோகம் குறித்து பதிவு உள்ளீடுகள் பராமரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டதால் உரிய விடயங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
	iv.	விநியோகத்தரினால் மாதாந்தம் விநியோகிக்கப்படும் சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்கள் வைத்தியசாலையின் தொற்று கட்டுப்பாட்டு பிரிவினால் பெறப்படுவதும், அந்த பிரிவினால் ஒவ்வொரு கிளைகளுக்கும் சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்கள் வழங்கப்படுவதும் அவதானிக்கப்பட்ட போதிலும், தொற்று கட்டுப்பாட்டு பிரிவினால் பெறுகை வழங்குதல் மற்றும் இருப்பு தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களை உள்ளிட்டு இருப்பு பதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, கணக்காய்வு தினமாகும் போது விநியோகத்தரினால் வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்ட சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்களின் அளவு,	-அவ்வாறே-	-அவ்வாறே-

	அவை விநியோகிக்கப்பட்ட அளவு, பௌதீக இருப்பு என்பவற்றை உறுதி செய்வதற்கு உரிய சான்றுகளைப் பெறுவதற்கு கணக்காய்வின் போது சாத்தியப்படவில்லை.		
(ஆ)	2022/2023 ஆம் ஆண்டுக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கழிவுநீர் அகற்றல் அமைப்பு முறையை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ. 7,351,960 பெறுமதியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலும் மற்றும் கழிவகற்றல் தொகுதி முறையை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.		
	i. 2023 ஆகஸ்ட் மாதம் கணக்காய்வு திகதி நிலவரப்படி, 30 ஆண்டுகளுக்கு முன்பு தங்கியிருந்து சிகிச்சை பெறும் 600 நோயாளிகளின் கொள்ளளவிற்கு ஏற்றவாறு கட்டப்பட்ட கழிவுநீர் அகற்றல் தொகுதி தற்போது தங்கியிருந்து சிகிச்சை பெறும் 2000 நோயாளிகள் மற்றும் 4000 ஊழியர்களினால் எவ்வித வளர்ச்சிகளும் இல்லாமல் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கப்பட்டது. அதன்படி, கழிநீர் அகற்றல் தொகுதி எந்த மேம்படுத்தல்களும் இன்றி பழுதடைந்த நிலையிலேயே அதனை சுத்தம் செய்வதற்காக அதிக கொள்ளளவு கொண்ட கழிவுகள் சுத்திகரிப்பு செய்வதற்கு பயன்படுவதை அவதானித்தாலும், இதன்மூலம் சூழலுக்கு வெளிவிடப்படும் கழிவுநீரின் தரம் மோசமாக இருப்பதாகவும், இது பாதகமான சுற்றுச்சூழல் நிலைமைகளை உருவாக்கியுள்ளது என்பதை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது.	சூழலுக்கு வெளியிடப்படும் கழிவுநீரின் தரம் குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும்.	தற்போதுள்ள கழிவுநீர் அகற்றல் அமைப்பு வைத்தியசாலையின் கழிவுநீரின் கொள்ளளவுக்கு போதுமானதாக இல்லாவிட்டாலும், வெளிச் சூழலுக்கு வெளியேற்றப்படும் கழிவுநீர் சுகாதார பாதுகாப்பான நிலையில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், கழிவுநீர் அகற்றல் தொகுதியின் அவசியம் குறித்து தொடர்ச்சியாக சுகாதார அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் கழிவுநீர் அகற்றல் அமைப்பு குறித்து, கழிவுநீர் அகற்றல் தொகுதி பராமரிப்பது தொடர்பான தொழில்நுட்ப அறிவு கொண்ட உத்தியோகத்தர்கள் இந்த நிறுவனத்தின் பதவியணியில் இல்லை என்பதாகவும், எனவே. விவரக்குறிப்புகள் தயாரித்தல், மதிப்பீடுகள் செய்தல், செய்ய வேண்டிய பணிகள் மற்றும் பராமரிப்பு சேவைகள் போன்றவை தொடர்பான பொறியியல் பணிகள் குறித்த மத்திய ஆலோசனைப் பணியகத்தின் பரிந்துரைகள் ஒப்பந்தம் மற்றும் பணம் செலுத்துவதற்கான

			பரிந்துரைகளாக எடுத்துக் கொள்ளப்படுவதாகவும், இந்த கழிவுநீர் அகற்றல் அமைப்பின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டிற்காக தேசிய போட்டியுடனான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதாகவும், எனினும், இதற்காக தற்போது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள ஒப்பதாரரினால் மட்டுமே விலைமனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், ஆகையால் வைத்தியசாலை பணிகளை மேற்கொள்வதற்கான தேவையை கருத்தில் கொண்டு, பொறியியல் பணிகள் குறித்த மத்திய ஆலோசனைப் பணியகத்தின் விலைகள் மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்தம் வழங்கப்பட்டது எனவும்.
	ii. 2022/2023 ஆம் ஆண்டுக்கான கழிவுநீர் அகற்றல் முறையைச் செயற்படுத்தியதற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 7,351,960 பெறுமதியான மதிப்பீட்டை தயாரிப்பதற்கு அடிப்படையாக எடுக்கப்பட்ட விலை பகுப்பாய்வு (HSR/BSR/ISR/SSR) கணக்காய்விற்கு சமரப்பிக்கப்படாததால், மதிப்பீட்டு விகிதங்களின் பொருளாதார மற்றும் சரியான தன்மை பற்றிய சான்றுகளை பெற முடியவில்லை.	இந்த தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.
	iii. வைத்தியசாலையின் தாழ்வாரங்களில் அடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக மதிப்பீட்டில் உருப்படி இலக்கம் 14 இன் கீழ் ரூ 1,900,000 மதிப்பீடு செய்வதற்கு தாக்கம் செலுத்திய நியாயமான காரணங்களை சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட விலைமனுதாரியினால் மேற்படி விடயத்திற்காக ரூ. 2,700,000 இனை அதாவது மதிப்பீட்டுத் தொகையை விட 42 சதவீதம் கூடுதலாக விலை சமர்ப்பித்துள்ளது என்பதுடன், இது குறித்து கவனம் செலுத்தாமல் ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் செய்ததால் முறைசாரா கொடுப்பனவுகளுக்கு இடமளிக்கப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு, முறைசாரா கொடுப்பனவுகளுக்கு காரணமானவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், கழிவுநீர் அகற்றல் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக ஒரு முறையான உள்ளகக் கட்டுப்பாடு முறையை	-அவ்வாறே-

		தயாரித்து செயல்படுத்தப்பட வேண்டும்.	
	iv. கழிவுநீர் அகற்றல் அமைப்பின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் ஆவணங்களை ஆய்வு செய்த போது ஒரு ஊழியர் மட்டும் தினசரி ரூ. 1,000 என்ற அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் பொறியியல் மதிப்பீட்டின் உருப்படி இலக்கம் 02 இற்காக அளவு படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 1,440,000 ஆன பெறுமதி துல்லியமற்ற தரவுகளின் அடிப்படையிலும், ஒப்பந்ததாரர் அசாதாரண இலாபம் ஈட்டும் நோக்கத்துடனும் உள்ளடக்கப்பட்ட செலவினம் என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒப்பந்ததாரர் உண்மையில் ஒரு தினசரி ஊழியரை மட்டுமே சேவையில் ஈடுபடுத்தி கழிவுநீர் அகற்றும் அமைப்பை செயல்படுத்துவதால் மற்றொரு ஊழியருக்காக செலுத்தப்படும் ரூ. 720,000 ஆனது முறைசாரா மற்றும் தேவையற்ற செலவு என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v. கேள்வி ஆவணங்கள் தயாரிக்கும் போது கழிவகற்றல் அமைப்பிற்காக அதற்கான ஒரே மாதிரியான அனுபவமும் தகுதியும் கொண்ட தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள்(குறைந்தபட்சம் NVQ4 தகுதியுடைய) இருக்க வேண்டும் என்று தகவல்கள் உள்வாங்கப்பட்டுள்ளது. எனினும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் இயந்திர இயக்குனர் (Plant operator) அதற்கான தகுதிகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. மதிப்பீட்டின்படி உரிய பணிக்காக ரூ. 1,080,000 இனை ஒப்பந்ததாரருக்கு செலுத்தியமை பயனற்ற ஒரு செலவாகும். எனினும், இயந்திர இயக்குனர் கழிவுநீர் அகற்றல் அமைப்பை செயற்படுத்தும் ஏனைய வேலை ஒப்பந்தங்களில் பணிபுரியும் ஒப்பந்ததாரரின் ஊழியர் என்பது அவதானிக்கப்பட்டது. எனவே அவர் முழு நேர கழிவுநீர்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	அகற்றல் அமைப்பு ஊழியராக பணியாற்றவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.		
	vi. கழிவுநீர் அகற்றல் அமைப்பின் மதிப்பீட்டின்படி, மேற்படி வேலைகளுக்காக ஆண்டுக்கு பயிற்சியற்ற இரண்டு ஊழியர்களுக்கு ஊதியம், இயந்திர இயக்குனரின் சம்ளம் மற்றும் தாழ்வாரங்கள் அடைப்பை சுத்தம் செய்யும் செலவுகள் முறையே ரூ. 1,080,000 உம், ரூ. 1,560,000 உம் மற்றும் ரூ. 2,200,000 ஆக மொத்தம் ரூ. 4, 840,000 உம் மதிப்பீடு செய்துள்ளதுடன், அது ரூ. 6,683,600 ஆன மொத்த சேவை மதிப்பீட்டில் 72 சதவீதமாகும். வைத்தியசாலை ஊழியர்களில் ஒரு இயந்திர மேற்பார்வையாளர் (Plant supervisor) மற்றும் இரண்டு Plumber/Pump Machine Operator என மூன்று அலுவலர்கள் பணியாற்றுவதால் கழிவுநீர் அகற்றல் அமைப்பின் வேலைகளுக்கு அவர்களை ஈடுபடுத்த சாத்தியம் காணப்பட்ட போதிலும், அவ்வாறு செய்யாததால் வெளி விநியோகத்தருக்கு செலுத்தப்பட்ட ரூ. 4,840, 000 பயனற்ற செலவினம் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vii. மேற்கூறிய கணக்காய்வு அவதானங்களின்படி, கழிவுநீர் அகற்றல் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பான கொள்ளல் நடவடிக்கைகள், மதிப்பீடு தயாரித்தல், டெண்டர் ஆவணங்கள் மற்றும் விவரக்குறிப்புகள் என்பன தொடர்பாக வைத்தியசாலையில் உள்ளக கட்டுப்பாடுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், ஒப்பந்ததாரரைத் தேர்ந்தெடுக்கும் முறையிலும் வெளிப்படைத் தன்மை இல்லை எனவும், கழிவுநீர் அகற்றல் அமைப்பு தொடர்பாக வைத்தியசாலையின் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் முறையாக கண்காணிக்கப்படுவதுமில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

(இ)	கண்டி போதனா வைத்தியசாலைக்கு 2022/2023 ஆம் ஆண்டுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தம் ரூ. 507,472,200 (VAT தவிர்த்து) வருடாந்த ஒப்பந்த நிதிக்கு 2022 ஆகஸ்ட் 01 முதல் ஜூலை 31 வரையிலான காலப்பகுதிக்கான ஒரு ஒப்பந்தமும் இன்றி 2023 ஜனவரி 17 ஆம் கடிதத்தின் மூலம் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 2023 ஜூலை 31 ஆம் திகதி ஒப்பந்த காலம் முடிவுறுவதற்கு நெருங்கிய 2023 ஜூலை 14 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன்படி, குறித்த காலப்பகுதியில் ஒப்பந்தம் இன்றி விநியோக நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் கொள்ளல் வழிகாட்டுதல்கள் கோவையின் 5.4.8 பிரிவின்படி 2022 ஆகஸ்ட் 01 முதல் 2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ரூ. 50,747,220 இற்கான செயற்திறன் பிணையை 2023 பெப்ரவரி 07 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் என ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஒப்பந்ததாரர் அதனை நிராகரித்த காரணத்தால் இந்த கொள்ளல் வழிகாட்டுதல்களுக்கு புறம்பாக செயற்பட்டு சுகாதார அமைச்சின் செயலாளரினால் 2023 ஜூன் 14 ஆம் திகதிய கடிதத்தில் ரூ. 8,457,870 இனை செயற்திறன் பிணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கொள்ளல் வழிகாட்டல் கோவையின் விதிமுறைகளை மீறி ஒப்பந்ததாரரின் தேவைக்கு ஏற்றவாறு செயற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு, பொறுப்பானவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குகிறேன்.
(ஈ)	சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தம் 2023 மே 01 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட அதே தனியார் நிறுவனத்திற்கே கால நீடிப்பு செய்து 2023 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலான காலத்திற்கு ரூ. 18,473,490 இற்கு (VAT வரியின்றி) ஒப்பந்த நிதிக்கு வழங்குவதற்கு 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதிய இலக்கம் MH/PB/06/RF/34/20 எனும் மேலதிக செயலாளர் (கொள்ளல்) இன் கடிதத்தின்படி சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும், 2023 டிசம்பர் 08 நிலவரப்படி, அது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என்பதுடன்,	இது தொடர்பாக சுயாதீன ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.	இந்த கொள்வனவிற்கான விலைமனு கோரல் ஒரு வருட கால சேவையை வழங்குவதற்காக செய்யப்பட்டது எனவும், இருப்பினும், அப்போது நாட்டில் நிலவிய நிச்சயமற்ற நிலைமைகள் காரணமாக இந்த கொள்வனவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்த விலைக்கு பதிலளித்த விலைமனுதாரி சமர்ப்பித்த விலைகள் சந்தை சராசரி விலையை விட அதிகம் என்பதால், முதலில் ஒரு வருட காலப்பகுதியில் 06 மாதங்களுக்கு மட்டுமே ஒப்பந்தம் வழங்கப்பட்டது எனவும்,

	கொள்ளல் வழிகாட்டுதல்கள் கோவையின் 5.4.8 பிரிவின்படி ரூ.1,847,349 பெறுமதியான செயற்திறன் பாதுகாப்பும் சமர்ப்பிக்கவில்லை.		அதன்படி டொலரின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட காரணமாக பெரும்பாலான பொருட்களின் சந்தை விலைகள் குறைந்துள்ளதால் சந்தை விலையை கருத்தில் கொண்டு விநியோகங்களை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரிடம் இருந்து அடுத்த 06 மாதங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது எனவும், எனவே இங்கு ஒப்பந்த காலம் நீடிப்பு செய்யப்படவில்லை எனவும், அரசாங்கத்திற்கு சாதகமான வகையில் எஞ்சிய 06 மாத காலத்திற்கு விலைகளில் திருத்தம் செய்யப்பட்டது எனவும், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஒப்பந்ததாரர் செயற்திறன் உத்தரவாதம் வழங்காத பின்னணியில் வைத்தியசாலையின் உலர் உணவுப் பொருட்களின் விநியோகச் சேவையை தொடர்வதற்காக செயற்திறன் உத்தரவாதத்தை பெற்றுக்கொள்ளாமல் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடாமல் இருந்தபோதிலும், இந்த சேவையை தொடர்வதற்கு இந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யாமல் தொடரந்து பெற்றுக் கொண்டுள்ளது எனவும், எவ்வாறாயினும், செயற்திறன் உத்தரவாதங்கள் பெறப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் வரை எந்த கட்டணங்களையும் செலுத்தாமல் இருக்க அந்த வைத்தியசாலையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், தற்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதால், முறையான ஒப்பந்த நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகவும், 2024.02.24 ஆம் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு,

			ரூ.1,872,549 செயற்திறன் உத்தரவாதமும் பெறப்பட்டுள்ளது எனவும்.
(உ)	நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள தங்கியிருந்து சிகிச்சைப் பெறும் நோயாளிகள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்கு 2023 வருடத்திற்காக நேரடியாக சமைத்த உணவுகள் வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 4 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ரூ. 37,152,025 குறைந்த விலையை சமர்ப்பித்த விலைமனுதாரிக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு எவ்வித நியாயமான காரணங்களையும் குறிப்பிடாமல் விலைமனுவை நிராகரித்து, ரூ. 38,407,360 இற்கு இரண்டாவது குறைந்த விலையை சமர்ப்பித்த விலைமனுதாரிக்கு ஒப்பந்தத்தை வழங்கி ரூ. 1,255,335 இழப்பை ஏற்படுத்தியுள்ளது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதுடன், 2023 ஆம் ஆண்டின் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (கொள்ளல்) இன் ஒப்புதலுக்கு உட்பட்டு, சமைத்த உணவிற்கான ஒரு விநியோகத்தரைத் தேர்ந்தெடுப்பதற்காக கொள்முதல் செய்யப்பட்டது எனவும், அதற்காக 04 விலைமனுதாரிகளினால் விலைகள் சமர்ப்பிக்கப்பட்டன எனவும், அதன்படி செலவு, தரம் மற்றும் வைத்தியசாலையில் கடந்த காலங்களில் சமைத்த உணவு வழங்குவது தொடர்பில் அவ்வப்போது தெரிவிக்கப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் மற்றும் சமையலறையினால் வழங்கப்படும் உணவுகளின் தரம் ஆகிய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் கருத்தில் கொண்டு ஒரு வழக்கமான சுற்று உணவிற்கு முதலாம் மற்றும் இரண்டாம் விலைமனுதாரிகளுக்கு இடையேயான 10 முதல் 15 ரூபாய் வரையிலான சிறிய விலை வேறுபாட்டை மட்டும் கருத்தில் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு எடைபோடாது செலவு மற்றும் தரம் போன்ற அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு மிகவும் பொருத்தமான விலைமனுதாரியான இரண்டாவது விலைமனுதாரிக்கு 2023 ஆண்டிற்கான உணவு விநியோகத்தை வழங்குவது பொருத்தமானது என பரிந்துரை செய்துள்ளது எனவும்.

(ஊ)	பேராதனை போதனா வைத்தியசாலையின் எலும்பியல் துறைக்கான சத்திர சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் Pneumatic Trauma Orthopedics Drill System உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக 2023 ஜூலை 13 ஆம் திகதி விலைமனு கோரப்பட்டுள்ளதுடன், குறைந்த விலையான ரூ. 8,512,931 இனை சமர்ப்பித்த விலைமனுதாரி மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டார். தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை 2023 ஆகஸ்ட் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டாலும், கொள்ளல் குழு 35 நாட்கள் தாமத்திற்குப் பிறகு அதாவது 2023 செப்டம்பர் 20 ஆம் திகதியன்று கூடியுள்ளது. 2023 நவம்பர் 22 ஆம் திகதி கொள்ளல் குழு தீர்மானத்தின்படி மீண்டும் விலைமனு கோருவதற்கு தீர்மானம் எடுத்திருந்த போதிலும், 2023 டிசம்பர் 14 ஆம் திகதியாகும் போதும் விலைமனு கோரப்படவில்லை. கொள்ளல் வழிகாட்டுதல்கள் கோவையின் 7.4.1 பிரிவின்படி தேவையான முறையான அனுமதி பெறுவதற்கு போதுமான காலம் வழங்கும் வகையில் விலைமனு மதிப்பீடுகள் கூடிய விரைவில் செய்யப்பட வேண்டும். எனினும், விலைமனு கோரல் 2023 ஜூலை 13 ஆம் திகதி தொடங்கி ஜூலை 28 அன்று விலைமனுக்கள் திறக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை 2023 ஆகஸ்ட் 16 அன்றும் கொள்ளல் குழு அறிக்கை செப்டம்பர் 20 அன்றும் வழங்கப்பட்டிருந்தது. இந்த கொள்முதலின் மதிப்பீட்டு செயல்பாடுகளுக்கு விலைமனுக்கள் திறக்கப்பட்ட பின்னர் கிட்டத்தட்ட 04 மாதங்கள் எடுத்த காரணத்தால் எலும்பியல் சத்திர சிகிச்சைக்குத் தேவையான மேற்படி உபகரணங்களை மதிப்பாய்வு ஆண்டில் கொள்வனவு செய்ய முடியவில்லை.	கொள்ளல் வழிகாட்டுதல்களின் விதிகளுக்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு 4 மாத காலம் எடுத்தமைக்கு விலைமனு மதிப்பீடு செயல்பாடுகள் தாமதித்தமைக்கான காரணம், அதன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவராக செயற்படும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தற்போது 04 வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதால் மற்றும் விஷேட மருத்துவ நிபுணர்கள் நோயாளர்களின் நோய் கண்டறிதல், கிளினிக் நடவடிக்கைகள், சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளல் போன்ற மிகவும் இக்கட்டான சூழ்நிலைமைகளின் மத்தியில் இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் அவர்களின் குறிப்பிட்ட கடமைகளில் இருந்து விலகும் சந்தர்ப்பங்களிலும், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் வைத்தியசாலையில் பணிபுரியும் சந்தர்ப்பங்களில் மட்டுமே குழு கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும், எதிர் காலத்தில் இந்த சிக்கலைக் குறைப்பதன் மூலம் வழிகாட்டுதல்கள் கோவையின் 7:4:1 பிரிவின்படி செயல்படுவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டன எனவும்.
(எ)	பேராதனை போதனா வைத்தியசாலையின் எலும்பியல் துறைக்கான சத்திர சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் Battery Operated Trauma Orthopedic Drill உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக 2023 ஜூலை 13 ஆம் திகதி விலைமனு கோரப்பட்டுள்ளதுடன், இதற்காக 02 நிறுவனங்களினால் விலைமனுக்கள் சமர்ப்பித்துள்ளன. 2023 ஜூலை 28 ஆம் திகதி விலைமனுக்கள் திறக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை 2023 ஆகஸ்ட் 16 ஆம் திகதி	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கான விலைகள் சமர்ப்பிக்கப்பட்ட போது, கட்டளை பிறப்பிக்கப்பட்டு 06 வார காலம் விநியோகத்திற்கு எடுக்கும் என உரிய நிறுவனத்தினால் அறிவித்துள்ளது எனவும், அதன்படி தாமதம் குறித்து

	சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி கொள்ளல் குழுவினால் 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதி ரூ. 14,712,638 இனை குறைந்த விலையை சமர்ப்பித்த விலைமனுதாரியிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்து 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 2024 பெப்ரவரி 28 ஆம் திகதியிலும் இந்த உபகரணம் கொள்வனவு செய்யப்படவில்லை. கொள்ளல் வழிகாட்டுதல்கள் கோவையின் 7.4.1 பிரிவின்பால் கவனம் செலுத்தியிருக்கவில்லை.		வினவிய போது உற்பத்தி செயல்முறையில் ஏற்படும் தாமதம் காரணமாக இந்த உபகரணத்தை வழங்குவதில் தாமதம் ஏற்படும் என்று உற்பத்தி நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் விநியோக காலத்தை 2024.03.30 ஆம் திகதிவரை நீடித்து தருமாறு அந்த நிறுவனத்தினால் கோரியுள்ளது எனவும், அதன்படி 2023.12.08 திகதியிட்ட எனது கடிதத்தில் 2024.03.30 ஆம் திகதிக்கு முன்னர் அந்த உபகரணத்தை வைத்தியசாலைக்கு வழங்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன், 2024.03.30 அன்று அந்த உபகரணம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது எனவும்.
(ஏ)	மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கழிவு பைகள் (Garbage Bags) கொள்வனவு செய்வதல் மற்றும் பயன்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கழிவு பைகள் (Garbage Bags) தேவையை தீர்மானிக்கும் போது மற்றும் 2022 ஆம் ஆண்டில் ரூ. 1,218,892 உம், 2023 இற்கும், ஆண்டில் ரூ. 3,283,766 இற்கும் கழிவு பைகள் (Garbage Bags) கொள்வனவு செய்த போது வைத்தியசாலையில் உள்ள குப்பை தொட்டிகளின் அளவை நிர்ணம் செய்து பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவுகளில் கழிவு பைகள் (Garbage Bags) கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது, பல அளவுகளைக் கொண்ட பைகளை வாங்காமல் நடுத்தர அளவிலான கழிவுத் தொட்டிகளுக்கும் பெரிய கழிவுப் பைகள் பயன்படுத்தப்படடுள்ளதுடன், கணக்காய்வில் பௌதீக ஆய்வு செய்யப்பட்ட 03 வாட்டுகளில் பயன்படுத்தப்படும் நடுத்தர அளவு கழிவுத் தொட்டிகள் 17	பல அளவுகளைக் கொண்ட கழிவு பைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2022 ஆம் ஆண்டில் முறையாக கொள்முதல் நடவடிக்கைகளை பின்பற்றி கழிவுப் பைகள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் மூலப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு காரணமாக மாத்தளை வைத்தியசாலைக்கு கழிவுப் பைகள் வழங்கும் போது விநியோகத்தரினால் ஆடர் செய்யப்பட்ட அளவை விட குறைந்த அளவிலான கழிவுப் பைகள் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டன எனவும், அதனால் மிக

	இற்கு பெரிய அளவிலான கழிவு பைகள் பயன்படுத்தியமை அவதானிக்கப்பட்டது.		குறைந்தளவு கழிவுப் பைகளை பாவிக்க நேரிட்டதாகவும் சில சமயங்களில் கழிவுத் தொட்டிகளின் அளவை பொருட்படுத்தாமல் தமக்கு வழங்கப்பட்ட கழிவு பைகளை சேவை அவசியத்திற்கு ஏற்ப கழிவுத் தொட்டிகளுக்கு இடுவதற்கு ஒவ்வொரு வாட்டுக்கும் பொறுப்பான அலுவலர்க நேரிட்டதாகவும், இருப்பினும், தற்போது முறையான கொள்ளல் செயல்முறைகள் ஊடாக தேவைக்கு ஏற்ப கழிவுப் பைகள் வழங்கப்படுகின்றன எனவும், கழிவுத் தொட்டிகளுக்கு பொருந்தக்கூடிய கழிவுப் பைகள் பயன்படுத்தப்படுவதாகவும், கழிவுத் தொட்டிகளின் எண்ணிக்கையும் தேவைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது எனவும்.
	ii. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கொள்ளல் வழிகாட்டல்கள் கோவை – 2006 இன் 8.9.1 இன் விதிமுறைகளுக்கு அமைய ரூ. 500,000 இற்கு மேற்பட்ட பொருள் அல்லது சேவை ஒப்பந்ததிற்கு முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கையொப்பமிட வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஜூன் 30 வரையிலான காலப்பகுதியில் 2022 பெப்ரவரி 27, 2022 ஜூலை 26 மற்றும் 2023 மார்ச் 16 ஆகிய 03 சந்தர்ப்பங்களில் விலைமனுக்கள் கோரப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தரிடமிருந்து ரூ. 2,979,670 இற்கும், ரூ. 2,707,737 இற்கும் மற்றும் ரூ. 3,288,670 இற்கும் கழிவு பைகள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டினுள் ரூ. 1,218,892 இற்கும் மற்றும் 2023 ஆம் ஆண்டினுள் ரூ. 3,283,766 இற்குமான கழிவு பைகளுக்கான (Garbage Bags) கொள்வனவு செயல்பாடுகள் ஒருபோதும் மேற்கூறியவாறு ஒப்பந்தம் செய்யப்படவில்லை.	கொள்ளல் வழிகாட்டுதல்களின் விதிகளுக்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான கொள்முதல் பணிகள் 500,000 ரூபா மதிப்பை 2022 ஆம் ஆண்டில் தாண்டியதால் விநியோகத்தரிடையே ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை என்பதுடன், கொள்ளல் வழிகாட்டல்கள் கோவையின்படி ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்த விடயங்களை ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும்.

	iii. 2022 ஆம் ஆண்டின் முதலாவது ஒப்பந்தம் வழங்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தரினால் விலைகளை சமர்ப்பித்த விலைமனு ஆவணங்களின்படி இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கழிவு பைகள் (Garbage Bags) விநியோகிக்கவில்லை என வைத்தியசாலையின் பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பொறுப்பு மருத்துவ அதிகாரியின் 2022 ஜுலை 26 ஆம் திகதிய கடிதத்தின்படி அவதானிக்கப்பட்டது என்பதுடன், அவ்வாறு ஒப்பந்த செயற்திறன் தோல்வியுற்றால், கொள்ளல் வழிகாட்டுதல்கள் கோவையின் 5.4.10 இன்படி கொள்முதலின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்த தொகையின் 10 சதவீதத்திற்கும் குறையாத செயற்திறன் பாதுகாப்பினை பெற்றிருக்கவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத நிதி நெருக்கடி காரணமாக கழிவு பைகளுக்கான ஆடர்கள் அனுப்பப்பட்ட போதிலும், விலைமனு ஆவணங்களில் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளின்படி ஒப்பந்ததாரரினால் கழிவுப் பைகளை வழங்கத் தவறியது எனவும், முந்தைய ஆண்டுகளில் கழிவுப் பைகள் வழங்கிய போது எவ்வித பிரச்சனைகளும் இன்றி விநியோகத்தரினால் வழங்கப்பட்டுள்ளதால் செயற்திறன் பாதுகாப்பு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும்,
	iv. 2022 பெப்ரவரி 27 ஆம் திகதி விலைமனுக்கோரலுக்கான 2022 மார்ச் 10 ஆம் திகதிய கொள்ளல் தீர்மானம் மற்றும் 2022 மார்ச் 15 ஆம் திகதிய கொள்ளல் ஒப்புதல் அறிவித்தல் கடிதத்தின்படி தேரிந்தெடுக்கப்பட்ட விநியோகத்தருக்கு வைத்தியசாலையின் வருட தேவையான 220,320 கழிவு பைகளை (Garbage Bags) கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மற்றும் விலைகள் சமர்ப்பிக்கும் விலைமனு ஆவணத்தின்படி அந்த முழு கட்டளை பிறப்பிக்கப்பட்டவற்றில் முதல் தொகையை பொருளுக்கான கட்டளை செய்யப்பட்ட தினத்தில் இருந்து ஒரு மாத காலத்திலும், இரண்டாவது தொகையை ஜுன் மாதத்தினுள் என இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்ட போதிலும், அவ்வாறு கழிவு பைகளை (Garbage Bags) பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 55,800 பைகளை மாத்திரம் பெற்றுக்கொண்டு, 2022 ஜுலை 26 ஆம் திகதி மீண்டும் விலைமனுக்கள் கோரப்பட்டு முன்னர் இணங்கிய விலைகளை விடவும் அதிக விலைகளின் கீழ் முந்தைய அதே விநியோகத்தருக்கு 2022 ஆகஸ்ட் 23 ஆம் திகதி மீண்டும் ஒப்பந்தம் வழங்கப்பட்டு கொள்வனவு செய்த	இது தொடர்பாக விசாரணை நடாத்தி பொறுப்பானவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குகிறேன். வருடாந்த தேவையை வழங்க ஒப்பந்ததாரர் இணங்கிய போதிலும், 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக தொடர்ச்சியாக வைத்தியசாலைக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டவை கிடைக்கப்பெறவில்லை எனவும், நாங்கள் தொடர்ச்சியாக வினவியபோது, இறக்குமதி கட்டுப்பாடு காரணமாக மூலப் பொருட்களின் விலை ஏற்றம் காரணமாக அந்த விலைக்கு வழங்க முடியாது என விநியோகித்தரினால் அறிவிக்கப்பட்டது எனவும், இரண்டாவது விநியோகத்தரும் சமர்ப்பித்த விலையில் கழிவு பைகளை வழங்க முடியாது என தொலைபேசி மூலம் உறுதிப்படுத்தியதால், வைத்தியசாலையில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க கழிவு முகாமைத்துவம் அவசியம் என்பதால் இப்பிரச்சனைக்குத்

	காரணத்தால் அரசாங்கத்திற்கு ரூ. 164,954 இழப்பு ஏற்பட்டுள்ளது.		தீர்வாக மீண்டும் விலைமனு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது எனவும், சேவையின் அவசர நிலை காரணமாக தொலைபேசி உரையாடல்களின் எழுத்துமூல சான்றுகளை வைத்திருக்க தவறியமை வைத்தியசாலையினால் ஏற்பட்ட குறைபாடு என்பதை ஒப்புக்கொள்வதுடன், எதிர்காலத்தில் எல்லா சந்தர்ப்பங்களிலும் எழுத்துமூல சான்றுகளை வைத்திருக்கும்படி விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது எனவும்.
	v. சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட சுகாதாரக் கழிவு முகாமைத்துவ பயிற்சி மொடியுலரின்படி கொள்வனவு செய்யப்பட்ட கழிவுப் கைகள் (Garbage Bags) உரிய தரத்தில் (Microns/Gauge) உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு விநியோகத்தரிடமிருந்து தரச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், அத்தகைய தர உத்தரவாத சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என டெண்டர் ஆவணங்களில் எந்த நிபந்தனைகளும் சேர்க்கப்படவில்லை. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினாலும் தரச் சான்றிதழ் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும், 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 23 A இன்கீழ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நிறுவனங்களின் பெயர் பட்டியலைகாட்டும் 2022 ஜனவரி 27 ஆம் திகதிய 2264/18 எனும் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பகுதி B இன்படி பொலித்தீன் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (Environment Protection Licence) பெற்றிருக்க வேண்டும். எனினும் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தர் / அவர் விநியோகிக்கும் கழிவுப் கைகளுக்கு (Garbage Bags) அத்தகைய சுற்றுச்சூழல்	-அவ்வாறே-	கழிவு பைகளுக்கான விலைமனு கோரல் கடிதத்தில் கழிவு பைகள் கொள்வனவு செய்யும் போது அந்த பைகளின் தரச் சான்றுகளின் விபரங்கள், உரிய மைக்ரோன் தொடர்பான இணக்கச் சான்றிதழ்கள், உற்பத்தியாளரின் தகுதி விபரங்கள், மூலப்பொருட்களின் தரம் பற்றிய விபரங்கள் என்பவற்றை குறிப்பிட வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்ற நிபந்தனைகள் உள்ளடக்கப் பட்டுள்ளன எனவும், கழிவு பைகள் பொது களஞ்சியத்திற்கு பெறுவதற்கு முன் பொது சுகாதார பரிசோதகரினால் அவை மாத்தளை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பப்பட்டு கழிவுப் பைகளின் தடிப்பு பரிசோதிக்கப்படும் எனவும், பொலித்தீன் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், எங்கள் தற்போதைய விநியோகத்தர் பொலித்தீன்

	பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் உள்ளதா என்பது பரிசீலிக்கப்படவில்லை.		உற்பத்திகளை பெறும் நிறுவனத்தின் உற்பத்திகளுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுள்ளது எனவும்.
	vi. கொள்ளல் தீர்மான இலக்கங்களை தொடர் இலக்கமிட்டு பதிவு செய்வதற்கான முறையான கொள்முதல் தீர்மான ஆவணம் மாத்தளை பொது வைத்தியசாலையினால் பராமரிக்கப்படவில்லை என்பதுடன், தீர்மான அறிக்கையில் வைத்தியசாலை பணிப்பாளரின் கையொப்பம் பெறுவதற்காக மாத்திரம் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டுள்ளது. எனினும், அதிலும் இலக்கமிட்ட முறை தெளிவற்றதாக இருந்தது. வைத்தியசாலையின் முக்கிய கொள்முதல் பணிகளுக்காக தனித்தனி கோவைகள் பராமரிக்காமல் ஒரே கோவையில் பல கொள்முதல் பணிகள் தொடர்பான ஆவணங்கள் கோவையிட்டுள்ளமை மற்றும் கொள்முதல் கோவையின் பக்கங்களுக்கு இலக்கமிடப்படாமை போன்ற காரணங்களால் கொள்முதல் கோவைகளின் பராமரிப்பும் முறையற்றதாக இருந்தன.	இந்த நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கொள்ளல் தீர்மானங்களை இலக்கமிட்டு பதிவதற்கு முறையான கொள்ளல் தீர்மான பதிவேடு தற்போது பராமரிக்கப்படுகிறது எனவும், முக்கிய கொள்முதல் பணிகளுக்காக தனித்தனி பதிவேடுகள் முறையாக பக்க இலக்கமிடப்பட்டு தற்போது பராமரிக்கப்படுகின்றன எனவும்.
	vii. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட கழிவுப் பைகள் (Garbage Bags) மாதிரிகள் எவையும் களஞ்சியத்திற்கு வழங்கியிருக்கவில்லை. அதன்படி, வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகள் உள்ள கழிவுப் பைகள் வழங்கப்படுகிறதா என்பதைக் கண்டறிவதற்கான முறைகள் இருக்கவில்லை என்பதும், கழிவுப் பைகள் 100 மற்றும் 50 என பொதியிடப்பட்ட பொதிகளில் விநியோகத்தரின் பெயர், உற்பத்தி நிறுவன Gauge, Microns போன்ற பதிவுகள் எவையும் இருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிலும் மற்றும் 2023 ஜூன் 30 வரையிலும் கழிவுப் பைகள் 94,774 இனை களஞ்சியத்திற்கு வழங்கும் போது நிறம் மற்றும் அளவுகள் என்பவற்றுக்கு ஏற்ப தனித்தனியாக கண்டறிய கூடியவாறு பதியாமல் ஒரே நேரத்தில் பெறப்பட்ட பைகளின் எண்ணிக்கை பதிவேடுகளில் பதியப்பட்டு வழங்கப்படுவதால் ஒவ்வொரு நிறங்கள் மற்றும் அளவுகளில் இருந்த பௌதீக இருப்புகள்	நிதி ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தரினால் சமர்ப்பித்த கழிவுப் பைகள் வைத்தியசாலையின் பொது சுகாதார பரிசோதகர் மற்றும் தொற்று கட்டுப்பாட்டு தாதி உத்தியோகத்தர் ஆகியோரினால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் உரிய மாதிரிகள் பொது சுகாதார பரிசோதகருக்கு கொடுக்கப்பட்டது எனவும், களஞ்சிய உத்தியோகத்தருக்கு கொடுக்கவில்லை எனவும், கழிவுப் பைகள் 100 மற்றும் 50 என பொதியிடப்பட்ட பொதிகளில் விநியோகத்தரின் பெயர், தடிப்பு போன்ற விபரங்கள் பதிவு செய்யப்பட்ட லேபல்களுடன் வழங்குமாறு விநியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது

	இருப்பு பதிவேட்டின்படி கண்டறிய முடியவில்லை. எனவே இங்கு இருப்பு கையாளுதல் பலவீன நிலையில் காணப்பட்டது என்பதும் நிதி ஒழுங்குவிதிகள் 751(4) இனை பின்பற்றவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.		எனவும், 2022 ஆம் ஆண்டில் இந்த வைத்தியசாலையின் பொது களஞ்சியம் ஒரு சிறிய இடத்தில் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் ஒரேயொரு உத்தியோகத்தரினால் பராமரிக்கப்பட்டது எனவும், தற்போது ஒரு புதிய களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டு வரும் நிலையில் போதியளவு உத்தியோகத்தர்கள் வைத்தியசாலைக்கு நியமனம் பெற்றுள்ளதால் தற்போது இரு உத்தியோகத்தர்கள் அதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், அதன்படி எதிர்காலத்தில் நிறம் மற்றும் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய வகையில் பௌதீக இருப்பு பதிவேடு பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ஐ)	மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையினால் மருந்து கவர்கள் கொள்வனவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.		
	i. மாத்தளை மாட்ட பொது வைத்தியசாலையின் அத்தியவசிய சுகாதார சேவைகளை பராமரிப்பதற்கு தேவையான மருந்து கவர்கள் 500,000 வீதம் கொள்வனவு செய்வதற்கு 2 சந்தர்ப்பங்களில் விலைகள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடம் இருந்து 2023 ஆண்டில் மற்றும் 2024 ஜனவரி 22 வரை முறையே 986,400 மருந்து கவர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும், மருந்து கவர்கள் வழங்கப்பட வேண்டிய காலம் மற்றும் ஒரு தடவையில் வழங்கப்பட வேண்டிய கவர்களின் எண்ணிக்கை என்பன குறித்து எழுத்துமூல ஒப்பந்தம் இல்லாததால் அவ்வப்போது 1000 – 72100 வரை பல்வேறு அளவுகளில் 2024 ஜனவரி 22 வரை 27 சந்தர்ப்பங்களில்	இந்த செயல்பாடுகள் முறையான திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், மருந்து கவர்களை கொள்வனவு செய்வதற்காக முந்தைய விநியோகத்தர் முறையான கொள்ளல் செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும்,தேவையான அளவில் மருந்து கவர்களை வழங்க இயலாமையால் சில சிக்கல் சூழ்நிலைகள் ஏற்பட்டது எனவும், ஆனால் தற்போது முறையான கொள்முதல் செயல்முறையின் ஊடாக 2024/03/18 புதிய விநியோகத்தர் தெரிவு செய்யப்பட்டு 2024/03/19 ஆம் திகதி மருந்து கவர்கள் ஆடர் செய்யப்பட்டு

	கவர்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வழங்கப்பட்ட அதே தொகையை அதே வேளையில் மருந்தகங்களுக்கு வழங்கவேண்டியிருப்பதால் களஞ்சியத்தில் தினசரி சாதாரண இருப்பு அளவை பராமரிக்க முடியவில்லை என்பதும், 2023 மே 31 ஆம் திகதி முதல் 2023 செப்டம்பர் 22 வரை 03 ½ மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திலும், மீண்டும் 2024 மார்ச் 20 நிலவரப்படி மருந்து கவர்கள் களஞ்சியத்திற்கு கிடைக்காததால், வைத்தியசாலை மருந்தகங்களில் மருந்து கவர்கள் தீர்ந்துவிட்ட காரணத்தால் நோயாளர்களுக்கான மருந்துகள் கடதாசி துண்டுகளில் சுற்றப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.		2024/04/19 ஆம் திகதி தேவையான மருந்து கவர்கள் 15 இலட்சம் வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இது 2024 இறுதிவரை போதுமானது எனவும்.
	ii. வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மருந்தகத்திற்கு மட்டும் நாளொன்றுக்கு சுமார் 3,000 மருந்து கவர்கள் தேவைப்படுவது அவதானிக்கப்பட்டதுடன், இரண்டு மருந்தகங்களுக்கான வருடாந்த தேவையை முறையாக கண்டறிந்து கொள்ளல் செயல்முறைகளை மேற்கொள்ளாமை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தருக்கு உரிய விலைகளை ஏற்றுக்கொண்டதை குறிக்கும் ஏற்பு கடிதத்துடன் உரிய பொருட்கள் வழங்கப்பட வேண்டிய திகதி அல்லது கால எல்லை மற்றும் ஒரு தடவைக்கு தேவையான தொகையைக் குறிப்பிடப்படும் அல்ல துவேறு எழுத்துபூர்வ இணக்கப்பாடுகள் இல்லாததால் கவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் சிறுகட்டு நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், 2023 ஆம் ஆண்டுக்காக 7 விநியோகத்தர்களும், 2024 ஆம் ஆண்டுக்காக 8 விநியோகத்தர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும்.
(ஒ)	சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆய்வுகூட சேவை) இன் 2023 ஒக்டோபர் 04 ஆம் திகதிய D/LS/LAW/01/2022-46-A எனும் கடிதத்தின் மூலம் பெறப்பட்ட அனுமதியின் அடிப்படையில் மாத்தளை மாட்ட பொது வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்காக Fully Automated 5 Part Hematology Analyzer இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக ரூ. 100,970 இனை செலவு செய்து 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதியன்று மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்ட பத்திரிகை	கொள்ளல் வழிகாட்டுதல்களின் விதிகளுக்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆய்வுகூட சேவை) இனால் 5 Part Hematology Analyzer இனை கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு செயற்பாடுகள் 2023/12/14 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்து ஒதுக்கீடுகள் கோரப்பட

	விளம்பரத்தில் 2023 ஒக்டோபர் 13 முதல் 2023 ஒக்டோபர் 26 வரை ஏல அழைப்புக் கடிதங்களை பெறலாம் என்றும், 2023 ஒக்டோபர் 26 ஆம் திகதி மு.ப 11.30 அல்லது அதற்கு முன்னர் விலைமனுக்கள் சமர்ப்பிக்க வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கொள்ளல் வழிகாட்டல் கோவையின் பிரிவு 6.2.2 இன்படி தேசிய போட்டியுடனான விலைமனு கோரலின் குறைந்தபட்ச காலமான 21 நாட்கள் என்பதற்கு மாறாக ஏல ஆவணங்களைப் பெறுவதற்கு 13 நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பின்னர் ஏல ஆவணங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2023 ஒக்டோபர் 31 என திருத்தப்பட்டு மீண்டும் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டதால் அதற்காக செலவிடப்பட்ட ரூ. 36,570 தேவையற்ற செலவு என்பது அவதானிக்கப்பட்டது.		வேண்டும் என 2023/10/04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த Analyzer இயந்திரம் கொள்வனவு செயல்முறை மிக விரைவாக செய்யப்பட வேண்டும் என்பதால் கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரல் 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதி பத்திரிகை விளம்பரம் ஊடாக திறந்த விலைமனுக்கள் கோரப்பட்டன என்றும் விலைமனுக்கள் கோரப்படும் போது அனைத்து விவரக் குறிப்புகளையும் உள்ளடக்கி ஏல ஆவணங்கள் தயாரிக்கும் பணி நிறைவடையவில்லை என்றும், கொள்முதல் ஏற்ற இறக்கங்கள் ஊடாக விவரக்குறிப்புகள் தயாரித்து, இந்த வைத்தியசாலையின் பதிலாளராக நியமிக்கப்பட்டுள்ள பேராதனை போதனா வைத்தியசாலையின் உயிரியல் பொறியியலாளர் அடங்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையைப் பெறுவதற்கு சில நாட்கள் எடுக்கும் என்பதால் உரிய ஏல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பின்னர் 2023/10/13 ஆம் திகதி முதல் ஏல ஆவணங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, உரிய கொள்முதல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், 14 நாட்களுக்குள் விலைமனுக்கள் திறப்பதற்கு அனுமதித்தமை வைத்தியசாலையின் தவறு என்றும், இனி மேல் இது போன்ற தவறுகளைத் தடுக்க சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், விலைமனுதாரியின் வேண்டுகோளின்படி, 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதி ஏலத்திற்கு முந்தைய கூட்டம் நடத்தப்பட்டது என்றும், அங்கு

			விவரக்குறிப்புகளில் பல திருத்தங்கள் செய்யப்பட்டதுடன், விலைமனுதாரியின் வேண்டுகோளின்படி திருத்தப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப விலைகள் சமர்ப்பிப்பதற்காக விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2023/10/31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது என்றும், அதனை உடனடியாக விலைமனுதாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதாலும் மற்றும் முதலாவது விலைமனு கோரல் பத்திரிகை மூலம் மேற்கொள்ளப் பட்டதாலும், இதுவரை விலைமனு ஆவணங்களை வாங்காத விலைமனுதாரிகளுக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்பதாலும் இந்த விலைமனு கோரலுக்கான இறுதித்திகதி நீடிக்கப்பட்டமை தொடர்பான தகவல் பத்திரிகை அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டது எனவும்.
(ஒ)	கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த உலர் உணவுத் தேவை புதிய காய்கறிகள் மற்றும் பழங்கள், உலர் உணவுப் பொருட்கள், பேக்கரி தயாரிப்புகள், பொதி செய்யப்பட்ட உணவுகள் மற்றும் முட்டை, கோழி இறைச்சி என 05 வகைகளின் கீழ் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், தேசிய போட்டியுடனான விலைமனுக் கோரலின் கீழ் தனித்தனியாக விலைமனுக்கள் கோரப்பட்டுள்ள போதிலும் பேக்கரி தயாரிப்புகள் தவிர ஏனைய நான்கு உணவுப் பிரிவுகளுக்கு இரண்டு விலைமனுதாரிகளும், பேக்கரி தயாரிப்புகளுக்கு ஒரு விலைமனுதாரியும் மேற்படி விலைமனு கோரலுக்கு விலைமனுக்களை சமர்ப்பித்துள்ளனர். அங்கு சமர்ப்பிக்கப்பட்ட குறைந்த விலைகள் கொண்ட விலைமனு மதிப்பை விட 51 மில்லியன் ரூபா அதிக விலையில் மேற்படி ஒப்பந்தம் வழங்கப்பட்டள்ளதுடன், குறைந்த விலையை சமர்ப்பித்த விலைமனுதாரி திருப்திகரமான சேவையை வழங்காமை மற்றும்		

	அந்த நிறுவனம் நிதி ஸ்திரத்தன்மையில் திருப்தி அடையாததே இதற்கு காரணம் என அமைச்சின் கொள்ளல் B குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்த காலம் 2022 டிசம்பர் 31 இல் முடிவடைய இருந்த போதிலும் அந்த ஒப்பந்த காலம் 2023 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. 2022 ஆம் ஆண்டின் வைத்தியசாலையின் நிகர் உலர் உணவுப் பொருட்களின் பயன்பாடு அதன் மதிப்பீட்டில் 32 சதவீதமாக இருந்தமையானது, அந்த மதிப்பீட்டில் 68 சதவீதம் அதாவது 250 மில்லியன் ரூபா மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உணவு வகுதி மட்டத்தில் கருதும் போது வைத்தியசாலையின் நிகர் உலர் உணவுப் பொருட்களின் பயன்பாடு அதன் மதிப்பீட்டில் 6.5 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை குறைந்த வரம்பிலும், உலர் உணவுப் பொருட்களின் பொருள் மட்டத்தில் கருதும் போது உலர் உணவு வகுதி 4 இன் கீழ் 93 உலர் உணவுப் பொருட்களில் 73 உலர் உணவுப் பொருட்களின் நிகர் பயன்பாடு 50 சதவீதத்திற்கும் குறைவாக காணப்பட்டது. மேலும், ரூ. 1,196,040 மதிப்புள்ள 12 பொருட்கள் ஒருபோதும் கொள்வனவு செய்யப்படவில்லை என்பதும், சிவப்பு பச்சை அரிசி, நாட்டரிசி, பயறு, வெள்ளை கௌபி மற்றும் கடலை போன்ற ஐந்து உலர் உணவுப் பொருட்களுக்கு மட்டும் அதிக மதிப்பீடாக மொத்த மதிப்பீட்டில் 40 சதவீத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும்.	இணங்குவதாகவும், இது தொடர்பாக முழுமையான அறிவுறுத்தல்கள் துரிதமாக ஒப்பந்ததாரருக்கு எழுத்துமூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	ii. இவ்வாறு வைத்தியசாலைக்கான உலர் உணவுப் பொருட்களுக்கான தேவையை 68 சதவீதம் மிகைப்படுத்தி மதிப்பிடுவதால் விலைமனுதாரிகளினால் வழங்கப்பட வேண்டிய செயற்திறன் பிணை மதிப்பு நிகர் உலர் உணவுப் பொருட்களின் மதிப்பில் 25 சதவீதம் முதல் 152 சதவீதம் வரை கூடுதல் வரம்பில் இருந்தது எனவும், இதனால் திறன்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு கொள்வனவிற்கு பங்கேற்பதற்கான ஊக்கம் இழக்கப்படுகிறது என்பதும், போட்டியுடனான	-அவ்வாறே-	இணங்குவதாகவும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் அந்த குழுவினால் முன்வைக்கப்பட்ட விலைகளின் நியாயத்தன்மை மீள்மதிப்பீடு செய்யப்படும் என்றும், அவ்வாறே எதிர்காலத்தில் செய்யப்படும் கொள்முதலின் போது கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு

	குறைந்த விலைகளின் கீழ் உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட குறைந்த விலை கொண்ட ஏல மதிப்பை விட 51 மில்லியன் ரூபாவிற்கும் அதிக மதிப்பில் உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் வைத்தியசாலை இருந்தது என்பதும், இவ்வாறு பல ஆண்டுகளாக உலர் உணவுப் பொருட்களுக்கான தேவையை மிகைப்படுத்தி மதிப்பிடுவதால் 2023 ஆம் ஆண்டில் கொள்வனவிற்காக முன்னிலையான விலைமனுதாரிகளின் எண்ணிக்கை 1 ஆக குறைவடைந்துள்ளது எனவும், உலர் உணவுப் பொருட்களுக்கான உண்மையான தேவையை சரியாகக் கண்டறிந்து, யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டால் பேக்கரி தயாரிப்புகள், முட்டை மற்றும் கோழி இறைச்சி வழங்குதல் போன்றவை பிராந்திய விலைமனு கோரலின் கீழ் கொள்முதல் செய்ய முடியும் என்பதும் அவதானிக்கப்பட்டது.		விலை மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	iii. இந்த கொள்முதல் தொடர்பாக, உலர் உணவுப் பொருட்களின் ஒரு அலகிற்கான விலை 2021 ஒக்டோபர் 05 ஆம் திகதி விலைக் குழு அறிக்கையின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அந்த விலைக் குழு அறிக்கையில் ஒரு அலகிற்கான விலை எவ்வாறு கணக்கிடப்பட்டது என்ற தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. கணக்காய்வில் மொத்த விலையை மட்டுமன்றி சில்லறை விலையையும் கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்ட சராசரி விலையுடன் ஒப்பிடுகையில் ஒரு அலகிற்கான மதிப்பீட்டு விலை 1 சதவீதம் முதல் 118 சதவீதம் வரை மிகை மதிப்பீடு செய்யப்பட்டதால் உலர் உணவுப் பொருட்களின் கொள்முதல் மொத்த செலவு மதிப்பீடு மீண்டும் மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும், விலைமனுவினூடாக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அலகிற்கான விலைகள் மதிப்பிடுவதற்கு உண்மைக்கு புறம்பான மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும்.

	iv. அதன்படி, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் நி.ஒ 50 இன்படி சிக்கனம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மதிப்பீடுகளை முடிந்தவரை முழுமையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கும் பொறுப்பு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு இருந்த போதிலும், வைத்தியசாலை உலர் உணவுப் பொருட்களைள் இவ்வாறு மதிப்பீடு செய்ய வைத்தியசாலை நிர்வாகம் தவறியுள்ளது.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும்.
	v. 2022 ஆம் ஆண்டில் பொதியிடப்பட்ட உணவுகளை விநியோகிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனம் 2022 ஜூன் 03 ஆம் திகதி முதல் ஒப்பந்தத்தை கைவிட்டுள்ளதுடன் விநியோகத்தரிடமிருந்து பெறவேண்டிய ரூ. 7,968,138 இற்கான செயற்திறன் பிணையும் பெறப்படாத காரணத்தால் ஒப்பந்தம் கைவிட்டப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை குறைக்கமுடியவில்லை.	-அவ்வாறே-	இணங்குவதாகவும்.
	vi. நாட்டில் நிலவிய பணவீக்க நிலைமையைக் கருத்தில் கொண்டு 2022 ஜூலை மாதம் வரை 08 சந்தர்ப்பங்களில் ஒப்பந்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு அதிகரிக்கப்பட்ட விலைகளுக்கு மேலும் 10 சதவீதம் எரிபொருள் மற்றும் இதர பொது செலவுகளின் அதிகரிப்புக்காக ஒவ்வொரு பொருளின் அலகு விலைக்கு சரி செய்யப்பட்டு விநியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு 2022 ஆகஸ்ட் மாதம் 04 வகை உலர் உணவுப் பொருட்களுக்கு மட்டுமே விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய உலர் உணவுப் பொருட்களுக்காக 2022 ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட விலை உயர்வு 2022 டிசம்பர் 31 வரை அமுல்படுத்தப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன.		
	➢ அடிக்கடி விலை அதிகரிப்பு வழங்கும் போது அதற்கு அடிப்படையான விலைகள் பெறப்படும் சந்தை ஆதாரங்கள் காரணம் கூறாமல் மாற்றுவதன் மூலம்	-அவ்வாறே-	பதில் எதுவும் வழங்கவில்லை.

	மற்றும் விநியோகத்தர்கள் மொத்தமாக வாங்கும் உலர் உணவுப் பொருட்களுக்கான விலை உயர்வுகளை வழங்கும் போது சில்லறை விலையும் கணக்கில் கொள்ளப்பட்டதால், உலர் உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கு நிலையற்ற மற்றும் நியாயமான வழிமுறைகளை சுகாதார அமைச்சின் கொள்ளல் குழு பின்பற்றவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
	➢ ஒப்பந்தம் மற்றும் ஏல நிபந்தனைகளின்படி, தொடர்ந்து உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு, சம்பந்தப்பட்ட மாவட்டத்தினுள் அல்லது சம்பந்தப்பட்ட வைத்தியசாலையில் இருந்து 20 கி.மீட்டருக்கு உட்பட்ட தொலைவில் உணவுக் களஞ்சியம் பராமரிக்க வேண்டிய சூழ்நிலையில், ஒரு கிலோ கிறாம் உலர் உணவுப் பொருட்களை ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு எடுத்துச் செல்வதற்கான செலவை கணக்கிடாமல் உலர் உணவுப் பொருளின் விலையில் 10 சதவீதம் கூடுதலாக சேர்க்கப்பட்டு விநியோகத்தருக்கு செலுத்தப்பட்டதன் காரணமாக 2022 ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 6 மாத காலத்தினுள் எரிபொருள் மற்றும் இதர பொது செலவுகளுக்காக விநியோகத்தர்களுக்கு ரூ.11,165,539 இனை அதாவது நாளொன்றுக்கு சுமார் ரூ.60,682 செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, முறையான ஆய்வு நடாத்தப்பட்டு எரிபொருள் மற்றும் இதர பொது விடயங்களுக்கான செலவுகள் அதிகரிப்பிற்காக விநியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ள அதிகப்படியான தொகையை கணக்கிட்டு விநியோகத்தரிடமிருந்து அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	பதில் எதுவும் வழங்கவில்லை.
	➢ விலைமனு சமர்ப்பிக்கும் போது ஒரு விலைமனுதாரி 61 உலர் உணவுப் பொருட்களுக்கு மதிப்பிடப்பட்ட ஒரு	-அவ்வாறே-	பதில் எதுவும் வழங்கவில்லை.

	அலகிற்கான விலையுடன் ஒப்பிடும் போது 50 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை பரந்த அளவிலான குறைந்த விலையும், 20 வகையான உலர் உணவுப் பொருட்களுக்கு 50 சதவீதத்தையும் விட குறைவான விலையும் சமர்ப்பித்து கொள்ளல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டாலும் உலர் உணவுப் பொருட்களுக்காக மேற்படி விலை குறைப்பு சதவீதம், விலை உயர்வு வழங்கப்பட்ட 9 சந்தர்ப்பங்களிலும் கவனத்தில் கொள்ளாததால் விலை உயர்வு அசல் கொள்ளல் தீர்மானத்திற்கு ஏற்ப இருக்கவில்லை. அதன்படி, விநியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ள அதிகப்படியான தொகையை கணக்கிட்டு விநியோகத்தரிடமிருந்து அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.		
	➢ 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில், சராசரி விலை மட்டம் அதிகரித்த போது 9 சந்தர்ப்பங்களில் விலை அதிகரிக்கப்பட்டு விநியோகத்தருக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டில் இறுதியில் உலர் உணவுப் பொருட்களின் சராசரி விலை மட்டம் குறையும் போது அதனை அரசாங்கத்திற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள சுகாதார அமைச்சின் கொள்ளல் குழு “B” செயற்படவில்லை. அதன்படி, 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து உலர் உணவுப் பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக ஆய்வின் போது இலங்கை மத்திய வங்கியின் மாதாந்த அறிக்கையின்படி புறக்கோட்டை சில்லறை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ரூ. 6,962,732 இனை கூடுதலாக விநியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இந்த மேலதிக கொடுப்பனவு புறக்கோட்டை மொத்த விற்பனை விலையுடன் ஒப்பிடுகையில் இதை விடவும்	-அவ்வாறே-	பதில் எதுவும் வழங்கவில்லை.

	அதிகமாக இருக்கலாம் என்பதுடன், இந்த கணக்கீடு ஐந்து உலர் உணவுப் பொருட்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், மேற்படி காலப்பகுதியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து உலர் உணவுப் பொருட்களுக்கும் இவ்வாறு கூடுதல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து விநியோகத்தரிடமிருந்து அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.		
	➢ இவ்வாறு உலர் உணவுப் பொருட்களின் சந்தை விலை மட்டம் குறையும் போது அதனை அரசாங்கத்திற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளாததால் விநியோகத்தர்கள் அதிக இலாபம் ஈட்டுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதுடன், கீழே குறிப்பிட்டுள்ள முறைக்கேடுகளும் சாத்தியமாகலாம். உதாரணமாக- 2022 ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை, 1 கிலோ மைசூர் பருப்பில் விநியோகத்தர் பெற்ற இலாபம் ரூ.17 முதல் 224 அதிகரிப்புடன் இலங்கை தேசிய வைத்தியசாலையின் 2022 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களில் 2444 கிலோவாக இருந்த மைசூர் பருப்பு நுகர்வு 6228 கிலோ வரை அசாதாரணமாக மதிப்பீடு செய்து மாதாந்த மைசூர் பருப்பு தேவையை விட அதிகமாக கொள்வனவு செய்துள்ளது. அது குறித்து மேலும் ஆராய்ந்த போது, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களின உணவு போஷாக்கு திட்டம் 2022 ஆம் ஆண்டில் மாற்றப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	பதில் எதுவும் வழங்கவில்லை.
	vii. 2022 செப்டம்பர் முதல் 2022 டிசம்பர் ஆகும் போது உலர் உணவுப் பொருட்களின் சந்தை விலை படிப்படியாக வீழ்ச்சியடைவது அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறே விலை	-அவ்வாறே-	பதில் எதுவும் வழங்கவில்லை.

	வீழ்ச்சி 2023 இன் முதல் 03 மாதங்களிலும் அவதானிக்கப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தின் காலத்தை 2022 டிசம்பர் 31 இன் பின்னர் 3 மாதங்கள் அதாவது 2023 மார்ச் 31 வரை நீடிக்கும் போது இவ்வாறு விலை வீழ்ச்சி தொடர்பில் அவதானம் செலுத்தாமல் ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து உலர் உணவுப் பொருட்களுக்கும் புதிய விலைகள் சுகாதார அமைச்சின் கொள்ளல் குழு "B" இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 05 உலர் உணவுப் பொருட்களை மாதிரியாக எடுத்து பரிசோதித்ததில், 2022 டிசம்பர் 27 நிலவரப்படி புறக்கோட்டை சில்லறை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒரு அலகிற்கு 23 ரூபா முதல் 117 ரூபா இலாபம் பெறும் வகையில் புதிய விலை தீர்மானிக்கப்பட்டு விநியோகத்தருக்கு மேற்குறித்த 05 உலர் உணவுப் பொருட்களுக்குமாக செலுத்தியுள்ளது எனவும், 2023 மார்ச் 31 நிலவரப்படி, ஒரு அலகிற்காக பெற்ற இலாபம் ரூபா 31 முதல் ரூபா 156 வரை உயர்ந்துள்ளது எனவும், அதன்படி, மேற்படி 05 உலர் உணவுப் பொருட்களுக்கும் 2023 ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை புறக்கோட்டை சில்லறை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ரூபா 5,169,068 இனை விநியோகத்தருக்கு கூடுதலாக செலுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த கணக்கீடு ஐந்து உலர் உணவுப் பொருட்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், மேற்படி காலப்பகுதியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து உலர் உணவுப் பொருட்களுக்கும் இவ்வாறு கூடுதல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதா என்பதை சரிபார்த்து விநியோகத்தரிடமிருந்து அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.		
(ஒள)	கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளில் இருந்து சலவை செய்வதற்காக கொடுக்கப்படும் அழுக்குத் துணிகளைப் பெற்று, அவற்றை வகைப்படுத்தி சலவை பிரிவிற்கு ஒப்படைத்தல் மற்றும் துணிகளை அழுத்தும் பிரிவிலிருந்து கிடைக்கப்பெறும் துணிகளை மீண்டும் வகைப்படுத்தி உரிய பிரிவிற்கு அனுப்புதல் சுகாதார துறையின் 17 சிற்றூழியர்களினால்		

	மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட துணிகளை சலவை இயந்திரங்களுக்கு அனுப்புவதற்கும், உலர்த்தும் இயந்திரங்களுக்கு துணிகளை அனுப்புவதற்கும், துணிகளை அழுத்துவதற்குமாக தேசிய போட்டியுடனான விலைமனுக் கோரல் முறையைப் பின்பற்றி விலைமனுக்கள் கோரப்பட்டு இரண்டு வருடங்களுக்கு அதாவது 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2024 ஜனவரி 31 ஆம் திகதி வரை ஒரு தனியார் நிறுவனத்திற்கு மாதாந்தம் ரூ. 796,000 வீதம் ரூ. 19,104,000 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சலவைக் கூடத்திற்குரிய 25 இயந்திரங்களை சேவை மற்றும் பராமரிப்புக்காகஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாக "ஒரு குறிப்பிட்ட நாளில் துவைப்பதற்காக ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் வழங்கப்படும் துணிகளை அதே நாளில் துவைத்து அதே நாளில் வேலைகளை முடித்து மீண்டும் திருப்பித் தருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்" என ஒப்பந்தத்தில் சுருக்கமாக சேர்க்கப்பட்டுள்ள போதிலும், அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் என்ன என்பது குறித்து தெளிவாக அடையாளம் காணாத காரணத்தால் மேலே குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பணிகள் தொடர்பாக ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் ஒப்படைக்கப்படும் அழுக்குத் துணிகளை பொறுப்பேற்றல், வகைப்படுத்தல், துவைக்கப்பட்ட துணிகளை வகைப்படுத்தல் மற்றும் அந்தந்த பிரிவுகளுக்கு ஒப்படைத்தல் போன்ற பணிகளுக்காக வைத்தியசாலையின் சுகாதார துறை சிற்றூழியர்கள் 17 பேர்கள் கொண்ட ஒரு குழு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.	இது குறித்து முழுமையான சுயாதீன விசாரணை மேற்கொண்டு பொறுப்பு தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	பதில வழங்கப்படவில்லை.
	ii. ஒப்பந்த பணிகளுக்காக செலுத்த வேண்டிய செலவினம் தொடர்பான செலவின மதிப்பீடு தயாரிக்கப்படாததால், விலைமனுதாரியினால் வழங்கப்பட்ட விலைகளின் நியாயத்தன்மையை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் இருக்கவில்லை என்பதுடன், ஒப்பந்தத்தின் மூலம் மாதாந்தம்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	ஒப்பந்ததாரருக்கு ரூ.796,000 இனை வழங்க இணங்கிய தொகை நியாயமானதா என்பதை உறுதிசெய்ய முடியவில்லை.		
	iii. ஒப்பந்தத்தின் 05 வது நிபந்தனையின்படி, அழுக்குத் துணிகள் துவைத்தல் மற்றும் மின்சார சலவை துணி அழுத்தம் மேற்கொள்வதற்காக குறைந்தபட்சம் 16 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனினும், அபராதம் அறவிடும் போது அந்த குறைந்தபட்ச அளவு 13 ஊழியர்கள் வரை குறைக்கப்பட்டதால் ஒப்பந்ததாரரினால் 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான 454 நாட்களுக்கு 311 பேர் குறைந்தபட்ச ஊழியர்களின் எண்ணிக்கை 16 இனை விட குறைவாகவே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மேலே கூறப்பட்ட ஒப்பந்தத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான குறைந்தபட்ச ஊழியர்களின் எண்ணிக்கையை வைத்தியசாலையினால் சரியாக நிர்ணயம் செய்யவில்லை எனவும், அதிக பணியாளர்களின் தேவையை சுட்டிக்காட்டி விலைமனு கோரியதன் ஊடாக அதிக விலையை ஒப்பந்தத்திற்காக சமர்ப்பிக்கும் சூழலை உருவாக்கியிருப்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv. வைத்தியசாலையின் பிராந்திய கொள்முதல் குழுவால் தகுதியுள்ள ஒப்பந்ததாரராக இந்த ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், டெண்டர் ஆவணத்தின் நிபந்தனை 01 இன் கீழ் ஒப்பந்ததாரர் சம்பந்தப்பட்ட துறையில் பெரிய கொள்ளளவு கொண்ட சலவைக்கூடத்தை பராமரித்தல் தொடர்பாக குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் உள்ளவர்கள் என்பதை எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v. டெண்டர் ஆவணத்தின் ஊடாக கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக வைத்தியசாலைக்கு சான்றிதழ்களை சமர்ப்பித்த ஊழியர்களுக்குப் பதிலாக கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக வைத்தியசாலைக்கு எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தாத ஊழியர்களை ஒப்பந்த காலம் முழுவதும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், இது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் அவதானம்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	செலுத்தவில்லை. இதன் மூலம் வைத்தியசாலையின் துணி துவைக்கும் மின்சார சலவை ஆலையை தகுதியற்ற பணியாளர் குழுவினால் மேற்கொள்ள அனுமதிப்பதன் மூலம் வைத்தியசாலையின் தேவைக்கு ஏற்ப சலவை பணி சரியாக நடைபெறாமை மற்றும் இயந்திர பயன்பாட்டு சான்றிதழ்கள் இல்லாத தகுதியற்ற ஊழியர் குழுவினால் துணி துவைக்கும் மின்சார சலவைக்கூடத்தை கையாள அனுமதிப்பதன் மூலம் இயந்திரங்கள் சேதமடையும் அபாயத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியவில்லை.		
(க)	2021 ஜூன் 01 ஆம் திகதி முதல் 2023 மே 31 ஆம் திகதி வரையான இரண்டு ஆண்டுகளுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் துணி துவைக்கும் மின்சார சலவைக்கூடத்திலுள்ள 18 இயந்திரங்களின் சேவை மற்றும் பராமரிப்புக்காக ஒப்பந்தம் 2021 ஜூன் 06 ஆம் திகதியன்று ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. இந்த தனியார் நிறுவனத்தின் உரிமையாளராகப் செயற்படும் நபர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணி துவைக்கும் மின்சார சலவைக்கூடத்தை பரமரிப்பதற்கான ஒப்பந்த நிறுவனத்தின் தலைவராகவும் செயற்படுவதுடன், சலவை சேவைகளுக்கான குறைந்தபட்ச 16 ஊழியர் குழுவில் அவர் தனது பெயரையும் பதிவு செய்து மாதாந்த கொடுப்பனவை பெற்றுள்ளார். மேலும் சலவைக்கூடத்தில் துணி துவைத்தல் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களினால் சில நாட்களில் இயந்திரங்களின் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணை நடாத்தி பொறுப்பான உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இணங்குவதாகவும், இந்த நிறுவனத்தின் உரிமையாளர் சம்பந்தப்பட்ட சலவை நிறுவனத்தின் உரிமையாளர் என்பதுடன், அவர் அதன் முகாமைத்துவராகவும் செயற்படுவதால் குறைந்தபட்சம் 16 ஊழியர்கள் கொண்ட குழுவில் முகாமையாளரும் உள்ளடங்க வேண்டும் என ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும், சலவைக்கூடத்தில் பணியாற்ற போதுமான ஊழியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி நபரும் பணியில் ஈடுபட்டு, தனது பெயரையும் உள்ளிட்டுள்ளாரா என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மின்சார சலவைக்கூடத்தின் இயந்திர

			பாராமரிப்புக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட தனியார் நிறுவனத்திடமிருந்து விலைகள் கோரப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து பராமரிப்பு மற்றும் சேவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதனை வைத்தியசாலையின் மின்சார திருத்தப் பணியாளர்கள் உறுதி செய்து அதனை வைத்தியசாலை நிருவாகத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கும் எனவும்.
	ii. அதன்படி, சுயாதீனமாக செயல்பட வேண்டிய இரண்டு பணிகளுக்கு தனித்தனியாக கொள்முதல் செய்யப்பட்டாலும், ஒரே நபரின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அந்த கொள்முதல் மூலம் வைத்தியசாலை எதிர்பார்த்த நோக்கங்களை அடைய முடியாத அவதானம் இருப்பது கணக்காய்வில் நிராகரிக்க முடியவில்லை என்பதுடன், சலவைக்கூடத்தில் மேற்படி முறைக்கேடுகள் இடம்பெறுவதற்கான சூழலை வைத்தியசாலை உருவாக்கியுள்ளது.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும், மின்சார சலவைக்கூட இயந்தர பராமரிப்புக்காக பத்திரிகை விளம்பரம் ஊடாக விலைமனுக்கள் கோரப்பட்டு, குறைந்த விலைகள் சமர்ப்பித்த விலைமனுதாரிக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு பரிந்துரை செய்து, கொள்ளல் குழுவினால் அங்கீகரித்துள்ளது என்பதால், முறைக்கேடுகள் நடந்துள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து கணக்காய்விற்கு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும்.
	iii. இந்த ஒப்பந்தத்திற்காக தயாரிக்கப்பட்ட டெண்டர் ஆவணத்தின் பிரகாரம், இயந்திரம் தொடர்பாக மாதத்திற்கு ஒருமுறை 09 பொது சேவை பணிகள் (Routine Services) மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த நிபந்தனை ஒப்பந்ததாரருடன் 2021 ஜூலை 07 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் அல்லது டெண்டர் நிபந்தனை ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்பதற்கான பிரிவுகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவில்லை. ஆகையால், ஒப்பந்ததாரரின் விருப்பத்திற்கேற்ப சேவை மற்றும் பராமரிப்பு	-அவ்வாறே-	இணங்குவதாகவும், மாதாந்த பராமரிப்பு மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திய பின்னர் சம்பந்தப்பட்ட மின்சார திருத்தப் பணியாளர்களின் பரிந்துரையின் கீழ் மட்டுமே மாதாந்த பராமரிப்பு சேவைக் கட்டணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இருப்பினும் எதிர்காலத்தில் இது தொடர்பான பிரிவுகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும் எனவும்.

		பணிகளை மேற்கொள்வதற்கான சூழலை வைத்தியசாலை உருவாக்கியுள்ளது.		
	iv.	வைத்தியசாலை நிர்வாகத்தினால் விலைமனு மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் குறித்து அடிப்படை மட்டத்தில் இந்த பணிகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மின்சார திருத்தப் பணியாளர்களுக்கு அறிவிக்கவில்லை எனவும், இயந்திர சேவை மற்றும் பராமரிப்பு, திருத்த வேலைகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் விடயப்பொறுப்பு மின்சார திருத்த பணியாளரின் கண்காணிப்பு இடம்பெற்றதா என்பது குறித்து எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதும், இயந்திர சேவை மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனத்தினால் மாதாந்த சேவை மற்றும் பராமரிப்பு சேவைக்காக சமூகமளிக்கும் தினங்கள் தொடர்பாக வைத்தியசாலை விடயப்பொறுப்பு மின்சார திருத்த பணியாளருக்கு அறிவிக்கப்படவில்லை என்பதும், சில சந்தர்ப்பங்களில் சேவை நிறைவேற்றப்பட்ட பின்னரே விடயப் பொறுப்பு மின்சார திருத்த பணியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதும், மற்றும் ஒப்பந்ததாரரினால் இயந்திர மாதாந்த சேவை மற்றும் பராமரிப்புக்காக பிலோவர் செய்தல் மூலம் இயந்திரங்களின் தூசி அகற்றல், இயந்தரத்தின் வெளிப்பகுதிகளை சுத்தம் செய்தல், பெயார்களுக்கு கிறீஸ் இடல், மற்றும் இனங்காணக்கூடிய சில பாகங்களை பழுதுபார்க்க வேண்டும் என அறிவிப்பு மாத்திரம் செய்துள்ளது என்பதும், வைத்தியசாலை மின்சார திருத்த பணியாளரிடம் பெறப்பட்ட கூற்றுகளில் மூலம் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும், உரிய பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை மின்சார பணியாளர்களிடம் தெளிவுபடுத்தல்கள் பெறப்பட்டு வருவதாகவும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	v.	மாதாந்த கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு ஒப்பந்ததாரர் கிட்டத்தட்ட 15 சேவைப் பணிகளைச் செய்ததாக சேவை மற்றும் பராமரிப்பு அறிக்கைகள் மூலம் குறிப்பிடப்பட்ட போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்க்கப்பட்ட மாதிரியை ஆராய்ந்த போது அவற்றின் நிலை பழுதுபார்ப்பதற்கு முன், பழுதுபார்க்கும் போது, பழுதுபார்க்கப்பட்ட பின் வழங்கப்பட்ட சேவை மற்றும் பராமரிப்பு அறிக்கைகள் மூலம் அதற்கு	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும், எனினும் இது குறித்து விடயப்பொறுப்பு மின்சார பணியாளரிடம் விளக்கம் கோரியுள்ளதுடன், அது குறித்து விரைவாக கணக்காய்விற்கு பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

	முற்றிலும் மாறுபட்ட உண்மைக்குப் புறம்பான ஒரு நிலையை பதிவு செய்துள்ளது. அதன்படி, தவறான சேவை மற்றும் பராமரிப்பு அறிக்கைகளின் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு மாதாந்த கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், குறைந்தபட்சம் பழுதுபார்க்கும் சந்தர்ப்பத்தில் அந்த இயந்திர பாகங்களின் நிலைமை தொடர்பாக சேவை மற்றும் பராமரிப்பு அறிக்கைகள் மூலம் கண்காணிக்காமல் அந்த பழுதுபார்ப்புக்கு ஒப்புதல் அளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. எனவே முறையான ஆய்வுகள் மேற்கொண்டு ஒப்பந்த காலம் முழுவதும் பொய்யான சேவை மற்றும் பராமரிப்பு அறிக்கைகளின் அடிப்படையில் செலுத்தப்பட்ட சேவை மற்றும் பழுதுபார்ப்புச் செலவுகள் ஒப்பந்ததாரரிடமிருந்து அல்லது அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.		
	vi. இயந்திர சேவைகள் மற்றும் பராமரிப்பு கொள்முதலின் போது இரண்டு ஆண்டுகளுக்கான டெண்டர் ஆவணங்கள் மூலம் கோரப்பட்ட மேலதிக இயந்தர உதிரி பாகங்களை வழங்குவதற்கு ஒப்பந்ததாரரினால் விலைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு சமரப்பிக்கப்பட்ட விலைகளின் நியாயத்தன்மையை மதிப்பிடுவதற்கான அளவுகோல்களை வைத்தியசாலை அடையாளம் காணவில்லை. மேலும், இரண்டு வருட காலப்பகுதியில் சலவைக் கூடத்தில் உள்ள இயந்திரங்கள் தொடர்பாக மாதிரி பரிசோதனையின் போது 07 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபாரத்தல் வேலைகளுக்காக வைத்தியசாலையினால் 181 சதவீதம் முதல் 1067 சதவீதம் வரை ஒப்புக்கொண்ட விலையை விட அதிக விலைக்கு, விலை ஆதார ஆவணங்கள் மூலம் சரிபார்ப்பு இன்றி ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து முறையான ஆய்வு மேற்கொண்டு ஒப்பந்ததாரருக்கு அதிக தொகை செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து ஒப்பந்ததாரரிடமிருந்து அல்லது அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அதனை அறவிட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும், இது குறித்து ஆராயப்படுவதுடன், கூடிய விரைவில் கணக்காய்விற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இருப்பினும் சகல பழுதுபார்ப்புகளிலும் நிபுணத்துவ இயந்திர பொறியியலாளரைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டுக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் எனவும்.

	vii. இயந்திர சேவை மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தத்தின் 1 (viii) இன்படி, ஒப்பந்ததாரரினால் வாரத்தின் 05 நாட்களுக்கு ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரை சலவைக்கூடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனினும், அவரின் வரவு மற்றும் வெளியேறுதல் குறித்து வைத்தியசாலைக்கு தினசரி அறிக்கையிடவில்லை என்பதுடன், ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்தும் போது அத்தகைய ஊழியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தவில்லை. அவ்வாறே ஒவ்வொரு இயந்திரத்திலும் மேற்கொள்ளப்பட்ட சேவை, இயந்திரம் செயலிழந்த திகதிகள், இயந்திரங்களை பரிசோதித்த திகதிகளும் நேரமும், இயந்திர கோளாறுகளை வைத்தியசாலைக்கு அறிவித்த திகதி, பழுதுபார்க்கப்பட்ட திகதி, பழுதுபார்க்கும் போது இயந்திரத்தில் எந்த பாகங்கள் அகற்றப்பட்டன, அவற்றை முறையாக வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டனவா, சேர்க்கப்பட்ட இயந்திர பாகங்கள் தொடர்பான விடயங்கள், பழுதுபார்ப்புகளை முறையாக ஏற்றுக்கொள்வது, மற்றும் மேற்கூறிய விடயங்கள் சரியாக நடைபெறுகிறதா என்பதை கண்காணிப்பதற்கான பதிவுப் புத்தகங்கள் அல்லது வேறு எந்த ஆவணங்களும் பராமரிக்கப்படவில்லை. இதனால் சலவைக் கூடத்தில் உள்ள ஒவ்வொரு இயந்திரங்கள் தொடர்பாகவும் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகத்திற்கு சரியான தகவல்களை வழங்குவதற்கான வழிமுறைகள் இருக்கவில்லை.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், இந்த ஊழியர்கள் சேவைக்கு சமூகமளித்தல் மற்றும் வெளியேறுதல் என்பவற்றை பதிவதற்கு பதிவேடு மற்றும் இயந்திரங்களின் நிலைமையை பதிவு செய்வதற்கு லொக் புத்தகத்தையும் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	viii. மேற்படி 18 இயந்திரங்கள் தொடர்பாக 2023/24 ஆம் ஆண்டின் சேவை மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தத்திற்கு 2021/23 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்ட அதே ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்ததாரரினால் உதிரிப் பாகங்களுக்காக 2021/23 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைகளுடன் 2023/24 ஒப்பந்தத்திற்கு சமர்ப்பித்த விலைகளை ஒப்பிடுகையில் உதிரிப் பாகங்களின் விலை அதிகரிப்பு ஒப்பீட்டு ரீதியில் 12 சதவீதம் முதல் 2900 சதவீதம் வரை பாரியளவில் விலை உயர்த்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு	-அவ்வாறே-	இணங்குவதாகவும், எவ்வாறாயினும் சமர்ப்பிக்கப்பட்ட விலையில் உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட மாட்டாது எனவும், பத்திரிகை ஊடாக விலைமனுக்கள் கோரப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் கீழ் குறைந்த விலைகளை சமர்ப்பித்த விலைமனுதாரிகளிடம் இருந்து உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்படும் எனவும்.

		உதிரிப் பாகங்கள் பாரிய அதிகரிப்பை சரிபார்க்காமல் 2023 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2024 ஜூலை 31 ஆம் திகதி வரையான காலத்திற்கு ஒப்பந்தம் செய்ததால் உதிரிப் பாகங்களுக்கு அதிக விலை கொடுக்கவேண்டிய சூழலை வைத்தியசாலையினால் உருவாக்கியுள்ளது.		
	ix.	மின்சார சலவைத் தேவைகளுக்காக இரண்டு சிவப்பு மற்றும் நீல நிறத்தினாலான பிரதான கம்பரஸர்கள் மற்றும் 02 கொதிகலன்கள் உள்ளதுடன், இந்த இயந்திரங்களுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு கம்பரஸர்கள் மற்றும் 03 மினி கொதிகலன்கள் சலவைக்கூடத்தில் இருந்த போதிலும் அதில் மினி கொதிகலன்கள் இரண்டும் பயன்படுத்த முடியாதவாறு பழுதடைந்த நிலையில் காணப்பட்டதுடன், 02 கம்பரஸர் இயந்திரங்கள் மற்றும் ஒரு மினி கொதிகலன் பயன்படுத்தப்படவில்லை. எனினும் பயன்படுத்த முடியாதவாறு பழுதடைந்த 02 மினி கொதிகலன்களை சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டு ஒரு இயந்திரத்திற்கு மாதந்தோறும் ரூ. 7,500 செலுத்தப்பட்டுள்ளது. எனவே செயற்படாத மினி கொல்கலன்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட சேவைக் கட்டணத்தை கணக்கிட்டு ஒப்பந்ததாரரிடமிருந்து அல்லது அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அதனை அறவிட வேண்டும் எனவும், பயன்படுத்தப்படாத இரண்டு கம்பரஸர்கள் மற்றும் மினி கொதிகலன்கள் மாதந்தோறும் சேவை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்தச் சேவைகள் முறையாகச் செய்யப்பட்டதா என்பது உறுதி செய்யப்படவில்லை என்பதுடன், அந்த இயந்திரங்கள் எதிர்பார்த்த அளவில் செயற்படுகின்றனவா என்பதை உறுதி செய்து மேலும் அவற்றின் செயற்திறன் குறித்து முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், இந்த இயந்திரங்கள் மீண்டும் பழுதுபார்க்கக்கூடிய நிலையில் உள்ளதுடன், அது பழுதுபார்க்கும் வரை மாதாந்த சேவை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், இல்லையெனின் இயந்திரத்தை மீண்டும் பயன்படுத்த முடியாதநிலை ஏற்படும் எனவும், ஆகையால் பராமரிப்பு சேவைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது எனவும்.
	x.	மேலே கூறப்பட்ட 18 இயந்திரங்களுக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மேலும் 05 இயந்திரங்கள்	-அவ்வாறே-	இணங்குவதாகவும், இது தொடர்பில் அவதானம் செலுத்தி, புதிய

		மேற்கூறியவாறு சேவை மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்கும் அதே ஒப்பந்ததாரருக்கு வழங்கி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதில் 2021 செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 14 ஆம் திகதி வரையான காலத்திற்காக இயந்திர விநியோகத்தர் டெண்டர் ஆவணங்களுடன் நான்காவது ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பராமரிப்பு மற்றும் சேவை கட்டணமான ரூ. 750,000 வருடாந்த தொகையை ஒப்பந்ததாரருக்கு செலுத்த இணக்கம் காணப்பட்ட போதிலும், இயந்திரம் கொள்வனவு செய்தல் தொடர்பாக டெண்டர் ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் தொடர்பான நிபந்தனைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்ட நிபந்தனைகளை மேற்கூறிய சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருந்தது.		நிபந்தனைகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	xi.	மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவை மற்றும் பராமரிப்பு விலையான ரூ 750,000 வருடாந்த கட்டணத்தினுள் சேவை மற்றும் பராமரிப்புகளுக்கான அனைத்து பாகங்களையும் வழங்குவதற்கான செலவை உள்ளடக்கியதாக இயந்திரத்தின் விநியோகத்தரினால் கூறப்பட்ட போதிலும், அந்த பாகங்கள் எவை என்பது குறித்து சரியாக அடையாளம் காணமுடியாத காரணத்தால் சேவை மற்றும் பராமரிப்பு சேவை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் இயந்திரத்தை பழுதுபார்க்கும் போது விநியோகத்தர் தயாரித்த உதிரிப்பாகங்கள் பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்யவில்லை என்பதும், உதிரிப்பாகங்கள் விநியோகிக்கும் போது விலைகள் தொடர்பாக வைத்தியசாலையுடன் முன் இணக்கம் காணாததால் பழுதுபார்க்கும் போது வழங்கப்பட்ட உதிரிப் பாகங்களுக்கு வைத்தியசாலை செலுத்திய தொகையின் நியாயத்தன்மையை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் உரிய இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான கொள்ளல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளுக்கு சிறிது கால அவகாசம் எடுத்துக் கொண்ட காரணத்தால் சற்று தாமதம் ஏற்பட்டது எனவும்.
	xii.	2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ள இலக்கம் 26 எனும் பிளேட் அயன் இயந்திரம் (3200mm) சரியாக இயங்கக்கூடிய நிலையில் இருக்காததால் (அதிக மின் நுகர்வு மற்றும் துணி அழுத்தல் குறைவடைந்தமை) நிறுவப்பட்ட நாளிலிருந்து சலவையில் பயன்படுத்தப்படவில்லை என்பது	-அவ்வாறு-	இணங்குகிறேன். இது குறித்து முறையாக ஆராய்ந்து கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

		அவதானிக்கப்பட்டது. இவ்வாறு பயன்படுத்தப்படாத இயந்திரத்தையும் சேவை மற்றும் பராமரிப்புகளுக்கான ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூ.15,500 வீதம் 2021 செப்டம்பர் முதல் 2023 ஏப்ரல் வரையிலான காலத்திற்கு மாத்திரம் ரூ. 310,000 ஒப்பந்ததாரருக்கு செலுத்தியுள்ளது. ஆனால் இந்த இயந்திரத்தில் எவ்வித சேவையும் செய்யப்படாதது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு வைத்தியசாலையின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத இயந்திரத்தை கொள்வனவு செய்து அதன் பராமரிப்புக்காக தொடர்ச்சியாக அரசாங்க நிதியை செலவிடுவது தொடர்பாக முறையான ஆய்வுகள் மேற்கொண்டு உரிய நட்டத்தையும் அதற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும் என்பதும் அவதானிக்கப்பட்டது.		
	xiii.	2024 ஜனவரி 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது மின்சார சலவைக்கூடத்தில் இருந்த 02 துணி உலர்த்தி இயந்திரங்கள் மற்றும் 02 சலவை இயந்திரங்கள் 02 மாதத்திற்கு மேலாக செயலிழந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக வைத்தியசாலைக்கு அவசியமான தினசரி துணி துவைத்தல் பணிகளை முறையாக பராமரிப்பதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் உரிய இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான கொள்ளல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளுக்கு சிறிது கால அவகாசம் எடுத்துக் கொண்ட காரணத்தால் சற்று தாமதம் ஏற்பட்டது எனவும்.
	xiv.	சலவைக்கூடத்தில் சேரும் வெப்பக் காற்றை கட்டுப்படுத்துவதற்கு தேவைப்படும் எக்ஸ்ஹோஸ்ட் காற்றாடி அல்லது வேறு வழிகள் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கொதிகலனால் உருவாக்கப்படும் சூடான வாயு (நீராவி) சலவைக்காக செலுத்தும் அமைப்பின் சில இடங்களிலிருந்து வெளியேறுவதுடன் சூடான நீராவி சலவைக்காக பயன்படுத்திய பிறகு அது வடிகால் அமைப்பிற்கு வெளியேற்றப்படுகிறது. இவ்வாறு வெளியேற்றப்படும் சூடான வாயு மீண்டும் அமைப்பில் சேர்ப்பதற்கான சாத்தியம் உள்ளதா என்பதை கண்டறிந்து அதன்மூலம் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறேன்.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், கொதிகலன் மூலம் உருவாக்கப்படும் நீராவியைக் பாய்ச்சும் அமைப்பு பழுதுபார்க்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஆராய்ந்த பின்னர் அந்த நீராவியை மீண்டும் சேர்த்து வினைத்திறனை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

(ங)	2022 மார்ச் 01 ஆம் திகதியில் இருந்து 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான ஒப்பந்தம், ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த ஒப்பந்த காலம் 2023 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், 2023 ஏப்ரல் 01 முதல் 2024 மார்ச் 31 வரையான காலத்திற்கு விலைமனுக்கள் கோராமல் அதே தனியார் நிறுவனத்திடமிருந்து மாதாந்தம் ரூ. 2,897,113 இற்கு பாதுகாப்பு சேவையைப் பெறுவதற்கு 2023 மார்ச் 07 ஆம் திகதி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்ளல் குழு தீர்மானித்துள்ளது. இந்த ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2023 ஆண்டுக்கான பாதுகாப்பு சேவைகள் பெறப்பட்டதா என்பது பற்றிய கணக்காய்வில் பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது ஒப்பந்தத்தின்படி இரவு பாதுகாப்புப் பணியில் ஈடுப வேண்டிய 32 பாதுகாப்பு பணியாளர்களை விட 10 ஊழியர்கள் குறைவாக 23 பாதுகாப்பு பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதும், இவர்களில் 19 பேர் 2024 பெப்ரவரி 04 ஆம் திகதி பகல் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் என்பதால், இது ஒப்பந்த விதிமுறைகளுக்கு முரணானது என்பதோடு, சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 23 உத்தியோகத்தர்களில் 15 உத்தியோகத்தர்கள் மாத்திரம் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் வருகை மற்றும் புறப்பாடு கையொப்பமிடும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கையொப்பமிடும் ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர் என்பதும், அவர்களில் 12 பேர் போலியான பெயர்கள் இட்டு கையொப்பமிட்டிருப்பதும் மற்றும் இருவரிடம் அடையாள அட்டைகள் இல்லாத	இது குறித்து முழு சுயாதீன விசாரணை மேற்கொண்டு அதற்கு பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	வருகை மற்றும் புறப்பாடு பதிவேட்டில் கையொப்பமிடுபவர் தனது சொந்த கையெழுத்தில் சேவை இலக்கம், பெயர் மற்றும் பதவியை புத்தகத்தில் பதியுமாறு அறிவித்தல், இதன் மூலம் பொய்யான கையொப்பங்கள் மற்றும் பெயர்கள் உள்ளிடுவதைத் தடுத்தல் மற்றும் கண்காணித்தலை இலகுவாக்குதல், இந்த தொடர் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள DUTY ROSTER என்ற ஆவணம் பாதுகாப்பு பிரிவினால் தனிப்பட்ட முறையில் பராமரிக்கப்படும் ஆவணம் என்பதால் இது குறித்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படவில்லை என்பதால் அது குறித்த விபரங்களை பாதுகாப்பு பிரிவிடம் பெறல், பாதுகாப்பு பிரிவினால் சமர்ப்பிக்கும்

	காரணத்தால் அவர்களை அடையாளம் காணமுடியாத நிலையும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.		பகல் மற்றும் இரவு நேர வரவு ஆவணத்தின் பிரகாரம் எனவும், இந்த தொடர் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட ஆவணம் பாதுகாப்பு பிரிவினால் தனிப்பட்ட முறையில் பராமரிக்கப்படும் பதிவேடு என்பதால் அது குறித்த விபரங்களை பாதுகாப்பு பிரிவிடம் பெறல், வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு ஆவணத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் 12 மணித்தியாலத்திற்கு மேலாக சேவையாற்றியதாக குறிப்பிடவில்லை எனவும், இந்த தொடர் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு ஆவணத்தின் பிரகாரம் (பகல் மற்றும் இரவு சேவைகள் பதியும் பதிவேடு) என்ற ஆவணம் பாதுகாப்பு பிரிவினால் தனிப்பட்ட முறையில் பராமரிக்கப்படும் பதிவேடு என்பதுடன், இது குறித்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படவில்லை எனவும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களில் கள புத்தகங்களை புதுப்பிக்குமாறு பாதுகாப்பு பிரிவிற்கு அறிவிக்கப்பட்டது எனவும், மேற்கூறிய களவுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பின்னர் 2023 ஆம் ஆண்டுக்குறிய பில்களில் ஏற்பட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	ii. மேலும், 2023 ஆம் ஆண்டு முழுவதும், வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பகல் மற்றும் இரவு சேவை சுழற்சிக்கான வருகை மற்றும் புறப்பாடு கையொப்பமிடும் பதிவேட்டில் (DUTY ROSTER) கையொப்பமிட்ட ஊழியர்களின் பெயர்கள், பகல் மற்றும் இரவு	-அவ்வாறே-	-அவ்வாறே-

		கடமைகளைக் குறிக்கும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுடன் பொருந்தவில்லை.		
	iii.	ஏல நிபந்தனை 12.3 இன்படி, எந்தவொரு பாதுகாப்பு ஒழுங்குபடுத்துபவர் / கண்காணிப்பு உத்தியோகத்தர் ஒரே நேரத்தில் 12 மணி நேரத்திற்கு மேல் பணியாற்ற கூடாது என்பதுடன், அதற்காக எவ்வித கொடுப்பனவுகளும் வைத்தியசாலையினால் வழங்கப்படாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், பகல் மற்றும் இரவு சேவைகள் பதிவிடும் பதிவேட்டின் பிரகாரம் 2023 ஜனவரி மாதத்தில் 21 ஊழியர்கள் 12 மணி நேரத்திற்கு மேல் 24 மணித்தியாலங்கள் முதல் 732 மணித்தியாலங்கள் வரை பாதுகாப்பு சேவையில் தொடர்ந்து பணியாற்றியதையும், இந்நிலைமை 2023 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தது எனவும், அதற்காக வைத்தியசாலையினால் கொடுப்பனவுகள் வழங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும், இந்த நிலைமை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் பகல் மற்றும் இரவு சேவைச் சுழற்சிக்கான வருகை மற்றும் புறப்பாடு கையொப்பமிடும் பதிவேட்டில் கையொப்பமிடாது போலிப் பெயர்களை பயன்படுத்தி ஆவணம் தயாரித்துள்ளதுடன், இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினால் கண்காணிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv.	இவ்வாறு ஏல நிபந்தனைகளுக்கு மாறாக 12 மணி நேரத்திற்கு மேலாக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதால் ஒப்பந்தத்தின்படி நாளாந்தம் 58 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனினும், பகல் மற்றும் இரவு சேவைகள் பதிவிடும் பதிவேட்டின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முழுவதும் ஒப்பந்தம் செய்யப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 2023 ஏப்ரல் மாதத்தைத் தவிர ஏனைய மாதங்களில் உரிய	-அவ்வாறே-	-அவ்வாறே-

		கண்காணிப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை விடவும் 01 அல்லது 02 கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் குறைவாகவே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.		
	v.	பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை சோதனை நடத்தி, அப்பகுதியின் பாதுகாப்பு நிலவரம் குறித்து களப் புத்தகத்தில் பதிவு செய்து கையொப்பமிட வேண்டும் என்பதுடன், விஷேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டிய ஜெனரேட்டர் அறை, மருந்து, சத்திர சிகிச்சை மற்றும் இதர களஞ்சியங்கள், கழிவகற்றல் தொகுதி போன்ற இடங்களை தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அந்த இடங்களுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் புதுப்பித்த நிலையில் இருத்தல் வேண்டும். ஆனாலும் அவ்வாறு செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	எதிர் காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஏற்ப இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அபாயங்கள் குறைக்கப்படும் எனவும்.
	vi.	அதன்படி, ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய பாதுகாப்பு பணியாளர்களின் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் குறைவானவர்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டமை, பாதுகாப்பு பணியாளர்கள் 12 மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தியமை, போலியான பெயர்கள் பதிவு செய்யப்பட்டு பாதுகாப்பு ஊழியர்களின் வருகை மற்றும் புறப்பாடு பதிவு ஆவணம் தயாரித்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கு சமர்ப்பித்தமை மற்றும் அது வைத்தியசாலையின் மேற்பார்வையின் கீழ் இல்லாததால், ஏல நிபந்தனை 12.5 இன்படி வைத்தியசாலை வளாகம் மற்றும் அதன் அசையும், அசையா சொத்தக்களின் பாதுகாப்பு முறையாக பாதுகாக்கும் நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன், பாதுகாப்பு சேவைகளை பெறுவது தொடர்பான வைத்தியசாலையின் உள்ளக நிர்வாகம் பலவீனமான நிலையில் காணப்பட்டது. ஒப்பந்த	-அவ்வாறே-	இதுவரை, வைத்தியசாலையின் நிர்வாகத்திற்கு முன்தினம் இரவு Point List இனை காலையில் சமர்ப்பிக்கப்படுகிறது எனவும், இதன் பின்னர் இரவு சேவையின் Point List பட்டியலை அன்றைய தினம் காலையில் நிர்வாகத்திடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், அடையாள அட்டை அணிவது குறித்து பாதுகாப்பு பிரிவிற்கு முன்னதாக தெரிவிக்கப்பட்டு அதற்கான நினைவூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும்.

		காலத்தில், வைத்தியசாலையில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டிகளின் வெளிப்பகுதிகளின் (Outdoor Units) பாகங்கள் களவாடப்பட்டமை, வைத்தியசாலையில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டமை மற்றும் அனுமதியற்ற வாகனங்கள் வைத்தியசாலை வளாகத்தில் நிறுத்தப்படுவதாக செய்யப்பட்ட முறைப்பாடுகள், வைத்தியசாலை வளாகம் மற்றும் அங்குள்ள அசையும், அசையா சொத்துகள் முறையாக பாதுகாக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
	vii.	வைத்தியசாலைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருகை மற்றும் புறப்படல் பதிவேடுகளில் பொய்யான பெயர்கள் மற்றும் கையொப்பங்களை இடல் மற்றும் அதன்படி வைத்தியசாலையினால் கொடுப்பனவுகள் வழங்குவதன் மூலம் வைத்தியசாலையின் பாதுகாப்பு தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில் பொறுப்பை ஒப்படைப்பதில் எழக்கூடிய அபாயங்கள் மற்றும் பொய்யாக பெயர்கள் மற்றும் கையொப்பங்கள் இட்டு அதன்படி சம்பளம் பெறும் நபர்கள் அந்த காலத்தினுள் வெளி சமூகத்தில் அவர்கள் ஏற்படுத்தக்கூடிய தவறுகளுக்கு ஒரு சட்டபூர்வ பாதுகாப்பு பெறுவதற்கான அபாயங்கள் உள்ளன என்பதை கணக்காய்வில் மறுப்பதற்கில்லை.	-அவ்வாறே-	தற்போது 2023 ஆண்டுக்காக ஒக்டோபர் மாதம் முதல் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனவும், ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் உண்மையான கையொப்பங்கள் பெறப்பட்டு தற்போது வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு பதிவேடு இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் இரசாயன பகுப்பாய்வு அறிக்கையின் பின்னர் உரிய அறவீடுகள் மேற்கொள்ளப்படும் எனவும்.
	viii.	ஏல நிபந்தனை 12.1 இன்படி, தினமும் ஒவ்வொரு சேவை சுழற்சி தொடங்கும் முன், ஒவ்வொரு நிலையத்திலும் சேவையில் ஈடுபடுத்தப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலை வைத்தியசாலை தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் எனினும், ஒப்பந்ததாரர் 2023 ஆம் ஆண்டு முழுவதும் அவ்வாறு செய்யவில்லை எனவும், ஏல நிபந்தனை 12.21 இற்கு முரணாக பாதுகாப்பு சேவை தொடக்கத்தில் சமர்ப்பித்த பெயர்ப் பட்டியலுக்கு மாறாக 21 பாதுகாப்புப் பணியாளர்கள் வைத்தியசாலை தலைவருக்கு அறிவிக்காமல் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் எனவும், அது ஏல நிபந்தனை 12.1 இற்கு	-அவ்வாறே-	-அவ்வாறே-

	முரணானது என்பதும் அவதானிக்கப்பட்டது. 2024 பெப்ரவரி 04 ஆம் திகதி இரவுப் பணியில் ஈடுபட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 03 பேர் அடையாள அட்டை அணிந்திருக்கவில்லை என்பதுடன், இரண்டு உத்தியோகத்தர்களிடம் நிறுவன அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை அவர்களிடம் இருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.		
	ix. அதன்படி, ஒப்பந்தப் பணியாளர்களை விட குறைவான பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை, பாதுகாப்பு ஊழியர்கள் 12 மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டமை, பொய்யான பெயர்களை உள்ளிட்டு பாதுகாப்பு பணியாளர்களின் வருகை மற்றம் புறப்பாடு ஆவணங்கள் தயாரித்து வைத்தியசாலைக்கு சமர்ப்பித்தமை தொடர்பில் முறையாக ஆராய்ந்து ஒப்பந்ததாரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை கணக்கிட்டு அதனை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ச)	களுத்துறை போதனா வைத்தியசாலை நிர்வாகம் கொள்வனவு வழிகாட்டல்களுக்கு இணங்காத வகையில் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது.		
	i. வைத்தியசாலையின் தாதியர் விடுதியில் மற்றும் சமையல் அறையின் 02 அடுப்புகளை பழுதுபார்த்தல் ரூ.134,225 இற்கு எவ்வித கொள்முதல் செயல்முறைகளும் இல்லாமல் ஒரு தனியார் தரப்பினரால் செய்துள்ளது.	-அவ்வாறே-	வைத்தியசாலையின் தாதியர் விடுதியில் மற்றும் சமையல் அறையின் 02 அடுப்புகளை பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் முறையான கொள்முதல் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
	ii. களுத்துறை போதனா வைத்தியசாலையின் கீழ் நிர்வகிக்ககப்படும் அளுத்கம வைத்தியசாலைக்குரிய LW-0797 எனும் இலக்க ஆம்புலன்ஸ் வண்டியை பழுதுபார்க்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட விலைகளின்படி பழுதுபார்க்கப்பட வேண்டிய மிக முக்கிய பகுதியைக் கவனிக்காமல் (வாகனத்தை செலுத்தும் போது எக்சிலேடர் சரியாக இயங்கவில்லை) தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரையில்	-அவ்வாறே-	LW-0797 எனும் இலக்க ஆம்புலன்ஸ் வண்டியை ஓட்டும் போது எக்சிலேடர் சரியாக இயங்காததை டீசல் பம்பை பழுதுபார்க்கப்பட வேண்டிய ஒரு மேலதிக வேலை என்பதால் அதற்காக மட்டும் தனியாக விலைமனு கோருவது பொருத்தமானது என சம்பந்தப்பட்ட

	ரூ. 135,750 இற்கு குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்ட பழுதுபார்க்கும் நிலையத்தில் பழுதுபார்க்ப்பட்ட போதிலும், வாகனத்தின் பழுதுபார்க்கப்பட வேண்டிய பகுதி பழுதுபார்க்கப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பி பரிந்துரைகளைப் பெற்று, கொள்முதல் அனுமதியின் அடிப்படையில் வெற்றிகரமான விலைமனுதாரி தெரிவு செய்யாமல் கொள்ளல் செயல்முறைகளுக்கு முரணாக தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரையின்படி செயற்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.		பழுதுபார்க்கும் நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டது என்பதுடன், அளுத்கம வைத்தியசாலையில் இந்த ஆம்புலன்ஸ் வண்டி மாத்திரமே உள்ளதால் விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பழுதுபார்ப்புகள் மாத்திரம் மேற்கொண்டு இதனை ஓட்டக்கூடிய நிலைக்கு கொண்டுவர முடியும் என்பதால் இந்த பழுதுபார்ப்புகளை விரைவாக மேற்கொள்வதற்கு பிராந்திய கொள்ளல் குழுவின் உடன்பாட்டின் பேரில் இது மேற்கொள்ளப்பட்டது எனவும்.
(ஞ)	களுத்துறை போதனா வைத்தியசாலையில் 2022/2023 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு சேவை பெறுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. களுத்துறை போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை தொடர்பான ஏல நிபந்தனைகளின்படி, துப்பரவு சேவையுடன் தொடர்புடைய ஒவ்வொரு பிரிவையும் துப்பரவு செய்வதற்கு 141 பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதுடன், அதில் குறைந்தபட்சம் 20 சதவீதமானவர்கள் ஆண் தொழிலாளர்களாக இருத்தல் வேண்டும். இருப்பினும், சேவையில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 116 மட்டுமே என்பதுடன், அதில் 13 தொழிலாளர்கள் மட்டுமே அதாவது 11 சதவீதம் மட்டுமே ஆண் தொழிலாளர்கள். மேலும் டெண்டர் நிபந்தனைகளின்படி வைத்தியசாலையின் சேவை அவசியத்திற்கு ஏற்ப தொழிலாளர்களை வழங்குவது ஒப்பந்ததாரரின் பொறுப்பாக இருந்தாலும், இங்கு அந்தப் பொறுப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு பிரிவிற்கும் தேவையான ஊழியர்கள் இல்லாததால் துப்பரவு செய்யும் பணிகள் முறையாக செய்யப்படவில்லை என்பது குறித்து வைத்தியசாலை நிர்வாகத்தின் கவனம் செலுத்தப்படவில்லை.	ஒப்பந்த நிபந்தனைகளின்படி சேவைகளை பெற பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது என்பதுடன், தற்போது ஆண் தொழிலாளர்கள் சரியாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும்.

	ii. சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கை ஒப்பந்தத்தின் பிரிவு 5.11 இன்படி, கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகள் ஒப்பந்தத்தில் உள்ளவாறே தனது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்பதை ஒப்பந்ததாரரினால் உறுதி செய்திருத்தல் வேண்டும். அதன்படி, ஒரு தொழிலாளிக்கு குறைந்தபட்ச நாளாந்த சராசரி உழைப்புச் செலவு ரூ. 1,343.50 வழங்கப்பட வேண்டும் எனினும், ஒப்பந்ததாரரினால் தொழிலாளர் ஒருவருக்கு ஒருநாளைக்கு ரூ.1000 மட்டுமே தினக்கூலியாக வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2022 ஜூலை முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதியில் சாதாரண வார நாட்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக ரூ. 53,307,393 இனை வைத்தியசாலையினால் வழங்கப்பட்ட போதிலும் ஒப்பந்ததாரர் தொழிலாளர்களுக்கு செலுத்திய தொகை ரூ.39, 678 இனை விடவும் குறைந்த தொகையாகும். இக்காரணத்தால் 08 மாத காலப்பகுதியில் தொழிலாளர்களின் சராசரி நாளாந்த சம்பளத்தின் மூலம் மாத்திரம் ரூ. 13,539,392 இற்கும் அதிகமான தொகையை ஒப்பந்ததாரர் அசாதாரண இலாபமாக தக்கவைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், வைத்தியசாலையினால் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையை மீள அறவிடப்படல் வேண்டும்.	இந்த விடயங்கள் தொடர்பாக, ஒப்பந்தத்தின் 5.11 ஆவது பிரிவின்படி டெண்டர் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளை ஊழியர்களுக்கு வழங்குமாறு ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் இந்த விடயத்தை கையாளுவதற்கு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விநியோகம்) மற்றும் மேலதிக செயலாளர் (கொள்ளல்) ஆகியோருக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்.
	iii. தொழிலாளர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு சாராசரி மேலதிக நேர கொடுப்பனவு செலவு ரூ.138.75 என்றாலும், ஒப்பந்ததாரர் தொழிலாளருக்கு சராசரியாக ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 50 மட்டுமே வழங்கியுள்ளார். அதன்படி 2022 ஜூலை முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதியில் சராசரி மேலதிக நேர கொடுப்பனவாக ரூ. 4,586,242 இனை வைத்தியசாலையினால் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட போதிலும் ஒப்பந்ததாரரினால் தொழிலாளர்களுக்கு ரூ.1,652,700 இனை மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ரூ. 2,933,542 இனை ஒப்பந்ததாரர் அசாதாரண இலாபமாக தக்கவைத்துள்ளார்.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	iv. ஏல ஆவணங்களின்படி, வேலை மேற்பார்வையாளர் ஒருவருக்கு குறைந்தபட்ச தினசரி சராசரி தொழிலாளர் செலவு ரூ. 1,546.55 செலுத்த வேண்டும் எனினும், பிரதான வேலை மேற்பார்வையாளருக்கு மாத்திரம் ரூ.1,790 இனை வழங்கியுள்ளதுடன், ஏனைய 05 வேலை மேற்பார்வையாளர்களுக்கு ரூ. 1,110 இனை தினசரி சம்பளமாக வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன்படி 05 வேலை மேற்பார்வையாளர்களுக்கு சம்பளம் வழங்கும் போது வழங்கவேண்டிய தினசரி சம்பளத்தை விடவும் ரூ. 446.55 குறைவாக சம்பளம் வழங்கப்பட்டுள்ளது என்பதுடன், 2022 ஜூலை முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதியில் வேலை மேற்பார்வையாளர்களின் சராசரி தினசரி சம்பளத்தில் இருந்து கிட்டத்தட்ட ரூ. 536,118 இனை ஒப்பந்ததாரர் இலாபமாக தக்கவைத்துள்ளார்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v. ஏல ஆவணங்களின்படி, வேலை மேற்பார்வையாளர் ஒருவருக்கு சாராசரியாக ஒரு மணித்தியால மேலதிக நேரத்திற்கு ரூ.157.50 வழங்கப்பட வேண்டும் என்றாலும், 2022 ஜூலை முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதியில் 1,617 மணிநேரம் சேவையில் ஈடுபட்டதற்காக ரூ. 254,677 ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட போதிலும் ஒப்பந்ததாரரினால் வேலை மேற்பார்வையாளர்களுக்கு அவ்வாறு மேலதிக நேர கொடுப்பனவை செலுத்தாமல் ஒப்பந்ததாரர் அதனை பெற்றுள்ளார்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vi. ஏல நிபந்தனைகளின்படி விஷேடமாக போயா தின விடுமுறை மற்றும் பொது விடுமுறை நாட்களில் ஊழியர்களை மேலதிக பணிக்காக, சம்பளக் குழுவின் விதிமுறைகளுக்கு ஏற்ப தொழிலாளர் செலவை கணக்கிடப்பட்டுள்ளதுடன், அதன்படி வேலை மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு விஷேட மேலதிக நேர மணித்தியாலத்திற்கு தொழிலாளர் செலவு முறையே ரூ. 210 மற்றும் ரூ.185 என வழங்கப்பட வேண்டும்.	-அவ்வாறே-	-அவ்வாறே-

		எனினும், 2022 ஜூலை முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதியில் 27 மணி நேர மற்றும் 648 மணி நேரங்களுக்கு விஷேட மேலதிக நேரத்திற்காக ரூ.5,670 மற்றும் ரூ.119,880 என மொத்தம் ரூ. 125,550 இனை வைத்தியசாலையினால் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட போதிலும், ஒப்பந்ததாரரினால் வேலை மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளிகளுக்கு அவ்வாறு விஷேட தின விடுமுறை கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி சம்பளக் குழுவின் விதிகளுக்கு ஏற்ப செலுத்தப்பட வேண்டிய விஷேட தின விடுமுறை கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட வேலை மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளிகளுக்கு வழங்காமல் அந்த பணத்தை ஒப்பந்ததாரர் பெற்றுள்ளார்.		
	vii.	சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தத்தின் பிரிவு 5.13 (v) இன்படி, ஒவ்வொரு மாதமும் குறித்த தினத்தில் வைத்தியசாலைக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் மாதாந்த அளவுகள் நோய்த் தொற்று கட்டுப்பாட்டுப் பிரிவின் தாதி உத்தியோகத்தர் அல்லது தொற்று கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவை சரியாக லொக் பதிவேடுகளில் பதியப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால், உரிய மாதத்திற்கு ரூ. 2,500 மேலதிக செலவும், அதற்காக கூடுதல் செலவை வைத்தியசாலை ஏற்க நேரிட்டால் அந்த தொகை மற்றும் 25 சதவீதம் மேலதிக செலவையும் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடுவதற்கு நிறுவனத் தலைவர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தத்திற்குரிய உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் ஒவ்வொரு மாதமும் அவ்வப்போது 03 தடவைகள் பகுதி பகுதியாக கொண்டு வரப்பட்டுள்ளதுடன், அந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான ஓடரை களஞ்சியப் பொறுப்பாளருக்கு பிரிதொரு தினத்தில் வழங்கப்பட்டுள்ளது. அதாவது	ஒப்பந்த நிபந்தனைகளின்படி சேவைகளை பெற பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனத்திடம் உள்ள லொறி சிறியது என்பதால் மாதாந்தம் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை பல முறை வைத்தியசாலைக்கு கொண்டுவந்து தரப்படுகிறது எனவும், அவை வழங்கப்படவேண்டிய உரிய தினத்திற்கு முன் வழங்கப்படுவதால் அபராதம் அறவிடுவதில்லை எனவும், மாதாந்தம் தேவைப்படும் பொருட்கள் வழங்கப்பட்ட பின்னர் அந்த மொத்த பொருட்களும் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்.

		பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் போது அவற்றின் அளவுகள் சரியானதா என்பதை உறுதி செய்யாமல் பெறப்பட்டுள்ளதுடன், அதற்காக மேற்படி அபராதம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.		
	viii.	டெண்டர் நிபந்தனைகளின்படி இலங்கை தர நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தரச் சான்றிதழ் (SLS) அல்லது இலங்கை தர நிலைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை தரநிலைகளுக்கு (SLS Standards) இணங்க உள்ளதாக தொழிற்துறை தொழில்நுட்ப நிறுவனத்தினால்(ITI) சான்றறளிக்கப்பட்ட, உள்ளடக்கப்பட்ட இரசாயனப் பொருட்களின் கலவை மற்றும் அளவு பொதியில் முறையாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மேலும், திறக்காத, பொதியிட்டு முத்திரையிட்ட இரசாயனப் பொருட்கள் வழங்கப்படல் வேண்டும் எனினும், ஒப்பந்த நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் அடங்கிய பொதியானது இலங்கை தரச்சான்றிதழ் அற்ற திறக்காத சந்தைப் பொருள் அல்ல. மேலும் அந்த பொதிகள் முத்திரையிடாமல் கம்பியினால் முத்திரையிட்டிருந்ததுடன், அவை சந்தையில் உள்ள திறக்கப்படாத முத்திரையிட்ட பொதிகள் என கருதமுடியாது. மேலும் (ITI) நிறுவனத்தினால் சான்றறளிக்கப்பட்ட, உள்ளடக்கப்பட்ட இரசாயனப் பொருட்களின் கலவை மற்றும் அளவுகள் என்பன பொதியில் முறையாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் இரசாயனப் பொருட்களை வழங்கிய பின்னர் காலியாகும் வெற்று கொள்கலன்களை தொடர்ந்து ஒப்பந்ததாரர் எடுத்துச் சென்று இரசாயனப் பொருட்களை மீண்டும் அதே கொள்கலனில் நிரப்பி வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு அனுமதித்தமை தரமற்ற இரசாயனப் பொருட்களை விநியோகிப்பதற்கு வைத்தியசாலையினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.	இது குறித்து விசாரணை மேற்கொண்டு தரமற்ற இரசாயனப் பொருட்களை பயன்படுத்த அனுமதித்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், ஒப்பந்ததாரர் மீது பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இரசாயனப் பொருட்கள் தரமற்றவை என அறிந்ததும் கட்டணம் செலுத்துவதை நிறுத்தி, தரமான இரசாயனப் பொருட்களை நேரடியாக வைத்தியசாலையினால் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
	ix.	2022 ஜூலை 01 ஆம் திகதிமுதல் 2023 ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதி முழுவதும் மேற்கூறிய	-அவ்வாறே-	-அவ்வாறே-

	குறைபாடுகளுடன் இரசாயனப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலை தொற்று கட்டுப்பாட்டு பிரிவும் அவ்வப்போது அவற்றில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டிய போதிலும், ஏல நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளபடி தரமான இரசாயனப் பொருட்களை பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வைத்தியசாலை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
	x. வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்கும் போது பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் சரியாக இரசாயனப் பொருட்கள் வழங்குவதாக ஒப்பந்ததாரர் இணங்கி உள்ளதுடன், மேலும் வைத்தியசாலையினால் அது கண்காணிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்த காலம் முடியும் வரை, அந்த இரசாயனப் பொருட்களின் மாதிரிகள் அவ்வப்போது ITI நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான தரத்தில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை வைத்தியசாலை நிர்வாகத்தினால் எடுக்கவில்லை. எவ்வாறாயினும் கணக்காய்வின் பின்னர் 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 06 மாதிரிகள் தொடர்பான ஆராய்வில் அந்த 06 மாதிரிகளும் உரிய தரத்தில் இல்லை என்பது ITI நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தரமற்றதாக வழங்கப்பட்ட இரசாயன பொருட்களுக்காக விநியோகத்தருக்கு 2022 ஜூலை முதல் 2023 மார்ச் வரை செலுத்தப்பட்ட ரூ. 3,023,405 இனை கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடப்பட்ட போதிலும், இக்காலப்பகுதியில் வைத்தியசாலைக்கு சுகாதார பாதுகாப்பான சுத்திகரிப்பு சேவைகள் கிடைக்கவில்லை என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ட)	மாத்தறை பொது வைத்தியசாலையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக உணவகத்தை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		

	i.	2022 மார்ச் 15 ஆம் திகதிய கொள்ளல் குழு தீர்மானத்தின்படி, முதலாவது விலைமனுதாரிக்கு டெண்டரை வழங்க முடிவு செய்தாலும், அந்த விலைமனு நிராகரிக்கப்பட்டதால் இரண்டாவது விலைமனுதாரி தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டாவது விலைமனுதாரியும் ஏல விலையை மறுத்ததால் ஒரு நாளைக்கு ரூ. 10,000 என்ற குறைந்தபட்ச விலையில் டெண்டரை வழங்க கொள்ளல் குழு தீர்மானித்தது. அதன்படி கணிக்கப்பட்ட ஏல விலையை அனைத்து விலைமனுதாரிகளும் மறுக்கப்பட்ட நிலையில் மீண்டும் விலைமனுக்கள் கோரப்பட்டு அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான பொருத்தமான விநியோகத்தரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2022 ஏப்ரல் 01 முதல் 2022 ஆகஸ்ட் 31 வரை முதலாவது மற்றும் இரண்டாவது விலைமனுதாரிகளின் குத்தகை பெறுமதியை விடவும் முறையே ரூ.1,710,000 மற்றும் ரூ. 900,000 குறைந்த பெறுமதிக்கு உணவகத்தை குத்தகைக்கு வழங்கியதால் அதே பெறுமதியில் அரசாங்க வருமானம் இழக்கப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.	அரசாங்கத்திற்கு மிகவும் நன்மை பயக்கும் வகையில் போட்டியுடனான கொள்ளல் முறைமையை பின்பற்றி உணவகத்தை வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும்.	2022.04.01 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு ஒரு நபருக்கு உணவகத்தை நடத்த பிராந்திய கொள்ளல் குழுவால் முடிவு செய்யப்பட்டது எனவும், எனினும் அந்த காலப்பகுதியில் பெரும் குழப்பமான சூழ்நிலையில் முதலாவது விலைமனுதாரியின் கோரிக்கையின்படி அவரது ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு இரண்டாவது விலைமனுதாரியின் கோரிக்கைக்கு ஏற்ப ஒரு நாளைக்கு ரூ. 8,000 இற்கு பதிலாக ஒரு நாளைக்கு ரூ.10,000 வாடகை அடிப்படையில் 2023.04.01 ஆம் திகதி முதல் நாட்டின் குழப்பமான சூழ்நிலை குறையும் வரை உணவகத்தை நடத்த மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்தது எனவும், அதன்படி அந்த நிலைமை தணிந்து நாடு இயல்பு நிலைக்கு திரும்புவதால் 2023.08.31 அன்று மீண்டும் விலைமனுக்கள் கோரப்பட்டு புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
	ii.	டெண்டர் ஆவணங்களின்படி, “ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் இருந்து வெளியேறும் விண்ணப்பதாரிகளின் விலைமனு பிணை அரச உடமையாக்கப்பட்டு அந்த விண்ணப்பதாரிகளின் பெயர்கள் அரசாங்கத்தின் நிபந்தனைகளை மீறும் ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் சேர்க்கப்படும்” என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதன்படி செயற்படவில்லை என்பதுடன், முதலாவது விலைமனுதாரியின் ரூ. 200,000 விலைமனு பிணை அரச வருமானத்தில் வைப்பு செய்யாது 2022 ஒக்டோபர் 09 ஆம் திகதி விநியோகத்தருக்கு முறைசாரா முறையில் விடுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வைத்தியசாலையின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கொள்முதல் வழிகாட்டல்களுக்கு இணங்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	ஆரசாங்கத்திற்கு மிகவும் நன்மை பயக்கும் வகையில் போட்டியுடனான கொள்முதல் வழிமுறைகளை பின்பற்றி உணவகத்தை வாடகைக்கு விட வேண்டும்.	முதலாவது விலைமனுதாரி ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுக்கவில்லை என்பதுடன், விலைமனு பிணையை விடுவித்துத்தருமாறு கோரப்பட்டது எனவும், அப்போது நாட்டில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலை மற்றும் பொது மக்கள் எதிர் கொண்ட பொருளாதார சிரமங்களை கருத்தில் கொண்டு விலைமனுதாரியின் பணிவான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அந்த விலைமனு பிணையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

	iii. 2022 ஆகஸ்ட் மாதத்திற்கான உணவகத்தின் வாடகை ரூ. 310,000 ஐ ஒரு வருட கால தாமதத்திற்குப் பிறகு உணவக உரிமையாளரிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	2022 ஆகஸ்ட் மாதத்திற்கான வாடகை மற்றும் நீர்க் கட்டணங்கள் தவறுதலாக அறவிடுவதற்கு தாமதமானது என்பதுடன், பொது வைத்தியசாலை பணிப்பாளரின் பெயரில் விநியோகத்தரினால் வைப்புச் செய்யப்பட்ட ரூ.300,000 இனை அதற்காக வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது எனவும், இருப்பினும் வசூலிக்கப்பட தொகை தற்போது வசூலிக்கப்பட்டு அரச வருவாயில் வைப்புச் செய்யப்பட்டது எனவும்.
(ண)	உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவின் இலத்திரனியல் துறைக்காக Patient Monitors இற்கு ரூ. 24,520,000 பெறுமதியான SP02 Sensors பொருளுக்கு 4,000 மேலதிக உதிரிப் பாகங்களுக்கான கொள்வனவின் போது ஏல நிபந்தனை 3.7 இன்படி விலைமனுதாரிகள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் எனினும், அவ்வாறு பதிவுச்சான்றிதழ் இல்லாத மூன்று விலைமனுதாரிகளிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு விலைமனு மதிப்பீடு செய்யப்பட்டு பதிவுச் சான்றிதழ் இல்லாத விலைமனுதாரிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. விலை மதிப்பீட்டு கொள்ளல் வழிகாட்டல்கள் கோவையின் 2.7.7, 7.8.6 மற்றும் 7.11 இற்கு இணங்கி செயற்படவில்லை.	-அவ்வாறே-	மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது குறித்த உபகரணத்திற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் இருந்த போதிலும் உதிரிப் பாகங்கள் மற்றும் துணை பாகங்களுக்கு தனித்தனி சான்றிதழ்கள் வழங்கவில்லை எனவும், எனவே அதற்கான மதிப்பீட்டின் போது விலைமனுதாரிகளினால் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை பாகங்களுக்கான சான்றிதழ்களை சமர்ப்பிக்கவில்லை என்பதால் மதிப்பீடுகளின் போது அதனை புறக்கணித்து சம்பந்தப்பட்ட சாதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டது எனவும், அவ்வாறே உதிரிப் பாகங்கள் மற்றும் துணை பாகங்கள் பயன்படுத்துவதில் எந்த பிரச்சனையும் எழவில்லை எனவும்.
(த)	உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவினால் ரூ. 7,300,000 பெறுமதியான 4000 NIBP Cuffs கொள்வனவின் ஏல ஆவணத்தின் இலக்கம் 3.7 இன்படி, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தின் (NMRA) பதிவுச் சான்றிதழ் தேவை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கிடைக்கப்பெற்ற 11	-அவ்வாறு-	-அவ்வாறு-

	விலைமனுக்களில் 04 விலைமனுக்கள் NMRA பதிவுச் சான்றிதழ் கொண்ட விநியோகத்தர்கள் ஆகும். விலைமனு மதிப்பீடுக்காக NMRA பதிவுச் சான்றிதழ் கொண்ட ஒரு விலைமனுதாரியுடன் 5 பேர்களிடம் மாதிரிகள் கோரப்பட்டன. கொள்ளல் வழிகாட்டல்கள் கோவையின் 7.7 மற்றும் 7.9.1 இற்கு இணங்காத வகையில் ஏல மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் இல்லாத விலைமனுதாரிகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.		
(ந)	உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவினால் ரூ. 1,450,000 மதிப்புள்ள Infusion Pumps இற்கு மேலதிக உதிரிப் பாகங்களை கொள்முதல் செய்ததில் விலைமனுதாரி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 82 இன்படி, NMRA சான்றிதழைப் பெறவில்லை எனவும் ஏல மதிப்பீட்டின் போது கொள்ளல் வழிகாட்டல்கள் கோவையின் 2.7.7, 7.8.6 மற்றும் 7.11 இற்கு இணங்கும் வகையில் செயற்படவில்லை.	-அவ்வாறு-	-அவ்வாறு-
(ப)	உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவின் இலத்திரனியல் துறைக்கான மருத்துவ உபகரணங்களை பராமரிப்பதற்கான உதிரி பாகங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையச் சட்டத்தின் 82 வது பிரிவின்படி மருத்துவ உபகரணங்களை பராமரிப்பதற்கான உதிரி பாகங்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி பெற வேண்டும். ரூ. 3,702,675 மதிப்புள்ள Patient Monitors இற்கு Nibp Pumps கொள்வனவின் ஏல ஆவணங்களில் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தில் பதிவுச் சான்றிதழின் தேவை குறித்து குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், மூன்று விநியோகத்தர்களின் வெவ்வேறு பிராண்ட் பெயர்களில் கொள்வனவு செய்த Nibp Pumps 150 இற்காக NMRA பதிவுச் சான்றிதழைப் பெறவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	ii. ரூ. 21,300,000 பெறுமதியான Patient Monitors இற்கான Etoc2 Sensor மூன்று பிராண்ட் பெயர்களின் கீழ் 120 அலகுகளை கொள்வனவு செய்யும் போது ஏல நிபந்தனைகளின் பிரிவு 3.7 இன்படி தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தில் (NMRA) பதிவுச் சான்றிதழைப் பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ஏல மதிப்பீட்டின் போது அந்த சான்றிதழ் இல்லாத விலைமனுதாரிகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டமை கொள்ளல் வழிகாட்டலின் 3.7 இற்கு இணங்கவில்லை என்பதுடன், ஒப்பந்தம் வழங்கப்பட்ட விலைமனுதாரியிடம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தின் பதிவுச் சான்றிதழ் இருக்கவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iii. உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவின் இலத்திரனியல் துறைக்குத் தேவையான உதிரி பாகங்கள் கொள்வனவின் போது கொள்ளல் வழிகாட்டலின் 2.8.5 இன்படிதொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாமல் இலத்திரனியல் துறைக்கான உயிரியல் மருத்துவ பொறியியலாளரின் பரிந்துரையின்படி கொள்ளல் குழுவினால் கொள்வனவிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 12 சந்தர்ப்பங்களில் ரூ. 44,365,447 மதிப்புள்ள உருதிப் பாகங்களுக்கான கொள்வனவு தனி உத்தியோகத்தர் ஒருவரின் விருப்பப்படி கொள்வனவு செய்வதற்கான பரிந்துரைக்கு கொள்ளல் குழு அனுமதி வழங்கியுள்ளது.	-அவ்வாறே-	கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்வதாகவும், தற்போது அனைத்து மதிப்பீட்டு நடவடிக்கைகளும் முறையாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் ஊடாக மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது எனவும்.
(ம)	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு கொள்வனவுகளின் கீழ் கராப்பிட்டி போதனா வைத்தியசாலையினால் பரிந்துரைக் குழுக்களின் அங்கீகாரம் பெறாமல் (Non Formulary) ரூ. 763,748 பெறுமதியான 03 பொருட்களைக் கொண்ட 890 அலகுகளை கொள்வனவு செய்துள்ளது.	முறையான அனுமதி கொண்ட மருத்துவப் பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்தல் வேண்டும்.	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு கொள்வனவுகளின் கீழ் பரிந்துரைக் குழுக்களின் அங்கீகாரம் பெறாத (Non Formulary item) 02 இனை மூன்று சந்தர்ப்பங்களில் மருத்துவ விநியோகப் பிரிவின் பரிந்துரையுடன் நிறுவன பரிந்துரை குழுவின் அனுமதி பெறாத பொருட்களுக்காக நியமிக்கப்பட்ட விஷேட குழுவின் மற்றும் நிறுவன மருந்துகள் மீளாய்வு குழுவின்

			அனுமதியுடன் கொள்வனவு செய்து நோயாளர்களுக்கு வழங்கப்பட்டது எனவும்.
(ய)	2023 ஆம் ஆண்டுக்காக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவை வழங்கும் போது, ரசாவி மருத்துவ வளாகம் தவிர்ந்த அபேக்ஷா வைத்தியசாலை மற்றும் ரசாவி மருத்துவ வளாகம் என இரண்டு ஒப்பந்தங்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு இரண்டு ஒப்பந்தங்களையும் ஒரே விநியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவை வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்த மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. முழு வைத்தியசாலைக்கும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதை ஒரே ஒப்பந்தமாக எடுத்து கொள்ளல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆனால் 2019 ஆம் ஆண்டு முதல் ரசாவி மருத்துவ வளாகம் தவிர்ந்த அபேக்ஷா வைத்தியசாலை மற்றும் ரசாவி மருத்துவ வளாகம் என இரண்டு ஒப்பந்தங்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு இரண்டு ஒப்பந்தங்களையும் ஒரே விநியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட காரணத்தால் இரண்டு ஒப்பந்தங்களுக்கும் பொது செலவினங்களை தனித்தனியாக ஏற்க வேண்டியிருந்தது என்பதுடன், தவிர்க்கப்பட முடியுமான பொது செலவுகளில் ஒர பகுதியை தடுப்பதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	ரசாவி மருத்துவ வளாகத்தின் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக ஆரம்பத்தில் அதற்கான உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வசதிகளை வழங்கி இந்த சேவை மேற்கொள்ளப்பட்டது எனவும், பின்னர் உதவி வழங்கிய நிறுவனம் ரசாவி வளாக நிர்வாக நடவடிக்கைகளை வைத்தியசாலைக்கு ஒப்படைத்ததால் அந்த வளாகத்தின் சுத்திகரிப்பு சேவைகளுக்கு புதிய ஒப்பந்ததாரர் நியமிக்கப்பட்டார் எனவும், அதன்படி ரசாவி மருத்துவ வளாகம் மற்றும் வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான உரிய ஒப்பந்தம் 06 மாத கால இடைவெளியில் நிறைவேற்றப்பட்டதால் தனித்தனியாக கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டது எனவும், எனினும் இனிமேல் இந்த 02 அலகுகளும் ஒரே

			ஒப்பந்ததாரரின் கீழ் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும்.
	ii. ரசாவி மருத்துவ வளாகம் தவிர்த்து, அபேக்ஷா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைக்காக 2021/2022 டெண்டர் ஆவணங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட மொத்த தொழிலாளர் செலவில் 15 சதவீதம் என்ற பொது செலவு வரம்பு, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர் கொட்ட பின்னர் 25 சதவீதமாக சுகாதார அமைச்சின் கொள்ளல் குழு சீ 2 இனால் அதிகரிக்கப்பட்ட போதிலும், பொருளாதார நெருக்கடி ஒப்பந்ததாரர்களின் பொதுச் செலவுகள் எந்த அளவினால் அதிகரிக்கும் என்ற மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.	-அவ்வாறே-	ஊழியர் பராமரிப்பிற்கான செலவு, அலுவலகப் பராமரிப்பு, மாதாந்த/ வருடாந்தம் வழங்க வேண்டிய உபகரணச் செலவுகள் மற்றும் பிற செலவுகள் (இந்த செலவுகள் ஒப்பந்ததாரர்களுக்கிடையே மாறுபடும்) போன்ற செலவு கூறுகள் பொதுச் செலவில் உள்ளடங்குகிறது. இவற்றில் சில செலவுக்கூறுகள் (உதாரணமாக- வரிகள் போன்றவை) கணக்காய்வில் குறிப்பிடப்பட்டள்ளவாறு ஆதாரம் மூலம் உறுதிப்படுத்தினாலும், பெரும்பாலான பொது செலவுகள் (உதாரணமாக – உபகரணங்களின் தேய்மானம், பராமரிப்புச் செலவுகள் மற்றும் இயக்கச் செலவுகள்) அவ்வாறு ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்த முடியாது என்பதால் அனைத்து பொது செலவுகளையும் ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்துவது றடைமுறை சாத்தியமற்றது. மேலும், இவ்வாறு உறுதிப்படுத்த முடியாத செலவுகள் தொடர்பாக மதிப்பீடுகள் செய்வதும் ஒரு கடினமான பணியாகும். எவ்வாறாயினும், கணக்காய்வின் அவதானிப்பு குறித்து கவனம் செலுத்தி ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்த முடியுமான பொது செலவுக் கூறுகளை உறுதிப்படுத்திய பின்னரே கொடுப்பனவுகள் செலுத்தப்படும் என்ற நிபந்தனைகள் எதிர்கால ஒப்பந்தங்களில் சேர்க்கப்படும். அதன்படி, ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்த முடியுமான பொது

			பணிகளுக்கான செலவுக் கூறுகளை அவ்வாறு உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியுமான வகையில் எதிர்கால ஒப்பந்தங்களில் ஒதுக்கீடுகள் செய்யப்படும்.
	iii. மொத்த பொது செலவு வரம்பு 25 சதவீதமாக உயர்த்தப்பட்டாலும், அதிகரித்த பொது செலவை ஒப்பந்ததாரரினால் ஆதார ஆவணங்கள் மூலம் உறுதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனை டெண்டர் ஆவணத்தில் இல்லாததால், ஒப்பந்ததாரரினால் பொது செலவின் கீழ் பணியாளர் பராமரிப்பு மற்றும் மாதாந்தம்/ வருடாந்தம் வழங்க வேண்டிய உபகரணச் செலவுகளுக்காக முந்தைய ஆண்டின் செலவை விட முறையே 280 சதவீதம் மற்றும் 146 சதவீதம் செலவு அதிகரிப்புடன் விலைகள் சமர்ப்பிக்கும் போது தனித் தனியாக குறிப்பிடாமல் பொது செலவிற்காக முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1027 சதவீதத்தினால் அதிகரிப்புடன் விலைகள் சமர்ப்பிப்பதற்கு இடமளித்துள்ளது. இது சம்பந்தமாக முறையான ஆராய்ந்து ஒப்பந்ததாரருக்கு கூடுதலாக செலுத்தியிருப்பின் அந்த பணத்தை அதற்கு பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv. சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்கான ஏல ஆவணங்களின் II வது பகுதி ஏல தரவு படிவத்தின் பிரிவு ITB 11.1 (எ) (J) இன்படி சுத்திகரிப்பு சேவைக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் சரியான தரத்தில் உள்ளன என்பதற்கான சான்றிதழை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடம் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும் எனினும், ஒப்பந்ததாரரினால் ஏல நிபந்தனைகளின்படி வழங்கப்பட வேண்டிய 12 இரசாயனப் பொருட்களில் 4 இற்காக	-அவ்வாறே-	சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்காக விலைமனுதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட இரசாயனப் பொருள்கள் உட்பட பல்வேறு பொருட்களுக்காக தனித் தனியே தர பரிசோதனைக்காக உரிய ஆய்வுகூட அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் தரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் துல்லியத்தை சரிபார்த்தல் ஆகியவை அதிக காலம் எடுக்கக்கூடிய

	மாத்திரமே ஆய்வுகூட அறிக்கை சமர்த்துள்ளதுடன், சலவைத் தூளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகூட அறிக்கை 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஒரு பழைய அறிக்கை ஆகும். மேலும், Disinfectant Cleaner எனும் இரசாயனப் பொருள் வகைக்காக ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகூட அறிக்கை எந்த பிராண்ட் பெயருடன் தொடர்புடையது என்பதை உறுதி செய்யவில்லை.		சிக்கலான மற்றும் கடினமான பணி எனவும், விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் போது வழங்கப்பட்ட பிராண்ட் பெயர்களில் ஒப்பந்தத்தை செயற்படுத்தும் போது வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படலாம் எனவும், அதன்படி எதிர்கால கொள்முதல் நடவடிக்கைகளின் போது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் அனைத்து பொருட்களும் 2003 ஆம் ஆண்டின் 09 இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் கீழ் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும் விவரக் குறிப்புகளுக்கு இணங்க தரப்படுத்தப்பட்ட நிபந்தனைகளுடன் தொடர்புடைய பொருட்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று ஒப்பந்த நிபந்தனைகளில் சேர்க்கப்படும் எனவும், அதன்படி சட்டத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க சந்தையில் பெறக்கூடிய தரப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களை மட்டும் பெறுவதன் மூலம் ஒப்பந்தத்தை செயற்படுத்த வைத்தியசாலையினால் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும்.
	v. இவ்வாறு வழங்கப்பட வேண்டிய இரசாயனப் பொருட்களுக்கு ஆய்வுகூட அறிக்கை வழங்காமை மற்றும் வழங்கப்பட்ட ஆய்வுகூட அறிக்கைக்கு அமைய வழங்குவதற்கு இணங்கிய 4 வகை இரசாயனப் பொருட்களில் 3 வகை உரிய தரமற்றவை என உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், சுகாதார அமைச்சின் கொள்ளல் குழு "சி" இனால் இந்த ஒப்பந்தத்திற்கு உருப்படியான விலைமனுதாரி என தெரிவு செய்துள்ளது. இந்த நிலைமையானது சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் கொள்ளல் குழுவின் பொறுப்பற்ற மற்றும் அலட்சிய தன்மையை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	vi. இது குறித்து கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் வைத்தியசாலையினால் சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 9 வகையான இரசாயனப் பொருட்கள் குறித்து, 2024 மார்ச் மாதத்தில் தொழில்நுட்ப நிறுவனத்திடம் தரச் சோதனை செய்துள்ளதுடன் அதன் சோதனை அறிக்கையை பெற்றுள்ளது. அதில் 6 வகையான இரசாயனப் பொருட்களும் தரநிலையின் அளவுரு மதிப்புடன் இணங்கவில்லை என்பதுடன், மீதமுள்ள 3 வகையான இரசாயனப் பொருட்கள் தொடர்பாக பெறப்பட்ட ஆய்வுகூட அறிக்கையில் தரநிலையின் அளவுரு மதிப்புடன் இணங்கியுள்ளதா என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை. மேலும் ஏல ஆவணத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகூட அறிக்கையின்படி தரநிலைக்கு இணங்காத Toilet Comed Cleaner மற்றும் Dish wash Powder என்ற 2 வகை இரசாயனப் பொருட்களும் தர நிலைக்கு இணங்கவில்லை என 2024 மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட அறிக்கையிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஏல நிபந்தனைகளுக்கு மாறாக ஒப்பந்த வருடம் முழுவதும் வழங்கப்பட்ட இரசாயப் பொருட்களுக்காக செலுத்தப்பட்ட பணம் விநியோகத்தரிடம் இருந்து அல்லது பொறுப்பான உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும் மற்றும் மேற்படி ஆய்வுகூட அறிக்கையைப் பெறுவதற்காக வைத்தியசாலையினால் செலவிட்ட ரூ. 266,806 இனை சுத்திகரிப்பு சேவை விநியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இது குறித்து கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டது எனவும்.
	vii. 2022 நவம்பர் 23 ஆம் திகதி சுகாதார அமைச்சின் கொள்ளல் குழு சீ 2 இன் தீர்மானத்தின் நிபந்தனை 04 இன்படி ஏல ஆவணத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள் வகைகள் மற்றும் தரநிலைகள் அதே பிராண்ட் பெயர்கள் மற்றும் தரநிலைகளின் கீழ் வைத்தியசாலைக்கு	-அவ்வாறே-	2022/2023 ஆம் ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஏல ஆவணங்களில் இரசாயனப் பொருட்களின் பிராண்ட் குறிப்பிடப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் சுத்திகரிப்பு

		வழங்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திய பிறகு பணம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், ஏல ஆவணங்களின் பகுதி V இல் 8.3 வது நிபந்தனையின்படி உரிய தரநிலையில் உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதாக தொற்று கட்டுப்பாட்டு பிரிவின் தலைவர் அல்லது நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் மாதாந்த பில்களை தீர்க்கும் போது பரிசீலிக்கப்பட வேண்டும். எனினும், வைத்தியசாலையின் தொற்று கட்டுப்பாட்டு பிரிவின் பிரதான தாதி உத்தியோகத்தரினால் இரசாயனப் பொருட்கள் சரியான அளவில் சந்தை பொதிகளுடன் வழங்கப்பட்டுள்ளதாக சான்றளிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் மாதாந்த கொடுப்பனவுகளை வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இரசாயப் பொருட்கள் தேவையான தரத்தில் உள்ளதா என்பதை உறுதி செய்யாமல் ஒப்பந்த விதிமுறைகளுக்கு மாறாக ஒப்பந்ததாரருக்கு இரசாயனப் பொருட்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது.		நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்கப்படும் இரசாயனப் பொருட்கள் தொடர்பாக பராமரிக்கப்பட வேண்டிய தரம், பயன்படுத்த வேண்டிய முறை, சரியான கலைப்பு செயல்முறையின் நிபந்தனைகள் உட்பட அடிப்படை விவரக் குறிப்புகளுடன் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் கொள்ளல் பிரிவிற்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
	viii.	ஒப்பந்தத்தின்படி, ஒப்பந்ததாரரினால் வழங்கப்படும் அரசாயனப் பொருட்களின் பிராண்ட், தரம் மற்றும் உற்பத்தி பொதி எவை என்பது குறித்து சரிபார்த்து பெறப்பட வேண்டும் எனினும், வைத்தியசாலையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட இரசாயனப் பொருட்களின் சந்தைப் பெயர்கள் ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்ட பில்களில் குறிப்பிடப்படவில்லை.	-அவ்வாறே-	உரிய இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பெறும்போது அவற்றின் தரத்தை சரிபார்க்க தொற்று கட்டுப்பாட்டு பிரிவிற்கு அனுப்பப்படுவதுடன், அதனூடு மாதாந்தம் கிடைக்கப்பெறும் அறிக்கையின் அடிப்படையில் பணம் செலுத்தப்படும் எனவும்.
	ix.	ரசாவி மருத்துவ வளாகம் தவிர்ந்த அபேக்ஷா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைக்காக வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய 17 உபகரண வகைகளுக்கு வருடாந்த தேவையை விட 66 உபகரணங்கள் குறைவாகவும், ரசாவி மருத்துவ வளாகத்தை சுத்தம் செய்வதற்காக வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய 05 உபகரண வகைகளுக்கு வருடாந்த தேவையை விட 14	-அவ்வாறே-	வருடாந்த உபகரணங்களுக்காக டெண்டர் ஆவணங்களில் விலைகள் குறிப்பிடப்படவில்லை எனவும், அதற்காக வைத்தியசாலையினால் பணம் செலுத்தப்படவில்லை எனவும், டெண்டர் ஆவணத்தில் பொது பணி செலவுகளின் கீழ் “மாதாந்த/ வருடாந்தம் வழங்க

	உபகரணங்கள் குறைவாகவும் ஒப்பந்ததாரரினால் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறாக வருடாந்த தேவைக்கு குறைவாக உபகரணங்களை வழங்குவதன் மூலம் வைத்தியசாலையின் துப்பரவு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளாமை அல்லது வருடாந்த தேவை மிகைப்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்ததாரரினால் வைத்தியசாலைக்கு குறைவாக வழங்கப்பட்ட உபகரணங்கள் தொடர்பாக ஏல ஆவணங்களின் பகுதி V இன் 4.7.2 நிபந்தனையின் பிரகாரம் கட்டணம் எதுவும் வைத்தியசாலையினால் விதிக்கப்படவில்லை.		வேண்டிய உபகரணங்களுக்கான செலவுகள்" என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், விலைகள் சமர்ப்பிக்கும் போது தனித்தனியாக குறிப்பிடப்படவில்லை எனவும், மாதாந்தம் வழங்கப்பட வேண்டிய உபகரண செலவு மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், உரிய உபகரணங்கள் வைத்தியசாலையின் தேவைக்கு ஏற்ப வழங்கப்பட வேண்டும் என்று டெண்டர் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், இது குறித்து நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்ட போது, உரிய வருடாந்த உபகரண ஒப்பந்தம் முழு ஆண்டுக்கும் வழங்க முடியும் எனவும் ஒரே முறையில் வழங்க தேவைப்பட்டால் டெண்டர் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள மாதாந்த/ வருடாந்த உபகரணங்களுக்கு சமர்ப்பித்துள்ள முழுத் தொகையையும் வழங்க வேண்டும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது எனவும்.
	x. மேலும் பல ஆண்டுகளாக இதே ஒப்பந்ததாரர் வைத்தியசாலையின் சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்டு வருவதுடன், ஆண்டு தோறும் வைத்தியசாலையினால் ஒப்பந்ததாரரிடமிருந்து பெற வேண்டிய உபகரணங்களுக்கு என்ன ஆனது என்ற விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன். இந்த உபகரணங்கள் ஆண்டுதோறும் ஒப்பந்த காலத்தின் முடிவில் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு அல்லது அடுத்த ஆண்டில் பயன்படுத்தப்பட்டால் ஒப்பந்ததாரருக்கு அதற்கான பணம் செலுத்தாதிருக்க கவனம் செலுத்த வேண்டும். எனினும் அதன்படி செயற்படவில்லை.	-அவ்வாறே-	இந்த வருடாந்த உபகரணங்களுக்கு வைத்தியசாலையினால் பணம் செலுத்தப்படுவதில்லை என்பதால், அந்த உபகரணங்களை வைத்தியசாலைக்கு எடுத்துக்கொள்வது பொருத்தமானதல்ல எனவும், புதிய சேவை ஒப்பந்தம் 02 இற்கு உரிய வருடாந்த உபகரண பட்டியல்களை ஆராய்ந்து பற்றாக்குறையாகவுள்ள உபகரணங்களை வைத்தியசாலைக்கு வழங்குமாறு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும்.

	xi. ரசாவி மருத்துவ வளாகம் தவிர்ந்த அபேக்ஷா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைக்கான ஒப்பந்தத்தின்படி வழங்க வேண்டிய துணிகள், சிவிலிங் பிரஷ்கள், கண்ணாடி துடைப்பான்கள் மற்றும் தரை மொப்பர்கள் 2023 ஜனவரி முதல் 2023 டிசம்பர் வரையிலான காலம் முழுவதும் ஒப்பந்ததாரரினால் வழங்கப்படவில்லை என்பதுடன், வைத்தியசாலை கட்டிடங்களில் சிலந்தி வலை அகற்றுதல் மற்றும் ஜன்னல்களை சுத்தம் செய்தல் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும் இவ்வாறு ஒப்பந்ததாரரினால் வழங்காத மேற்படி பொருள்களுக்கு ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட பில் வைத்தியசாலையினால் அறவிட்ட போதிலும், துணிகளுக்காக வைத்தியசாலையினால் அறவிடப்பட்ட ரூ.75 விலை ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூ. 250 என்ற விலையை விட குறைவாகும். அதன்படி, ரூ. 58,800 இனை (12x28x175) ஒப்பந்ததாரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏல ஆவணத்தின் பகுதி V இன் 4.7.2 நிபந்தனையின்படி ஒப்பந்ததாரரினால் ஒப்பந்தத்தின்படி வைத்தியசாலைக்கு வழங்கப்படாத பொருட்களுக்கு 25 சதவீதம் மேலதிக தொகை அறவிடப்படல் வேண்டும் எனினும் வைத்தியசாலையினால் அவ்வாறு அறவிடவில்லை. கூடுதலாக செலுத்திய தொகை மற்றும் 25 சதவீதம் மேலதிக தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து அல்லது பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	கூடுதலாக செலுத்திய ரூ.58,800 மற்றும் அதற்கான 25 சதவீத மேலதிக தொகையையும் கணக்கிட்டு எதிர்வரும் பில்களில் அறவிடுதல் மற்றும் இது குறித்து நிறுவனத்திற்கு தெரிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	xii. ஒப்பந்தத்தின்படி ரசாவி மருத்துவ வளாகம் தவிர்ந்த அபேக்ஷா வைத்தியசாலை மற்றும் ரசாவி மருத்துவ வளாகத்தின் பகல் சேவைக்காக 99 சுத்திகரிப்பு தொழிலாளிகள் மற்றும் 05 வேலை மேற்பார்வையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனினும் 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது 85 தொழிலாளர்களும், 4 வேலை மேற்பார்வையாளர்களும் மாத்திரமே அதாவது ஒப்பந்த எண்ணிக்கையை விட 15 ஊழியர்கள் குறைவாகவே சேவையில்	-அவ்வாறே-	கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் ஆய்வு மேற்கொண்ட தினத்தில் சேவைக்கு வராத ஊழியர்களுக்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சுத்திகரிப்பு பணியாளர்களின் வருகை குறித்து வாரத்திற்கு ஒருமுறை களசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சுத்திகரிப்பு ஊழியர்கள் கையொப்பமிடும்

	ஈடுபடுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அன்றைய தினம் சேவைக்கு சமூகமளித்ததாக வரவு புத்தகத்தில் கையொப்பமிட்ட 15 ஊழியர்கள் உண்மையாக சேவையில் ஈடுபடவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தாத ஊழியர்களின் எண்ணிக்கை ஒப்பந்தத்தின்படி 15 சதவீதமாகும். விபரம் இணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்ததாரரினால் வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுத்திகரிப்பு ஊழியர்களின் வரவு பதிவேட்டின்படி 2023 ஆம் ஆண்டு முழுவதும் ஒப்பந்தத்தின்படி ஈடுபடுத்தப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை அல்லது அதற்கு கிட்டிய ஊழியர் எண்ணிக்கை பதியப்பட்டுள்ளமை கணக்காய்வில் சிக்கலாக உள்ளதுடன் அது தொடர்பில் வைத்தியசாலையின் உள்ளக நிர்வாகம் பலவீனமாக இருப்பது அவதானிக்கப்பட்டது.		புத்தகம் முறையாக பராமரிக்குமாறும், போலி கையொப்பங்கள் இடாமல் இருக்கவும், அவ்வாறு செய்யப்படுவது அவதானிக்கப்பட்டால் பதிவேட்டில் உள்ள கையொப்பங்களை வெட்டி நீக்குவதற்கும், உரிய மாதத்திற்கான பில்களில் தண்டனைப் பணம் அறவிடுவதற்கும், மேற்படி விடயங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
	xiii. ரசாவி மருத்துவ வளாகத்தில் சுத்தம் செய்யப்பட வேண்டிய அலகுகளின்/வாட்டுகளின் எண்ணிக்கையும், அதற்குத் தேவையான சுத்திகரிப்பு தொழிலாளர்களின் எண்ணிக்கையும், வைத்தியசாலையின் மொத்த தேவையில் 31 சதவிகிதம் என்றாலும், ரசாவி மருத்துவ வளாகத்தின் சுத்திகரிப்பு சேவைக்காக ஒப்பந்ததாரரினால் மாதந்தோறும் வழங்கவேண்டிய 10 உபகரணங்களின் தேவைப்பாடு வைத்தியசாலையின் மொத்த தேவையில் 43 சதவிகிதம் முதல் 84 சதவிகிதம் வரை காணப்பட்டமை ரசாவி மருத்துவ வளாகம் சுத்திகரிப்பு சேவைக்காக ஒப்பந்ததாரரினால் மாதாந்தம் வழங்கவேண்டிய உபகரணங்கள் தொடர்பாக மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	சுத்திகரிப்பு குழுவினால் மீண்டும் ஒருமுறை வைத்தியசாலையின் அனைத்து பிரிவுகள் மற்றும் துறைகளுக்கான இந்த உபகரணங்களின் தேவைகளை கணக்கிட்டு புதுப்பிக்கப்பட்ட அறிக்கையை தயாரித்து எதிர் காலத்தில் அமைச்சின் கொள்ளல் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	xiv. சுத்திகரிப்பு ஊழியர்களுக்கு வைத்தியசாலை வளாகத்தில் அலுவலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள போதிலும், டெண்டர் ஆவணங்களில் பகுதி V இன் 4.7.11 நிபந்தனையின்படி, அதற்காக வைத்தியசாலையினால்	-அவ்வாறே-	ஏற்கனவே இந்த அலுவலகங்களுக்கு மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு உரிய தளத்திற்கான வாடகை மாதாந்தம் அறவிடப்பட்டு வருவதாகவும், நீர் மற்றும்

	ஒப்பந்ததாரரிடம் எந்த கட்டணமும் அறவிடவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		மின்சாரத்திற்காக கட்டண அறவீடுகள் தொடர்பில் வைத்தியசாலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் பரிந்துரையின்படி, நீர் மற்றும் மின்சாரத்திற்கான மானிகள் பொருத்தும் வரை எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை அறவிடுவதற்கும், நீர் மற்றும் மின்சாரத்திற்கான மானிகள் பொருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும்.
(க)	2012 டிசம்பர் 05 ஆம் திகதிய அமப/12/1602/509/005-11 எனும் அமைச்சரவைத் தீர்மானத்தின்படி தேசிய தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக, அரசாங்க வைத்தியசாலைகளுக்குத் தேவையான சத்திர சிகிச்சை துணிகளின் (Surgical gauze) வருடாந்த தேவை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டதுடன், மருத்துவ விநியோகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட Surgical gauze உற்பத்தியாளர்களுக்கு வருடாந்தம் கோட்டா முறைக்கு Surgical gauze வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், 2022 ஆம் ஆண்டில் மருத்துவ விநியோகப் பிரிவினால் 268,500,000 ரூபா பெறுமதியான 03 மில்லியன் மீட்டர் சத்திர சிகிச்சைத் துணியை சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (HSEP) மூலம் இறக்குமதி செய்து கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. PRONTO அமைப்பிலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, வைத்தியசாலைகளின் வருடாந்த துணி தேவை சுமார் 53 மில்லியன் மீட்டர் என்பதுடன், மருத்துவ விநியோகப் பிரிவு ஆண்டுக்கு 30 மில்லியன் மீற்றர் துணியை மட்டுமே மதிப்பீடு செய்து ஆடர் செய்யப்பட்ட போதிலும், அமைச்சினால் காலாண்டுக்கு	இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	Pronto கணனி அமைப்பின்படி வருடாந்த துணி தேவை சுமார் 53 மில்லியன் மீட்டர் என்பதுடன், அது நிறுவனங்களிடமிருந்து அனுப்பப்பட்ட கணிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீடு எனவும், மருத்துவ விநியோகப் பிரிவு சாதாரண முறைக்கு அமைய கடந்த

		6 மில்லியன் மீற்றர் வீதம் 24 மில்லியன் மீட்டர் துணிக்கு மட்டுமே கோட்டா வழங்கியுள்ளது. அதன்படி, மதிப்பீடுகள் தொடர்பில் கணக்காய்வில் சிக்கல்கள் எழுந்ததுடன் 2022 ஆம் ஆண்டுக்காக கோட்டா முறைக்கு விநியோகிப்பதற்கு வருடாந்தத் தேவை 57 சதவீதம் மட்டும் ஆடர் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதுடன், எஞ்சிய 43 சதவீதத்தையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், இதன் காரணத்தால் போலியான பற்றாக்குறையை காட்டி அவசர கொள்முதல் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதா என்பதும் அவதானிக்கப்பட்டது.		கால தரவுகளுடன் ஒப்பிட்டு அடுத்த ஆண்டுக்காக கணிக்கப்பட்ட தேவை 30 மில்லியன் மீட்டர் துணியை ஆடர் செய்தது எனவும், அந்த 30 மில்லியன் தேவை மருத்துவ விநியோகப் பிரிவின் சத்திர சிகிச்சைத் துணி வழங்குவதற்கான குழுவிடம் சமர்ப்பித்து அந்த குழுவின் ஆலோசனைப்படி சத்திர சிகிச்சை துணி விநியோகத்தர்களுக்கு பங்கீட்டு முறை வழங்கப்பட்டு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், மேலும், 30 மில்லியனை 4 காலாண்டுகளாகப் பிரித்து பங்கீட்டு முறையில் விநியோகத்தர்களுக்கு பகிந்தளிக்கப்பட்டு வழங்கப்பட்டது எனவும், எனினும் இந்த ஒதுக்கீட்டைப் பெற்ற சில விநியோகத்தர்கள் தங்கள் ஒதுக்கீட்டை முழுமையாக வழங்காததால் 6 மில்லியன் பற்றாக்குறை ஏற்பட்டது எனவும், மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கிடைக்கும் நிறுவன வருட தேவை, கடந்த 05 வருடங்களின் வருடாந்த தேவை, வழங்கல் மற்றும் நுகர்வு ஆகியவற்றின் அடிப்படையில் மருத்துவ விநியோகப் பிரிவினால் மீண்டும் கணிக்கப்படும் எனவும், இந்த கணிக்கப்பட்ட தேவையை மட்டுமே ஆடர் செய்யப்படும் எனவும், நிறுவனங்களினால் கோரப்பட்ட வருடாந்த தேவையில் 43 சதவீதம் ஆடர் செய்து பெறப்படுவது தேவைக்கு அதிகமாக இருக்கும் என்பதால் அவ்வாறு ஆடர் செய்யவில்லை எனவும்.
	ii.	2022 ஆண்டில் மருந்துவ விநியோகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 302 சத்திர சிகிச்சை துணி	-அவ்வாறே-	மேலே (அ) இன் கீழ் மருத்துவ விநியோகப் பிரிவின் கணிப்பீட்டு மதிப்பீடு

	விநியோகத்தர்களில் 36 விநியோகத்தர்கள் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போதைய விலையில் தங்கள் துணி கோட்டாவை வழங்க முடியவில்லை என அறிவித்துள்ளனர் என்பதும், மொத்த வருடாந்த தேவையை மதிப்பீடு செய்து தேவையை சரியாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சை துணிகளுக்கு தட்டுப்பாடு நிலவியது என்பதும் அவதானிக்கப்பட்டதுடன், மருத்துவ விநியோகப் பிரிவினால் சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (HSEP) மூலம் 12 மில்லியன் மீட்டர் துணியை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்போது 03 மாத பாதுகாப்பு இருப்பை பேணுவதற்கு 03 மில்லியன் மீட்டர் துணியை பெறுவதற்கும், 500 மில்லியன் ரூபாவிற்கு அதிகமான கொள்முதல் திட்ட கொள்முதல் குழுவினால் மேற்கொள்ள முடியாது என்பதால் ஆர்டரை 03 மில்லியன் மீட்டருக்கு குறைத்து விலைமனு கோருவதற்கும், மருத்துவ விநியோகப்பிரிவின் பதில் பணிப்பாளரின் பங்கேற்புடன் 2022 நவம்பர் 21 ஆம் திகதி திட்ட கொள்ளல் குழுவில் மருத்துவ விநியோகப் பிரிவில் அவசரத் தேவை எனக்கூறி விலைமனு சமர்ப்பித்த ஒரேயொரு விலைமனுதாரியான Sisili Projects Consortium தனியார் நிறுவனத்திற்கு 03 மில்லியன் மீட்டர் துணி ஆர்டரை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில், மருத்துவ விநியோகப் பிரிவில் அதிக விலைக்கு சத்திர சிகிச்சை துணியை கொள்வனவு செய்வதற்கான அவசியம் இருக்கவில்லை என்பதும், ஆர்டர் வழங்கப்பட்ட நேரத்தில் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து 3,635,700 மீட்டர் துணி மருத்துவ விநியோகப் பிரிவிற்கு விநியோகித்துள்ளது என்பதும், 2022 செப்டம்பர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் சுமார் 8 மில்லியன் மீட்டர் துணி பெறல் மற்றும் வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.		தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப தேவையைப் பெறுவதற்கான முறை குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், எனவே, இவ்வாறு சத்திர சிகிச்சை துணி தட்டுப்பாடு ஏற்பட்டமை வருடாந்த தேவையை மதிப்பீடு செய்வதில் அல்ல என்பதுடன், மாறாக கோட்டாவை பெற்ற விநியோகத்தர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கோட்டா முறையாக கிடைக்கவில்லை எனவும், அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக துணிக்கு தேவையான முக்கிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தடைகள் காரணமாக இவ்வாறு நடைபெற்றது எனவும், இந்த சத்திர சிகிச்சைத் துணிக்கான தட்டுப்பாடு குறித்து கௌரவ அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சத்திர சிகிச்சைத் துணி 12 மில்லியன் சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (HSEP) மூலம் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது எனவும் அதன்படி இவ்வாறு மேற்கொள்ளப்பட்டது எனவும், மேற்குறிப்பிட்ட விடயங்கள் காரணமாக துணிக்கான பாதுகாப்பான இருப்பு தேவையைப் பெறுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB-HSEP) திட்டத்தின் ஊடாக 12 மில்லியன் மீட்டர் ஆர்டரை வழங்குவதற்கு சுகாதார அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின்படி முடிவு செய்யப்பட்டது எனவும், மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சிய இடவசதி காரணமாக அந்த அளவு 12 மில்லியன் மீட்டரில் இருந்து 3 மில்லியன் மீட்டர் வரை குறைத்து விலைமனு கோருவதற்கு மேற்படி கூட்டத்திலும்

			தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் டெண்டர் சபை ஊடாக மெற்கொள்ளப்பட்டது எனவும், இந்த டெண்டர் துணி மீட்டர் ரூ. 89.50 இற்கு (Vat இன்றி) ரூ. 268,500,000 மொத்த பெறுமதிக்கு கொள்ளல் மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்ளல் குழுவின் ஊடாக வழங்கப்பட்டது எனவும்.
	iii. இவ்வாறு ஆர்டர் பெற்ற விநியோகத்தர், மருத்துவ விநியோகப் பிரிவின் கோட்டா முறையின் கீழ் ரூ. 74.96 படி சத்திர சிகிச்சைத் துணிகள் விநியோகிக்கும் ஒரு உள்நாட்டு விநியோகத்தர் என்பதும், ஆர்டர் செய்யும் போது ஒரு மீட்டர் ரூ. 89.50 இற்கு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து வழங்குவதற்கான விலைமனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. எனினும் இது உண்மையிலேயே இந்திய உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டவையா அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவையா என்பதை மருத்துவ விநியோகப்பிரிவினால் உறுதி செய்திருக்கவில்லை.	-அவ்வாறே-	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB-HSEP) திட்டத்தின் ஊடாக இந்த சத்திர சிகிச்சைத் துணி ஆர்டரை ரூ. 89.50 இற்கு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து வழங்குவதற்கான தீர்மானத்தை அந்த திட்டத்தினூடு மேற்கொள்ளப்பட்டது எனவும்.
	iv. உள்நாட்டு உற்பத்தியாளரிடமிருந்து ஒரு மீட்டர் ரூ.74.96 இற்கு கொள்வனவு செய்யக்கூடிய சாத்தியம் இருந்த போதிலும் மற்றும் 2022 நவம்பர் மாத நிலவரப்படி உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் கோட்டாவுக்குரிய தொகையை வழங்கப்பட்டு வந்த நிலையில் புதிய விநியோகத்தர் ஒருவரிடமிரந்து ஒரு மாதத்திற்கு 100 மீட்டர் ரோல்கள் 3750 வீதம் 03 மில்லியன் மீட்டர் துணிகளை பெறுவதற்கு 08 மாத காலம் முழுமையாக வழங்கியிருந்ததுடன், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அதற்கு 09 மாதங்களுக்கு முன் பெறப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சுகாதார செயலாளரின் அறிவுறுத்தல்கள் பெறப்படாமல், போதியளவு இருப்பு இருந்த நிலையில் மருத்துவ விநியோகப் பிரிவினால் இருப்பை பரிசீலித்து	-அவ்வாறு-	HSEP திட்டத்தினூடாக வெளிநாட்டில் இருந்து கொண்டுவருவதற்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட சத்திர சிகிச்சைத் துணிகள் விநியோகத்தரினால் வழங்கப்படும் 03 மில்லியன் மீட்டர் சத்திர சிகிச்சை துணியை பாதுகாப்பு இருப்பாக பேணுமாறு இந்த முழு டெண்டர் 12 மில்லியன் மீட்டர் என்பதுடன், மீண்டும் அதனை 03 மில்லியன் மீட்டர் வரை குறைத்து பாதுகாப்பு இருப்பாக வைத்திருக்குமாறு கௌரவ சுகாதார அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற மருத்துவ விநியோகப் பிரிவின் HSEP திட்டத்துடன்

	ஆர்டரை இரத்துச் செய்யக்கூடிய நிலை இருந்த போதிலும் இவ்வாறு அதிக விலைக்கு துணிகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. கொள்ளல் வழிகாட்டல்களின்படி அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்பை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் உரிய ஆர்டரை இரத்துச் செய்யக்கூடிய சாத்தியம் இருந்த போதிலும் அதனை செய்யாமை, திட்ட பணிப்பாளரினால் உரிய ஆர்டர் வழங்குவதற்கு முன் மருத்துவ விநியோகப் பிரிவின் மற்றும் வைத்தியசாலைகளின் இருப்பு நிலை தொடர்பில் அறிக்கைகள் பெறப்பட்டு இந்த தீர்மானத்தின் மூலம் ஏற்படக்கூடிய இழப்பை குறைப்பதற்கும் மற்றும் இதனைவிட குறைந்த தொகையை ஆர்டர் செய்து வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய நட்டத்தை குறைத்திருக்க முடியும் என்பதும் அவதானிக்கப்பட்டது.		தற்போதுள்ள விநியோகங்கள் குறித்த முகாமைத்துவ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனவும், 2023 மே 30 ஆம் திகதி மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கிடைத்த 50,000 மீட்டர் துணி தொடர்பில் இருப்பு கட்டுப்பாட்டு அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட உதவிப் பணிப்பாளர் ஊடாக மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்படி சுகாதார செயலாளரின் ஆலோசனையைப் பெறுமாறு அவரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த கோவையை சுகாதார செயலாளருக்கு அனுப்ப முன் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ வழங்கல்) இற்கு அனுப்பி கலந்துரையாடப்பட்ட போது இந்த ஆர்டர் ஏற்கனவே செயல்பாட்டில் இருந்ததால், பல சுற்று கலந்துரையாடல்களிலும் இதனை பாதுகாப்பு இருப்பாக பேணுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாலும் சுகாதார செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டியதில்லை எனவும் ஒவ்வொரு விநியோகத்திற்கும் மீண்டும் மீண்டும் அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்பதால் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு வாய்மொழி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது எனவும், அதன்படி அந்த அறிவுறுத்தலுக்கு அமைய சிரேஷ்ட உதவிப் பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், மேலும் கௌரவ சுகாதார அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற மருத்துவ விநியோகப் பிரிவின் HSEP திட்டத்தின் விநியோகம் குறித்த முகாமைத்துவ கூட்டத்தில் இறக்குமதி விநியோகத்தரிடம் இருந்து 3 மில்லியன் மீட்டர் துணிகளை

			பாதுகாப்பு இருப்பாக பேணுமாறு தெளிவாக மருத்துவ விநியோகப் பிரிவிற்கும் HSEP திட்டத்திற்கும் அறிவுறுத்தப்பட்டது எனவும்.
	v. இதன் காரணமாக தேசிய ரீதியில் கையிருப்பு இருந்த நிலையில் இறக்குமதி செய்ததால் 03 மில்லியன் மீட்டர்களை மீட்டருக்கு ரூ. 14.54 வீதம் கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு 43.6 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது என்பதும், 43.6 மில்லியன் ரூபா நட்டத்தில் காத்திருப்பு கையிருப்புகளை பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதும், மொத்த வருடாந்த தேவையை முறையாக மதிப்பீடு செய்து உள்நாட்டு உற்பத்தியாளர்களின் ஒதுக்கீடுகளை அதிகரித்து உள்நாட்டு தொழில்துறையைப் பாதுகாக்கும் விதத்தில் உரிய விநியோகங்களைப் பெறுவதற்கு உத்தியோகத்தர்களினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இறக்குமதி செய்யப்பட்ட தொகையான சத்திர சிகிச்சைத் துணி 03 மில்லியன் மீட்டர் பாதுகாப்பு கையிருப்பாக வைத்திருக்குமாறு கௌரவ சுகாதார அமைச்சரின் மருத்துவ விநியோகப் பிரிவின் கொள்ளல் தொடர்பான 19.08.2022 நடைபெற்ற கூட்டத்தில் சத்திர சிகிச்சைத் துணிகளின் 03 மாத கையிருப்பு இந்த இறக்குமதி ஆர்டரில் பெறுமாறு தீர்மானிக்கப்பட்டதால் ஓரளவு சத்திர சிகிச்சைத் துணிகள் மருத்து விநியோகப் பிரிவில் இருந்த போதிலும் இந்த தொகையை பெற வேண்டும் எனவும், தேசிய ரீதியில் சத்திர சிகிச்சைத் துணிகளைப் பெறும் போது விலைகள் சுகாதார அமைச்சின் விலைக் குழுவினால் தீர்மானிக்கப்படுகிறது என்பதுடன், இறக்குமதி செய்யப்படும் சத்திர சிகிச்சைத் துணிகளை டெண்டரை கையாளுவது HSEP திட்டத்தின் டெண்டர் மதிப்பு அதற்கு சுயாதீனமாக நியமிக்கப்பட்ட கொள்ளல் குழுவின் தீர்மானம் என்பதால் இவ்வாறு உள்நாட்டு கையிருப்பிற்கும் இறக்குமதி கையிருப்பிற்கும் இடையே விலை வித்தியாசம் காணப்பட்டது எனவும், எனினும், இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்.

(ங)	மருத்துவ விநியோக இருப்பு முகாமைத்துவத்திற்காக காணப்பட்ட MSMIS கணினி அமைப்பு (Pronto அமைப்பு) 2015 முதல் ஆரம்பிக்கப்பட்டு 2023 மே மாதம் இறுதி வரை செயற்படுத்தப்பட்டதுடன், அந்த அமைப்பிற்காக ரூ. 633.6 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2023 ஜூன் மாதம் அந்த கணினி அமைப்பை நீக்கி அதற்குப் பதிலாக மருத்துவ விநியோக முகாமைத்துவத்திற்கான தகவல் முகாமைத்துவ அமைப்பாக ஸ்வஸ்தா எனும் பெயரில் ஒரு கணினி அமைப்பு மாற்றீடு செய்துள்ளது. இந்த அமைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்திற்காக 101.8 மில்லியன் ரூபா மதிப்பீட்டு பெறுமதிக்கு Loons Lab எனும் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன், 2023 ஜூலை மாதமாகும் போது இந்த புதிய அமைப்பை நிறுவுவதற்காக ஆரம்ப சுகாதார பாதுகாப்புத் திட்டம் (PSSP) மூலம் இந்த தனியார் நிறுவனத்திற்கு 51 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இதைத்தவிர மேலும், 36.6 மில்லியன் ரூபா பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. தகவல் தொழில்நுட்பத்திற்காக சுகாதார அமைச்சில் தனியான ஒரு பிரிவு சுகாதார தகவல் பிரிவு என நிறுவப்பட்டுள்ள போதிலும், இந்த ஸ்வஸ்தா அமைப்பின் கொள்ளல் நடவடிக்கைகளுக்காக அல்லது அமைப்பின் தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளில் அந்த பிரிவை பங்கேற்கச் செய்யவில்லை.	இது குறித்து விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	ஸ்வஸ்தா கணினி அமைப்பு அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமாக ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் Pronto அமைப்பின் சேவை ஒப்பந்தம் நிறைவடைந்த பின்னர் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் தரவு முகாமைத்துவதற்கு 2023.06.09 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்பட்டது எனவும், அந்நேரத்தில் மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டதுடன், முழுமையாக மருத்துவ விநியோக முகாமைத்துவம் அந்த இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது

			எனவும், முன்பு காணப்பட்ட Pronto கணினி அமைப்பின் முகாமைத்துவமும் மருத்துவ விநியோகப் பிரிவு மற்றும் இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது எனவும், அதன்படி அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்வஸ்தா விரிவான தகவல் அமைப்பின் கொள்முதல் இராஜாங்க அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டது எனவும், அதன் கொள்முதல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு தகவல் தொழில்நுட்ப, சுகாதார தகவல் தொழில்நுட்பம், மருத்துவ விநியோகப் பிரிவு போன்ற தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 07 நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு செயற்படுகிறது எனவும், சுகாதார அமைச்சின் தகவல் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் இந்த விடயத்திற்காக நியமிக்கப்பட்ட பிரதான தேசிய நெறிப்படுத்தல் குழுவின் உறுப்பினராக ஆரம்பத்தில் இருந்து செயற்பட்டு வருகிறார் எனவும்.
	ii. இந்த அமைப்பை மேம்படுத்துவதற்கான ஆரம்ப கட்டத்தில், கணினி பயனர்களின் தேவைகளை கண்டறிந்து அது குறித்து மதிப்பீடுகள் செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	இந்த அமைப்பின் ஆரம்பத்தில் இருந்து அமைப்பை மேம்படுத்தும் System Development போது 11 மாத காலத்தினுள் மருத்துவ விநியோகப் பிரிவு, இரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், பிராந்திய மருத்துவ விநியோகப் பிரிவு, வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களில் மருந்தாளர்கள் ஆகிய அனைத்து தரப்பினர்களுடன் நெருங்கிய

			தேவைகளைக் கண்டறிவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன எனவும், அதற்காக முன்பு காணப்பட்ட அமைப்பை பயன்படுத்தல், அவர்களின் சேவை நிலையங்களுக்குச் சென்று அவர்களின் பணிகளை அறிந்து கொள்ளல், அவர்களின் தேவைகளை கண்டறிவதற்கான கலந்துரையாடல், உள்ளக பயிற்சி பட்டறைகள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளப்பட்டன எனவும், ஆரம்ப தேவைகளை கண்டறிந்த பின்னர், ஆரம்ப அனைத்து wireframes மற்றும் prototypes தரப்பினருடன் இணைந்து மதிப்பாய்வு செய்து அதிக எண்ணிக்கையான மேம்பாட்டு பட்டறைகள், அறிமுகப் பட்டறைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும், அவ்வாறே ஒவ்வொரு மொடியுலருக்கும் தனித் தனியாக தனி நபர்கள் மற்றும் குழுக்களை அடையாளம் கண்டு அவர்களுடன் தனித்தனியே அமைப்பை மதிப்பாய்வு செய்வதை மேம்படுத்துவதற்கான தேவையை இனங்காணல் மேற்பட்டது எனவும்.
	iii. சுகாதாரத் துறையில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த HHIMS, HIMS போன்ற அமைப்புகளுடன் ஸ்வஸ்தா அமைப்பை ஒருங்கிணைப்பது எவ்வாறு என்பது குறித்து பரிசீலிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	Pronto அமைப்பு HHIMS, HIMS அல்லது சுகாதார அமைச்சிற்குரிய வேறு எந்த அமைப்புடனும் தொடர்புபடுத்த முடியாத (Can not interoperable) காலாவதியான தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்ட அமைப்பு என்பதால் புதிய அமைப்பை உருவாக்குவதற்கு அரச கொள்கைத்

			தீர்மானம் எடுப்பது ஒரு முதன்மை காரணங்களில் ஒன்று எனவும், அதன்படி, புதிய அமைப்பை மற்ற அமைப்புகளுடன் inter-operable இருக்க வேண்டும் என பிரதான நிபந்தனையாக குறிப்பிட்டுள்ளது எனவும், Request for Proposal (RFP) 603 Terms of Reference (TOR) எனும் கொள்முதல் ஆவணங்களில் complete bidirectional communication என அந்த அமைப்பு Interoperability நிறுவல் வலியுறுத்தப்பட்டுள்ளது எனவும், இதற்காக சுகாதார தகவல் பிரிவுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன எனவும், மேலும், Sri Lanka Digital Health Blue print Version 01(2023) ஏற்ப interoperability/intergration மேற்கொள்ள தேவையான வழிகாட்டல்களை வழங்குமாறு பணிப்பாளர் (சுகாதார தகவல்) இற்கு அறிவிக்கப்பட்டது எனவும், அதன்படி மற்ற அமைப்புடன் integration மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டு விஷேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன எனவும்.
	iv. காணப்பட்ட Pronto அமைப்பை மேலும் விரிவுபடுத்தி பராமரிப்பதற்கு மேலதிகமாக செலவிடுவதற்கு நேரிடும் செலவினத்தையும் மற்றும் ஸ்வஸ்தா அமைப்பை பூர்த்தி செய்வதற்கு ஏற்படும் செலவினத்தையும் ஒப்பிட்டு சரியான செலவினத்தை பகுப்பாய்வு செய்யவில்லை என்பதும், அதனால் இந்த முழுமையான ஸ்வஸ்தா	-அவ்வாறே-	2022/01/10 அன்று கௌரவ நிதி அமைச்சரினால் வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ‘‘செலவுப் பலன் பகுப்பாய்வு’’ ஒன்றை நடத்தி அதனை அமைச்சரவைக்கு 2022.05.20 ஆம் திகதி அனுப்பட்டது

	அமைப்பின் தொடர்ச்சியான செயல்பாட்டின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல்கள் இல்லை.		எனவும், அதன்படி கௌரவ அமைச்சரவையினால் கலந்துரையாடப்பட்ட பின்னர் அபஇ 21/2156/109/128 தொடர்பான 2022.01.10 அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க ஸ்வஸ்தா மருத்துவ விநியோக அமைப்பை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு 2022.05.31 ஆம் திகதியன்று அமைச்சரவை செயலாளரினால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது எனவும்.
	v. அனைத்து சுகாதார தகவல் அமைப்புகளும் சுகாதார அமைச்சின் தற்போது அங்கீகரிக்கப்பட்ட Digital Health Blue Print உடன் இணைங்க வேண்டும் எனினும் இந்த ஸ்வஸ்தா அமைப்பு அதற்கு இணங்க உரவாக்கப்பட்டது என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்தவில்லை.	-அவ்வாறே-	digital Health Blue print -Version 01 2023 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டது எனவும், ஸ்வஸ்தா அமைப்பின் உருவாக்கம் 2022 இல் தொடங்கப்பட்டது எனவும், அதன்படி இந்த SWASTHA அமைப்பு உருவாக்கத்தின் போது digital Health Blue print -Version 01 நிறைவு செய்யப்படவில்லை எனவும், அதன்படி அந்த நேரத்தில் ஒரே வழிகாட்டியாக இருந்த National Digital Health Guideline and Standard(NDHGS) 2.0 இற்கு இணங்க மேம்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது எனவும், எனினும், 2023 ஆம் ஆண்டில் Digital Health Blue Print அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு ஸ்வஸ்தா அமைப்பு அதற்கு இணங்க மீண்டும் உருவாக்கம் செய்யப்பட்டது எனவும், மேலும், Digital Health Blue Print 8 2.4.5. Point Of Service

			(POS) அமைப்பாக ஸ்வஸ்தா அமைப்பு அடையாளம் கண்டது என்பதுடன், Blue Print உருவாக்கத்தில் பங்களித்த முக்கிய பங்குதாரர்களாக operators of existing curative and preventive sector health information system இன் கீழ் ஸ்வஸ்தா ஊழியர்கள் பங்களிப்பு செய்தனர் எனவும், மேலும், 7.3.1. Existing Project Alignment இன் கீழ் இந்த Blue Print உருவாக்கும் போது ஸ்வஸ்தா அமைப்பின் உருவாக்கம் தொடங்கியது எனவும்.
	vi. விநியோகத்தர் மற்றும் சுகாதார செயலாளர் இடையே கையொப்பமிட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 6.5 இன்படி, இராஜாங்க அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபணத்துவ குழுவினால் அமைப்பின் ஒவ்வொரு மொடியுலரிற்கும் கட்டணம் செலுத்துவதற்கு முன்னர் மதிப்பாய்வு செய்து அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றபோதிலும் நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழு அமைப்பின் மேம்பாடு குறித்து நிபுணத்துவ அறிவு கொண்டவர்கள் உறுப்பினராக நியமிக்கப்படவில்லை என்பதுடன், இந்த அமைப்பை மேம்படுத்துவதற்காக ஆலோசனை சேவைகளை வழங்க முன்வந்த கொழும்பு பல்கலைக் கழகத்தின் கணினி கல்லூரியினால் இது தொடர்பாக பரிந்துரை அறிக்கைகள் பெறப்படாமல் 51 மில்லியன் ரூபா விநியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	இந்த அமைப்பின் தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் குறித்த நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கிய கொழுப்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழை வழங்கிய பின்னர் அமைப்பின் விரிவான பயன்பாட்டுக்காக (island wide implementation) தொடங்கியது எனவும், இந்த அமைப்பை மேம்படுத்திய மொடியுலர் முழுமையாக கண்காணிக்கப்பட்டு, அதன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த மொடியுலருக்கான கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்பட்டது எனவும், இந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சுகாதார தகவல் தொழில்நுட்பம் குறித்த ஒரு விஷேட மருத்துவ நிபணர், மருத்துவ விநியோகப் பிரிவின் ஒரு பிரதிநிதி, பிரதான கணக்காளர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர் எனவும்

	vii. சுகாதாரத் துறையின் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு இது போன்ற ஒரு சிக்கலான அமைப்பை கட்டங்களாக அறிமுகப்படுத்துவதற்கும், குறிப்பிட்டதொரு காலம் வரை இரண்டு அமைப்புகளும் இணையாக செயற்படுத்துவதற்கு (Parallel Run) நடவடிக்கை எடுக்காது Pronto அமைப்பை பயன்படுத்துவதை நிறுத்தி விட்டு ஸ்வஸ்தா அமைப்பை 2023 ஜூலை 09 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவது கட்டாயமாக்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இருப்பு முகாமைத்துவம் மையகப்படுத்தப் பட்டிருப்பதால் இருப்பை இரண்டு அமைப்புகள் மூலம் நிர்வகிக்கும் போது இருப்பை சமநிலையாக செயல்படுத்த இரு அமைப்புகளுக்கும் இடையே நேரடி தொடர்பை பராமரிப்பது அவசியம் எனவும், ஆனாலும், நடைமுறையில் இணை அமைப்புகள் இரண்டிற்கும் தரவை உள்ளிடல் மற்றும் தரவு முகாமைத்துவத்தின் போது சிரமங்கள் மற்றும் சிக்கல்கள் காரணமாக இரண்டு அமைப்புகள் மூலம் மையகப்படுத்தப்பட்ட இருப்புகளின் நுகர்வை சமநிலைபடுத்தல் மற்றும் நடைமுறையில் உள்ள சிக்கலான நிலைமை மற்றும் ஸ்வஸ்தா அமைப்பு தொடர்பான SLT இணைப்பும் அமைப்பு தொடர்பில் Dialog APN இணைப்பும் ஒரே நேரத்தில் செயற்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் பெரும்பாலான வைத்தியசாலைகளில் இல்லை என்பதால் இணையான ஆய்வுகளை நடைமுறையில் நீண்ட காலம் மேற்கொள்ள முடியாது எனவும், மேலும் ஸ்வஸ்தா அமைப்புக்கான ஆலோசனைகள் வழங்கும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப்பிரிவினால் இணையான ஆய்வுகள் மேற்கொள்வதற்கு சுமார் இரண்டு வாரங்கள் தேவைப்படும் என நெறிப்படுத்தல் செயற்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது எனவும்.

	viii. ஸ்வஸ்தா அமைப்பு நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பில் ஏற்பட்ட சிக்கல் குறித்து மருத்துவ விநியோகப் பிரிவு, சுகாதார அமைச்சு, இலங்கை தேசிய வைத்தியசாலை, ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, மாவட்ட பொது வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள 28 பிராந்திய வைத்தியசாலைகள் மற்றும் 12 பிராந்திய மருத்துவ விநியோகப் பிரிவுகள் (RMSD) 2023 ஜூன் மாதம் 30 ஆம் திகதி கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டன. அதன்போது, இந்த அமைப்பைப் பயன்படுத்துபவர்களின் தேவைக்கேற்ப அமைப்பு உருவாக்கப்படாததால் அமைப்பை அன்றாட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் போது பல்வேறு சிக்கல்கள் எழுந்தன என்பதும், பயன்பாட்டில் இருந்த Pronto அமைப்பின் தரவு இந்த அமைப்பிற்கு ஒருங்கிணைக்கும் போது தரவுகளின் சரியான தன்மை குறித்து சிக்கல்கள் எழுந்துள்ளன என்பதும், மருத்துவ விநியோகப் பிரிவின் வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள முக்கிய நிறுவனங்களான அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணையம், மருத்துவ விநியோகப் பிரிவு, அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களுக்கிடையே முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த அமைப்பில் இணைக்கப்படவில்லை என்பதும், தரவுகள் உள்ளிடும் போது மற்றும் தரவுகளின் பாதுகாப்பு குறித்து போதுமான கட்டுப்பாடுகள் நிறுவப்படவில்லை என்பதும், இருப்பு முகாமைத்துவ தீர்மானங்களுக்கு போதியளவு பதிவுகளை பெறவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	இந்த அமைப்பின் முழுமையான பயன்பாடு 2023.06.09 ஆம் திகதி முதல் தொடங்கியது எனவும், இந்த சிறப்பு கணக்காய்வு 2023.07.17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட போது இந்த அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டு 38 நாட்கள் மட்டுமே கடந்துள்ளன எனவும், பழைய அமைப்பில் இருந்து புதிய அமைப்பிற்கு மாறும் போது பயனாளிகள் எத்தனை கட்டுப்பாட்டு நிலைமைகளின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டாலும் பல்வேறு சிக்கல்கள், பயிற்சியின் மூலம் பெற்ற அறிவை நடைமுறை ரீதியில் பயன்படுத்தும் போது ஏற்படும் சிக்கல்கள், கணினி வன்பொருள் தொடர்பான சிக்கல்கள், இணையத்துடன் இணைப்பதில் உள்ள சிக்கல்கள் போன்ற பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவது வழக்கம் என்பதுடன், அந்த பிரச்சனைகளைத் தவிர்க்க ஒரு விஷேட தொலைபேசி இலக்கம், Helpdesk WhatsApp போன்ற உதவி சேவைகள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன எனவும், 24 மணி நேரமும் செயற்பட்ட இவ்வாறான செயல்பாடுகள், online w Physical Training Programs மூலம் இந்த சிக்கல்களை தீர்க்க முடிந்தது எனவும், மேலும், அமைப்பின் பயனாளிகளுக்குத் தேவையான அனைத்து வகையான அறிக்கைகளை பெறும் வசதிகள், Dashboard வசதிகள் ஏற்கனவே முழுமையாக அனைத்து பயனர்களுக்கும் வழங்கப்பட்டது எனவும், தற்போது அனைத்து வைத்தியசாலைகள், பிராந்திய மருத்துவ விநியோகப் பிரிவு, மருத்துவ விநியோகப் பிரிவு, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் போன்ற

			நிறுவனங்களில் மருத்துவ விநியோக செயல்முறை தொடர்பான பணிகளுக்கு அந்த நிறுவனம் சிறந்த தொடர்புடன் பணிகளை மேற்கொள்வதற்கு ஸ்வஸ்தா அமைப்பு பயன்படுத்தப்படுகிறது எனவும்
	ix. இந்த சுகாதார அமைப்பின் மேம்பாட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு மொடியுலருக்கும் பயனர் ஏற்றுக்கொள்ளும் (User Acceptance) சான்றிதழ்கள் பெறப்படவில்லை. அதற்கு மாறாக கணினி தொடர்பான பட்டறைகளில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவு ஆவணங்கள் User Acceptance சான்றிதழ்களாக கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ளதுடன், இந்த வரவுப்பதிவு ஆவணங்களில் சாரதிகளின் பெயர்களும் பதியப்பட்டுள்ளன.	-அவ்வாறே-	User Acceptance இற்காக தனித்தனி நபர்களாக அன்றி பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன எனவும், அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்த்துள்ளதாகவுவும், பட்டறைகள் நடத்தும் போது அதில் பங்கேற்றவர்களுக்கு உணவு வழங்குவதற்காக அவர்களின் சாரதிகளின் பெயர்கள் தேவைப்படுவதால் அவர்களின் பெயர்கள் பெறப்பட்டன எனவும்.
	x. 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குறித்த உபகுழுவின் உத்தரவின்படி இந்த அமைப்பு உட்பட சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் அமைப்புகள் தொடர்பாக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானப் பிரிவினால் வழங்கப்பட்ட அறிக்கையிலும் மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், ஸ்வஸ்தா அமைப்பு தொடர்பாக பரிந்துரைகள் பின்வருமாறு.		
	➢ தேவைகள் சேகரிப்பு, பயன்பாட்டு வடிவமைப்பு, வரிசைப்படுத்தல் அணுகுமுறை, செயல்படுத்தல், ஆய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் கட்டங்கள் உட்பட எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவதற்காக ஸ்வஸ்தா	இதனை செயற்படுத்தப்படல் வேண்டும்.	மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் ஊடாக ஸ்வஸ்தா அமைப்பு குறித்து ஆராய்வதற்காக பயனர் உள்நுழைவு, பயனர்களின் பெயர்கள், கடவுச் சொல் போன்றவற்றை இதுவரை பெறவில்லை

	அமைப்பை தொடர்ச்சியாக பராமரிக்க அல்லது மேம்படுத்த முடியுமா என்பதை தீர்மானிப்பதற்கு ஸ்வஸ்தா அமைப்பு குறித்து ஆழமாக ஆராய சுகாதார அமைச்சு, சுகாதார தகவல் பிரிவு, சுயாதீன தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் பிற தரப்பினர்களின் பங்கேற்புடன் ஒரு விஷேட குழு நியமித்தல்.		எனவும், மேலும் அமைப்பைப் பற்றிய அறிவு கொண்ட மருத்துவர்கள், கணினி தொழில்நுட்பவியலாளர்கள், கணினி மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், மென்பொருள் பொறியியலாளர்கள் ஆகியோருடன் உத்தியோகபூர்வமாக அமைப்பில் இணைந்து முறையான ஒருங்கிணைப்பு எதுவும் மேற்கொள்ளவில்லை எனவும், இது 2024.04.26 ஆம் திகதியன்று நடைபெற்ற COPA கூட்டத்திலும் சுகாதார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்தது எனவும், மேலும் COPA கூட்டத்தின் போது சம்பந்தப்பட்ட மொரட்டுவ பல்கலைக்கழக பிரதிநிதிகள் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், அவர்கள் பல்வேறு ஆவணங்கள், முறைப்பாடுகள் மற்றும் அவர்களிடம் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட வாய்மொழி அறிக்கைகளின்படி, அந்த விசாரணை நடத்தப்பட்டது என COPA குழுவிடம் தெரிவிக்கப்பட்டது எனவும், இந்த அறிக்கை 2024/06/12 ஆம் திகதியிலும் சுகாதார அமைச்சின் மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை பிரிவிற்கு வழங்கப்படவில்லை என்பதுடன், அதனால் அதன் உள்ளடக்கம் அல்லது பரிந்துரைகள் தொடர்பில் எந்த கருத்தையும் தெரிவிக்க முடியவில்லை எனவும், அந்த அறிக்கைகள் உத்தியோகபூர்வமாக கிடைத்த பின்னர் இந்த அமைப்பின் தொழில்நுட்ப ஆலோனையை வழங்கும் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடி அந்த விடயங்கள் மற்றும் அமைப்பை ஒவ்வொன்றாக மீண்டும் பரிசீலித்து பார்த்து

			மாற்றங்கள் தேவையெனின் மாற்றம் செய்யலாம் எனவும்.
	➢ இந்த விஷேட குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்யவேண்டிய மாற்றங்கள் ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ ஸ்வஸ்தா அமைப்பின் திட்டங்கங்களும் மற்றும் மேம்பாடுகளும் போதுமானதாக இல்லை என்று நிபுணத்துவ குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டால் அமைச்சினால் ஒரு புதிய அமைப்பை மீண்டும் தயாரிக்க வேண்டும் என்பதுடன், இதற்கிடையில் நடைமுறையில் இருந்த MSMIS அமைப்பை பயன்படுத்தலாம் எனவும்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	xi. அப்போதைய சுகாதார அமைச்சரினால் 2021 டிசம்பர் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட අමෙ/21/2156/309/123 எனும் புதிய தகவல் முகாமைத்துவ அமைப்பு "ஸ்வஸ்தா அறிமுகம்" இற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் ஊடாக, அப்போது காணப்பட்ட அமைப்பு உண்மையான நுகர்வுத் தரவைப் பெறுவதற்கு மற்றும் மருந்துகளின் நுகர்வு நடைமுறையின் அடிப்படையில் வருடாந்த மருந்து மதிப்பீடு செய்வதற்கு ஒத்துழைக்கவில்லை என்பதாகவும், அனைத்து சுகாதார நிறுவனங்களையும் ஒன்றோடொன்று இணைப்பதன் மூலம் வாட்டு மற்றும் மருந்தகக் கவுண்டர் மட்டம் வரை அனைத்து நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ள ஸ்வஸ்தா அமைப்பு வடிவமைத்து உருவாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை குறிப்புகள் (Terms of Reference) இன்படி மருத்துவ விநியோகம் தொடர்பில் ஒரு விரிவான தகவல் முகாமைத்துவ அமைப்பை மேம்படுத்துவதற்கும், வைத்தியசாலைகள்	-அவ்வாறே-	2018 முதல் இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட 2018, 2022, 2024 விஷேட கணக்காய்வு அறிக்கையின்படி, உண்மையான நுகர்வுத் தரவுகளின் அடிப்படையில் வருடாந்த மதிப்பீடுகளை தயாரித்தல் வேண்டும் என மிக கடுமையாக பரிந்துரை செய்துள்ளது எனவும், அதன்படி அரச கொள்கைத் தீர்மானமாக வருடாந்த மதிப்பீடு தயாரித்தல் உண்மையான நுகர்வுத் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது எனவும், அதற்கேற்ப ஸ்வஸ்தா அமைப்பு வடிவமைக்கப்பட்டது என்பதுடன், இந்த அமைப்பின் மூலம் மருத்துவர்கள் மருந்துச் சீட்டுகளை வழங்குதல் மற்றும் மருந்தாளர்கள் மருந்துச் சீட்டுகளை வழங்குவதை கண்டறிந்து நிகழ் நேரத்தில் உண்மை நுகர்வுகளை கணக்கிடுவதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும், மேலும், நோயாளிகளை PHN (Personal Health No)

		தொடர்பான நோயாளி தரவுகளின் பகுப்பாய்வு, நோயாளர்களை அனுமதித்தல், பதிவு செய்தல், விடுவித்தல், மருந்து பட்டியல் உருவாக்கம் போன்ற மொடியுலர்களுக்கு 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி 15 மில்லியன் ரூபா செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அனைத்து அரச வைத்தியசாலைகளுக்கும் உரிய மருந்து இருப்பு முகாமைத்துவமும் நோயாளர் பராமரிப்பு முகாமைத்துவமும் ஒரே அமைப்பினூடாக உள்ளடக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட இந்த ஸ்வஸ்தா அமைப்பானது முந்தைய Pronto அமைப்பு போன்று வைத்தியசாலைகளின் மருந்தகங்கள் வரை மட்டுமே தகவல்களை சேகரிக்கும் வகையில் செயற்படுத்துவதற்கு சுகாதார அமைச்சினால் கொள்கைத் தீர்மானம் எடுத்துள்ளது. மேலும் வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படும் சில மருத்துவ கிளினிக்குகள் வரையும் தகவல்களை சேகரிக்க இந்த அமைப்பை பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அமைச்சினால் கூறப்பட்ட போதிலும் இந்த கிளினிக்குகள் என்னவென்று குறிப்பாக அடையாளம் கண்டிருக்கவில்லை.		இன்படி அடையாளம் காண்பது, அதே மருந்துகளை அவருக்கு மீண்டும் மீண்டும் வழங்குவதை அடையாளம் காண்பது போன்ற வசதிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், இதுவரை 1.6 மில்லியன் மருந்துச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், அதன்படி, MSMIS ஸ்வஸ்தா மென்பொருள் மூலம் சுகாதார அமைச்சிற்குரிய அனைத்து வைத்தியசாலையிலும் நோயாளிகளின் மருந்துச் சீட்டுகள் வரை கணினிமயமாக்க அமைச்சின் நிதி முன்னுரிமைகள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளலாம் எனவும், நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் கீழ் இந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ள OPD, Clinic 105 Pharmacy counter இற்காக விரிவுபடுத்த கணினி Hardware பெற முடியாத காரணத்தால் அமைப்பு மருந்து களஞ்சியம் வரை அனைத்து வைத்தியசாலைகளிலும் தேவையான Hardware பெற முடியாத நிறுவனங்களுக்கும் இந்த அமைப்பு மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும்.
	xii.	ஸ்வஸ்தா கணினி அமைப்பில் காணப்படும் சிக்கல்கள் காரணமாக ஆகஸ்ட் மாதம் முதல் கணக்காய்வுத் தினமான 2023 நவம்பர் 29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மருத்துவ விநியோக கொள்வனவுகளுக்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு நிலுவையில் உள்ள டெபிட் நோட்டீஸ்களின் பெறுமதி ரூ. 20,202,740,429 என்பதுடன், சுகாதார செயலாளரின் ஒப்புதலில்		2023 ஆகஸ்ட் மாதம் முதல் கணக்காய்வுத் தினம் வரை தீர்க்கப்படாத டெபிட் நோட்டீஸ்களின் எண்ணிக்கையின் பெறுமதி ரூ. 20,202,740,429 என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், இன்றைய தினம் (2024.03.06) நிலவரப்படி பிரச்சனையான நிலைமையை ஓரளவு தீர்த்து “Swastha” கணினி அமைப்பின் மூலம் செலுத்த வேண்டிய

		பிழைகளுடன் அச்சிடப்பட்ட வவுச்சர்கள் ஏற்கனவே உள்ள ஆவணங்களுடன் ஒப்பிட்டு விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் அச்சிடப்பட்ட வவுச்சர்களை கையினால் திருத்தி கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2024 மார்ச் 06 ஆம் திகதி நிலவரப்படி டெபிட் Note பெறுமதி ரூ. 10,989,442,187 ஆகும்.		டெபிட் நோட்டீஸ்களின் மதிப்பு ரூ. 9,213,298,242 எனவும், அதன்படி 2024.03.06 நிலவரப்படி மேலும் தீர்க்கப்பட வேண்டிய மேலும் டெபிட் நோட்டீஸ் எண்ணிக்கைகளின் பெறுமதி ரூ. 10,989,442,187 எனவும், இந்த டெபிட் நோட்டீஸ்களில் பிழைகளில் பதிவாகியுள்ள “SWASTHA” பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் SPC நிறுவனத்தையும் தொடர்பு கொண்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து தீர்க்கப்படும் எனவும்.
	xiii.	ஸ்வஸ்தா கணினி அமைப்பில் மதிப்புகளை சரியாகப் பதிவு செய்யாமை, தாமதக் கட்டணம் பதிவு செய்யாமை போன்ற குறைபாடுகள் காரணமாக மருத்துவ விநியோகங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக 2023 ஆகஸ்ட் மாதம் முதல் 2023 நவம்பர் 29 வரையான காலத்திற்கு அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு 653 விலைப்பட்டியல்களுக்காக செலுத்த வேண்டிய ரூ. 5,678,913,028 இனால் 343 விலைப்பட்டியல்களுக்கு ரூ. 2,982,951,254 இனை 2024 மார்ச் 06 நிலவரப்படி செலுத்தியிருக்கவில்லை.	-அவ்வாறே-	கணக்காய்வு திகதியின்படி செலுத்த வேண்டிய 653 INVOICE, SWASTHA கணினி அமைப்பின் பிரச்சனைகளை சரி செய்த பிறகு 310 INVOICE இற்கு மாத்திரம் கொடுப்பனவிற்காக அனுப்பப்பட்டது எனவும், அதன் மொத்த மதிப்பு சுமார் 2,695,961, 774 ஆகும்.
	xiv.	சுகாதார அமைச்சிற்குரிய அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் மருத்துவ விநியோக முகாமைத்துவத்திற்கான விரிவான தகவல் முகாமைத்துவ அமைப்பாக செயற்படுத்த வடிவமைக்கப்பட்ட இதுபோன்ற சிக்கலான அமைப்பு சரியான ஆய்வுகள் மேற்கொள்ளாது மேம்படுத்தப்பட்டிருப்பதால் அரசாங்கத்திற்கு ஏதேனும் இழப்புகள் அல்லது மேலதிக செலவுகள் ஏற்பட்டதா என்பது குறித்து சுயாதீன மற்றும் நிபுணத்துவ அறிவு கொண்ட குழுவினால் ஆராயப்பட்டு பொறுப்பான தரப்பினருக்கு எதிராக தேவையான நடவடிக்கை	-அவ்வாறே-	2025 ஆம் ஆண்டுக்கான ஸ்வஸ்தா அமைப்பின் மூலம் ஆன்லைன் (Online) வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்த நிறுவனங்கள் மற்றும் களஞ்சியங்களின் எண்ணிக்கை 2360 எனவும், 2024.05.01 நிலவரப்படி குறைந்தபட்சம் 05 இணைப்புகள் ஸ்வஸ்தா அமைப்பின் மூலம் பெற்ற நிறுவனங்கள் மற்றும் களஞ்சிய எண்ணிக்கை 1891 எனவும், முன்பு காணப்பட்ட MSMIS Pronto அமைப்பு MSD

	எடுப்பதற்கும், மருத்துவ விநியோக முகாமைத்துவத்திற்கான சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்கும் ஒரு அமைப்பை உடனடியாக நிறுவி பராமரிப்பதற்குமான தேவை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		மற்றும் RMSD களஞ்சியம் உட்பட சுமார் 250 நிறுவனங்களில் பரவி காணப்படுவதாகவும், அதற்காக சுமார் 502 User Licence பயன்படுத்தப்பட்டன எனவும், அதன்படி குறைந்தபட்சம் இலங்கையில் உள்ள அனைத்து மருத்துவ கிளினிக்குகள் (சுமார் 1159) மற்றும் சுகாதார மருத்துவ நிறுவனங்கள் (சுமார் 350) பிரதான களஞ்சியம் வரை மட்டும் விரிவுபடுத்திய போதிலும், மேலதிக User Licence சுமார் 1000 இனை கொள்வனவு செய்தல் வேண்டும் எனவும், முக்கிய வைத்தியசாலைகளில் பிரதான களஞ்சியங்கள் (Pharma, Surgical, Consumable, Non consumable, Lab, Radiology) இருப்பதால் அந்த அமைப்பு பயனர்களுக்காகவும் License கொள்வனவு செய்யப்படல் வேண்டும் எனவும், 2020 இல் அந்நிய செலாவணி விகிதத்தின்படி ஒரு User Licence இற்காக ரூ. 296,177 செலவிட்டது எனவும், அதன்படி, 2020 ஆண்டின் அந்நிய செலாவணி விகிதத்தின்படி 1000 புதிய User Licence பெறுவதற்கு மட்டும் ரூ.296,176,000 (சுமார் 296 மில்லியன்) செலவாகும் எனவும், MSMIS ஸ்வஸ்தா அமைப்பு வடிவமைப்பதற்காக செலவாகும் தொகை மூன்று வருட பராமரிப்பு செலவுடன் சேர்த்து 101 மில்லியன் ரூபா எனவும், தற்போது MSMIS ஸ்வஸ்தா அமைப்பு 1891 நிறுவனங்கள் வரை விரிவாக்கம் பெற்றுள்ளது என்பதுடன், அந்த நிறுவனத்திற்காக ஒரு பயனர் மட்டும் User Licence இனை கொள்வனவு செய்து

			MSMIS Pronto அமைப்பை விரிவாக்கம் செய்தால் இதன் செலவு ரூ. 560,066,244 (சுமார் 560 மில்லியன்) எனவும், தற்போது MSMIS Pronto அமைப்பில் அமைப்பின் 12,000 பயனர்கள் தங்கள் அன்றாட பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும், அதன்படி இந்த அமைப்பு அரசாங்கத்திற்கு ஒரு பெரிய நேரடி நிதிப் பலனை கொண்டு கொண்டு வந்துள்ளது எனவும்.

3.5 சர்ச்சைக்குரிய பரிவர்த்தனைகள்

கணக்காய்வு அவதானிப்புகள் ----------		**பரிந்துரை** ----------	**பிரதான கணக்கீட்டு அலுவலரின்** ---------- **கருத்துகள்**----------
(அ)	சுகாதார அமைச்சின் செயலாளரினால் 2011 ஆம் ஆண்டு SASISA/07/11 எனும் இலக்க கடிதத்தின் மூலம் அனைத்து வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கும் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தில் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு இணங்காத வகையில் குருணாகல் போதனா வைத்தியசாலையின் அதிகாரிகள் செயற்பட்டனர் என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		

	i. 2012 ஆம் ஆண்டு முதல் அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களினால் உணவகச் சேவைகளுக்கான விலைமனுதாரிகள் தெரிவு செய்தல் அந்தந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், சிற்றுண்டிச்சாலைக்கான நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவை சிற்றுண்டிச்சாலை நடத்தும் நபர்கள் ஏற்க வேண்டும் எனவும், சிற்றுண்டிச்சாலை வாடகையை அரச வருமானத்தில் வரவு வைக்கவேண்டும் எனவும், மேற்கண்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குருணாகல் போதனா வைத்தியசாலை அதிகாரிகள் இந்த உத்தரவிற்கு மாறாக வைத்தியசாலையின் ஒரு கட்டிடத்தை கூட்டுறவுச் சங்கம் ஒன்றிற்கு முறையான எழுத்துமூல ஒப்பந்தங்கள் இன்றி வாடகைக்கு வழங்கியதோடு, அந்த கட்டிடத்தில் சிற்றுண்டிச்சாலை, தகவல் தொடர்பு தளம் மற்றும் அதனுடன் தொடர்பான வளாகத்தை கூட்டுறவு சங்கத்தினால் வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கிய காரணத்தால் ஆண்டுக்கு சுமார் ரூ. 6,085,200 அரச வருமாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரைணகள் நடாத்தி, பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும்.
	ii. 2016 ஆகஸ்ட் வரை இவ்வாறு செயற்பட்ட காரணத்தால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை 3 மாதங்களுக்குள் அறவிடுவதற்கு அல்லது அது தொடர்பான சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி நடைபெற்ற இரச கணக்குகள் தொடர்பான உபகுழு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உத்தரவிட்ட போதிலும், 2024 மார்ச் மாதம் வரை அந்த தொகையை அறவிடவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஆ)	கண்டி தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றிய சுகாதார சாரதி ஒருவர் 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஜூலை 31 வரை எந்தவொரு கடமையும் செய்யவில்லை. அந்த காலகட்டத்தில் அவருக்கு	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரைணகள் நடாத்தி,	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த சாரதியினால் பெறப்பட்ட சம்பளமற்ற லீவு கணக்கிட்டு 2023 மே மாதம் 20

	வைத்தியசாலை அதிகாரிகளினால் எந்தப் பணியும் ஒதுக்கப்படவில்லை என்பதுடன் அந்த காலத்திற்காக அவருக்கு ரூ. 2,732,944 இனை செலுத்தியுள்ளது.	பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நாட்களுக்காக ரூ. 31,219 உம், 2023 ஜூன் மாதம் 20 நாட்களுக்காக ரூ. 43,551 உம், 2023 ஜூலை மாதம் 10 நாட்களுக்காக ரூ. 15,609 உம், என 57 நாட்களுக்காக ரூ. 90,380 என கணக்கிடப்பட்டு 2023 செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்டு அரச கணக்கில் வைப்பிடப்பட்டது எனவும், மேலும், 2023 டிசம்பர் மற்றும் 2024 ஜனவரி மாத சம்பளத்தில் இருந்து 2022.01.01 ஆம் திகதி முதல் 2022.06.30 ஆம் திகதி வரையான காலத்திற்கான சம்பளமற்ற லீவு 47 நாட்களுக்கு ரூ.75,811 அறவிடப்பட்டது எனவும், மீதமுள்ள காலத்திற்காக சம்பளமற்ற லீவு கணக்கிடப்பட்டு வருவதாகவும், கணக்கீடு செய்யப்பட்டு அறவீடுகள் மேற்கொண்டு அறிக்கையிடுவதாகவும், மேலும், இது குறித்து ஆரம்ப விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஆரம்ப விசாரணை சபையின் பரிந்துரைகளின்படி தேவைப்பட்டால் முறையான விசாரணை நடத்துவதற்கு தேவையான பரிந்துரைகளுடன் சுகாதார அமைச்சிற்கு அனுப்பப்படும் எனவும்.
(இ)	2015 மே 28 ஆம் திகதிய 01-21/2015 எனும் சுகாதார அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பந்தி 06 இன்படி கனிஷ்ட ஊழியர்களுக்கு காலை உணவு வழங்குவது தொடர்பில் எவ்வித ஒதுக்கீடுகளும் வழங்கப்படாத நிலையில் சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை மற்றும் கம்பளை போதனா வைத்தியசாலையில் கனிஷ்ட ஊழியர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.	இது தொடர்பில் ஆராய்ந்து சரியான முறைமைகளை தயாரித்தல் வேண்டும்.	கனிஷ்ட ஊழியர்களுக்கு காலை பாண் மற்றும் தேநீருக்கு பதிலாக சோறு மாற்று உணவு தொடர்பில் மத்திய மாகாண வைத்தியசாலைகளுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் 2024.04.08 அன்று கலந்துரையாடப்பட்டது எனவும், சுகாதார அமைச்சினால் 2007.11.01 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட

			SAS/TB/04/48/2007 எனும் கடிதத்தின்படி காலை உணவு பாணிற்குப் பதிலாக சோறு வழங்கப்பட்டுள்ளது எனவும், இது தொடர்பாக சுகாதார அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் விசாரித்து இது குறித்து எதிர்காலத்தில் அறிவிப்பதாக மேற்படி முகாமைத்துவ குழு கூட்டத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவின் உத்தியோகத்தர்களினால் கூறப்பட்டது எனவும், எவ்வாறாயினும், விடயங்களை ஆராய்ந்து எதிர்காலத்தில் இது தொடர்பில் அறிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது எனவும்.
(ஈ)	2015 மே 28 ஆம் திகதிய 01-21/2015 எனும் சுகாதார அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் உணவுக்காக 1979 மே மாதம் 25 ஆம் திகதிய SDA/04/79 எனும் சுகாதார பொது சுற்றறிக்கையின்படி ஊழியர்களின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் ஒரு சிறிய தொகையான 10 ரூபா மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உணவுப் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளதுடன், சம்பளமும் அதிகளவில் அதிகரித்துள்ளது. 44 ஆண்டுகளாக மாற்றமில்லாத கட்டணத்தை அறவிடுவதால் அரசாங்கம் பாரிய செலவை ஏற்க நேரிட்டுள்ளது என்பதுடன், ஊழியர்களுக்கு உணவு வழங்கினால் அது அரசாங்கத்திற்கு சுமையாக இல்லாதவாறு செலவை ஈடுசெய்யும் வகையில் முறைமையை தயாரிக்க சுகாதார அமைச்சினால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.
(உ)	2022 ஜனவரி 21 ஆம் திகதி முதல் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் மருத்துவக் கழிவுகள் அகற்றுதல் சுகாதார அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் சிசிலி ஹனாரோ என்கெயா தனியார் நிறுவனத்துடன் 2019 ஜூலை 11 ஆம் திகதி இரு தரப்பு ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி மஞ்சள், சிவப்பு மற்றும் ஊதா நிற கழிவுப் பைகள்	ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2022 ஜனவரி 21 ஆம் திகதி முதல் இந்த வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை அகற்றும் போது சுகாதார அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் சிசிலி ஹனாரோ என்கெயா

	(Garbage Bags) மற்றும் சிவப்பு நாடா கொண்ட மஞ்சள் பெட்டிகளை சிசிலி ஹனாரோ என்கெயா தனியார் நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்க வேண்டும் என்பதுடன், 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை எந்த சந்தர்ப்பத்திலும் அந்த நிறுவனத்தினால் கழிவுப் பைகள் (Garbage Bags) மற்றும் சிவப்பு நாடா கொண்ட மஞ்சள் பெட்டிகள் வழங்கப்படவில்லை. வழங்கப்பட வேண்டிய கழிவுப் பைகளுக்கான கட்டணம் உட்பட 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஜூலை வரை 104,564 கிலோ மருத்துவக் கழிவுகளுக்கு அந்த நிறுவனத்திற்கு ரூ.20,673,915 செலுத்த வேண்டியிருந்தாலும், சிவப்பு நாடா கொண்ட மஞ்சள் பெட்டிகளுக்கு பதிலாக வைத்தியசாலை தொற்று கட்டுப்பாட்டுப் பிரிவினால் அட்டைப் பெட்டிகளைப் பயன்படுத்தி Sharp bin தயாரிக்கப்பட்டு வந்துள்ளதுடன், மஞ்சள் மற்றும் சிவப்பு கழிவுப் பைகளை (Garbage Bags) கொள்வனவு செய்வதற்காக வைத்தியசாலையினாலும் ரூ. 2,070,004 மீண்டும் செலவிட்டுள்ளது.		தனியார் நிறுவனம் என்பவற்றுக்கிடையே காணப்படும் ஒப்பந்தத்தின்படி மஞ்சள் மற்றும் சிவப்பு நிற கழிவுப் பைகள் சிசிலி ஹனாரோ என்கெயா தனியார் நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்க வேண்டும் என்றபோதிலும் அந்த நிறுவனத்தினால் உரிய கழிவுப் பைகள் வழங்கப்படவில்லை எனவும், இதன் விளைவாக மற்றொரு வெளி தரப்பினரிடமிருந்து கழிவுப் பைகளை கொள்வனவு செய்ததற்காக வைத்தியசாலை செலுத்திய ரூ.2,070,004 இனை 2023 டிசம்பர் மாதம் சிசிலி ஹனாரோ என்கெயா தனியார் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டது எனவும்.
(ஊ)	2022 டிசம்பர் 31 ஆம் திகதிய “நிதி நிர்வாக அதிகாரங்களை வழங்குதல் 2023 ஆம் ஆண்டு” எனும் தலைப்பிலான சுகாதார அமைச்சு சுற்றறிக்கையின் 10.3.5 இல் உள்ள அறிவுறுத்தல்களின்படி, சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் பல்வேறு நிதிமூலங்களில் இருந்து பெறப்படும் வருமானம் நலன்புரி கணக்குகளில் வரவு வைக்காமல் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்பட வேண்டும் எனினும், மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் விஷேட மருத்துவ நிபுணர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஓய்வெடுப்பதற்கான கட்டிடத்தின் சுமார் 492 சதுர அடி விஷேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்களின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தனியார் தரப்பினரால் பராமரிக்கப்படும் சிற்றுண்டிச்சாலை முறையான கொள்ளல் நடைமுறைகளைப் பின்பற்றாது குத்தகை வாடகையை அரசாங்க வருமானத்தில் வரவு வைக்காமல் பராமரித்து வருவதையும், உரிய சிற்றுண்டிச்சாலையின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவினத்தை வைத்தியசாலை செலுத்தி வருவதையும் அவதானிக்கப்பட்டது.	அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் விதிகளின்படி செயலாக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த வைத்தியசாலையின் அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கும் தேவையான அடிப்படைத் தேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக பழைய ஆய்வுகூட கட்டிடத்தின் மேல் தளம் மருத்துவ ஓய்வறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், மாகாண சபையின் மூலம் வைத்தியசாலை நிர்வகிக்கப்படும் காலம் தொட்டு இந்த பிரிவை பராமரிப்பதற்கு விஷேட மருத்துவ நிபணர்கள் உற்பட மருத்துவ அலுவலர்களினால் ஒரு சங்கம் நிறுவப்பட்டு அவர்களின் சொந்த நிதியில் இந்த வசதிகள் அவர்களினால் வழங்கப்பட்டு வருகிறது என்பதுடன், அதற்காக வைத்தியசாலையினால் எவ்வித செலவுகளையும் ஏற்கவில்லை எனவும், இந்த பிரிவில் அனைத்து வசதிகளும்

			கொண்ட விரிவுரை அரங்கம், தொடர்பாடல் பிரிவு, ஓய்வறை மற்றும் சிற்றுண்டிச்சாலை போன்றவற்றை அவர்கள் நிறுவியுள்ளனர் எனவும், அந்த பிரிவை நிறுவுவதற்கு வைத்தியசாலையினால் எவ்வித உபகரணங்களும் பொருட்களும் வழங்கவில்லை என்பதுடன், அந்த பிரிவிற்கான கட்டிடம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனவும், இந்த கட்டிடத்திற்காக வழங்கப்படும் மின்சாரம் மற்றும் நீருக்கு மட்டுமே வைத்தியசாலையினால் கட்டணம் செலுத்துகிறது எனவும், இந்த பிரிவில் நிறுவப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைக்கு பயன்படுத்தப்படும் நீர் மற்றும் மின்சாரத்திற்காக எவ்வித கட்டணமும் அறவிடாது என கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த பிரிவு மருத்துவ அலுவலர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வருவதால், அந்த நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களில் இருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அறவிடுவது தொடர்பில் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு அந்த சிற்றுண்டிச்சாலைக்கு வழங்கப்படும் மின்சாரம் மற்றும் நீர் இணைப்பிற்காக தனித் தனி மானிகளைப் பொருத்தி மாதாந்தம் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் மின்சார அளவுகள் அலகுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதனை வைத்தியசாலை பில்களின் பெறுமதியிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும்.

3.6 சொத்து முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	பரிந்துரை	பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்
(அ)	சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட இல. PB – 6544 எனும் கெப் வாகனம் முறையான அனுமதியின்றி 2016 பெப்ரவரி 15 ஆம் திகதி கடுவெல பிரதேசத்தில் உள்ள தனியார் வாகனம் திருத்தும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்காது அந்த நிறுவனத்திலேயே கைவிடப்பட்டமை 2023 ஒக்டோபர் 04 ஆம் திகதி அந்த நிறுவனத்திற்குச் சென்று நடத்தப்பட்ட பௌதீக ஆய்வில் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. இந்த வாகனம் காச நோய் மற்றும் மலேரியா எதிர்ப்பு உலகளாவிய திட்டத்திற்கு வழங்கப்பட்ட வாகனம் என்பது அவதானிக்கப்பட்டதுடன், இந்த வாகனம் வெள்ளம் ஏற்பட்ட வேளையில் ஓட்டும் போது வாகனத்தின் இயந்திரத்தில் தண்ணீர் கலந்து வாகனம் சேதமைந்தது என்பதும், அதனை மறைத்து வாகனத்தை இயக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து தருமாறு கூறி வாகன திருத்தும் நிலையத்திற்கு வழங்கப்பட்டது என்பதும் கணக்காய்வில் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை உறுதி செய்வதற்கான எழுத்துமூல ஆதாரங்கள் எவையும் சமர்ப்பிக்கப்படவில்லை.	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணைகள் நடாத்தி, பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.
	ii. அமைச்சினால் கணக்காய்விற்கு எழுத்துபூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்த வாகனம் பழுது பார்ப்பதற்கு அனுப்பியதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், 2023 ஒக்டோபர் 04 ஆம் திகதி இது குறித்து போக்குவரத்து பிரிவின்	-அவ்வாறே-	-அவ்வாறே-

		உத்தியோகத்தர்களிடம் விசாரித்த போது இதற்கு முன்னர் பணிப்பாளர் (போக்குவரத்து) பதவி வகித்த இரு உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்ட உத்தரவுகளின்படி, வாகன திருத்தும் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக சோதனையின் போது இந்த வாகனம் அடையாளம் கண்டதாகவும், அதன்படி இந்த வாகனம் அமைச்சின் இருப்பு வாகனமாக பதிவு செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு இந்த வாகனம் முறையான பரிந்துரைகள் இன்றி வாகன திருத்தும் நிலையத்தில் சிதைவடைந்து வருவதை இரண்டு பொறுப்பான உத்தியோகத்தர்களும் தெரிந்துள்ள நிலையில் கணக்காய்வில் சோதனையிடும் வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்காமை மிகவும் பொருத்தமற்றதும் பொறுப்பற்றதுமான செயல் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		
	iii.	இந்த வாகனம் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்குதல், அதனை பயன்படுத்தல், வாகனம் சேதடைந்த நேரத்தில் வாகனம் ஓட்டிய பணி மற்றும் அதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள், சம்பவம் குறித்து காவல்துறைக்கு முறைப்பாடு செய்யப்பட்டதா, இந்த வானத்தை பழுது பார்ப்பதற்கு உற்பத்தியாளரிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டதா, அத்தகைய மதிப்பீடு பெறப்பட்டால் மதிப்பீட்டின்படி பழுதுபார்க்காத காரணம், இந்த சம்பவம் குறித்து ஆரம்ப கட்ட விசாரணை நடத்தப்பட்டதா, மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதன் பரிந்துரைகள் என்ன, இந்த வாகனத்தை பழுதுபார்க்கும் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கியது யார், அவ்வாறு கொண்டு செல்வதற்கு அந்த நிறுவனத்தின் வாகனம் திருத்துவதற்கான கொள்ளல் அனுமதி உள்ளதா, வாகனத்தை திரும்ப எடுத்துச் செல்லாமல் இருக்க என்ன காரணம், இந்த சம்பவத்தை பொறுப்பான தரப்பினர் மூடிமறைத்தமை, தகவல் அறிந்த பின்னரும் அமைச்சின் அதிகாரிகள் தேவையான சரியான நடவடிக்கை எடுக்காது சம்பவத்தை மூடிமறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை, இந்த நிலையில் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீளப் பெறுவது மற்றும் இந்த வாகனம்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	தொடர்பில் உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் முழுமையான முறையான மற்றும் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டப்படுவதுடன், தொடர்ச்சியாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அமைச்சின் வாகன முகாமைத்துவம் குறித்து உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் உங்களின் உடனடியாக கவனம் தேவை என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.		
(ஆ)	முன்னாள் சுகாதார அமைச்சருக்கு வழங்கப்பட்ட இரண்டு (02) வாகனங்கள் 2024 மார்ச் 15 ஆம் திகதி வரை அமைச்சிற்கு திரும்ப வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதுடன், அது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுத்து உரிய வாகனத்தை அமைச்சிற்கு மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுத்து வானத்தை மீள அமைச்சிற்கு பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.
(இ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் 05 தரங்களைச் சேர்ந்த 84 அரச வீடுகள் இருந்ததுடன், அந்த வீடுகள் அனைத்தும் மாதாந்த பொருளாதார வாடகை அடிப்படையில் பல்வேறு சேவைகளில் கடமையாற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கி வழங்கப்பட்டிருந்தன. அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயம் மற்றும் சுகாதார, நெடுஞ்சாலைகள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளரின் (சுகாதார) இலக்க 1977 மற்றும் 1977 ஜூன் 06 ஆம் திகதிய "அதிகாரபூர்வ இல்லங்கள் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க இல்லங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. வைத்தியசாலையின் அரச வீடுகளுக்காக 2023 ஆம் ஆண்டில் அரச மதிப்பீட்டு திணைக்களத்தினால் பொருளாதார வாடகையை மதிப்பீடு செய்து வைத்தியசாலை பணிப்பாளரிடம் சமர்ப்பித்த போதிலும், இந்த மதிப்பீட்டு வாடகையை அறவிடாது 2019 இல் மதிப்பீடு செய்யப்பட்ட பொருளாதார	தாபன விதிக்கோவையின் விதிமுறைகளின்படி செயற்பட வேண்டும்.	இணங்குவதாகவும், தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 5:6 பிரிவின் விதிகளின்படி அமைச்சு செயலாளரின் அனுமதியைப் பெற்ற பின்னர் நிலுவைத் தொகையுடன்

	வாடகையை விடுகளில் இருந்து அறவிடப்பட்டதால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2023 ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையான காலத்திற்கு மொத்தம் 3,262,800 ரூபா அரச வீட்டு வருமானம் அறவிடப்படவில்லை.		அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	ii. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் பிரிவு 6.1 இன்படி குறிப்பிட்ட பதவிக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வீடுகளின் குத்தகை காலம் 05 வருடங்கள் என்றபோதிலும், அதற்கு முரணாக குத்தகை காலத்திற்கு மேலாக 01 தொடக்கம் 15 வருடங்கள் அரச வீடுகளில் 19 உத்தியோகத்தர்கள் வசித்து வருவது அவதானிக்கப்பட்டது. அதன்படி அந்த உத்தியோகத்தர்களை அரச வீடுகளில் இருந்து வெளியேற்றி, அரச வீடுகளுக்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்களுக்கு அவற்றை வழங்குவதற்கு வைத்தியசாலையின் வீட்டு ஒதுக்கீட்டு அலுவலரினால் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், சட்ட நடவடிக்கைகளுக்கான அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட பின்னர் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,
	iii. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் பிரிவு 09 இன்படி அரசாங்க இல்லத்தில் அனுமதியின்றி அல்லது குத்தைக் காலத்திற்கு மேல் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களை வெளியேற்றுவதற்கு 1971 ஆம் ஆண்டின் இலக்கம் 3 மற்றும் 1974 இலக்கம் 40 எனும் சட்டங்களின் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் இலக்கம் 7 எனும் அரசாங்க இல்லங்கங்கள் (திரும்பப் பெறுதல்) சட்டத்தில் இருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரை வைத்தியசாலையின் பொறுப்பான அதிகாரிகளால் அதற்கு இணங்க முடியவில்லை.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், அரசாங்க இல்லத்தில் குத்தைக் காலத்திற்கு மேல் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களை வெளியேற்றுவதற்கு சுகாதார செயலாளரினால் 1969 ஆம் ஆண்டின் இலக்கம் 7 எனும் அரசாங்க இல்லங்கங்கள் (திரும்பப் பெறுதல்) சட்டத்தின் கீழ் வெளியேற்றும் அறிவிப்பு பல முறை வழங்கப்பட்டன எனவும், மேலும், இது தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு தொடர்ந்து கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன எனவும்.
(ஈ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக 2017 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் 16,897,350 ரூபா மதிப்புள்ள 03 மருத்துவ ஆய்வுகூட பரிசோனை உபகரணங்கள் எவ்வித ஆய்வுகூட பரிசோதனைகளுக்கும்	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரைணகள் நடாத்தி, பொறுப்பான தரப்பினர் மீது	இணங்குவதாகவும், இந்த உபகரணம் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம் முதல் கொள்வனவு வரையிலான முழு செயல்முறையையும் ஆராயுமாறு சுகாதார

	பயன்படுத்தப்படாமல் செயலற்றிருந்தன எனவும், அதில் மொத்தம் 11,602,350 பெறுமதியான 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாளில் இருந்து செயலற்ற நிலையில் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அமைச்சிடம் கோரப்பட்டது எனவும், இல்லையெனின், கராப்பிட்டி வைத்தியசாலையினால் விசாரணை மேற்கொள்ளுமாறு 2024.02.22 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், எனது 2024.03.15 ஆம் கடிதத்தில் திடீர் முற்றுகை பிரிவினால் சுயாதீன விசாரணை நடாத்துமாறு மீண்டும் கோரப்பட்டுள்ளதாகவும், அந்த விசாரணையின் முடிவின்படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும்.
(உ)	2021 மார்ச் 04 ஆம் திகதி உலக வங்கி உதவியின் கீழ் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு கிடைத்த ரூ. 3,346,500 (அ.டொ 17, 250) (1 அ.டொ 194 ரூபா) மதிப்புள்ள MaXterile FL90 வகை அழுத்த வெப்ப இயந்திரம் (Autoclav) அன்று முதல் அதாவது 02 ஆண்டு காலமாக செயலற்ற நிலையில் இருந்தது. மேலும் நிதி ஒழுங்கு விதி எண் 751 இன்படி, அரசாங்க நிறுவனத்திற்கு கிடைக்கும் அனைத்து பொருட்களும் உடனடியாக பொருட்கள் பதிவேட்டில் உள்ளிட வேண்டும் எனினும், அதன்படி செயற்படவில்லை என்பதுடன், இந்த இயந்திரம் வைத்தியசாலைக்கு பெறப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதிலும் பொருள் பதிவுகளில் உள்ளிடப்படவில்லை. மேலும் நிதி ஒழுங்கு விதி எண் 756 இன்படி, வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் அது தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை என்பதால் வைத்தியசாலையின் பொருள் கணக்கெடுப்புகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	உள்நாட்டு முகவர் நிறுவனத்திடமிருந்து தொழில்நுட்பத் தகவலைப் பெற்ற பிறகு, Biomedical Engineer (BME) இற்கு பரிந்துரைக்கப்பட்டு, BME இன் அறிவுறுத்தலின்படி மின்சாரம் மற்றும் நீர் வழங்கல், நீர் வடிகால் குழாய் அமைப்பை நிறுவ தேவையான உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இயந்திரத்தை இயக்கும் போது காணப்பட்ட மின் தடை சரி செய்யப்பட்டு, 2023.07.12 அன்று சரியான செயற்பாடு உறுதி செய்யப்பட்டது எனவும், அதன்படி பொருள் பதிவுகளில் உள்ளிட்டு தற்போது ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படுகிறது எனவும்.
(ஊ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்ட பக்கவாத பிரிவுக்குரிய (stroke unit) இரண்டாவது மாடியில் களஞ்சியப் படுத்தப்பட்ட	இந்த உபகரணங்கள் முழுமையாக	இணங்கவில்லை எனவும், எந்தவொரு மருத்துவ உபகரணங்களும் சம்பந்தப்பட்ட

	10 பொருட்களுக்கான 45 உபகரணங்கள் 2023 மார்ச் 16 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் தினம் வரை பயன்படுத்தப்படாமல் இருந்தன.	பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.	பிரிவினால் முறையாக உறுதிப்படுத்திய பின்னரே பொருள் பதிவுகளில் உள்ளிடப்படும் எனவும், அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி இந்த இயந்திரத்தின் செயல்பாட்டை சரிபார்க்க கோவிட் தொற்றுகளின் போது தாமதமானது. அதனால் பொருள் பதிவுகளில் உள்ளிட தாமதமானது எனவும், கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் Stroke Unit இல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இங்கு குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் புதிதாக நிர்மாணிக்கப்படும் பல்கலைக்கழக பிரிவிற்கு 2023 மார்ச் 16 ஆம் திகதியன்று நன்கொடையாக பெறப்பட்டது எனவும், இந்த உபகரணம் பாவிக்கப்பட்ட பின்னர் அனுப்பப்பட்டவை எனவும், அவற்றின் சில பாகங்கள் அதுவரை பெறப்படவில்லை எனவும், இந்த உபகரணங்கள் பல்கலைக்கழகப் பிரிவினால் பெறப்பட்டதால் வைத்தியசாலையின் ஏனைய வார்ட்டுகள் மற்றும் பிரிவுகளுக்கு வழங்க முடியாது எனவும்,
(எ)	சுகாதார அமைச்சினால் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு 2018 ஒக்டோபர் 30 ஆம் திகதி வழங்கப்பட்ட 18,000,000 ரூபா பெறுமதியான LW- 1553 எனும் பென்ஸ் வகைக்குரிய அன்புலன்ஸ் வண்டி 2020 செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவரை ஏற்றிச்சென்று திரும்பும் போது விபத்துக்குள்ளானது. இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக அதன் காப்பீட்டு முகவர் நிறுவனத்தினால் 8,300,000 ரூபா செலுத்துவதற்கு பரிந்துரைத்து 2022 டிசம்பர் 08 ஆம் திகதி 6,225,000 ரூபாவை பழுதுபார்த்தலுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்தியுள்ள	இந்த வாகனத்தை உடனடியாக பழுதுபார்த்து அவசரமாக பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த வாகனத்தின் பெரும்பாலான பழுதுபார்ப்பு பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன், அம்புலன்ஸ் வாகனத்திற்கான பெட்டரிகள் மற்றும் டயர்கள் தேவை என்று தெரிவித்துள்ளது எனவும், இது குறித்து இந்த வைத்தியசாலையின் தொழில்நுட்ப அலுவலர் (போக்குவரத்து) இனால்

	போதிலும் 2023 டிசம்பர் 31 நிலவரப்படி மேற்படி வாகனம் பழுதுபாரக்கப்படவில்லை.		சரிபார்த்து, அம்புலன்ஸ் வாகனத்திற்கான 5 டயர்கள் மற்றும் 02 பெட்டரிகளை காப்பீட்டுத் தொகைக்கு உட்பட்டு கொள்வனவு செய்வது பொருத்தமானது என பரிந்துரைத்துள்ளது எனவும், எனவே, டயர் மற்றும் பெட்டரிகள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும்,
(ஏ)	பேராதனை போதனா வைத்தியசாலையின் நோயாளிகளை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் LW- 0523 எனும் 1,800,000 மதிப்புள்ள மைக்ரோ அம்புலன்ஸ் வண்டியின் இயந்திரம் பழுதுபார்க்கப்பட வேண்டியிருந்ததால் 2019 ஆம் ஆண்டின் மே மாதத்திலிருந்தும் மற்றும் 48-0415 எனும் அம்புலன்ஸ் வண்டி 2022 ஜனவரி 22 அன்று விபத்துக்குள்ளானதால் அவை பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது அழிப்பதற்கு 2023 ஜனவரி 31 ஆம் திகதியிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இந்த வாகனங்கள் தொடர்பில் ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.
(ஐ)	பேராதனை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் உத்தியோகபூர்வ இல்லம் 2020 பெப்ரவரி 08 ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதிவரையில் ஏறக்குறைய 04 வருடங்களாக பயனற்று இருந்ததுடன், அதனை திருத்தி பயன்பாட்டுக்கு கொண்டுவருவது தொடர்பில் நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை.	இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் தற்போது வசிக்க முடியாத நிலையில் பழுதடைந்து உள்ளது. அதாவது இல்லத்தின் பின்புற பகுதியின் மேற்கூரை முழுமையாக சீரமைக்கப்பட வேண்டய நிலையில் மேற்கூரையின் உள்பகுதி சிதைவடைந்துள்ளதுடன் மின்சார அமைப்பும் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது எனவும், ஒதுக்கப்படும் பொருட்களுக்கான களஞ்சியமாக இந்த வீட்டின் ஒரு பகுதி பயன்படுத்துவதாகவும், எனினும் கடந்த ஆண்டுகளில் சுகாதார அமைச்சினால் வைத்தியசாலைக்கு கிடைத்த

			ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாத காரணத்தால் வைத்தியசாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், தற்போது இதனை முழுமையாக புனரமைப்பு செய்யப்பட வேண்டும் எனவும், அதன்படி, இந்த அனைத்து விடயங்களையும் தெரிவித்து அந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் ஒரு அறையை பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளருக்கு காத்திருப்பு அறையாக தற்காலிகமாக பயன்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்குமாறு 2023.03.22 ஆம் திகதிய கடிதத்தில் சுகாதார சேவை பணப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், ஒரு அறையை பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளருக்கு காத்திருப்பு அறையாக தற்காலிகமாக பயன்படுத்துவதற்கு தற்போது ஒப்புதல் கிடைத்துள்ளது என்பதுடன், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும்.
(ஒ)	அரச காணிச் சட்டத்தின் 224 வது பிரிவின் பிரகாரம் அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்து முறைப்படி சுவீகரிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், பேராதனை போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான 7.754 ஹெக்டேயர் காணி அவ்வாறு சுவீகரிக்கப்படவில்லை.	அரச காணிச் சட்டத்தின் 224 வது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.
(ஓ)	கண்டி தேசிய வைத்தியசாலையின் போக்குவரத்து பிரிவிற்கு சொந்தமாக 46 வாகனங்கள் உள்ள போதிலும், மழை மற்றும் வெயிலில் இருந்து பாதுகாப்பதற்காக 10 இற்கும் குறைவான வாகனங்களை மட்டும் நிறுத்தக்கூடிய அம்புலன்ஸ் தரிப்பிடத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் வைத்தியசாரலக்குரிய 30 இற்கும் மேற்பட்ட ஏனைய வாகனங்கள் வெளியில் நிறுத்த வேண்டி உள்ளது. இருப்பினும்,	வைத்தியசாலைக்குரிய வாகனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், 2024 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக கிடைக்கப்பெறவுள்ள ஒதுக்கீட்டை பயன்படுத்தி குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான அம்புலன்ஸ் வண்டிகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு

	வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களின் வாகனங்களை நிறுத்துவதற்காக வசதிகளுடன் கூடிய வாகன தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.		தேவையான வசதிகளை செய்து கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி பொருத்தமான இடத்தை தெரிவு செய்து தேவையான மதிப்பீடுகளை தயாரிக்குமாறு CECB நிறுவனத்திற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன எனவும்.
(ஒள)	மத்திய மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரின் கீழ் பதிவு செய்யப்பட்ட CPQK 4896 மற்றும் QK -4893 ஆகிய முச்சக்கர வண்டிகள் 2017 ஆம் ஆண்டில் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட போதிலும் அதன் உரிமை கையகப்படுத்தப்படவில்லை.	இந்த வாகனங்களை உடனடியாக கையகப்படுத்தி நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், மத்திய மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரின் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்த முச்சக்கரவண்டிகள் தற்போது கண்டி தேசிய வைத்தியசாலையின் நோயாளர் பராமரிப்பு சேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதுடன், அந்த முச்சக்கரவண்டிகளை கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும்.
(க)	கண்டி தேசிய வைத்தியசாலையின் காணி 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி 9642 எனும் வர்த்தமானி அறிவித்தலில் 3457 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி Lot no. 04 தவிர்ந்த இலக்கம் 01 முதல் 23 வரையான 22 Lot உம், 22 ஏக்கர் 17 ரூட். 313.2 பேர்சஸ் வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. 1989 ஆம் ஆண்டில் நில அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளரினால் தயாரித்த அடிப்படை வரைபடம் 3405 இன்படி Lot no. 01 முதல் 24 வரை இருந்தது எனவும், அதன்படி 1946 ஆம் ஆண்டில் 14,248 ஹெக்டேர் எனினும் 1989 ஆம் ஆண்டின் வரைபடத்தின்படி 23.637 ஹெக்டேர் ஆகும். அதன்படி, ஹெக்டேர் 9,389 (3712.14 பேர்ச்) பரப்பளவில் மாற்றம் காணப்பட்டது.	வைத்தியசாலைக்குரிய காணியை முறையாக தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், வர்த்தமானி மூலம் ஒதுக்கப்படாத பங்குகளை உரிய முறையில் அரசாங்கத்திற்கு கையகப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவு ஊடாக சுகாதார செயலாளர் மூலம் காணி அமைச்சில் இருந்து உரிய கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும்.

(ங)	2018 ஏப்ரல் 26 ஆம் திகதி KDS/KGK/4/5/5/42/03 எனும் இலக்க கண்டி கடவத் சதர மற்றும் கஹவட்ட கொரலெ உதவி பிரதேச செயலாளரின் கடிதத்தின்படி வைத்தியசாலை காணியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 169 பேரில் 27 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், அதில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கு கோப்புகள் 06 இற்கு வெளியேற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்த உத்தரவுகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், வெளியேற்ற உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு நீதமன்றப் பதிவாளருக்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளது எனவும், அத்துடன் வெளியேற்ற உத்தரவு வழங்கப்பட்ட 5 பேரின் விபரங்கள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட சட்ட விரோத குடியிருப்பாளர் பற்றிய பதிவேட்டில் இடம்பெறாததால் நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்த முடியாது எனவும், அத்துடன் 04 வழக்குக் கோப்புகளில் அச்சுப் பிழைகள் காரணமாக அந்த உத்தரவுகளை அமுல்படுத்த முடியாது எனவும், அந்த கோப்புகளை திருத்துவதற்குத் தேவையான சட்ட உதவிகளை உடனடியாக வழங்குமாறு சுகாதார அமைச்சின் சட்ட பிரிவிற்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டன எனவும், வழக்கு எண் 21654/19 இல் வெளியேற்ற உத்தரவை 2024.05.06 ஆம் திகதி நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும்.
(ச)	கண்டி வைத்தியசாலையினால் வழக்குத் தொடரப்பட்ட சட்ட விரோத குடியிருப்பாளர்களில் ஒருவரான அ.வ எண் 01 பகுதியில் வசிப்பவரினால் அவரின் வெளியேற்ற உத்தரவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு எண் CA 65/2019 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கின் தீர்ப்பு 2021 ஜூலை 27 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதுடன், 1958 ஆம் ஆண்டின் 98 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் இந்த lot no. 01 எனும் பகுதி வைத்தியசாலையிடம் ஒப்படைக்கப்படவில்லை என இறுதித் தீர்ப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வைத்தியசாலையினால் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அடிப்படையாக இருந்த அ.வ 3405 இன் காணி பங்குகள் அனைத்தும்	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இருப்பினும் Lot no. 01 பகுதி அடிப்படை வரைபடத்தின் அ.வ 3405, கையகப்படுத்தல் சான்றிதழின்படி வைத்தியசாலைக்கு உரிமை கோரப்படுவதால் வெளியேற்றல் வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், Lot no. 01இனை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவு ஊடாக

	வைத்தியசாலைக்கு சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		காணி அமைச்சினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும்.
(ஞ)	கண்டி பொது வைத்தியசாலைக்கு சொந்தமான தெய்வானைவெல கிராமத்தின் பி.வ 803 எனும் ரூட் 3 பேர்சஸ் 21.8 காணியில் நகர கழிவு நீர் முகாமைத்துவ திட்டத்தின் கழிவு நீர் இறைக்கும் நிலையம் நிர்மாணிக்கபபட்டது. இந்த கழிவு நீர் இறைக்கும் நிலையம் இயங்காத நிலையில் உள்ளதுடன் இந்த பகுதியில் வைத்தியசாலையின் கனிஷ்ட ஊழியர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் 02 உள்ளதாகவும், இடத்தின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்பதும், மேற்கொள்ளப்பட்ட பௌதீக தணிக்கையில் அவதானிக்கப்பட்டது. இந்த காணி அதிக பொருளாதார மதிப்பு கொண்ட பிரதேசத்தில் உள்ளதால் அதனை பயனுள்ள நடவடிக்கைகளக்கு பயன்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தெய்வானைவெல கிராமத்தின் பி.வ 803 எனும் இலக்க காணி பகுதியில் இலங்கை மின்சார சபையினால் ஆரம்ப மின்சார உப நிலையத்தை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளது எனவும், இதன்மூலம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வைத்தியசாலைக்குத் தேவையான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
(ட)	அரச காணிச் சட்டத்தின் 224 ஆவது பிரிவின் பிரகாரம் நாவலப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலை இயங்கும் பஸ்பாகே கோரலே பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 09 ஏக்கர் 03 ரூட் 29.17 பேர்ச்சஸ் காணியின் உரிமையை வைத்தியசாலைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் வைத்தியசாலையின் வளாகத்தை சுற்றி பாதுகாப்பு வேலியும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் தேவையற்ற நபர்கள் வளாகத்திற்குள் எந்நேரமும் அனுமதியின்றி நுழையும் அபாயம் உள்ளது எனவும், அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்யும் அபாயமும் உள்ளது.	அரச காணிச் சட்டத்தின் 224 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், நாவலப்பிட்டிய பொது வைத்தியசாலை அனுபவிக்கும் 3.8229 ஹேக்டேயர் காணி சுகாதார அமைச்சிற்கு சுவீகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும், அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் பெறுமதிச் சான்றிதழைப் பெறுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அளவை கோரிக்கை இல. 26/20249(655) மற்றும் 64/2023 (619) ஆகிய 02 கோரிக்கைகள் தொடர்பில் அத்துமீறல் செய்பவர்களை அடையாளம் காண தடயங்கள் தயாரிக்கும் பணியை நில அளவையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் எனவும், அதன்படி அதற்கான அளவீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்த பிறகு சுகாதார அமைச்சின் செயலாளரின்

			B04/ඉඩම්/හාවලඉටිය/2023/17 603 மற்றும் 2024/03/25 ஆம் திகதிய கடிதத்தின்படி சொத்துரிமைப் பத்திரத்தை பெறலாம் எனவும், பாதுகாப்பு வேலி கட்டும் பணியை கட்டம் கட்டமாக முடிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டதால் அதற்கான விலைமனுக் கோரல் 2024/04/29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது எனவும், அதன்படி டெண்டர் இலக்கம் DGHN/FK/07/2024 இன் மூலம் ரூ. 4,992,250 மதிப்புள்ள ஏலங்கள் அழைக்கப்படுவதுடன், முறையாக ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் உரிய கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும்.
(ண)	2020 மார்ச் 31 ஆம் திகதி கண்டி தேசிய வைத்தியசாலையில் இருதய நோய் பிரிவில் நிறுவப்பட்ட Philips Volcano IVUS & FFR இயந்தரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி பயன்படுத்தப்படாமல் இருந்தது.	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரைணகள் நடாத்தி, பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் பிரிவில் நிறுவப்பட்ட இந்த இயந்திரம் தொடர்பான நுகர்வுப் பொருட்களை வழங்குமாறு வைத்தியசாலையினால் பல சந்தர்ப்பங்களில் இயந்திரத்தை வழங்கும் உள்ளூர் நிறுவனத்திற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டதுடன், சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கும் பல தடவைகள் தேவையான விழிப்புணர்வு செய்யப்பட்டன எனவும், எனினும் இதுவரை இயந்திரத்திற்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை பெற முடியவில்லை என்பதால் இந்த இயந்திரத்திற்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை வழங்கவோ அல்லது அவ்வாறு

			வழங்குவதற்கு முடியாவிடின் தேவையான வேறு வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டது எனவும்.
(த)	நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் கோவிட் நோயாளிகளின் சுவாசப் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களினால் நன்கொடையாக கிடைத்த மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் மதிப்பீடு செய்யப்பட்ட சுமார் 1,547,000 ரூபா மதிப்புள்ள Oxygen Concentrators இயந்திரங்கள் 13 உம், சுமார் 1,260,000 ரூபா மதிப்புள்ள C-PAP Devices 07 உம் 2023 மார்ச் மாதம் கிடைத்த 700,000 ரூபா மதிப்புள்ள ICU Ventilator இயந்திரமும் உயிரியல் மருத்துவ உபகரண களஞ்சியத்தில் 2023 டிசம்பர் 31 நிலவரப்படி குறைந்தளவே பயன்படுத்தப்பட்டன.	இது சம்பந்தமாக ஆராய்ந்து, இந்த உபகரணங்களை திறம்பட பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், Oxygen Concentrators இயந்திரங்கள் 13 இல் 02 தேவைக்கேற்ப தற்போது வார்ட்டு இல 04 இற்கும் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கும் வழங்கப்பட்டுள்ளன எனவும், அத்துடன், 2024.05.03 திகதிய கடிதம் மூலம் பயன்படுத்தப்படாத உபகரணங்கள் குறித்து உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவு கொழும்பு, கண்டி, வட்டப்புழுவ மற்றும் மருத்துவ விநியோகப் பிரிவு கொழும்பு போன்றவற்றுக்கு தெரிவிக்கப்பட்டது எனவும், சம்பந்தப்பட்ட நிறுவனம் வந்து Ventilator இயந்திரத்தை தீவிர சிகிச்சைப் பிரிவில் நிறுவியதுடன், நிறுவனம் வழங்கிய சான்றிதழ் குறித்து கொழும்பு உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவுக்குத் தெரிவிக்கப்பட்டது எனவும்.
(ந)	2019 மே 31 ஆம் திகதி ராகமை போதனா வைத்தியசாலையினால் Binocular Microscope இயந்திரமொன்றை நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட போதிலும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் 04 வருடங்கள் 06 மாத காலம் பயன்படுத்தப்படாமல் இருந்தது.	தேவைக்கேற்ப மட்டுமே உபகரணங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.	இந்த இயந்திரம் இல. A/32 321678 மற்றும் 2024.02.09 ஆம் திகதி வழங்கல் கட்டளை மூலம் பல்லேகல சிறைச்சாலைக்கு வழங்கப்பட்டது எனவும்.

(ப)	சீன உதவியின் கீழ் வைத்தியசாலைகளில் சுகாதார அமைப்பை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 2022 மார்ச் 29 ஆம் திகதி வழங்கப்பட்ட ரூ. 20,940,561.08 (USD73,734.37*284) ஆன GE Health Care/ Model/Optima XR 646 5 Digital Static X - Ray எனும் Digital Static X – Ray இயந்திரம் நிறுவுவதற்கு நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையினால் வளாகத்தை அமைத்தல், வயரிங், மும்முனை மின்சாரம் பெறல் மற்றும் மின் கேபிள்கள் இடுவதற்கு ரூ. 19,970,008 செலவிடப்பட்ட போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் இந்த இயந்திரத்தை நோயாளிகளின் பராமரிப்புக்காகப் பயன்படுத்த முடியவில்லை.	இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்து கிடக்கும் உபகரணங்களை வழங்குவது தொடர்பாக சுகந்திரமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.	இந்த இயந்திரம் 2022.03.29 ஆம் திகதி இந்த வைத்தியசாலைக்கு கிடைத்தது எனவும், இந்த இயந்திரத்தை வைத்தியசாலையில் நிறுவுவதற்கான வளாகத்தை தயாரித்தல், மின்சாரம் வழங்குவதற்கான பூர்வாங்க பணிகள், மும்முனை மின்சாரம் பெறுவதற்கு மின்மாற்றி update செய்தல் மற்றும் மின் கேபிள்கள் இட்டு மின்சாரத்தை x கதிர் பிரிவிற்கு வழங்குதல் போன்ற கட்டம் கட்டமாக நிறைவு செய்துள்ளதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனம் வந்து இயந்திரத்தை நிறுவ வேண்டியுள்ளதால் இது குறித்து உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன், தற்போது UPS இயந்திரம் 2024.05.03 ஆம் திகதி நிறுவப்பட்டது எனவும்.
(ம)	பேராதனை பல் மருத்துவப் பிரிவு நோயாளர்களின் உமிழ்நீர்ச் சுரப்பியைப் பாதுகாத்தல், நரம்புகளுக்கு ஏற்படும் சேதத்தை குறைக்கும் வகையில் காயம் மற்றும் வடுக்கள் அல்லது கீறல்கள் ஏற்படாமல் சுரப்பி மற்றும் குழாய்களில் உள்ள பிரச்சனைகளை பரிசோதித்தல் மற்றும் சிகிச்சை அளித்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உமிழ்நீர் சுரப்பி கற்கள் மற்றும் சுரப்பி சுரக்கங்களை அகற்றுவதற்காக பயன்படுத்தப்படும் உயர் தொழில்நுட்ப திறன் கொண்ட Re - Karl Storz Silaendoscopy and visual System இயந்திரத்தை 2020 மே 04 ஆம் திகதி ரூ. 9,779,724 செலவில் கொள்வனவு செய்து 2022 ஆண்டில் 05 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதுடன், 2022 ஏப்ரல் 25 ஆம் திகதியாகும் போது இயந்திரம் செயலிழந்துள்ளது. இயந்திரம் பௌதீக சேதத்திற்கு உள்ளாகியதாகவும், அது நிறுவனத்தின் பொறுப்புக்குட்பட்டதல்ல என்பதால் உரிய உபகரணத்தை இலவசமாக சரி செய்ய முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஜனவரி 22 ஆம் திகதி புதிய ஒரு Telescope வழங்குவதற்காக ஒரு வருட உத்தரவாதத்துடன் ரூ. 2,255,896 இற்கு	இது தொடரபாக விசாரணை நடத்தி பொறுப்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியப்பட வேண்டும் என்பதுடன், இயந்திரத்தை உடனடியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இந்த இயந்திரம் நோயாளர்களின் உமிழ்நீர்ச் சுரப்பிகளில் இருந்து கற்களை அகற்றுவதற்கும் உமிழ்நீர்ச் சுரப்பி நெரிசலைத் தடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் உயர் தொழில்நுட்ப திறன் கொண்ட நுட்பமாக இயந்திரம் என்பதுடன், அது 2020.05.04 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டு 2021.11.17 ஆம் திகதி நிறுவப்பட்டது எனவும், அந்த இயந்திரம் செயலிழந்த தினமான 2022.04.25 ஆம் திகதி வரை 05 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அப்போதைய கோவிட் தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக திறந்த வாய் சத்திர சிகிச்சைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்த

	விலைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் மேற்படி உபகரணம் பழுதுபார்க்கப்படவில்லை.		வேண்டியிருந்ததால் நோயாளர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்ததால் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க காரணமானது எனவும், அந்த காலகட்டத்தில் மிகவும் அவசியமான நோயாளர் பராமரிப்பு நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன எனவும், இந்த இயந்திரம் திட்டமிட்ட சிறப்பு சத்திர சிகிச்சைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் அவசர சிகிச்சைகளுக்காக அல்ல எனவும், இயந்திரம் செயலிழந்த பிறகு பழுதுபார்க்கும் பணிக்கான செயற்பாட்டின் போது 2023 ஜனவரி 22 ஆம் திகதி புதிய Telescope இயந்திரத்தை வழங்குவதற்காக 2,255,896 ரூபா மதிப்பீட்டை முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பித்துள்ளது எனவும், இயந்திரம் பௌதீக சேதத்திற்கு உள்ளானதால் அதற்கு காரணமான நபரை அடையாளம் காணப்பதற்காக விசாரணை நடத்தப்பட்டது எனவும், அது நோயாளியின் நடத்தையால் ஏற்பட்டது என்பதும் அவதானிக்கப்பட்டது என்பதால் வைத்தியசாலையின் செலவில் அதனை திருத்த முடிவு செய்யப்பட்டது எனவும், முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மிக அதிகமாக இருந்ததால் இது தொடர்பில் பல தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் பல கொள்முதல் குழுக்களில் நீண்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன எனவும், விஷேட மருத்துவ நிபுணர்களை அழைத்து கலந்துரையாடிய போது இந்த இயந்திரம் குறைந்த காலமே பயன்படுத்தப்பட்டது என்பதாலும் புதிய இயந்திரத்தின் விலை

			அதிகரித்துள்ளதாலும் இதனை சரிசெய்து பயன்படுத்துவதே பலன் தரும் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது என்பதால் முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு 2024.04.03 ஆம் திகதி மீண்டும் ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நியமிக்கப்பட்டதுடன், மேற்படி மதிப்பீட்டு விலையில் பழுதுபார்க்கும் பணியை முகவர் நிறுவனத்தினூடாக மேற்கொள்வது பொருத்தமானது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினால் 2024.04.10 ஆம் திகதி பரிந்துரைக்கப்பட்டது எனவும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மேற்படி விலைகளின் கீழ் முகவர் நிறுவனத்தினூடாக பழுதுபார்த்தல் பணியை செய்து கொள்வது பொருத்தமானது என்பதை 2024.04.18 ஆம் திகதி கொள்ளல் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது எனவும், அதன்படி மதிப்பீட்டு விலையை அங்கீகரிக்கும் கடிதம் 2024.04.20 ஆம் திகதி முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது எனவும், எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு இயந்தரயொன்று செயலிழந்த உடனேயே அறிக்கையிடுவதற்கு கணினி செயற்திட்டமொன்று தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனவும், அனைத்து செயலிழப்புகளையும் அறிக்கையிடல் மற்றும் பழுது பார்க்கும் நடவடிக்கைகளும் அந்தத் திட்டத்தினூடாக மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும்

			இயந்திரத்தை கவனமாகப் பயன்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவிப்பதற்கும் அதற்கான அறிவுறுத்தல்களும் மற்றும் பயிற்சிகளும் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ய)	பேராதனைபல் வைத்தியசாலைக்கு ரூ. 6,250,000 பெறுமதியான Digital Dental Panoramic X-Ray Machine With Cephalostat இயந்திரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த இயந்திரத்தின் மூலம் முழு வாயையும் உள்ளடக்கியவாறு X கதிரியல் படத்தை பெற முடியும் என்பதுடன் மாதந்தோறும் சுமார் 500 நோயாளிகளுக்கு இதன் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் தொடர்பாக 2021 டிசம்பர் 09 ஆம் திகதி தொடங்கும் 04 வது வருடத்திற்கான சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு பொறுப்பான அதிகாரிகளினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2023 ஆகஸ்ட் 09 ஆம் திகதி இந்த இயந்திரம் செயலிழந்துள்ளதுடன் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் பழுதுபார்க்கப்படவில்லை.	-அவ்வாறே-	இந்த இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான மதிப்பீட்டை வழங்குமாறு முகவர் நிறுவனத்திற்கு 2023.12.13 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதுடன், 2024.01.06 ஆம் திகதி நினைவூட்டலும் அனுப்பப்பட்டது எனவும், அந்த முகவர் நிறுவனத்தினால் 2021.01.08 ஆம் திகதிய கடிதத்தில் மேற்கொண்டு அந்த இயந்திரத்தின் உள்நாட்டு முகவர் தாம் அல்ல எனவும் அந்த நிறுவனத்தின் எதிர்காலப் பணிகள் வேறோர் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அதன் பிரகாரம் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான செலவு மதிப்பீட்டை வழங்குமாறு 2024.01.08 ஆம் திகதி புதிய முகவர் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2024.04.04 ஆம் திகதி நினைவூட்டலும் அனுப்பப்பட்டது எனவும்.
(ர)	இணை சுகாதார விஞ்ஞான பீடத்தினால் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட C- Arm X-Ray இயந்திரம் 2019 ஏப்ரல் 1	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.

	ஆம் தகிதி முதல் பிரதான சத்திர சிகிச்சை அறையின் எலும்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவில் சத்திர சிகிச்சைகளுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த இயந்திரம் 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதி செயலிழந்துள்ளது. இது தொடர்பாக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரினால் 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதி சம்பந்தப்பட்ட விநியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி 2022 நவம்பர் 24 ஆம் திகதி உரிய நிறுவனத்தினால் இயந்திரம் பரிசீலிக்கப்பட்டது. அது மேலும் பரிசீலித்துப் பார்ப்பதற்காக உபகரணத்தை எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இயந்திரத்தின் திருத்தப்பணிகள் நிறைவு செய்திருக்கவில்லை.		
(ல)	கண்டி தேசிய வைத்தியசாலையின் நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட பரிசோதனைகள் மேற்கொள்ளும் போது பக்றீரியா உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் ரூ. 9,690,248 பெறுமதியான Media Preparation & pouring System இயந்திரம் 2018 செப்டம்பர் 26 ஆம் திகதி நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்திற்கு பெறப்பட்டுள்ளதுடன், அதன் Preventive Consumable Maintenance kit இல்லாத காரணத்தால் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலையின் நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட பரிசோதனைகள் மேற்கொள்ளும் போது பக்றீரியா உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் Media Preparation & pouring System இயந்திரம், கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதி தடைகள் காரணமாக தேவையான உபகரணத்தை பழுதுபார்ப்பதற்கான விலை மதிப்பீட்டை வழங்குவதில் தாமதம் ஏற்படும் என்று சம்பந்தப்பட்ட உள்ளூர் முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளதால் பழுதுபார்க்க தாமதமானது எனவும், எனினும், தற்போது விலை மதிப்பீடு சமர்ப்பித்துள்ளதுடன், அதற்காக பிரதிப் பணிப்பாளர் (உயிரியல் மருத்துவ பொறியியலாளர்) பிரிவின் அனுமதி கோரி அனுப்பப்பட்டுள்ளது என்பதுடன் அனுமதி மற்றும் ஒதுக்கீடு கிடைத்தவுடன் கொள்ளல் குழு தீர்மானத்தைப் பெற்று

			பழுதுபார்ப்பதற்கான கட்டளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(வ)	கண்டி தேசிய வைத்தியசாலையின் திசுசார் ஆய்வுகூடத்தின் Biopsy மாதிரி பரிசோதனை செயல்முறைக்கு பயன்படுத்தப்படும் ரூ. 6,700,000 மதிப்புள்ள Automation Slide Strainer ஒரு இயந்திரம் 2018 ஏப்ரல் 27 ஆம் திகதி திசுசார் ஆய்வுகூடத்திற்கு பெறப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் Touch Display 2020 ஜூலை 16 ஆம் திகதி செயலிழந்துள்ளதுடன், அதனை பழுதுபார்த்தல் தொடர்பான கோரிக்கை கடிதம் 2020 ஜூலை 16 ஆம் திகதி பணிப்பாளருக்கு சமர்ப்பித்துள்ள போதிலும், 2023 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதியிலும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலையின் திசுசார் ஆய்வுகூடத்தின் Biopsy மாதிரி பரிசோதனைக்காக பயன்படுத்தப்படும் இயந்திரத்தையும் பழுதுபார்ப்பதற்கு மேற்கூறப்பட்டவாறு இறக்குமதி தடைகள் காரணமாக விலை மதிப்பீடு வழங்காததால் பழுதுபார்க்க தாமதமானது என்பதுடன், தற்போது அதற்கான மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளதுடன், பழுதுபார்ப்பதற்கான மதிப்பீடுகள் வழங்கப்பட்டு கொள்ளல் குழு முடிவுகள் எடுக்கப்பட்டு பழுதுபார்ப்பதற்கான கட்டளை வழங்கப்பட்டு தற்போது அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும்.
(ழ)	கண்டி தேசிய வைத்தியசாலையின் திசுசார் ஆய்வுகூடத்தின் Biopsy மாதிரி பரிசோதனை செயல்முறைக்கு பயன்படுத்தப்படும் ரூ. 5,995,500 மதிப்புள்ள Tissue Processor ஒரு இயந்திரம் 2017 டிசம்பர் 04 ஆம் திகதி திசுசார் ஆய்வுகூடத்திற்கு பெறப்பட்டுள்ளதுடன், அதன் சென்சார் சிஸ்டத்தில் (Sensor Error) பிழை காரணமாக 2023 ஆகஸ்ட் 23 ஆம் திகதியிலிருந்து செயலிழந்துள்ளதுடன், 2023 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதியிலும் சரி செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரவில்லை.	உபகரணங்கள் பழுதடையும் போது அவற்றை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலையின் திசுசார் ஆய்வுகூடத்தின் Biopsy மாதிரி பரிசோதனை செயல்முறைக்கு பயன்படுத்தப்படும் இந்த இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளதுடன், மாதிரி பரிசோதனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.
(ள)	கண்டி தேசிய வைத்தியசாலையின் உயிரியல் இரசாயன விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு 2011 ஒக்டோபர் 03 ஆம் திகதி ரூ. 4,455,357 மதிப்புள்ள Konelab Analyzer இயந்திரம் கடைசியாக 2016 இல் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அது பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்த அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் 2016 ஆம் ஆண்டு	இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பற்ற முறையில் செயற்பட்டுள்ளார்களா என்பதை கண்டறியப்பட	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலையின் உயிரியல் இரசாயன விஞ்ஞான ஆய்வுகூடத்தின் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும்

	முதல் 2023 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி வரையான சுமார் 07 வருட காலம் ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்தது.	வேண்டும் என்பதுடன் இயந்திரத்தை விரைவாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இந்த இயந்திரம் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் அழித்தல் செயற்பாட்டுக்கு பரிந்துரை செய்துள்ளதால் அது தொடர்பான ஆவணங்களுடன் அழித்தல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரைகள் பெறுவதற்கு பிரதான மருந்தாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி அழித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குவதற்கான அனுமதியை பெறுவதற்காக எதிர் காலத்தில் சுகாதார அமைச்சிற்கு அனுப்பபடும் எனவும்.
(ற)	கண்டி தேசிய வைத்தியசாலையின் உயிரியல் இரசாயன விஞ்ஞான ஆய்வுகூடத்தின் இரத்தப் பரிசோதனைகளை (Routine Test) மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் செலவு ரூ. 1,200,000 மதிப்புள்ள Point OfCare Analyzer இயந்திரம் 2020 ஏப்ரல் 20 ஆம் திகதி பெறப்பட்டுள்ளதுடன், 2023 டிசம்பர் நிலவரப்படி இந்த பகுப்பாய்வு இயந்திரம் செயற்படும் நிலையில் இருந்த போதிலும் பரிசோதனைகளின் துல்லியம் குறைவதால் அதற்காக வினத்திறன் (Regent) ஆர்டர் செய்யப்படவில்லை என்பதும், 2023 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதியிலும் அது பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	ஆவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலையின் உயிரியல் இரசாயன விஞ்ஞான ஆய்வுகூடத்தின் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் இயந்திரம் கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான சோதனைகளைச் செய்ய இந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டது என்பதுடன், இந்த காலகட்டத்தில் இந்த இயந்திரத்தால் பாரிய சேவை பெறப்பட்டது எனவும், குறைந்த அளவு சோதனைகளை மேற்கொள்ளும் போது சோதனைகளின் துல்லியத் தன்மையில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் கோவிட் 19 தொற்று காலத்தின் போது பெறப்பட்ட பல இயந்திரங்கள் இருந்தமை மற்றும் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைந்தமை போன்ற காரணங்களால் இந்த இயந்திரத்தின் பயன்பாடு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது எனவும்.

(ன)	கம்பளை போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி ரூ.1,000,000 மதிப்புள்ள Thermo Fisher Centrifuge இயந்திரம் 2022 ஜூலை 27 ஆம் திகதியில் இருந்து செயலிழந்துள்ளதுடன், 2024 ஜனவரி 22 ஆம் திகதி நிலவரப்படி அதனை சரி செய்து பயன்பாட்டுக்கு எடுத்திருக்கவில்லை.	உபகரணங்கள் பழுதடையும் போது அவற்றை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், 2022.11.30 ஆம் திகதி இயந்திரம் பழுதுபார்க்கப்பட வேண்டும் என பிரதான ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளருக்கு அறிவிக்கப்பட்டது எனவும், 2022.12.14 ஆம் திகதி உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் முகவர் நிறுவனத்திடம் இருந்து மதிப்பீட்டைப் பெறுமாறு பரிந்துரைத்துள்ளது எனவும், அதன்படி 2022.12.16 ஆம் திகதி நிறுவனங்களுக்கு அறிவித்த பின்னர் அவர்கள் வந்து சரிபார்த்தனர் எனவும், பின்னர் அவ்வப்போது தொலைபேசி அழைப்புகள் செய்து மதிப்பீட்டைப் பெற முயன்ற போதிலும் மதிப்பீடு வைத்தியசாலைக்கு கிடைக்கவில்லை எனவும், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்ட ஏற்றம் இறக்கம் காரணமாக மற்றும் டொலர் கையிருப்பு தட்டுப்பாடு போன்ற காரணங்களால் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் காணப்படுவதால் மதிப்பீடுகளை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த பிரச்சனைகள் குறைந்த பின்னர் மீண்டும் தொலைபேசி அழைப்பின் மூலம் மதிப்பீட்டைப் பற்றிக் கேட்ட போது இயந்திரத்தை நிறுவனத்திற்கு எடுத்துச் சென்று அதன் தற்போதைய நிலையை பரிசோதிக்க வேண்டும் என்று கூறப்பட்டதால் இயந்திரத்தை 2024.03.07 ஆம் திகதி எடுத்துச் செல்லப்பட்டது எனவும், 2024.04.28 ஆம் திகதி மதிப்பீடு பெற்று, அதனை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிக்கையைப்

			பெற அனுப்பப்பட்டது எனவும், நிலவும் பொருளாதார சூழ்நிலை காரணமாக மேற்கூறிய பணிகளுக்கு தேவையான உதிரிப் பாகங்களை எடுப்பது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பதால் அந்த பழுதுபார்த்தல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நீண்ட கால தாமதம் ஏற்பட்டது எனவும்.
(ஜ)	கம்பளை போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு 2018 ஆகஸ்ட் 22 ஆம் திகதி ரூ.1,428,645 மதிப்புள்ள Tri modular Tissue Embedding Centre இயந்திரம் 2022 டிசம்பர் 30 ஆம் திகதியில் இருந்து செயலிழந்துள்ளதுடன், 2024 ஜனவரி 22 ஆம் திகதி நிலவரப்படி அதனை சரி செய்து பயன்பாட்டுக்கு எடுத்திருக்கவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், 2022.12.16 ஆம் திகதி இயந்திரம் பழுதுபார்ப்பதற்கான கோரிக்கை முகவர் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது எனவும், அதன்படி இயந்திரத்தை நிறுவனத்திற்கு எடுத்துச் சென்று அதன் தற்போதைய நிலையை பரிசோதிக்க வேண்டும் என்று கூறப்பட்டதால் அதற்காக கடிதம் தயாரிக்கப்பட்ட போதிலும், இயந்திரத்தை எடுத்துச் செல்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், அது குறித்து தொலைபேசி ஊடாக விசாரித்த போது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்ட ஏற்றம் இறக்கம் காரணமாக மற்றும் டொலர் கையிருப்பு தட்டுப்பாடு போன்ற காரணங்களால் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் காணப்படுவதால் மதிப்பீடுகளை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், பின்னர் 2024.02.16 ஆம் திகதி இயந்திரத்தை எடுத்துச் சென்று 2024.03.06 ஆம் திகதி ஆம் திகதி மதிப்பீடு வழங்கப்பட்டது எனவும், அதனை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிக்கையைப்

			பெற அனுப்பப்பட்டது எனவும், நிலவும் பொருளாதார சூழ்நிலை காரணமாக மேற்கூறிய பணிகளுக்கு தேவையான உதிரிப் பாகங்களை எடுப்பது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பதால் அந்த பழுதுபார்த்தல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நீண்ட கால தாமதம் ஏற்பட்டது எனவும்.
(ஸ)	கம்பளை போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு திசுசார் பிரிவிற்கு Cywlogical Samples Performing பணிக்காக பயன்படுத்தப்படும் ரூ.1,300,000 மதிப்புள்ள Sakura Cyto Centrifuge (Model cyto tec 2500) இயந்திரம் 2017 மார்ச் 31 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலிழந்து காணப்பட்டதுடன் 2024 ஜனவரி 22 ஆம் திகதி நிலவரப்படி அது பழுதுபார்க்கப்படவில்லை.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.
(ஷ)	கம்பளை போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் ரூ.1,000,000 மதிப்புள்ள ஒரு Shinva.Most – T முறையில் Mini – Auto Clave இயந்திரம் 2023 நவம்பர் 28 ஆம் திகதியிலிருந்தும், வைத்தியசாலையின் 07 ஆம் இலக்க வார்ட்டில் பயன்படுத்தப்படும் ரூ.1,600,000 மதிப்புள்ள Zoncare multipura monitor இயந்திரத்தின் Blood Pressure Monitor செயலிழந்த காரணத்தால் 2022 ஆகஸ்ட் 03 திகதியிலிருந்தும், வைத்தியசாலையின் 04 ஆம் இலக்க வார்ட்டில் பயன்படுத்தப்படும் சுமார் ரூ.1,600,000 மதிப்புள்ள Patient Care monitor இயந்திரம் 2023 ஒக்டோபர் 22 ஆம் திகதியிலிருந்தும் செயலிழந்துள்ளதுடன், 2024 ஜனவரி 22 ஆம் திகதி நிலவரப்படி இந்த இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், 2022.08.07 மற்றும் 2022.12.18 ஆம் திகதிய கடிதங்களின் மூலம் இந்த இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக மதிப்பீடு கோரப்பட்டது எனவும், ஆனாலும் மதிப்பீடுகள் கிடைக்கவில்லை என்பதால் அவ்வப்போது தொலைபேசி அழைப்புகள் கொடுத்த போது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்ட ஏற்ற- இறக்கம் காரணமாக மற்றும் டொலர் கையிருப்பு தட்டுப்பாடு போன்ற காரணங்களால் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் காணப்படுவதால் மதிப்பீடுகளை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டது எனவும், 2023.07.21 ஆம் திகதி மதிப்பீடொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்காக 2023.09.30 ஆம் திகதி மதிப்பீட்டுக்கான

			அனுமதி வழங்கப்பட்ட போதிலும் பழுதுபார்த்தல் தாமதம் ஆனதால் 2024.02.29 ஆம் திகதி நிறுவனத்திற்கு மீண்டும் நினைவூட்டல் அனுப்பப்பட்டதுடன், தொலைபேசி ஊடாகவும் விசாரிக்கப்பட்டது எனவும்.
(ஹ)	மருத்துவ கழிவுகளை எரிப்பதற்காக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் பயன்பாட்டில் இருந்த கழிவு எரித்தல் இயந்திரம் 2020 ஜூலை 10 ஆம் திகதி திடீரென தீப்பற்றி எரிந்து செயலிழந்துள்ளதுடன் நி.ஒ 104 (3) இன்படி ஆய்வு அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூ.1,663,200 என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இழப்பு / சேதம் தொடர்பில் நி.ஒ 104 (4) இன்படி விசாரணை நடத்தப்பட்டு முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இழப்பு சேதம் ஏற்பட்டு 02 வருடங்கள் கடந்த போதிலும் நடவடிக்கை எடுக்கவில்லை. இழப்பு தொடர்பில் நி.ஒ 110 இன்படி ஆவணப்படுத்தப்படவில்லை என்பதன் அடிப்படையில் மற்றும் கழிவு எரிக்கும் இயந்திரம் அதன் விநியோகத்தர் ஊடாக ரூ.1,540,000 (வரியின்றி) செலவில் பழுதுபார்ப்பதற்கும், மத்திய மாகாண பொறியில் சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைக்கப்பட்ட மதிப்பீட்டின் கீழ் அதன் கூரை ரூ.615,000 செலவில் பழுதுபார்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் அடுத்த நடவடிக்கைகள் எடுக்காமல் கைவிடப்பட்டதால் அரச சொத்துக்கள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் 128(1) இன் விதிகளின்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செயற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	நிதி ஒழுங்குவிதிகளின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், மருத்துவ கழிவுகளை எரிப்பதற்காக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் நிறுவப்பட்ட கழிவு எரித்தல் இயந்திரம் திடீதென தீப்பற்றியதால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் 104 (4) இன்படி விசாரணை நடத்துவதற்கு மத்திய மாகாண சுகாதார செயலாளரால் ஆய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது எனவும், இது தொடர்பான ஆய்வு அறிக்கை மற்றும் எடுக்கப்பட வேண்டிய மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் இந்த வைத்தியசாலைக்கு கிடைக்காத காரணத்தால் அந்த எரியூட்டியை பழுதுபார்த்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும்.
(ஸ்ரீ)	மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மற்றும் பெண்ணோயியல் விஷேட மருத்துவ நிபுணரின் கோரிக்கையின் பேரில் 2019 டிசம்பர் மாதத்தில் ரூ. 63,855.000 செலவில் இரட்டை 200W டயோட லேசர் இயந்திரம் (200W Dual Diode Laser Machine) கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கொள்முதல் செயல்முறை மற்றும் ஒப்பந்தம் நிறைவேற்றுதல் தொடர்பில் பல முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டன. அதாவது உத்தரவாதம் மற்றும் உதிரி பாகங்கள் பெறுவதற்கான ஒப்பந்த நிபந்தனைகள் இருந்த போதும் இயந்திரத்தின் உத்தரவாதக் காலம் அதனை பயன்படுத்துவதற்கு முன்பே காலாவதியானது என்பதுடன், உதரிப் பாகங்கள் பெறுவதற்கான எந்த உத்தரவாதங்களும்	இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இணங்கவில்லை எனவும்.

	வழங்கப்படவில்லை. இதனைத்தவிர, இயந்திரம் நிறுவப்படாமல் வைத்தியசாலை ஊழியர்களுக்குரிய விரிவான பயிற்சிகளும் வழங்கப்படாமல் டெண்டர் விதிமுறைகளுக்கு முரணாக முழுப் பணமும் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி பல்வேறு மருத்துவ நிலைமைகளுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய குறிப்பிடத்தக்க முதலீட்டைக் கொண்ட இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு நான்கு வருடங்கள் அதாவது 2024 மார்ச் ஆகும்போது மருத்துவரினால் பரிந்துரைக்கப்பட்டச சிகிச்சை முறைகளுக்கு பயன்படுத்தாமல் காணப்பட்ட காரணத்தால் போதனா வைத்தியசாலை அதன் மருத்துவ நோக்கங்களை அடையத் தவறியது.		
(கா)	களுத்துறை போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டிடத்தின் முதலாம் மாடியில் நிறுவப்பட்ட சத்திர சிகிச்சை அறைகளுக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப கருவிகளும் அதேபோல் மருத்துவர்கள மற்றும் தாதியர்களுக்கான அறைகள் உட்பட சத்திர சிகிச்சை அறைகளுக்குத் தேவையான அனைத்து கூறுகளும் பொருத்தப்பட்டுள்ளபோதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் மாதம் கணக்காய்வுத் தினம் வரை எவ்வித பயன்பாட்டுகளும் இன்றி அந்த சத்திர சிகிச்சை அறைகள் மூடப்பட்டுள்ளன.	தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை பூர்த்தி செய்து இந்த சத்திர சிகிச்சை அறைகளை உகந்ததாக பயன்படுத்தப்பட வேண்டும்.	2018 ஆம் ஆண்டு முதல் மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாகவும், சத்திர சிகிச்சை உபகரணங்களின் குறைபாடுகள் காரணமாகவும் A & E கட்டிடத்தில் நிறுவப்பட்ட சத்திர சிகிச்சை அறைகள் செயல்படவில்லை எனவும், ஆனாலும் தற்போது இந்த குறைபாடுகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டு 2023.11.27 ஆம் திகதியன்று அந்த சத்திர சிகிச்சை அறைகளில் Endoscopy சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.
(கி)	102 மில்லியன் ரூபா செலவில் களுபோவில போதனா வைத்தியசாலையில் நிறுவுவதற்கு 2020.02.18 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட Digital Fluoroscopy X Ray Machine பெயருடைய மருத்துவ உபகரணம் 2024.03.31 ஆம் திகதியிலும் நிறுவவதற்கான கட்டிடம் கட்டி முடிக்கப்படாததால் உத்தரவாத காலமும் காலாவதியாகி, நோயாளர் பராமரிப்பு சேவைக்காக பயன்படுத்தப்படாமல் உயிரியல் மருத்துவ பொறியயல் களஞ்சிய ஆவணங்களிலும் பதியப்படாமல் களஞ்சிய வளாகத்தில் (பிற வைத்தியசாலைகளின் கோரிக்கைகளைப் பொருட்படுத்தாமல்) பயன்படுத்தப்படாமல் இருந்தது.	இந்த இயந்திரத்தை அவசரமாக பயன்பாட்டுக்கு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இயந்திரம் உயிரியல் மருத்துவ பொறியயல் களஞ்சியத்திற்கு பெறப்பட்ட பின்னர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் வைத்தியசாலையினால் இயந்திரம் எடுத்துச் செல்லப்படவில்லை எனவும், இந்த இயந்திரத்தை முறையாகப் பயன்படுத்தக் கூடியவாறு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் உயிரியல் மருத்துவ பொறியயல் சேவை பிரிவிற்கு

			அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
(கீ)	88.2 மில்லியன் ரூபா மதிப்புள்ள Fluoroscopy இயந்திரம் 2021 பெப்ரவரி 12 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு கிட்டத்தட்ட 2 வருடங்கள் கடந்துள்ள போதிலும் மின்சாரம் இன்றி நிறுவப்பட்ட பின்னர் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியவில்லை. நிறுவுவதற்கான சான்றிதழ் 2023 டிசம்பர் 18 ஆம் திகதி பெறப்பட்டு, அணுசக்தி ஆணையத்தின் உரிமம் பெறுவதற்காக 2024 மார்ச் 06 ஆம் திகதி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் 03 வருடங்களுக்கு மேலாக நோயாளர் பராமரிப்புக்காக பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், மருத்துவ உபகரணங்களை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்த வைத்தியசாலை அதிகாரிகள் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	2020.01.20 ஆம் திகதி கதிரியல் விஷேட மருத்துவ நிபுணரினால் இந்த இயந்திரத்திற்காக கதிர்வீச்சுப் பிரிவை ஒட்டிய கட்டிடத்தை வழங்குமாறு கோரி அப்போதைய பணிப்பாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது எனவும், இந்த இயந்திரத்தை நிறுவுவதற்கு தற்போது கட்டிடம் இல்லை அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், Hayleys நிறுவனத்தினாலும் 2020.02.04 ஆம் திகதி பணிப்பாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது எனவும், 2021 மார்ச் 11 ஆம் திகதி பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனை பணியகம் (CECB) இனால் PET CT SCAN கட்டிடத்திற்கு பக்கத்தில் மேலாக கட்டிடமொன்று கட்டுவதற்கு தேவையான திட்டத்தை செயல்படுத்துமாறு தெரிவித்து ஒரு கடிதம் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டது எனவும், நன்கொடையாளர்களால் கட்டிடம் கட்டப்பட்ட போதிலும், அதற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும், இந்த திட்டத்திற்கு குறைந்த பட்சம் தற்காலிகமாக மின்சாரம் வழங்குவதற்கான சாத்தியம் குறித்து வைத்தியசாலை மின்சார பராமரிப்பு மற்றும் சேவை நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டதுடன், தற்போதுள்ள நிலைமையின் கீழ் தற்காலிக மின் இணைப்பை வழங்கமுடியாது என 2022.10.20 ஆம் திகதியன்று அந்த நிறுவனத்தினால் அறிவித்துள்ளது எனவும், இது குறித்து கதிரியலாளர்களுக்கு

			கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டது என்பதுடன், தொடர்ந்தும் இந்த பயிற்சிகள் வழங்குவதற்கு திட்டப்பட்டுள்ளது எனவும், நோயாளர் பராமரிப்புகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டது எனவும்.
(கு)	மருத்துவ விநியோகப் பிரிவுக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான தேவையான பழுதுபார்ப்புகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டதால், கீழே காட்டப்பட்டுள்ளவாறு நீண்ட காலம் செயலிழந்துள்ளது.		
	i. 41-9608 (ISUZU NPR) லொறியானது பழுதுபார்ப்பதற்காக 2021 நவம்பர் 20 ஆம் திகதி Sathosa Motors இற்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும், இந்த லொறியானது கணக்காய்வுத் தினமான 2023 ஜூன் 20 நிலவரப்படி 1 வருடம் 07 மாதங்களுக்கு மேலாக மேற்கண்ட பழுதுபார்க்கும் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த லொரி பழுதுபார்க்கும் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டு ஒரு வருடத்திற்குப் பிறகு ரூ. 1,196,835 இற்கான ஆரம்ப மதிப்பீடு ரூ.2,375,968 ஆக திருத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பழுதுபார்க்கப்பட்ட இயந்திரத்திற்கு 100,000 கிலோமீட்டர் எழுத்துமூல உத்தரவாதக் காலத்தைப் பெறுவதற்கு உட்பட்டு பழுதுபார்ப்பதற்கு 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி கொள்ளல் குழு அறிக்கை மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட போதிலும், 2023 ஜூன் 20 ஆம் திகதியிலும் Sathosa Motors இனால் அதற்கான இணக்கத்தை எழுத்துமூலம் பெறவில்லை.	வாகனங்கள் பழுதுபார்க்கப்படும் போது உள்ளக கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்படல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், மேற்படி கணக்காய்வு தொடங்கும் கால கட்டத்தில் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக அனுப்பும் போது அதனுடன் தொடர்புடைய தேவை அல்லது ஒப்புதலுடன் ஒரு கடிதம் மட்டுமே அனுப்பப்பட்டது என்பதுடன், தற்போது வாகனத்தை பழுதுபார்ப்பு நிறுவனத்திற்கு எழுத்துமூலம் ஒப்படைக்கப்பட்டது எனவும், இயந்திரத்தை அகற்றிய பின்னரே இந்த லொறியின் Engine Block பகுதி வெடித்துள்ளமை கண்டறியப்பட்டதால் ரூ.2,375,968 திருத்தப்பட்ட மதிப்பீடு இயந்திரத்தை கலற்றப்பட்ட பின்னரே சமர்ப்பிக்கப்பட்டது எனவும், அந்த பழுதுபார்ப்பு தொடர்பில் எழுந்த தொழில்நுட்ப சிக்கல்களை சரிசெய்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆலோசனைகள் மற்றும் இயந்திர பொறியியலாளர்களின், போக்குவரத்து அதிகாரியின் பரிந்துரைகளை பெறுவதற்காக அந்த உத்தியோகத்தர்கள் மற்றும் Sathosa

			Motors நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் பல சந்தர்ப்பங்களில் இது தொடர்பில் கலந்துரையாடினர் எனவும், அதன்பின்னர் மேற்படி திருத்தப்பட்ட மதிப்பீட்டைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதால் தாமதத்திற்கான காரணம் எனவும், சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனம் கொள்கை ரீதியில் பழுதுபார்க்கும் பணிக்கு அதிகபட்சம் 10,000 கி.மீ மட்டுமே வழங்கப்படும் என தெரிவித்துள்ளது எனவும் அதை நாங்கள் 100,000 கி.மீ. வரை அதிகரித்து கோரியதால் அது குறித்து மேற்படி நிறுவனங்களின் தலைவர்கள் நீண்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 20,000 கி.மீ உத்தரவாதக் காலத்தை வழங்குவதற்கு ஒப்புக் கொண்டனர் எனவும், கொள்ளல் வழிகாட்டுதல்களின்படி ரூ.500,000 இற்கு மேற்பட்ட பழுதுபார்த்தல் பணிகளுக்கு முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடல் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், தற்போது அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும், இந்த லாரி சுமார் 38 வருடம் பழையது என்பதால் தேவையான உதிரிப் பாகங்களை பெறுவது மிகவும் கடினமான காரணம் என்பதால் அதற்காக நீண்ட காலம் எடுத்தது எனவும், தற்போது அதற்கான பழுதுபார்ப்பு நிறைவடைந்துள்ளது எனவும்.
	ii. தினசரி ஓட்டுநர் பதிவின்படி 41 - 4702 (ISUZU FTR) லாரி கடைசியாக 2020 ஏப்ரல் 18 ஆம் திகதி ஓட்டப்பட்டது	-அவ்வாறே-	மேற்படி லாரி பழுதுபார்ப்பதற்கான அனுமதி பெறப்பட்ட பின்னர் உரிய

	என்பதுடன், அந்த வாகனத்தின் இயந்திர அமைப்பில் உள்ள குறைபாடுகள் காரணமாக பழுதுபார்க்கும் பணிக்காக பரிந்துரைக்கப்பட்டாலும், கணக்காய்வுத் தினமான 2023 ஜூன் 20 ஆம் திகதியிலும் அதன் பழுதுபார்ப்பு பணிகளை நிறைவு செய்து கொள்வதற்கு மருத்துவ விநியோகப் பிரிவு தவறியுள்ளது. அதன்படி, இந்த லாரி கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக வாகன பழுபார்ப்பு நிலையத்தில் போடப்பட்டுள்ளது. அதன்போது, ஜயலத் இன்ஜினியரிங் வர்க்கஸிடமிருந்து ரூ. 389,700 செலவில் பழுதுபார்ப்பதற்கு 2020 ஒக்டோபர் 20 ஆம் திகதி கொள்முதல் குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்ட போதிலும், லாரி 08 மாதங்கள் தாமதித்து வாகன பழுபார்ப்பு நிலையத்திற்கு 2021 ஜூன் 23 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. ஆனாலும் மேற்கூறிய விலையில் பழுதுபார்ப்பபை மேற்கொள்ள வாகன பழுபார்ப்பு நிலைய உரிமையாளர் சம்மதிக்காததால் மீண்டும் இந்த பழுதுபார்ப்பு பணி ரூ.573,550 செலவில் லியனகே மோட்டஸ் இற்கு 2022 பெப்ரவரி 11 ஆம் திகதி வழங்கப்பட்டது. அதன்படி லாரியை பழுபார்க்கும் நிலையத்திற்கு அனுப்ப தாமதித்ததால் இந்த பழுதுபார்ப்புக்காக ரூ. 183,850 மேலதிக செலவை அரசாங்கம் ஏற்க நேரிடும் என்பதால் இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அதற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து மேலதிக செலவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.		வாகனம் பழுதுபார்ப்பதற்காக 08 மாதங்களின் பின்னரே அனுப்பப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்வதாகவும், அந்த காலப்பகுதியில் கோவிட் - 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக குறிப்பாக அந்த நிறுவனம் அவ்வப்போது மூடப்பட்டதால் அந்த கால கட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலை காரணமாக இந்நிலைமை ஏற்பட்டது எனவும், இதுவரை வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அனுப்பும் போது வாகனம் மற்றும் உதிரிப் பாகங்களை அவ்வாறு எழுத்துபூர்வமாக ஒப்படைக்கவில்லை என்பதுடன், தற்போது அத்தகைய குறைபாடுகளை சரி செய்துள்ளது எனவும், இந்த கால கட்டத்தில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக உதிரிப் பாகங்களின் விலை வேகமாக அதிகரித்துள்ளதாகவும், மேற்படி பழுதுபார்ப்பு பணிக்காக விலைகள் கோரும் போது அந்த மேற்கோள்களுக்கு செல்லுபடியாகும் காலம் கோரப்படவில்லை என்பதுடன், விலைகள் சமர்ப்பிக்கும் போது சில நிறுவனங்களினால் அந்த காலங்களை வழங்குவதாகவும், அது தொடர்பில் ஏற்படக்கூடிய சாத்தியமான நன்மை/ தீமைகளை கருத்தில் கொண்டு இதனை விடவும் பொறுப்புடன் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், இரண்டாவது சந்தர்ப்பத்தில் பழுதுபார்ப்பதற்கான விலைகள் கோரும் போது முதல் சந்தர்ப்பத்தின் விலைகளை விட ரூ. 183,850 அதிகரித்துள்ளது என்பதை

			ஏற்றுக் கொள்வதாகவும், இந்நிலைமைக்கு அப்போதைய ரூபாய் மதிப்பு வீழ்ச்சியும் ஒரு காரணம் என்பதுடன், மருத்துவ விநியோகப் பிரிவின் தாமதமும் இதற்கு காரணமாக அமைந்தது எனவும்.
	iii. தினசரி ஓட்டுநர் பதிவின்படி இலக்கம் 58- 5579 கெப் வாகனம் 2022 ஏப்ரல் 04 ஆம் திகதியின் பின்னர் ஓட்டப்படவில்லை என்பதுடன், மேலும் 04 மாதங்களுக்குப் பிறகு கெப் வாகனத்தை பழுதுபாரக்கப்பட வேண்டும் என மருத்துவ விநியோகப் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தருக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ரூ. 483,350 செலவில் பழுபார்ப்பு பணிக்காக விமல் மோட்டர்ஸ் இற்கு 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி அனுப்பட்டுள்ளதுடன், கணக்கய்வுத் தினமான 2023 ஜுலை 13 ஆம் திகதியிலும் பழுதுபார்ப்பு பணிகளை முடிப்பதற்கு மருத்துவ விநியோகப் பிரிவு தவறியதால் ஒரு வருடத்திற்கும் மேலாக கெப் வாகனம் செயல்படாமல் இருந்தது.	-அவ்வாறே-	ஓடுவதில் இருந்து நீக்கப்பட்ட இந்த கெப் வாகனம் பழுதுபார்ப்பதற்காக சம்பந்தப்பட்ட சாரதியிடம் அவசரகால நிலை குறித்து கடிதம் கோரப்பட்ட போதிலும், அவர் அதனை வழங்க முன்வரவில்லை எனவும், அதனை போக்குவரத்து பிரிவின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தரினால் 2022.08.10 ஆம் திகதி நிர்வாக உத்தியோகத்தருக்கு அறிக்கையிட்ட பின்னர் 2022.10.10 ஆம் திகதி போக்குவரத்து உத்தியோகத்தரின் பரிந்துரையின் பேரில் பழுபார்ப்பதற்கான விலைகள் கோரப்பட்டன எனவும், இந்த காரணிகள் தாமதத்தை ஏற்படுத்தியது எனவும், கெப் வாகனம் பழுதுபார்ப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு இந்த வாகனத்தை அனுப்புவதற்கு கிட்டத்தட்ட ஒரு மாதம் கடந்தது எனவும், இந்த வாகனத்தை மேற்படி நிறுவனத்திற்கு கொண்டு செல்ல முன்னர் தொலைபேசி ஊடாக விசாரித்த போது அந்த நிறுவனத்தில் வேலைப்பளு அதிகம் என்பதால் வாகனத்தை அனுப்புவதற்கு தாமதமானது எனவும், வாகனம் பழுதுபார்ப்பதற்காக உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்படும் போது டீசல், உதிரி பாகங்கள் மற்றும் வாகனத்தை முறையாக ஒப்படைப்பதற்கான முறைமையொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த

			சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன எனவும்.
	iv. தினசரி ஓட்டுநர் பதிவின்படி இலக்கம் 41- 54704 லாரி வாகனம் 2022 ஆகஸ்ட் 23 ஆம் திகதியின் பின்னர் ஓட்டப்படவில்லை என்பதுடன், லாரிக்கு புதிதாக முகம் போடுவதற்கும் மற்றும் பிற பழுதுபாக்கும் பணிகளுக்குமாக 2022 நவம்பர் 30 ஆம் திகதி விலைகள் கோரப்பட்ட போதிலும், குறைந்த விலைகள் சமர்ப்பித்த இரண்டு நிறுவனங்களில் லாரியின் முகத்தை ஆய்வு செய்து தொழில்நுட்ம மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை கணக்காய்வுத் தினமான 2023 ஜூன் 20 ஆம் திகதியிலும் பெறப்படவில்லை. கோள்முதல் நடவடிக்கைகளில் இந்த தாமதம் ஏற்பட்டதால் 10 மாதங்களாக இந்த லாரி செயற்படாமல் இருந்தது.	-அவ்வாறே-	லாரியின் முகத்தை மாற்றுவதற்காக குறைந்த விலை சமர்ப்பித்த இரண்டு நிறுவனங்களும் முகத்தை ஆராய்ந்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தைப் பெற 2023.03.29 ஆம் திகதி முடிவு செய்யப்பட்டு அதற்காக மேலதிக செயலாளர் (கொள்ளல்) இன் ஒப்புதல் 2023.04.10 ஆம் திகதி பெறப்பட்டது எனவும், அதன்படி, 2023.05.02 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு 2023.04.08 ஆம் திகதி உரிய அறிக்கை வழங்கப்பட்டதுடன் அதன்படி அந்த பரிந்துரைகளை பரிசீலித்து பார்த்த கொள்ளல் மதிப்பீட்டுக் குழு 2023.08.31 ஆம் திகதி போட்டியுடனான விலைமனு கோரலின் கீழ் மீண்டும் விலைகள் கோருவதற்கு தீர்மானம் வழங்கப்பட்டதாகவும், இந்த லாரி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் லாரி வாகனங்களுக்கான பாரிய தேவை மற்றும் பிரச்சனைகள் தொடர்பில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளர் விடுத்த கோரிக்கையை கருத்தில் கொண்டு மேற்படி அமைச்சு எடுத்த தீர்மானத்திற்கு அமைய மருத்துவ விநியோகப் பிரிவினால் அமைச்சிற்கு அனுப்பப்பட்டது எனவும்,
	v. தினசரி ஓட்டுநர் பதிவின்படி இலக்கம் GI -9890 லாரி வாகனம் 2020 ஜூலை 10 ஆம் திகதியின் பின்னர் ஓட்டப்படவில்லை என்பதுடன் இந்த லாரி வாகனத்தில் மேற்கொள்ளப்பட்ட	-அவ்வாறே-	லாரியை பழுதுபார்ப்பதற்காக அனுப்புவதற்கு 2021.03.17 ஆம் திகதி வழிகாட்டுதலுக்கான ஒரு கடிதம்

	பழுதுபார்ப்பு பணிகள் வோல்கா மோட்டர்ஸுக்கு ரூ. 384,000 இற்கு வழங்குவதற்கு 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி கொள்ளல் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ள போதிலும் கணக்காய்வுத் தினமான 2023 ஜுலை 17 ஆம் திகதியிலும் பழுதுபார்ப்பு நிலையத்திற்கு வாகனத்தை அனுப்புவதற்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 3 வருடங்களுக்கு மேலாக வாகனம் செயலற்று காணப்பட்டது.		வழங்கப்பட்டது எனவும், எனினும் லாரியை ஓட்டி எடுத்துச் செல்ல முடியாமை, Covid – 19 தொற்று சூழ்நிலை காரணமாகவும் மற்றும் முந்தைய சந்தர்ப்பத்தில் 41 – 9606 லாரி பழுதுபார்த்தல் அந்த நிறுவனத்தால் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் பெறப்பட்ட போதிலும், அதனை நிராகரித்து திருப்பி அனுப்பப்பட்டமை, பின்னர் GI -9654 லாரி பழுதுபார்ப்பில் ஏற்பட்ட சிக்கல்கள், எரிபொருளை முழுமையாக வெளியில் எடுத்தமை போன்ற முக்கிய காரணங்களால் இந்த லாரியை மேற்படி நிறுவனத்திற்கு பழுதுபார்ப்புக்காக அனுப்பவில்லை எனவும், போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கோப்பு செயலாக்கத்தில் தாமதம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் எனவும், தற்போது (இரண்டு வாரங்களுக்கு முன்பு) வோறொரு எழுதுவிளைஞரின் சேவை பெறப்பட்டதால் இந்த லாரியின் அடுத்த கட்ட நடவடிக்கை துரிதமாக எடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன எனவும்.
vi.	LK – 6834 லாரியின் பின்பக்க Body மிகவும் பழுந்தடைந்துள்ளதால் அந்த பின் பக்க Body இனை சரிசெய்து அல்லது மாற்றித்தருமாறு வாகன சாரதியினால் 2020 ஜுன் 03 ஆம் திகதி கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக அவ்வப்போது 04 தடவைகள் விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்வுத் தினமான 2023 ஜுன் 20 ஆம் திகதியாகும் போது 3 வருடங்களுக்கு மேலாகியும் இந்த பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.	-அவ்வாறே-	இந்த லாரிக்காக குளிர் சங்கிலியுடன் கூடிய Body இனை பெற்று பொருத்துவதற்கு 2020 ஒக்டோபர் 27 ஆம் திகதி போக்குவரத்து உத்தியோகத்தர் பரிந்துரைத்து 3 ½ மாதங்களின் பின்னர் விலைமனுக்கள் கோரப்பட்டமைக்கான காரணம் அது ஓடும் நிலையில் உள்ள வாகனம் என்பதாலும், ஓட முடியாத நிலையில் இருந்த லாரி வாகனத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது எனவும்,

			உரிய பழுதுபார்ப்பு பணிக்காக 04 சந்தர்ப்பங்களில் விலைமனு கோரப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களால் மீண்டும் மீண்டும் விலைமனுக்கள் கோரப்பட்டன எனவும், அதன்படி ஐந்தாவது முறையாகவும் விலைமனு கோரப்பட்டது எனவும், கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையுடன் கொள்ளல் குழுவின் தீர்மானத்தை பெறுவதற்காக கோவை அனுப்பப்பட்டது எனவும்.
	vii. KB – 3755 ஜீப் பழுதுபார்ப்பு காரணமாக 2021 ஒக்டோபர் மாதத்திலிருந்து இது ஓடுவதில் இருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வுத் தினமான 2023 ஜூலை 17 ஆம் திகதி நிலவரப்படி இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு தேவையான கொள்ளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதன்படி கிட்டத்தட்ட 1 வருடமும் 9 மாதங்களாக இந்த ஜீப் செயல்படாமல் இருந்தது.	-அவ்வாறே-	இந்த ஜீப் வாகனத்தின் பழுதுபார்ப்பு பணிக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் மகவர் நிறுவனத்திடம் விலைகள் கோரப்பட்ட போதிலும் அதற்கான விலைகள் சமர்ப்பிக்கவில்லை எனவும், இந்த ஜீப் 2021 ஒக்டோபர் முதல் இரண்டு சந்தர்ப்பங்களில் பழுதுபார்ப்புக்கான விலைமனுக்கள் கோருவதற்கு முயற்சித்த போதிலும் அது தோல்வியடைந்தது எனவும், எனினும் அதிகாரிகளுக்கான போக்குவரத்து வாகனங்களின் தேவையை கருத்தில் கொண்டு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ விநியோகம்) இனால் இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கான மதிப்பீடு கோருவதற்கு 2024.04.04 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்துள்ளார் எனவும்.

3.7 இழப்புகள் மற்றும் சேதங்கள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	பரிந்துரை	பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்
(அ)	19 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட கூற்றுகளில் (இணைப்பு (i)) சேர்க்கப்பட்ட மொத்தம் 118,369,992 ரூபா 143 சந்தர்ப்பத்திற்குரிய மதிப்புகள் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் சேர்க்கப்படவில்லை.	வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள் மற்றும் அமைச்சினால் அதன் நிறுவனங்களுடன் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள் ஒன்றுக்கொன்று ஒத்ததாக இருக்க வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நகல்கள் இல (1) மற்றும் (2) இல் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து தகவல்களும் அமைச்சின் இறுதிக் கணக்குக் கூற்றுகளில் இல (1) மற்றும் (2) இல் சேர்க்கப்படவில்லை எனவும், ஏனெனில் அமைச்சின் குறிப்புகள் அரச கணக்கு சுற்றறிக்கைகளின்படி கோரப்பட்ட தகவல்கள் மட்டுமே உள்ளடப்பட்டு தயாரிக்கப்பட்டது எனவும், அதன்படி தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய இழப்புகள் மற்றும் சேதங்கள் தனித்தனி ஆவணங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும்.
(ஆ)	வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இணைப்பு (i) இனை ஆராய்ந்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. சேயற்பாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றின்படி அதன் மதிப்பு ரூ. 32,197,358 என்ற போதிலும், வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களினால்	-அவ்வாறே-	-அவ்வாறே-

		தயாரிக்கப்பட்ட கூற்றுகளின்படி அந்த மதிப்பு 150,535,850 ரூபா ஆகும். அதன்படி 118,338,492 ரூபா வேறுபாடு அவதானிக்கப்பட்டது.		
	ii.	2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது கைவிடுவதற்கு உள்ள நட்டம் பற்றிய கூற்றில் முழு மதிப்பு (செயல்பாடுகள்) 150,535,850 ரூபா ஆகும். அதில் 28,771,799 ரூபா 05 வருடங்களுக்கு மேற்பட்ட பெறுமதி என்பதுடன், அது மொத்த பெறுமதியில் 19 சதவீதமாகும். மேலும், கால பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத பெறுமதி 10,636,981 ரூபா ஆகும்.	நிதிக்கூற்றுகள் துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், இந்த நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	-அவ்வாறே-
	iii.	இலங்கை தேசிய வைத்தியசாலையில் ரூ.17,000 மதிப்புள்ள 34 மருத்துவ சான்றிதழ்கள் காணமமல் போனமை மற்றும் ரூ. 14,000 மதிப்புள்ள 28 மருத்துவ சான்றிதழ்கள் காணமமல் போனமை குறித்து வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டவில்லை என்றாலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அந்த மதிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.	நிதிக்கூற்றுகள் துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், மேற்படி விடயம் தொடர்பில் சரியான தகவல்களை கோரி இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், உரிய சரியான தகவல்கள் பெறப்பட்டவுடன் அவற்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(இ)	அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வருடத்தினுள் ஏற்பட்ட நி.ஒ. 109 இன் கீழ் நட்டம் மற்றும் விடுபட்டவை பற்றிய கூற்று (இணைப்பு (ii)) இன்படி நி.ஒ 109 இன் கீழ் ஏற்பட்ட நட்டம் மற்றும் விடுபட்டவற்றின் மதிப்பு 4,762,128 ரூபா என்பதுடன், வருடத்தினுள் புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்கப்பட்ட மதிப்பு 4,762,128 ரூபா ஆகும். அதன்படி ஆண்டினுள் ஏற்பட்ட நட்டம் மற்றும் விடுபட்டவற்றின் மதிப்பை கிட்டிய மதிப்பிற்கு சமமாகுவதற்கு உள்ள சந்தர்ப்பம் குறைவதால் இந்த கூற்றின் துல்லியம் குறித்து சிக்கலாக உள்ளது.	இந்த எண்ணிக்கைகளில் துல்லியத்தன்மை குறித்து கணக்காய்விற்கு உறுதிப்படுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இணைப்பு (ii) இல் சேர்க்கப்பட்டுள்ள கூற்று இல 1 இல் சேர்க்கப்பட்ட நட்டம் மற்றும் விடுபட்டவை தவிர நி.ஒ. 109 இன் கீழ் உள்ள நட்டம் மற்றும் விடுபட்டவை எனவும், அதன்படி, இந்த கூற்றுகளில் கோரப்பட்டிருப்பவை ஆண்டினுள் ஏற்பட்ட நட்டம் மற்றும் விடுபட்டவைக்கான மதிப்பு அந்த மதிப்பிற்கு சமம் என கருத்துப்படாது எனவும்.

(ஈ)	ஆண்டினுள் நி.ஒ. 109 இன் கீழ் புத்தகங்களில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவிடுதல் பற்றி கூற்றின்படி 10 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக மதிப்பாண்டில் 9,896,376 ரூபா நட்டத்தில் 6,227,356 இனை அறவிடப்பட்டுள்ளதுடன், ரூபா 2,111,286 இனை புத்தகத்தில் வெட்டி நீக்கப்பட்டுள்ளது. எனினும், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அந்த மதிப்பு சேர்க்கப்படவில்லை. மேலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் 05 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக சேர்க்கப்பட்ட ரூ.4,174,755 நட்டத்தில் ரூ. 304,679 இனை அறவிடப்பட்டுள்ளதுடன், ரூ.4,172,129 மதிப்பை புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்கியுள்ளது. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்பட்டன.		
	i. றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் ரூ. 262,391 இற்கான 3 நிகழ்வுகள் தொடர்பாக புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவீடுகள் தொடர்பில் வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் சேர்க்காத போதிலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அந்த மதிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்று துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும்.	அதவானிப்புகளுடன் இணங்குவதாகவும், அதன்படி, இந்த வைத்தியசாலை பற்றிய நிகழ்வுகளுடன் தொடர்புடையவற்றை உரிய புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவீடுகள் செய்யப்பட்டன என்பதால் அமைச்சின் நிதிக்கூற்றுகளில் அந்த மதிப்புகள் சேர்க்கப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து அனுப்பப்பட்ட கூற்றுகளில் சேர்க்கப்படவில்லை எனவும், அது குறித்து அந்த நிறுவனங்களில் விசாரிக்கப்பட்டுள்ளதுடன், பதில் கிடைத்ததும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
	ii. கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் LW – 0217 அன்புலன்ஸ் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்ட நட்டம் ரூ. 26,500 இனை வெட்டி நீக்குதல் மற்றும் அறவீடுகள் தொடர்பில் வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் சேர்க்காத போதிலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அந்த மதிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் GK – 9639 மற்றும் NC – 6484 என்ற அன்புலன்ஸ் வண்டிகள் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்ட	-அவ்வாறே-	-அவ்வாறே-

	நட்டம் ரூ. 185,657 என வெட்டி நீக்குதல் மற்றும் அறவீடுகள் தொடர்பில் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும் வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அது ரூ. 467,946 என காட்டப்பட்டுள்ளது.		
iii.	இலங்கை தேசிய வைத்தியசாலையில் NC- 6485 எனும் வேன் விபத்துக்குள்ளான ரூ. 262,391 இனை புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவீடுகள் தொடர்பில் வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் சேர்க்காத போதிலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அந்த மதிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
iv.	அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் ரூ. 578,000 மதிப்புள்ள ஒரு கெமரா காணாமல் போதல் மற்றும் மஹரகம வாய் சுகாதார நிறுவனத்தின் வாகன விபத்துடன் தொடர்புடைய ரூ. 12,000 இனை புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவீடுகள் தொடர்பில் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் சேர்க்கப்பட்ட போதிலும் அதனை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இரண்டு நிறுவனங்களும் இழப்புகள் மற்றும் சேதங்கள் பற்றிய கூற்றுகளை சமர்ப்பிக்கவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(உ)	19 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் இணைப்பு (i) இன் படிவம் வெற்று அறிக்கையாகவும், 29 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் இணைப்பு (ii) இன் படிவம் வெற்று அறிக்கையாகவும் சமர்ப்பித்துள்ளன. அதன்படி மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் இழப்புகள் மற்றும் சேதங்கள் (வாகன விபத்துகள் உட்பட) ஏற்படாதது கணக்காய்வில் சிக்கலாக அவதானிக்கப்பட்டது.	நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது அனைத்து நிறுவனங்களின் தரவுகள் பொறுப்பு உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் பெற்று கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், அது குறித்து உரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் மதிப்பாய்வு ஆண்டில் இழப்புகள் மற்றும் சேதங்கள் (வாகன விபத்துகள் உட்பட) ஏற்படவில்லையா என்பது குறித்து விசாரிக்கப்பட்டுள்ளது என்பதுடன், பதில் பெறப்பட்டவுடன் கணக்காய்விற்கு

			சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ஊ)	அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலுவலகம் உட்பட 25 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் இணைப்பு (i) மற்றும் 24 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் இணைப்பு (ii) படிவங்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட படிவத்தின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் துல்லியம் குறித்து சிக்கல் உள்ளது.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை
(எ)	மருத்துவ விநியோகப் பிரிவுக்கு சொந்தமான மருந்து களஞ்சியங்களில் 2009 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்டதாக கண்டறியப்பட்ட மருந்துகளின் இழப்புகள் மற்றும் சேதங்கள் 283 நிகழ்வுகளுக்காக தொடர்ந்தும் வெட்டி நீக்குதல் மற்றும் அறவிட வேண்டிய ரூ. 440,225,100 ஆன நட்டம் நிதிக்கூற்றுகளில் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றுகளில் சேர்க்கப்படவில்லை.	நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இது தொடர்பில் போதியளவு ஊழியர்கள் இல்லாமை மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய உரிய தரப்பினரை தெளிவுபடுத்தல்கள் பெறும் போது உள்ள சிக்கல் நிலை காரணமாக நிதி ஒழுங்குவிதிகளின்படி இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க தாமதமானது எனவும், இருப்பினும், நிலைமையை கண்டறிந்து எதிர் காலத்தில் உரிய தரப்பினரை தெளிவுபடுத்தல்கள் பெற்று தேவையான நடவடிக்கைகள் எடுத்து முன்னேற்றம் குறித்து அவசரமாக அறிவிக்கப்படும் எனலும்.
(ஐ)	மருத்துவ விநியோகப் பிரிவினால் நி.ஒ 110 (1) இன்படி இழப்பு பற்றிய பதிவேடு புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் இந்த ஆண்டினுள் எடுக்கப்படும் எனவும்.

(ஒ)	2021, 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மருந்துகளின் காலாவதியாதல், தர தோல்வியுற்ற மற்றும் மருந்துகளின் பற்றாக்குறைகளை இனங்கண்டு நி.பி. 110 92) இன்படி நிதிக்கூற்றுகளில் நட்டம் மற்றும் கைவிடல் பற்றிய கூற்றுகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நிதிக்கூற்று துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் இந்த ஆண்டினுள் எடுக்கப்படும் எனவும்.
(ஓ)	மருத்துவ விநியோகப்பிரிவிற்கு சொந்தமான கொடியாவத்தை இலக்கம் 53 களஞ்சியம் 2016 மே 18 ஆம் திகதி வெள்ளத்தினால் மூழ்கியதால் ஏற்பட்ட இழப்பு ரூபா 405,576,870 என கணக்கிடப்பட்டுள்ளதுடன் அதில் ரூ. 206,311,814 இனை மாத்திரம் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் 2017 ஜனவரி 30 மற்றும் 2017 செப்டம்பர் 21 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தொடர்ந்து அறவிட வேண்டிய தொகை ரூ. 199,265,056 என்பதுடன், 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் அது தொடர்பில் நி.ஒ 101 முதல் 113 இற்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	இது தொடர்பில் ஆராய்ந்த போது பராமரிக்கப்பட்டு வந்த நிதி கோவையை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும், மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்பாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (MRI) உடன் கலந்துரையாடி சம்பந்தப்பட்ட விபரங்களை அந்த நிறுவனங்களில் உள்ள கோவைகளில் இருந்து பெறுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அதன்படி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ஏதாவது ஒரு தொகையை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறு செய்ய முடியாதவிடத்து மீண்டும் திறைசேரியின் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து நி.ஒ 103 – 113 இன்படி நட்டம் மற்றும் இழப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்து வெட்டி நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மீண்டும் எடுக்கப்படும் எனவும்.

3.8. நிதி முறைக்கேடுகளின் வடிவத்தில் பரிவர்தனைகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
(அ)	2021 பெப்ரவரி 04 ஆம் திகதி முதல் 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி வரையிலான இரண்டு வருட வெளிநாட்டு விடுமுறைக்கு அனுமதி பெற்ற மருத்துவர் ஒருவர் 2021 பெப்ரவரி 04 வெளிநாடு சென்று 2021 ஜூலை 07 ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பியமை அவரது வெளிநாட்டு பயணங்கள் தொடர்பான குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் அவர் இலங்கைக்கு வந்த பின்னர் அது தொடர்பில் அமைச்சிற்கு அறிவிக்கவில்லை என்பதுடன், அதற்கான பயிற்சி கொடுப்பனவு மற்றும் மாதாந்த சம்பளம் பெற்றுள்ளார். இவ்வாறு 2021 ஜூலை 08 ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை திட்டமிட்டவாறு சேவைக்கு திரும்பாது சம்பளம் மற்றும் பயற்சி கொடுப்பனவுகளை பெற்றுள்ளார். 2021 செப்டம்பர் 03 ஆம் திகதி மருத்துவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். இந்த காலப்பகுதிக்கான பயிற்சி கொடுப்பனவுகளை பின்னர் திருப்பிச் செலுத்தப்பட்ட போதிலும், முறையான அதிகாரமின்றி வழங்கப்பட்ட சம்பளங்கள் மீளப் பெறப்படவில்லை.	இந்த விடயம் தொடர்பாக வழங்கப்பட்ட அனைத்து கணக்காய்வு வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளை உள்ளடக்கும் விதத்தில் முழுமையான முறையான விசாரணை மேற்கொண்டு உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	மருத்துவர் (பெண்) தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்படி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது என பரிந்துரை செய்துள்ளது என்பதுடன், அதன்படி தயாரிக்கப்பட்ட இலக்கம் CF/DPO/2023/50 மற்றும் 2023.12.28 ஆம் திகதிய குற்றப்பத்திரகை அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும்.
(ஆ)	மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் தனது வெளிநாட்டு பயிற்சி காலத்தினுள் 2020 பெப்ரவரி 11 ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு திரும்பினார் என்பது வெளிநாட்டு பயணங்கள் தொடர்பான குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் 2020 மார்ச் 30 அன்று இலங்கை திரும்பியதாக நீங்கள் அறிவித்துள்ளீர்கள். இதன்படி மருத்துவர் 2020 பெப்ரவி 11 முதல் 2020 மே 15 வரை சேவைக்கு சமூகமளிக்காத காரணம் கணக்காய்வில் உறுதிப்படுத்தவில்லை. மேலும் அந்த காலத்திற்காக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான அடிப்படை மற்றும் பெறப்பட்ட ஒப்புதல் எவை என்பது குறித்து கணக்காய்விற்கு	இது தொடர்பில் முழுமையான முறையான விசாரணை மேற்கொண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.

	உறுதிப்படுத்தவில்லை. மேலும் 2020 மார்ச் 30 ஆம் திகதி முதல் 2021 நவம்பர் 27 ஆம் திகதி வரை மருத்துவர் கடமையாற்றியதாக கூறப்பட்ட போதிலும், 2020 மார்ச் 30 ஆம் திகதி முதல் 2020 மே 15 ஆம் திகதி வரை எந்த நிறுவனத்தில் கடமையாற்றினார் என்பதும் நிறைவேற்றிய கடமைகள் எவை என்பது குறித்து உறுதிப்படுத்தி எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.		
(இ)	களுத்துறை தேசிய சுகாதார நிறுவனத்தில் 2017 – 2019 குழுவிற்கான மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு ஒரு நபரின் முறைசாரா ஆட்சேர்ப்பு தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறியின் 2017 – 2019 ஆண்டுக்கான மாணவர்கள் ஆட்சேர்ப்புக்காக 2017 ஏப்ரல் 21 ஆம் திகதிய TA/REC/PSM/17/2016 எனும் இலக்க பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் III) இன் கடிதத்துடன் அனுப்பப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்வாங்கப்படாத நபர் ஒருவரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல், சமர்ப்பிக்கப்பட்ட போலியான உயர்தர சான்றிதழை முழுமையாகச் சரிபார்க்கத் தவறியமை, இவரின் பிணையாளராக களுத்துறை தேசிய சுகாதார நிறுவனத்தின் அதிபர் கையொப்பமிட்டமை, அந்த நிறுவனத்தின் ஒரு உத்தியோகத்தர் அந்த பிணையாளரின் சாட்சியாளராக கையொப்பமிட்டமை போன்ற விடயங்களுக்கு அமைய அந்த நபர் தெரிந்தே நேர்மையற்ற முறையில் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டது.	இது தொடர்பில் முழுமையான முறையான விசாரணை மேற்கொண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இது தொடர்பில் ஆரம்ப விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஆரம்ப விசாரணை அறிக்கைக்கான ஒப்புதல் கிடைத்த பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பப்படும் எனவும்.
	ii. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா பயிற்சி நெறிக்கான 2017 – 2019 குழுவில் இணைப்பதற்கான அடிப்படை தகைமைகளை பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட்ட க.பொ.த உயர்தர பரீட்சை சான்றிதழின் Z மதிப்பு 1.4034 ஆக மாற்றப்பட்டுள்ள போதிலும்	-அவ்வாறே-	-அவ்வாறே-

		அந்த Z மதிப்பு எழுத்தில் Minus Zero Point Four Zero Three Four என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதை அடையாளம் காணாதது சிக்கலாக இருந்தது. மேலும் தேவையான அடிப்படைத் தகைமைகள் பயிற்சிக்கு இணையும் போது பூர்த்தி செய்யப்படவில்லை என களுத்துறை தேசிய சுகாதார நிறுவன பணிப்பாளரினால் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பயிற்சி மற்றும் ஆய்வு) இற்கு பயிற்சி முடிந்து 3 ½ வருடங்களின் பின்னரே அதாவது 2023 பெப்ரவரி 08 ஆம் திகதி அறிவித்துள்ளது.		
	iii.	அத்துடன் மேற்படி உத்தியோகத்தருக்கு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப் பரீட்சைக்கு அறிவிக்கப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் MATARA 176 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கத்தில் வேறொருவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த கடிதமும் நேர்முகப் பரீட்சை உப அட்டவணையுடன் ஒப்பிடப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv.	உத்தியோகத்தரின் நியமனக் கடிதத்தின் 18 வது பந்தியின்படி நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அன்றைய தினமே அது தொடர்பான ஆவணங்களை நிறுவனத் தலைவரிடம் கையளித்தல் வேண்டும் எனினும், உரிய பரீட்சை சான்றிதழ்களை சமர்ப்பிப்பதில் உத்தியோகத்தர் புறக்கணித்துள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் பொறுப்பான உத்தியோகத்தர்களின் அவதானம் செலுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v.	மேலதிக செயலாளர் (நிர்வாகம்) II இனால் 2023 மே 08 ஆம் திகதிய MH/TA/04/MLT/PF/34/2020 எனும் கடிதம் மூலம் மேற்படி உத்தியோகத்தரின் நியமனம் முடிவுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், கடிதத்தின்படி, அனைத்து அரச சொத்துகள், ஆவணங்கள், சாவிகள், கணினி கடவுச்சொற்கள் மற்றும் கடமை அடையாள அட்டை போன்றவை முறையாக ஒப்படைக்கப்பட்டமைக்கான	-அவ்வாறே-	-அவ்வாறே-

	தகவல்கள் 2023 மே 26 ஆம் திகதியிலும் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.		
	vi. இது தொடர்பில் ஆரம்ப விசாரணை நடத்துமாறு மேலதிக செயலாளர் (நிர்வாகம்) II இனால் 2023 ஏப்ரல் 11 ஆம் திகதிய MH/TA/04/MLT/PF/34/2020 எனும் உள்ளக குறிப்பின் ஊடாக திடீர் முற்றுகைப் பிரிவின சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vii. மேற்படி உத்தியோகத்தர் பயிற்சிக்கு இணைக்கப்பட்ட நாள் முதல் நியமனம் முடிவுறுத்தும் வரை அரசாங்கம் அவருக்கு வழங்கிய பயிற்சி கொடுப்பனவுகள், பயிற்சிக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணம், சம்பளம் மற்றும் கொடுப்பனவு, பிற கொடுப்பனவுகள் உட்பட அனைத்து கொடுப்பனவுகளையும் கணக்கிட்டு அறவிடப்பட வேண்டிய மொத்த நிதியையும் மோசடியாக அல்லது அலட்சியம் செய்த பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஈ)	கணக்காய்வின் மூலம் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு பெறப்பட்ட அவசர அழைப்பு ஆய்வுகூட கணினியின் மாதிரி பரிசோதனை அறிக்கைகளின்படி, வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியின் பரிந்துரையின்றி மற்றும் ஆய்வுகூட பரிசோதனை சீட்டுகள் வழங்கப்படாத இரத்த மாதிரிகள் அதிகளவில் ஆய்வுகூட பரிசோதனை அழைப்பு காலத்தில் மேற்கொள்ளப்பட்டு அந்த தரவுகள் மற்றும் தகவல்கள், சம்பந்தப்பட்ட ஆய்வுகூட கணினிகளில் இருந்து நீக்கி (Delete) உள்ளது. அதன்படி, அவ்வாறு நீக்கப்பட்ட வைத்தியசாலைக்கு புறம்பான 2,884 பரிசோதனைகள் கணக்காய்வு மாதிரி ஆய்வில் அவதானிக்கப்பட்டதுடன், இதற்காக வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 647,214 மதிப்புள்ள வினைத்திறன்கள் (Reagent) பயன்படுத்தப்பட்டதால் அந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய நாட்களில் ஒவ்வொரு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரினாலும் அரச வளங்கள் மற்றும் சொத்துகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் ஆரம்ப விசாரணைகள் நடத்தப்பட்டன என்பதுடன் அந்த அறிக்கையின் பரிந்துரையின்படி, சுகாதார அமைச்சின் மேலதிக விசாரணைகள் நடத்துமாறு பரிந்துரை வழங்கியது எனவும், அதன்படி சுகாதார அமைச்சினால் முறையான விசாரணை இந்த நாட்களில் நடத்தப்பட்டு வருவதாகவும், அந்த விசாரணையின் பரிந்துரைக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும்.

(உ)	மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையினூடாக இரு மின் பிறப்பாக்கிகளுக்கு 2021 மார்ச் 13 ஆம் திகதி முதல் 2022 ஜூன் 15 ஆம் திகதி வரையிலான 15 மாத காலப்பகுதியில் 1,562,900 ரூபா பெறுமதியான 11,350 லீற்றர் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், இயந்திரங்களுக்கு எரிபொருளைப் பயன்படுத்துவது தொடர்பான முறையான ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை. இரண்டு இயந்திரங்களுக்கான எரிபொருள் பயன்பாடு தொடர்பில் தனித்தனியாக கண்டறியக்கூடியவாறு ஆவணங்கள் பராமரிக்கப்பட்ட 2022 ஜூன் 15 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 28 ஆம் திகதி வரையிலான 09 மாத காலத்தினுள் எரிபொருள் பயன்பாடு, இயங்கிய மணித்தியாலங்கள் மற்றும் மின் பிறப்பாக்கிகளின் உள் மற்றும் வெளிப்புற எரிபொருள் தாங்கிகளில் கொள்ளளவு போன்ற தரவுகளின்படி 150 kVA Volvo (TWD 610 G) மற்றும் 638 kVA cummins (AS 703 C) எனும் இரண்டு இயந்திரங்களின் ஒரு மணித்தியால எரிபொருள் பாவணை முறையே 14 மற்றும் 31 லீட்டர் என்பது அவதானிக்கப்பட்டதால் முறையான ஆவணங்கள் பராமரிக்கப்படாத 15 மாத காலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய எரிபொருள் அளவு 6,736 லீட்டர் எனினும், எரி பொருள் லீட்டர் 9,454 அதாவது இயந்திரங்கள் செயல்படும் நேர மணித்தியாலத்திற்கு அமைய தேவைப்படும் எரிபொருள் அளவை விட ரூ. 374,268 (சராசரி எரிபொருள் விலை 137.70 ஆக இருந்த காலத்தில்) பெறுமதியான எரிபொருள் 2,718 லீட்டர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், வைத்தியசாலையினால் உரிய ஆவணத்தின்படி 2023 ஜூலை முதல் 2023 ஜூலை மாதம் முதல் 2023 டிசம்பர் வரை இயந்திரத்திற்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருள் அளவு மற்றும் இயந்திரம் இயங்கிய மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்கு அமைய கணக்கிடும் போது CUMMINS மின் பிறப்பாக்கிக்கு ஒரு மணி நேர சராசரி எரிபொருள் எரிப்பு 42 லீட்டர் மற்றும் VOLVO மின் பிறப்பாக்கிக்கு ஒரு மணி நேர சராசரி எரிபொருள் எரிப்பு 13 லீட்டர் எனவும் அவதானிக்கப்பட்டது எனவும், இது குறித்து வைத்தியசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தில் இரண்டு சந்தர்ப்பங்களிலும், மாகாண கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டதுடன் அதன் போது இது மிக சிக்கலான பிரச்சனை என்பதால் அதனை வைத்தியசாலை மட்டத்தில் இதற்கு தீர்வு காண முடியாது எனவும், இதற்கு சுகாதார அமைச்சு மட்டத்தில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் கணக்காய்வில் வலியுறுத்தப்பட்டது எனவும், அதன்படி இது தொடர்பில் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நி.ஒ 104(4) ஆய்வு அறிக்கையை பெற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ஊ)	மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் பயன்படுத்தப்படும் 150kVA Volvo (TWD 610 G) to 638 kVA cummins (AS 703 C) மின் பிறப்பாக்கி பராமரிப்பு சேவைக்காக தனியார் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், முறையான சேவை பராமரிப்பு இல்லாததால் இந்த மசகு எண்ணெய்

	சேவை ஒப்பந்தத்தின்படி 06 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது 250 இனை தாண்டுதல் ஆகிய இரண்டில் முதலில் வரும் சந்தர்ப்பத்தில் பராமரிப்பு சேவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், அவ்வாறு செய்யவில்லை என்பதுடன், ஒரு சேவை காலத்திற்குப் பிறகு 10, 12 மாதம் மற்றும் 22 மாதங்களுக்குப் பிறகு அடுத்த பராமரிப்பு சேவை செய்துள்ளது. 638 kVA cummins மின் பிறப்பாக்கி இயந்திரத்தில் பராமரிப்பு சேவையை பரிசீலித்த போது 2021 ஒக்டோபர் 02 ஆம் திகதி சேவை மேற்கொள்ளப்பட்டு ஒரு வருட காலத்தின் பின்னர் 2022 ஒக்டோபர் 04 ஆம் திகதி சேவை வழங்கும் நிறுவனம் வைத்தியசாலை அறிவிப்பின் பேரில் வந்து, முறைசாரா முறையில் முழு மசகு எண்ணெயைப் பயன்படுத்துவதற்கு பதிலாக ரூபா. 140,800 இன்வோயிஸ் செய்து (போக்குவரத்து கட்டணம் ரூ.20,800 உட்பட) 50 லீட்டரை மட்டும் பயன்படுத்தியுள்ளதுடன் மீண்டும் 08 நாட்களில் இயந்திரத்தில் உள்ள மசகு எண்ணணெய் பொருத்தமற்றது (Contaminated) எனக்கூறி முழு மசகு எண்ணெயையும் பயன்படுத்தப்பட்டதால் 50 லீட்டர் மசகு எண்ணெக்காக ரூ. 120,000 பொருத்தமற்ற செலவு என்பது அவதானிக்கப்பட்டது.		கசிவு ஏற்பட்ட போது பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் சமர்ப்பித்த ரூ. 120,000 பில் இற்காக வைத்தியசாலையினால் எவ்வித கட்டணங்களும் செலுத்தவில்லை எனவும்.
(எ)	2009 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கதிரியல் விஷேட மருத்துவ நிபுணர் மேற்கொண்ட 29 வெளிநாட்டு பயணங்கள் தொடர்பில் செய்யப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. இந்த உத்தியோகத்தர் கதிரியல் பயிற்சிக்காக 2018 மார்ச் 01 ஆம் திகதி முதல் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை 06 மாத காலம் சம்பளத்துடன்கூடிய வெளிநாட்டு லீவு 2018 பெப்ரவரி 12 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த பயிற்சி 2018 மார்ச் 01 முதல் 2018 மே 31 ஆம் திகதி வரை 03 மாதங்கள் அமெரிக்காவில் உள்ள ஜோன் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்திலும் 2018 ஜுன் 01 ஆம் திகதி முதல் 2018 ஆகஸ்ட் 31 வரை 03 மாதங்கள் இந்தியாவின் Medanta neuro, vascular Center இலும் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட காலத்தினுள் வெளிநாட்டு பயிற்சிக்கு செல்லவில்லை என்பதுடன், அதற்குப் பதிலாக மேற்படி பயிற்சியை அமெரிக்காவின் ஜோன்	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.

		ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் பெறுவதற்காக 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 2018 ஜூலை 09 ஆம் திகதி வரை 03 மாதங்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பதிலாக பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவை) இனால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 289,400 விமான டிக்கட் கட்டணம் மற்றும் 03 மாதங்களுக்கான வாழ்க்கைச் செலவு 5,781 அமெரிக்க டொலர் (ரூபா பெறுமதி 1,849,920) மற்றும் கூடான ஆடை கொடுப்பனவு 75 பிரிட்டிஷ் ஸ்டெர்லிங் பவுண் (ரூபா பெறுமதி 30,525) உம் கொடுப்பனவாக அந்த உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 03 மாத காலத்திற்கான அவருக்கு உரித்தான சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது. எனினும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி இந்த உத்தியோகத்தர் 2018 ஜூன் 30 ஆம் திகதி வெளிநாடு சென்று 2018 ஜூலை 31 ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பியுள்ளார் என்பதும், அதன்படி 32 நாட்கள் மட்டுமே வெளிநாட்டில் இருந்ததாகவும், அங்கீகரிக்கப்பட்ட வெளிறாட்டு லீவு 2018 ஜூலை 09 நிறைவடைய உள்ளதால் 2018 ஜூலை 10 ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு திரும்பி 2018 ஜூலை 31 ஆம் திகதி வரை 22 நாட்கள் வெளிநாட்டு லீவினை நீடிப்பு செய்யாது வெளிநாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.		
	ii.	மேலும், மேற்படி 06 மாத பயிற்சிக் காலம் இந்தியாவின் Medanta neuro, vascular Center நிறுவனத்தில் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்ட 03 மாத கால பயிற்சிக்கு 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதி முதல் 2020 ஜனவரி 20 ஆம் திகதி வரை சம்பளத்துடன்கூடிய வெளிநாட்டு லீவு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பதிலாக பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவை) இனால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூ. 119,200 விமான டிக்கட் கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவு 211,143 இந்திய ரூபா (இலங்கை ரூபா பெறுமதி 812,900) மற்றும் 03 மாத காலத்திற்கான அவருக்கு உரித்தான சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது. எனினும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.

		தகவல்களின்படி இந்த உத்தியோகத்தர் 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதி வெளிநாடு சென்று 2019 நவம்பர் 04 ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பியுள்ளார் என்பதும், அதன்படி சுமார் 06 நாட்கள் வெளிநாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.		
	iii.	மேற்படி பயிற்சிகளை பெற்றதாக அமெரிக்காவின் ஜோன் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் Medanta neuro, vascular Center நிறுவனத்தினால் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் சுயவிபரக் கோவைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், இரண்டு சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு திரும்பிய பின்னர் சேவைக்கு சமூகமளித்தமை தொடர்பில் எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.
	iv.	இவ்வாறு வெளிநாட்டு பயிற்சிகளுக்காக கற்கை விடுமுறை அங்கீகரித்து அதற்கான கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் அந்த உத்தியோகத்தரை பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனவும், அது தொடர்பான பயிற்சி நிபந்தனைகள் என்ன என்பது குறித்தும், பயிற்சிக்காக வெளிநாட்டு நிறுவனங்களினால் நிர்ணயித்த நிபந்தனைகளை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் அந்த உத்தியோகத்தருக்கு உரித்துடையது என்பதை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் உரித்துடைய கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் எனினும், மேற்படி “(i)” மற்றும் “(ii)” ஆகிய அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளை அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தும் போது அவ்வாறான உறுதிப்படுத்தல்கள் செய்யப்படவில்லை எனவும், மேற்படி இரு சந்தர்ப்பங்களிலும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகள் (Living Allowance) என்று 03 மாதங்களுக்கு ஒரே நேரத்தில் பட்டபின்பட்ட பயிற்சி பெறும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் புலமைப்பரிசில் உதவித்தொகையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது என்பதும் அவதானிக்கப்பட்டது. ஆதன்படி உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்ட இந்த கொடுப்பனவு யாது என்பது குறித்து கணக்காய்வில் தெளிவில்லை.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.

	v.	மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் விமான டிக்கட் கட்டணத்தை அரசாங்கம் செலுத்தியிருந்தாலும், விமான டிக்கட் வழங்கும் நிறுவனம் (Air ticket issuing Agency) வழங்கிய ரசீது (Receipt) மூலம் மட்டுமே கட்டணம் உறுதிசெய்யப்பட்டது எனினும், விமான பயணத்தின் விபரங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களை (Itinerary) பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்படி அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட விமான பயணம் அவ்வாறே மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தப் படவில்லை என்பதுடன், அந்த விமான பயணம் வெளிநாட்டு லீவு ஆரம்பிக்கும் தினம் அல்லது அதற்கு கிட்டிய தினத்தில் மேற்கொள்ளப்படவில்லை என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் ஊடாக அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vi.	அதன்படி இந்த உத்தியோகத்தருக்கு 06 மாத காலம் சம்பளத்துடன்கூடிய வெளிநாட்டு பயிற்சிக் காலம் அனுமதிக்கப்பட்டு அந்த காலத்திற்கான கொடுப்பனவுகள் மற்றும் விமான டிக்கட் கட்டணம் செலுத்தியுள்ள போதிலும், அங்கீகரிக்கப்பட்ட காலத்தினுள் நாட்டில் இருந்து வெளியே இருந்த நாட்கள் 16 நாட்கள் மட்டுமே என்பதும், நாட்டிலிருந்து வெளியேறி ஆனால் லீவு அனுமதி பெறாத காலம் 22 நாட்கள் எனவும், அங்கீகரிக்கப்பட்ட 06 மாத காலத்தில் 16 நர்களில் நாடு திரும்பியதால் மீதமுள்ள நாட்கள் இலங்கையிலேயே இருந்தார் என்பதும், இலங்கையில் இருந்த காலத்தில் சேவைக்கு சமூகளித்தமைக்கான எழுத்து மூல சான்றுகளும் இல்லை என்பதும், எனவே அரசாங்க நிதி தவறாக பயன்படுத்தப்பட்டமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும்.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	vii.	குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, இந்த உத்தியோகத்தர் 2009 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 29 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளதுடன், அதில் 20 முறை வெளிநாட்டில் தங்கியிருந்தமை தொடர்பில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின தாபன விதிக்கோவை XII வது அத்தியாயத்தின் 23:1 இன்படி முறையாக வெளிநாட்டு லீவு கோரிக்கை கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டு வெளிநாட்டு லீவுக்கான அனுமதி பெறப்படவில்லை. அதன்படி, தாபன விதிக்கோவைக்கு மாறாக அரசாங்க பணியில் இருக்கும் போது, வெளிநாட்டு லீவுக்கான அங்கீகாரம் பெறப்படாமல் வெளிநாடு சென்றமை தொடர்பில் இந்த உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் எனவும், அவ்வாறு வெளிநாட்டில் இருந்த காலங்களுக்காக வழங்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை கணக்கிட்டு மீள பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், வெளிநாட்டு பயண விண்ணப்பங்கள் மற்றும் லீவு கோரிக்கை படிவங்களை 03 மாதங்களுக்கு முன்னரே சமர்ப்பிக்கும்படி அனைத்து மருத்துவர்கள் மற்றும் விஷேட மருத்துவ நிபுணர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்.
	viii.	சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் பராமரிக்கப்படும் சுகாதாரத் துறை ஊழியர்கள் வெளிநாடு செல்லல் மற்றும் நாடு திரும்புதல் தொடர்பாக பதிவு செய்யும் பதிவேட்டில் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர்கள் பதிவு செய்தல் வேண்டும் என்றாலும், இந்த உத்தியோகத்தர் மேற்படி பதிவேட்டில் அவரது வெளிநாட்டு பயணங்களை பதிவு செய்யவில்லை என்பது அந்த உத்தியோகத்தரின் வெளிநாட்டுப் பயணத்தின் 05 சந்தர்ப்பங்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	பதில் வழங்கப்படவில்லை.
	ix.	2010 ஜூன் மாதம் முதல் இந்த உத்தியோகத்தர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேவையாற்றுவதுடன், 2023 ஆம் ஆண்டில் 26 சந்தர்ப்பங்களில் இந்த உத்தியோகத்தர் வெளிநாடு சென்றுள்ளார் என்பதுடன், அதில் 12 சந்தர்ப்பங்களில் மாத்திரம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பராமரிக்கப்படும் சுகாதார ஊழியர்கள்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	வெளிநாடு செல்லல் மற்றும் நாடு திரும்பல் பதிவேட்டில் பதிந்துள்ளதுடன், அந்த பதிவும் உண்மையாக வெளிநாடு சென்ற தினம் மற்றும் மீண்டும் நாடு திரும்பிய தினங்களுடன் ஒப்பிடும் போது வித்தியாசங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.		
	x. மேற்படி அவதானிப்புகளின்படி, உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் தற்போதுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுவதாகவும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்துவதற்கான அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறேன். இந்த நிலைமை HSM/E/MH/01/2021/02 எனும் 2021 செப்டம்பர் 23 ஆம் திகதிய கணக்காய்வு வினவல் ஊடாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஏ)	மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் கடமையாற்றிய மருத்தவர் ஒருவர் சேவையில் இருந்து விலகியதாக கருதி நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. மருத்துவ அலுவலர் ஒருவர் சேவைக்கு வருகை, புறப்பாடு மற்றும் நிறைவேற்றிய பணிகள் குறித்து சுகாதார 99 படிவத்தின் நாள் குறிப்பு பதிவேட்டில் குறித்து அதிகாரமளிக்கப்பட்ட உயர் அதிகாரியின் ஒப்புதலுடன் மாதாந்தம் வழங்க வேண்டும் என்ற போதிலும், இந்த உத்தியோகத்தரினால் உரிய நாள் குறிப்பு பதிவேடுகள் உரியவாறு ஒப்படைக்கப்படவில்லை. மாதிரியாக 2020 ஜனவரி முதல் இந்த உத்தியோகத்தர் பதவியை வெறிதாக்கிய தினமான 2022 டிசம்பர் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியை ஆராய்ந்த போது இவர் 2020 ஜனவரி முதல் 2022 மார்ச் வரை நாள் குறிப்பு பதிவேட்டை அலுவலகத்திற்கு ஒப்படைத்திருக்கவில்லை. எனினும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் தொடர்ந்து அவருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.	-அவ்வாறே-	நாள் குறிப்பு ஒப்படைக்காமை குறித்து தொடர்ந்து வாய்மொழி மூலம் இந்த மருத்துவருக்கு அறிவித்துள்ளதுடன், அவர் நாள் குறிப்பு பதிவேட்டை தனிப்பட்ட முறையில் அப்போதைய பணிப்பாளருக்கு சமர்ப்பிப்பதாக வாய் மொழி மூலம் தெரிவித்துள்ளார் எனவும், இந்த விடயம் குறித்து பணிப்பாளருக்கு வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்ட போதிலும், அப்போதைய பணிப்பாளர் இது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து லீவு விடயபொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கவில்லை என விடயப்பொறுப்பு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளதாகவும், இது தொடர்பில் எந்த எழுத்துமூல

			குறிப்புகளும் இல்லை எனவும், கடமை நாள் குறிப்பு புத்தகத்தை முறையாக ஒவ்வொரு மாதமும் ஒப்படைக்காவிடின் மாத சம்பளம் இடைநிறுத்தப்படும் என மருத்துவர்களுக்கு அறிவிக்கப்பட்டது எனவும், மருத்துவர் தனிப்பட்ட முறையில் நாள் குறிப்பு பதிவேட்டை பணிப்பாளருக்கு சமர்ப்பிப்பதாக வாய் மொழி மூலம் தெரிவித்துள்ளதால் அங்கீகாரம் பெறப்படாத லீவு தொடர்பில் டெலிமெயில் மட்டும் அனுப்புவதாக லீவு விடயப் பொறுப்பு உத்தியோகத்தரினால் பணிப்பாளருக்கு வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்டது எனவும், இதற்காக சம்பளமற்ற லீவு வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படவில்லை என விடயப் பொறுப்பு உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டது எனவும், அதற்கான எழுத்துமூல குறிப்புகள் இல்லை எனவும், தொடர்ந்து கடமை நாள் குறிப்பு புத்தகத்தை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்காததால் விடயப்பொறுப்பு உத்தியோகத்தர் பதில் பணிப்பாளர் (பிரதிப் பணிப்பாளர்) இற்கு அது குறித்து அறிவித்து ஒரு குறிப்பை சமர்ப்பித்து உள்ளதாகவும், அந்த குறிப்பு தொடர்பில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய 2022.06.13 அன்று உடனடியாக சேவைக்கு சமூகமளிக்குமாறு டெலிமெயில் அனுப்பப்பட்டு அன்று முதல் சம்பளத்தை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், புதிய பணிப்பாளர் கடமையை பொறுப்பேற்ற பின்னர் இந்த மருத்துவர் உரியவாறு சேவைக்கு சமூகமளித்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள

			கடமை நாள் புத்தகத்தில் கையொப்பம் இடுவதாகவும், முறையாக நாள் குறிப்பு பதிவேட்டை பராமரித்து சேவைக்கு சமூகமளிப்பதாகவும் உறுதியளித்து மேல்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதால் 2022.08.03 ஆம் திகதிய கடிதம் மூலம் கடமை நாள் குறிப்பு புத்தகத்தை பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து பணிப்பாளரின் முன்னிலையில் கையொப்பம் இடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது எனவும், 2022.09.23 ஆம் திகதி மருத்துவரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டைக் கருத்தில் கொண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் 2022.09.30 ஆம் திகதி முதல் மீண்டும் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், அதன்போது 2022 ஜூன் மாதம் முதல் 2022 செப்டம்பர் மாதம் வரை இடைநிறுத்தப்பட்ட சம்பளம் மீண்டும் செலுத்தப்படவில்லை எனவும், மீண்டும் இந்த மருத்துவர் முறையாக சேவைக்கு சமூகமளித்து பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள நாள் குறிப்பு பதிவேட்டில் கையொப்பம் இடாததால் உடனடியாக சேவைக்கு சமூகமளிக்குமாறு டெலிமெயில் மூலம் 2023.01.20 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதாகவும், சேவை வெறிதாக்கல் உத்தரவை தயாரிப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்ட பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவரின் கடமை நாள் குறிப்பு புத்தகத்தை மருத்துவர் வலுக்கட்டாயமாக எடுத்துச் சென்று அதில் பணிப்பாளரினால் சேவைக்கு

			சமூகமளிக்கவில்லை என குறிப்பிட்டுள்ள தினங்களிலும் கையொப்பமிடப்பட்டார் எனவும், மேலும் அலுவலகத்தில் இருந்து மேலதிக நாள் குறிப்பு புத்தகமொற்றை எடுத்துச் சென்று அந்த புத்தகத்தில் சேவைக்கு சமூகமளித்ததாக பொய்யாக பதிவு செய்து அலவலகத்தில் ஒப்படைத்துள்ளார் எனவும், இந்த புத்தகம் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப் படவில்லை எனவும், தமது கடமை நாள் குறிப்பு புத்தகம் காணாமல் போனால் அல்லது வேறு காரணங்களுக்காக புதிய புத்தகம் பெறும் போது அது குறித்து கடிமமொன்று சமர்ப்பித்து பணிப்பாளரின் அனுமதி பெறப்பட்ட பின்னர் புதிய புத்தகத்தை பெறலாம் என்று மருத்துவ அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், சுகாதார பணிப்பாளர் பிரிவின் பிரதான தாதி உத்தியோகத்தரினால் மருத்துவர் சேவைக்கு சமூகமளித்துள்ளதாக சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் கடமை பொறுப்புக்கு அப்பாற்பட்ட பணி என்பதால் அது குறித்து விசாரிக்கப்பட்டது எனவும், அதற்கு விளக்கமளித்து மேற்படி உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கடிதத்தின்படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு ஒரு கடிதம் சமர்ப்பித்துள்ளது எனவும், சுகாதார அமைச்சின் 2023.07.14 ஆம் திகதிய ECD/PF/9817 கடிதத்தின் மூலம் மேற்படி மருத்துவரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின்படி வேலை மற்றும் நடத்தை குறித்து அறிக்கையொன்று கோரப்பட்ட போதிலும், அந்த மேன்முறையீட்டின் நகல் 2024.02.08 ஆம்

			திகதியே வழங்கப்பட்டது எனவும், இந்த மருத்துவரின் ஒழுக்கமற்ற நடத்தை குறித்து பணிப்பாளர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த அமைச்சின் விசாரணைப் பிரிவினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டதால் விசாரணை நடவடிக்கைகள் நிறைவடையாததால் அந்த அறிக்கையை வழங்குவதற்கு தாமதமானது எனவும், 2024.02.08 ஆம் திகதி மருத்துவரின் மேன்முறையீடு கிடைத்ததன் பின்னர் 2024.02.20 ஆம் திகதி சம்பந்தப்பட்ட அறிக்கை சமரப்பிக்கப்பட்டது எனவும், 2019.02.25 முதல் 2019.02.28 வரை வெளிநாட்டு லீவு கோரி மேற்படி உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது எனவும்.
	ii. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை XII வது அத்தியாயத்தின் 1.2 மற்றும் 1.3 பிரிவுகளின்படி, அனைத்து உள்நாட்டு லீவுகளும் பொது 125 படிவத்தின் ஊடாக கோரப்பட்டு முன் அனுமதியைப் பெறல் வேண்டும் எனினும் மேற்படி மருத்துவரின் 2020 ஜனவரி முதல் 2022 டிசம்பர் வரை எவ்வித உள்நாட்டு லீவுகளும், லீவு கோரல் படிவம் சமர்ப்பித்து லீவுக்கான அனுமதி பெறவில்லை. லீவு பொறுப்பு உத்தியோகத்தரினால் அனுப்பப்பட்ட டெலிமெயிலின்படி லீவு நாட்கள் லீவு புத்தகத்தில் பதியப்பட்டுள்ள போதிலும் எந்த லீவுகளும் முறையான அனுமதி பெற்றிருக்கவில்லை. அதன்படி இந்த அனைத்து லீவுகளும் சம்பளமற்ற லீவு என கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும எனினும் உத்தியோகத்தர்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	iii.	2022 ஏப்ரல், மே, ஜூன் மற்றும் 2022 டிசம்பர் மாதங்களுக்கான நாள் குறிப்பு புத்தகம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த புத்தகங்கள் பொறுப்பான உத்தியோகத்தரின் அனுமதி பெறப்படவில்லை. மேலும் உத்தியோகத்தரின் சேவைக்கு சமூகமளிக்காத புத்தகத்தில் வைத்தியசாலை பணிப்பாளர் பதிந்த தினங்கள் சிலவற்றுக்கு, பின்பு அந்த நாட்களுக்கு நாள்குறிப்பு புத்தகத்தில் பதிந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2022 ஜூலை முதல் 2022 நவம்பர் வரை நாள் குறிப்பு புத்தகம் சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv.	2022 ஏப்ரல், மே, ஜூன் மற்றும் 2022 டிசம்பர் மாதங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நாள் குறிப்பு புத்தகத்தின்படி மருத்துவர் லீவு என குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் மற்றும் வியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் டெலிமெயில் பிரகாரம் லீவு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட லீவு திகதிகள் ஒன்றுக்கொன்று முரணாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v.	இந்த உத்தியோகத்தர் 2023 மார்ச் 07 ஆம் திகதி சேவையை வெறிதாக்கல் அறிவிப்பு 2023 மார்ச் 10 ஆம் திகதி வைத்தியசாலையினால் பதிவுத் தபாலில் உத்தியோகத்தருக்கு அனுப்புவதற்காக சுதனபுர உப தபால் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் அந்த கடிதம் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரை உப தபால் நிலையத்தில் இருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், மருத்துவரினால் உரிய கடிதம் தாமதம் தொடர்பில் தெஹிவல பிரதான தபால் அலுவலகத்தில் விசாரிக்கப்பட்டதுடன், உரிய கடிதம் தபால் திணைக்களத்திற்கு ஒப்படைத்த தினம் மற்றும் உரிய தாமதம் குறித்து கண்டறியாது இந்த கடிதம் 2023 ஏப்ரல் 02 ஆம் திகதி கிடைத்ததாகவும் ஏப்ரல் 03 ஆம் திகதி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த கடிதம் தாமதித்தல் மற்றும் கடிதம் பகிர்ந்தளிக்கப்பட்ட தினங்கள் தொடர்பில் உரிய விசாரணையின்றி மருத்துவருக்கு உறுதிப்படுத்தல் வழங்கியமை தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக தபால் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டிய தேவை சுட்டிக்காட்டப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	vi.	இந்த மருத்துவ உத்தியோகத்தரின் சேகைக்கு சமூகமளிப்பதை உறுதிப்படுத்துவதற்கு முறையான முறைமை நிறுவப்பட்டுள்ள போதிலும், இந்த மருத்துவர் 2023 ஜனவரி முதல் மார்ச் வரை உரியவாறு சேவைக்கு சமூகமளித்ததை உறுதிப்படுத்தும் கடிதம் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் சுகாதார கல்வி பிரிவின் பிரதான தாதி உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டுள்ளது. இது மேற்படி உத்தியோகத்தர் தமது கடமை பொறுப்புக்கு அப்பால் செயற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vii.	மருத்துவர் 2022 டிசம்பர் 14 ஆம் திகதி முதல் பதவியை வெறிதாக்கியதாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டமை தொடர்பில் இந்த மருத்துவர் 2023 ஜூன் 22 ஆம் திகதி சுகாதார செயலாளருக்கு மேன்முறையீடொன்று சமர்ப்பித்துள்ளார். அதன்படி இந்த மேன்முறையீடு தொடர்பில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் 2023 ஜூலை 14 ஆம் திகதி கோரப்பட்டுள்ள போதிலும், அந்த அறிக்கை கணக்காய்வுத் தினமான 2024 ஜனவரி 07 ஆம் திகதியிலும் வழங்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	viii.	உத்தியோகத்தரின் வெளிநாட்டு பயணம் தொடர்பில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் படி இவர் 2019 பெப்ரவரி 25 முதல் 2019 மார்ச் 01 ஆம் திகதி வரை வெளிநாடு சென்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் இவரின் சுயவிபரக் கோவையில் வெளிநாட்டு லீவுக்கான அனுமதி பெறப்பட்டமைக்கான ஆதாரங்கள் இருக்கவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	ix.	மேற்படி அவதானிப்புகளின்படி இந்த மருத்துவர் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றாமல் செயற்பட்டுள்ளதாகவும், அது குறித்து பொறுப்பான உத்தியோகத்தரகள் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இவருக்கு பல ஆண்டுகளாக சம்பளம் வழங்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டதால் இது	-அவ்வாறே-	-அவ்வாறே-

	தொடர்பில் முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.		
(ஐ)	களுத்துறை போதனா வைத்தியசாலையின் ஊழியர்களுக்கான நோயாளர் பராமரிப்பு செயல்முறையை மேம்படுத்தும் முகாமைத்துவம் தொடர்பில் 02 சேவை பயிற்சி நெறிகளுக்காக ரூ. 86,200 நிதி ஒதுக்கீட்டுக்கு, சுகாதார அமைச்சின் கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வு பிரிவினால் 2023 ஜனவரி 31 ஆம் திகதி ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, இந்த 02 சேவை பயிற்சி திட்டங்களும் முறையே 2023 பெப்ரவரி 27 மற்றும் 2023 மார்ச் 30 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டுள்ளதுடன், அந்த பட்டறைகள் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மட்டுமே நடைபெற்றதாக வவுச்சர்களில் இணைக்கப்பட்டுள்ள வருகை ஆவணங்கள் மூலமும், விரிவுரைகளில் கலந்து கொண்ட வளவாளர்களுக்கு வழங்கப்பட்ட முறையான வருகை சான்றிதழ்கள் மூலமும் தெரிவிக்கின்றன. மேலும், சேவை பயிற்சி காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற்றதாகவும் மதிய உணவு வழங்கப்படவில்லை என்றும் அந்த பயிற்சியில் கலந்து கொண்ட ஊழியர்கள் கணக்காய்விற்கு அளித்த கூற்றுகளின்படி உறுதி செய்யப்பட்டது. அதன்படி, பயிற்சியில் கலந்து கொண்ட ஊழியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டதாக வவுச்சர்களில் இணைக்கப்பட்ட முறையே ரூ.17,500 மற்றும் ரூ.22,000 பில்கள் மற்றும் மாலை தேநீர் வழங்குவதற்காக என சமர்ப்பிக்கப்பட்ட ரூ.5,500 மற்றும் ரூ.1,650 பில்கள் பொய்யானவை என்பது உறுதி செய்யப்பட்டது.	-அவ்வாறே-	உரிய பயிற்சி திட்டங்கள் மதிய நேர உணவுக்காக பகல் 1 மணியளவில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், மீண்டும் பி.ப 2 மணி முதல் குழு செயற்பாடுகள் மாலை 5 மணிவரை மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் முன் முடிவுகளின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
(ஒ)	மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு (தற்போது செயற்படவில்லை) பராமரிக்கப்பட்டு வந்த HQ Colombo கட்டிடத்தின் முதலாம் மாடியில் Rare wing பிரிவு மற்றும் ஐந்தாம் மாடி என்பன வாடகை அடிப்படையில் பெறும் போது பாதுகாப்பு வைப்புத் தொகை மற்றும் மின்சார வைப்புத் தொகையாக லங்கா ரியாலிட்டி டெவலப்மென்ட்ஸ் தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூ. 7,570,493 தொகை ஒப்பந்தம் நிறைவடைவதற்கு முன்னர் மாதாந்த வாடகையில் ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், 2024 ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு ஒப்பந்த காலம் நிறைவடைந்து 01 வருடமும் 05 மாதங்கள் கடந்துள்ள போதிலும் அந்த வைப்புத் தொகையை அறவிடவில்லை. இது குறித்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்ட 2024 ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு 09 மாதங்கள் கடந்துள்ள போதிலும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை	-அவ்வாறே-	HQ கட்டிடத்தின் 01 வது மாடியில் Rare wing பிரிவு மற்றும் 05 ஆம் மாடிகளுக்கு மீளப் பெறுதல் எனும் அடிப்படையில் செலுத்தப்பட்ட பாதுகாப்பு வைப்புத் தொகை மற்றும் மின்சார வைப்புத் தொகை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துமூலம் HQ கட்டத்தின் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது எனவும், பல தடவைகள் அறிவித்துள்ள போதிலும், அந்த நிறுவனம் அதனை செலுத்தவில்லை எனவும், இது குறித்து சுகாதார அமைச்சின் பிரதான சட்ட

	என்பதுடன் ஒப்பந்தம் நிறைவடைய முன் இந்த வைப்புத் தொகையில் மாதாந்த வாடகையை ஈடுசெய்யாமை தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டு அதற்கு பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அதனை அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 ஆகஸ்ட் 03 ஆம் திகதி அரச கணக்கு சுற்றறிக்கை இல. 250/2016 (i) இன்படி இந்த ரூ. 7,570,493 வைப்புத் தொகை நிதிக்கூற்றுகளில் சேரக்கப்படவில்லை.		அலுவலருக்கு அறிவித்து கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், அதன்படி சட்ட பிரிவினால் அந்த வைப்புத் தொகையை மீளப்பெறுவதற்கு தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குமாறு ஒரு கோரிக்கை 2023.08.29 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது எனவும், மேலும் இந்த சட்டப் பிரச்சனை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றன எனவும்.

3.9 மோசமான பரிவர்தனைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	**பரிந்துரை**	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்**
Extra-Corporeal Membrane Oxygenation (ECMO) என்ற இயந்திரம் தற்காலிக மற்றும் கடுமையான இதயம் மற்றும் நுரையீரல் செயலிழப்பு நிகழ்வுகளில் நோயாளியுடன் இணைக்கப்படும் ஒரு இயந்தரமாகும். இவ்வாறான ECMO இரண்டு இயந்திரங்கள் றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் இருதயம் மற்றும் மார்பு பிரிவிற்கு (Cardiothoracic unit) கொள்வனவு செய்வதற்காக அவசரமாக தேவைப்படும் (urgently Needed) உபகரணங்கள் மற்றும் கருவிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட Urgent Development Plan 2014 திட்டத்தின் கீழ் உள்நாட்டு நிதியை பயன்படுத்தி அதில் ஒரு ECMO இயந்திரத்தை		

மாத்திரம் ரூ. 13,500,000 இற்கு 2015 பெப்ரவரி 05 ஆம் திகதி றிஜ்வே சீமாட்டி சிறுவர வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.			
(அ)	றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையினால் இந்த ECMO இரண்டு இயந்திரங்கள், அவசரமாக தேவைப்படும் உபகரணங்கள் என அடையாளம் காண வழிவகுத்த காரணங்கள் (அதாவது இந்த இயந்திரம் தேவைப்படும் நாளாந்த, மாதாந்த அல்லது வருடாந்தம் நோயாளர்களின் எண்ணிக்கை, இந்த இயந்திரத்தின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவு வைத்தியசாலையில் உள்ள உபகரணங்களின் விபரங்கள்) தொடர்பாக எழுத்துமூல தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், ECMO இயந்திரம் நோயாளிகளின் நுரையீரல் செயல்பாடு குறையும் சந்தர்ப்பங்களில் அந்த நுரையீரலின் செயற்பாடு இந்த இயந்திரத்தினால் வெளிப்புறமாக வழங்கப்படுகிறது எனவும், நோயாளிக்கு பொருத்தப்பட்டு சிகிச்சை வழங்குவதற்காக விஷேட பயிற்சி மற்றும் அனுபவமுள்ள மருத்துவர்களால் மேற்கொள்ளப்படுவதாகவும், இதற்காக பயிற்சி பெற்ற மருத்துவர்கள் நாடளாவிய ரீதியில் மிகக்குறைந்த அளவே உள்ளனர் எனவும், இந்த இயந்திரம் இரு நுரையீரல்களும் செயலிழந்த நோயாளியின் உயிரைக் காப்பாற்ற உதவுகிறது எனவும், இந்த இயந்திரத்தின் தேவையை வைத்தியசாலையில் உள்ள ஏனைய உபகரணங்களால் நிர்வர்த்தி செய்ய முடியாது எனவும், 2014 ஆம் ஆண்டின் Urgent Development Plan திட்டத்தின் கீழ் அப்போதைய வி. மருத்துவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2015 ஆம் ஆண்டு வைத்தியசாலைக்கு இந்த இயந்திரத்தை பெற்றுக்கொடுத்த போதிலும், பின்னர் ஏனைய நிறுவனங்களின் தேவைகளுக்காக அவ்வப்போது பயன்படுத்துவதற்காக இந்த இயந்திரம் பரிமாறப்பட்டது எனவும், மேலும் இந்த இயந்திரம் மருத்துவ அலுவலர்கள் மற்றும் பட்டப்பின்பட்ட

			மருத்துவ பயிற்சிக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும், இருப்பினும் இந்த இயந்திரத்ரதஒரு நோயாளிக்கு பொருத்துவதற்கு பயிற்சி மற்றும் அனுபவம் உள்ள மருத்துவர்கள் குழுவினரால் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால் முழு மாதமும் இதனை பயன்படுத்த முடியாது எனவும்.
(ஆ)	2015 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட இந்த ECMO இயந்திரம் அன்றைய தினத்தில் இருந்து 2023 மே 31 ஆம் திகதி வரை 05 வைத்தியசாலைகளுக்கு இடையே பரிமாறப்பட்டுள்ள போதிலும் கண்டி தேசிய வைத்தியசாலையினால் 03 நோயாளிகளுக்கும், காசல் வீதி மகளிர் வைத்தியசாலை (போதனா) இனால் 01 நோயாளிக்குமாக மொத்தம் 04 நோயாளர்களுக்கு மாத்திரம் இந்த ECMO இயந்திரம் பாவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த இயந்திரம் றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் 2021 செப்டம்பர் 28 ஆம் திகதி இந்த இயந்திரம் ஒப்படைக்கப்பட்ட கொழும்பு தேசிய வைத்தியசாலைகளினால் எந்வொரு நோயாளிக்கும் இது பயன்படுத்தப்படவில்லை. எனவே இந்த ECMO இயந்திரம் குறைந்தளவே பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	இந்த இயந்திரம் தொடர்பில் ஆராய்ந்து இயந்திரத்தை பயனுள்ளவாறு பயன்படுத்துவதற்கான முறையை தயாரித்தல் வேண்டும்.	இணங்குவதில்லை எனவும், இந்த இயந்திரத்திற்கு நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சி பெற்ற விஷேட மருத்துவர்கள் இல்லாததால் குணமடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் இருந்ததால் இந்த இயந்திரத்தை அதிகபட்சமாக பயன்படுத்த மற்ற நிறுவனங்களுடன் பரிமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
(இ)	கொழும்பு தேசிய வைத்தியசாலை இந்த இயந்திரத்தை எந்தவொரு நோயாளிக்கும் பயன்படுத்தவில்லை, ஆனால் வைத்தியசாலையின் பிரதான சத்திர சிகிச்சை களஞ்சியத்தின் விஷேட சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவின் கீழ் 2022 ஆம் ஆண்டில் ECMO இயந்திரத்திற்காக முறையே ரூ. 13,304,440 மதிப்பில் 61 நுகர்வுப் பொருட்களும், ரூ. 12,222,000 மதிப்பில் 8 மேலதிக உதிரிப் பாகங்களும் கொள்வனவு செய்துள்ளது. இந்த உதிரி பாகங்கள் / நுகர்வுப் பொருட்களின் 30 நாட்கள் ஆயுள்காலம் கொண்ட இரண்டு பொருட்கள் ரூ. 9,892.000 மற்றும் ரூ. 1,052,000 செலவில் முறையே அலகுகள் 4 மற்றும் 8 உம், ஆயுள்காலம் 14 நாட்கள் கொண்ட பொருள் ரூ.200,000 செலவில் அலகுகள் 4 உம் உள்ளடங்குகின்றன. இந்த உதிரி பாகங்கள் / நுகர்வுப் பொருட்கள் 2023 மே 31 ஆம் திகதியிலும் பயன்படுத்தப்படாமல் இருந்தன.	-அவ்வாறே-	நுரையீரல் மாற்று சத்திர சிகிச்சையின் பின்னர் நோயாளியின் நுரையீரல் மற்றும் இருதயம் திடீரென செயலிழக்கும் சந்தர்ப்பங்களில் நோயாளிக்கு இந்த இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது எனவும், இலங்கையில் முதலாவது நுரையீரல் மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள் மற்றும் தாதி உத்தியோகத்தர்கள் அடங்கிய இந்திய சுகாதார அதிகாரிகள் குழுவும், சத்திர சிகிச்சை மருத்துவர் மற்றும் மயக்கவியல் மருத்துவ நிபுணர் தலைமையிலான இலங்கை தேசிய வைத்தியசாலை குழுவும் இணைந்து இந்த சத்திர

			சிகிச்சை மேற்கொள்வது தொடர்பில் திட்டமிட்டது எனவும், இதன்போது இந்திய குழுவுடன் Zoom தொழில்நுட்பத்தினூடாக தொடர்பு கொண்டு நடத்திய கலந்துரையாடலில் ECMO இயந்திரம் அத்தியவசியமானது என இந்த குழுவினால் தெரிவிக்கப்பட்டது எனவும், அதன்படி றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பயன்படுத்தப்பட்ட இந்த ECMO இயந்திரம் 2021.09.28 ஆம் திகதி இலங்கை தேசிய வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை களஞ்சியம் ஊடாக Cardiothoracic பிரிவின் HDU இற்கு ஒப்படைக்கப்பட்டது எனவும், பின்னர் இந்த இயந்திரத்திற்குத் தேவையான இயந்திரம் தொடர்பான பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்து சத்திர சிகிச்சை களஞ்சியம் ஊடாக HDU இற்கு ஒப்படைக்கப்பட்டது எனவும், சம்பந்தப்பட்ட நோயாளிக்கு நுரையீரல் மாற்று சிகிச்சைக்காக பல்வேறு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நன்கொடையாளர்களைத் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டதுடன், பல்வேறு காரணங்களால் பலர் நிராகரிக்கப்பட்டனர் எனவும், 2023 மார்ச் மாதம் வரை பொருத்தமான நன்கொடையாளரை கண்டுபிடிக்க முடியாத காரணத்தால் சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியவில்லை என்பதால் ECMO இயந்திரத்தை பயன்படுத்த முடியவில்லை எனவும், இருப்பினும், 2023.03.21 ஆம் திகதி நன்கொடையாளர்

			ஒருவர் கிடைத்ததுடன், 2023.03.23 ஆம் திகதி சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது எனவும், நோயாளியின் இதயம் மற்றும் நுரையீரல் செயற்பட்டதால் இயந்திரம் அவசியப்படவில்லை எனவும், 2023.04.28 ஆம் திகதி நோயாளி மரணித்தார் எனவும், 2021.09.28 ஆம் திகதி முதல் இந்த இயந்திரம் இந்த சத்திர சிகிச்சை வரை வார்ட்டினால் அல்லது வைத்தியசாலையினாலும் பயன்பாட்டுக்காக ECMO இயந்திரத்தை கோரிக்கைகள் செய்யாததால் இதனை இலங்கை தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின கோரிக்கைக்கு அமைய 2023.05.22 ஆம் திகதி ECMO இயந்திரத்தை ஒப்படைக்கப்பட்டது எனவும், அதனுடன் இயந்திரத்தின் நுகர்வுப் பொருட்கள் மற்றும் இயந்திரத்திற்குரிய பொருட்கள் அனைத்தும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டது எனவும், அதன்படி இந்த இயந்திரம் நுரையீரல் மாற்று சத்திரசிகிச்சைகளின் போது தேவைப்படுவதால் பெறப்பட்டது என்பதுடன், அதற்கு தேவையான இயந்திரம் தொடர்பான பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது எனவும், மேலும், மேற்படி நுகர்வுப் பொருட்கள் மற்றும் இயந்திரம் தொடர்பான பொருட்கள் காலாவதியாகவில்லை எனவும், கலாவதியாவதற்கு முன்னர்

			காராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டது எனவும்.
(ஈ)	2014 டிசம்பர் 17 ஆம் திகதி SAS/TB/05/152/14 எனும் அமைச்சு கொள்ளல் குழு "D" தீர்மானத்தின்படி இந்த ECMO இயந்திரத்திற்கு இரண்டு வருட முழுமையான உத்தரவாத காலம் மற்றும் மூன்று வருட சேவை பராமரிப்பு உத்தரவாதம் காணப்பட்டுவதாகவும், மூன்று வருட சேவை பராமரிப்பு கால இறுதியில் ஒரு வருடத்திற்கு ரூ.885,000 (மேலதிக உதிரி பாகங்களுக்கு ரூ. 500,000 மற்றும் கூலி 385,000) ஆக அடுத்த 5 வருட காலத்திற்காக பராமரிப்பு மற்றும் சேவைக்கான ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என பரிந்துரை செய்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், 2014 டிசம்பர் 30 ஆம் திகதி இலக்கம் LRH/D/LP/EQU-24/181/14 எனும் கொள்முதல் இணைப்பு மூலம் மேற்படி பராமரிப்பு மற்றும் சேவை கட்டணத்திற்கு அனைத்து மேலதிக உதிரி பாகங்கள் மற்றும் கூலி உள்ளங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையினால் விநிகோகத்தருடன் பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் செய்யப்படவில்லை. அதன்படி இவ்வாறான இயந்திரத்தை தொடர்ச்சியாக செயற்பாட்டில் வைத்திருக்கக்கூடியவாறு இயந்திர சேவை பராமரிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்தின் கீழ் பெறக்கூடிய மேலதிக உதிரி பாகங்கள் "இ" அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூ. 12,222,000 போன்ற அதிக செலவில் கொள்வனவு செய்வதற்கான சூழலை வைத்தியசாலை ஏற்படுத்திக் கொடுத்தது.	இது தொடர்பில் முழுமையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அமைச்சின் கொள்ளல் குழுவின் பரிந்துரையின்படி ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் விநியோகத்தருடன் உரியவாறு சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் செய்வதற்காக, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற சம்பந்தப்பட்ட வைத்தியசாலையினால் செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.
(உ)	ECMO இயந்திரத்திற்கான விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர் ஆவணங்களின்படி நகர்வுப் பொருட்கள் மற்றும் மேலதிக பாகங்களுக்காக முறையே 03 மற்றும் 05 வருடங்களுக்காக நிலையான விலைகள் சமர்ப்பிக்க வேண்டும் எனினும், அவ்வாறு விலைகள் சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், தொழில்நுட்ப விபரக்குறிப்பு மூலம் கோரப்பட்ட ஒவ்வொரு சுற்று (Neonatal Circuit, Pediatric Circuit, Adult Circuit) இற்காக Oxygenator, Pump Head மற்றும் Tubing Pack ஆகிய உதிரி பாகங்கள்/ நுகர்வுப் பொருட்கள் ஒவ்வொன்றுக்குமாக ரூ. 350,000 விலை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அந்த விலைகள் எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும் என்பது குறித்து அமைச்சின் கொள்ளல் குழுவினால் உறுதிப்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	விலைமனுதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட உதிரி பாகங்கள்/ நுகர்வுப் பொருட்களின் விலைகள் எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும் என்பது குறித்து உறுதிப்படுத்துவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் செய்திருக்க வேண்டும் எனவும், அவ்வாறு உறுதியாக காலம் சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களில் டெண்டர் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முழு காலத்திற்கும்

			அந்த விலைகள் செல்லுபடியாகும் எனவும்.
(ஊ)	மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது போன்ற இயந்திரத்தில் இயக்கத்துடன் நேரடி தொடர்புடைய Oxygenator, Pump Head, Tubing Pack, Cannula, Perfusion Set ஆகிய உதிரி பாகங்கள்/ நுகர்வுப் பொருட்கள் தொடர்பில் முறையே மதிப்பீடு செய்யாததால் ஒரு அலகு ரூ. 350,000 அல்லது அதற்கு கிட்டிய செலவில் பெறமுடியுமான Pump Head ரூ. 2,473,000 போன்ற அதிக விலையில் கொள்வனவு செய்யக்கூடிய சூழலை அமைச்சு கொள்ளல் குழு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மேலும் உதிரி பாகங்கள்/ நுகர்வுப் பொருட்களுக்கு இதுபோன்ற அதிக செலவை வைத்தியசாலை அமைப்பு எவ்வாறு தாங்கும் என்பது பற்றி மதிப்பீடு செய்யாததால் இந்த அதிக செலவு கொண்ட ECMO இயந்திரத்தை நோயாளர் பராமரிப்பு சேவைக்காக பயன்படுத்தும் போது ஏற்படும் அபாயம் காணப்படுவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் உரிய உபகரணத்தின் நோக்கம் பற்றிய தொடர்புடைய 04 விஷேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் நிதி நிபுணர் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர் எனவும், அதன்படி, இயந்திரத்தின் துணைக் கருவிகள், நுகர்வுப் பொருட்கள், உதிரி பாகங்கள், சேலை மற்றும் பராமரிப்புகளின் பயன்பாடு தொடர்பாக வாழ்க்கைச் சுழற்சி செலவு (Life Cycle Cost) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும், எவ்வாறாயினும், 2014.11.17 அன்று நடைபெற்ற அமைச்சு கொள்வனவு குழுவால் 2014.10.04 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை மற்றும் பிராந்திய கொள்முதல் குழுவின் தீர்மானங்களைக் கருத்தில் கொண்டு மறு ஏலம திப்பீடு குறித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு தெரிவித்துள்ளது எனவும், அதன்படி 2014.11.24 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2014.12.17 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சு கொள்ளல் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரர் நுகர்வுப் பொருட்கள் மற்றும் துணைப் பொருட்கள் / உதிரிப் பாகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 03 வருட சேவை மற்றும் பராமரிப்பு உத்தரவாதக்

			காலத்திற்குப் பிறகு 05 வருடங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சேவை மற்றும் பராமரிப்பு கட்டணங்களும் சேர்க்கப்பட்டு இது சம்பந்தமாக ஒரு தனி சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டது எனவும், எனவே அவ்வாறான ஒப்பந்தம் செய்து கொள்ள வைத்தியசாலை நடவடிக்கை எடுத்திருந்தால், அதிக விலையில் உதிரிப் பாகங்கள் / நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்யவேண்டிய நிலை இருந்திருக்காது எனவும்.
(எ)	ECMO இயந்திரத்தை நிறுவுவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதயநோய் பிரிவின் (Cardiothoracic Unit) புதிய சத்திர சிகிச்சை தீவிர சிகிச்சை பிரிவில் (New HDU) ECMO பிரிவொன்று 2022 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டுமானம் தொடர்பில் பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்தால் தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீடு மட்டுமே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, அதன் மதிப்பீட்டு செலவு ரூ. 5,452,041.47 ஆக இருந்தது. இந்த முழு கட்டுமானத்தையும் தனியார் நன்கொடை என்று தெரிவித்துள்ள போதிலும், இது கணக்காய்விற்கு எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், இந்த கட்டுமானம் ஒரு சொத்து என கணக்கு வைக்கப்படவில்லை.	இது தொடர்பில் விரிவான தகவல் அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதயநோய் பிரிவில் (Cardiothoracic Unit) உள்ள Isolation அறையை புதிய சத்திர சிகிச்சை தீவிர சிகிச்சை பிரிவு (HDU) என நவீனமயமாக்க சம்பந்தப்பட்ட பிரிவினால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது எனவும், உரிய பணியை மேற்கொள்வதற்கு கொள்ளல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தநிலையில் நாட்டில் ஏற்பட்ட மோசமான நிலை காரணமாக ஒப்பந்தப் பணிகளை மட்டுப்படுத்த நேரிட்டது எனவும், இதற்கிடையில் கிடைக்கப்பெற்ற நன்கொடையில் சீரமைப்பு பணிகள் நடைபெற்றதால், அதற்கான கொள்முதல் பணிகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், வைத்தியசாலை இதற்கென எந்த பணத்தையும் செலவிடவில்லை எனவும், இங்கு பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதுடன், புதிதாக எந்தவொரு கட்டுமானமும் மேற்கொள்ளப்படவில்லை

			எனவும், பொதுவாக பழுதுபார்ப்புகள் சொத்து என கணக்கு வைக்கப்படுவதில்லை என்பதுடன் அது ஒரு செலவு என சேர்க்கப்பட்டுள்ளது எனவும்.
(ஏ)	கணக்காய்வினால் THO/B/NHSL/தகவல்/2023/08 மற்றும் 2023 மார்ச் 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இந்த இயந்திரத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள், சேவை மற்றும் பராமரிப்பு பற்றிய தகவல்களையும் மற்றும் ECMO இயந்திரம் றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையினால் தற்காலிக அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும், கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் SD/AI/03/2023 மற்றும் 2023 மே 10 ஆம் திகதிய கடிதம் மூலம் தகவல் கோரப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் ‘‘இல்லை’’ என பதில் வழங்கப்பட்டுள்ளது. எனினும், மேற்படி ‘‘உ’’ அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நுகர்வுப் பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்டன என்பதும் றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையினால் வழங்கப்பட்ட தகவல்களின்படி இரண்டு சந்தர்ப்பங்களில் (அதாவது 2019 மே 06 மற்றும் 2020 மார்ச் 04 ஆகிய திகதிகளில்) தற்காலிக அடிப்படையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு ECMO இயந்திரம் வழங்கப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனவே கணக்காய்வில் கோரப்பட்ட மேற்படி தகவல்களுக்கு உண்மைக்கு புறம்பான தகவல்களை கொழும்பு தேசிய வைத்தியசாலை வழங்கியுள்ளது. அத்துடன், மேற்படி கடிதத்தின் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் ECMO இயந்திரத்தை பயன்படுத்தாமைக்குரிய காரணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்ட போதிலும், அந்த தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	இங்கு முன்வைக்கப்பட்ட கணக்காய்வு விடயங்களை ஏற்றுக் கொள்வதாகவும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் தகவல்களை வழங்கும் போது சில குறைபாடுகள் காரணமாக தேவையான தகவல்களை வழங்க தவறிவிட்டனர் எனவும், இது தொடர்பில் வருத்தம் தெரிவிப்பதோடு எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதன்படி மீண்டும் கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிக்கும் போது உரிய உத்தியோகத்தர்களுக்கு சரியான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும்.
(ஐ)	தற்போது சுகாதார அமைச்சின் கீழ் வைத்தியசாலை அமைப்பில் றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட இந்த ECMO இயந்திரம் உட்பட இரண்டு ECMO இயந்திரங்கள் காணப்படுவதுடன், மற்றைய இயந்திரம் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் 2014 ஆம் ஆண்டில் அந்த வைத்தியசாலைக்கு நன்கொடையாக பெறப்பட்டுள்ளதுடன், அது வெளிறாட்டில்	-அவ்வாறே-	கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உரிய பணிகளை நிறைவு செய்து கழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்

	பயன்படுத்தப்பட்ட இயந்திரம் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் THKA/CC/06 எனும் கடிதத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் சுமார் 8 வருட காலப்பகுதியில் இந்த வைத்தியசாலையின் ECMO இயந்திரம் 49 நோயாளர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வருடாந்தம் அதிகளவான நோயாளர்களுக்கு சிகிச்சை சேவைகளை வழங்கும் றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலை என்பன எந்தவொரு நோயாளருக்கும் ECMO இயந்திரத்தை பயன்படுத்தாதது கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.		கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்புகள் ----------		**பரிந்துரை** ----------	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்** ----------
(அ)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, சுகாதார அமைச்சின் போக்குவரத்து பிரிவிற்குரிய பொது வாகனங்களின் எண்ணிக்கை 268 என்பதுடன், அந்த வாகனங்களின் பயன்பாடு மற்றும் சாரதிகளை சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பில் காணப்பட்ட உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் 1645 இன்படி ஒரு திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பான தினசரி ஓட்டுநர் பதிவுகள் ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது யாதேனும் உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதுடன், வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் ஒவ்வொரு வாகனத்தின்	அமைச்சின் வாகன முகாமைத்துவம் குறித்து உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு தொடர்பாக ஆராய்ந்து தற்போதுள்ள பலவீனமான கட்டுப்பாடுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன்,	பதில் வழங்கப்படவில்லை.

	சாரதிகளைக் கொண்டு 268 பொது படிவத்தின்படி தினசரி ஓட்டுநர் பதிவேட்டில் பதிவு செய்வதற்கும் பின்னர் அதனை தினசரி நிர்வாக உத்தியோகத்தரினால் சரிபார்க்கப்படுவதற்கும், ஒவ்வொரு பயணத்தையும் முடித்த உடனேயே தினசரி ஓட்டுநனர் பதிவேட்டில் பதிய வேண்டிய அனைத்து பதிவுகளையும் பதியுமாறும் மற்றும் புத்தகத்தில் உள்ள விதிமுறைகளை பதிவுசெய்து பின்பற்றுமாறு வாகனத்தின் சாரதிக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும் எனினும், சுகாதார அமைச்சின் 2022 ஆம் ஆண்டின் போக்குவரத்து பிரிவில் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான தினசரி ஓட்டுநர் குறிப்பு பராமரித்தல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.	அமைச்சின் போக்கவரத்து பிரிவின் செயற்பாடுகளை நெறிப்படுத்தப்பட வேண்டும்.	
	➢ 07 பொது வாகனங்களுக்காக மட்டும் 2022 ஆம் ஆண்டின் 12 மாதங்களுக்குமான ஓட்டுநர் பதிவுகள் போக்குவரத்து பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீதமுள்ள வாகனங்களில் 19 வாகனங்கள் 2022 ஆம் ஆண்டில் பழுதுபார்ப்புக்காக அனுப்பப்பட்டுள்ளமை அவதானிக்கப் பட்டதுடன், 2023 பெப்ரவரி 10 நிலவரப்படி, 72 வாகனங்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டிற்கான எந்த ஓட்டுநர் பதிவும் போக்குவரத்து பிரிவிடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ 48 வாகனங்களுக்கான 2022 ஆம் ஆண்டின் 66 மாதங்களுக்கு முழு மாதத்திற்குமான (மாதத்தில் சில நாட்களுக்கு மட்டும் ஓட்டுநர் பதிவு சமர்ப்பித்துள்ளது) ஓட்டுநர் பதிவேடு சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், பொது வாகனங்களில் 110 வாகனங்களுக்கான மொத்தம் 663 ஓட்டுநர் பதிவேடு 2023 பெப்ரவரி 10 ஆம் திகதி நிலவரப்படி போக்குவரத்து பிரிவிடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு 2008 ஜூன் 26 ஆம் திகதிய	-அவ்வாறே-	-அவ்வாறே-

	நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 13/2008 இன் இணைப்பு 01 இன் பிரகாரம் மாதத்திற்கு தினசரி பதிவேடு பாராமரிக்கப்பட வேண்டும் என்பதுடன், சாரதிகளின் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு அது பயன்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 222 மாதங்களுக்கு 24 வாகனங்கள் தொடர்பான தினசரி குறிப்புகள் போக்குவரத்து பிரிவிற்கு சமர்ப்பிக்கவில்லை.		
	➢ இந்த ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு தொடர்பாக எனது இலக்கம் MED/A/MH/01/INFO/2021/33 எனும் 2021 ஒக்டோபர் 08 மற்றும் 2023 ஜனவரி 24 ஆம் திகதி எனது இலக்கம் MED/B/MH/01/INFO/2022/58 எனும் 2023 பெப்ரவரி 15 ஆம் திகதிய தகவல் கோருதல் கடிதங்களின் இணைப்பு 3 மூலம் கோரப்பட்ட தகவல்கள் 2024 மார்ச் 15 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	ii. 2021 நவம்பர் மாதம் திகதி குறிப்பிடப்படாத பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் அனைத்து சாரதிகளுக்கும் வழங்கிய உள்ளக குறிப்பிற்கு அமைய அனைத்து பொது வாகனங்களும் அமைச்சு வளாகத்திலிருந்து வெளியே செல்ல Gate pass பயன்படுத்தப்பட வேண்டும் எனவும், மீண்டும் திரும்பி வந்தவுடன் முறையாக பூர்த்தி செய்த Gate pass இனை விடய உத்தியோகத்தரிம் மீண்டும் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பிரிவுகளுக்கென ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு Gate pass உரிய பிரிவினால் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், மீண்டும் திரும்பிய பின்னர் அந்த பிரிவிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பிரிவுகளுக்கு	-அவ்வாறே-	-அவ்வாறே-

	ஒதுக்கப்பட்ட பொது வாகனங்கள் குறித்த மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆராய்ந்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	➢ அமைச்சு வளாகத்தில் அமைந்துள்ள சுகாதார செயலாளர் அலுவலகம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் உட்பட பல பிரிவுகள் Gate pass இனை பயன்படுத்துவதில்லை என்பதுடன், மெடிஹவுஸ் கட்டிடத்தில் பராமரிக்கப்படும் பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் Gate pass பயன்படுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
	➢ மேலும், அமைச்சில் Gate pass இனை முறையாகப் பயன்படுத்தும் 04 பிரிவுகள் மாத்திரமே அவதானிக்கப்பட்டது. Gate pass பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை முறையாக பிரிவுகளில் பராமரிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், பல சந்தர்ப்பங்களில் சாரதிகளிடம் உள்ளதாக குறிப்பிடுவதாகவும், முறையாக கோவை செய்யப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட 32 வாகனங்களுக்குரிய Gate pass பற்றிய தகவல்கள் கணக்காய்வில் அடையாளம் காண முடியவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iii. அமைச்சின் பொது வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கும் போது வானத்தில் உள்ள எரிபொருள் கொள்ளளவு குறித்து சாரதியினால் குறிப்பிட்டு எரிபொருள் தொட்டியின் அளவுடன் தொடர்புடைய எரிபொருள் திறன் மற்றும் தேவையான மீதி எரிபொருள் என்பவற்றை குறிப்பிட்டு எரிபொருள் தேவையை கோர வேண்டும் என்பதுடன், அதன் அடிப்படையில் இணைப்பு தயாரித்து	-அவ்வாறே-	-அவ்வாறே-

	போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரினால் சரிபார்க்கப்பட்டு போக்குவரத்து பிரிவின் பணிப்பாளரின் அனுமதிக்கு அனுப்பப்படும். இது குறித்த மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆராய்ந்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	➢ எரிபொருள் விண்ணப்பப்படிவத்தில் ஆர்டர் இலக்கம் தவறாக உள்ளிட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ எரிபொருள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் தொட்டியின் கொள்ளளவு மற்றும் கோரப்பட்ட கொள்ளளவை சேர்க்கும் போது தொட்டியின் கொள்ளளவை விட அதிகரிக்கும் பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ எரிபொருள் ஆர்டர் வழங்கும் போது உரிய ஆவணங்களில் சாரதி கையொப்பமிடாத பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ எரிபொருள் வழங்குவதற்கு பதவிநிலை உத்தியோகத்தரின் அனுமதி பெறப்படாத பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ வாகனங்களுக்கு எரிபொருள் பெறுவதற்கு எரிபொருள் ஆர்டர் வழங்குவதற்காக அனைத்து வாகனங்களுக்கும் ஒரு எரிபொருள் ஆர்டர் பதிவேடு பராமரிக்கப்படுவதுடன், இது ஒவ்வொரு வாகனத்திற்கும் வழங்கப்பட்ட எரிபொருள் அளவு, இதற்கு முன்னர் பெறப்பட்ட எரிபொருள் அளவில் பயணித்த தூரம், இதற்கு முன்னர் எரிபொருள் பெற்ற திகதி மற்றும் மீட்டர் வாசிப்பு என்பன துல்லியமாகவும் தொடர்ச்சியாகவும் பதியப்படுவதை தெளிவாக கவனிப்பது கடினம் என்பது அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு வாகனத்திற்கும் எரிபொருள் வழங்குவதை தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய வகையில்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	எரிபொருள் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் மேற்கண்டவாறு அனைத்து வாகனங்களுக்கும் ஒரு எரிபொருள் பதிவேடு பயன்படுத்தப்படுவதால் பல்வேறு முறைக்கேடுகள் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது. போக்குவரத்து பிரிவின் உத்தியொகத்தர் ஒருவரினால் மேற்படி எரிபொருள் பதிவேட்டுக்கு மேலதிகமாக ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனி பதிவேடுகளை பராமரித்த போதிலும் அந்த பதிவேடு முறையான ஒரு பதிவேடு அல்ல என்பதும், உத்தியோகத்தரின் நேரத்தை வீணடிப்பது மட்டுமே என்பதும், அதில் திகதி, சாரதியின் பெயர், எரிபொருள் அளவு மற்றும் உத்தியோகத்தரின் கையொப்பம் மட்டுமே உள்ளிடப்பட்டுள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது.		
	iv. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி போக்குவரத்து பிரிவின் நிர்வாகத்தின்கீழ் காணப்படும் பொது வாகனங்களுக்காக 38 சாரதிகள் உள்ளனர் என்பதும், அவர்களின் தினசரி வரவு மற்றும் புறப்பாடு பதிவு செய்ய போக்குவரத்து பிரிவில் வருகை புறப்பாடு பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்பதும், உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்படாத பொது வாகனங்களுக்கு நியமிக்கப்பட்ட சாரதிகளின் வரவு மற்றும் புறப்படுகையை பதிவதற்கு முறையான குறிப்பிட்ட அமைப்பு எதுவும் செயற்படுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. அமைச்சில் காணப்படும் வாகனங்களுக்கு நியமிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை குறித்த தகவல்கள் போக்குவரத்து பிரிவிடம் இல்லை என்பதும், போக்குவரத்து பிரிவின் நிர்வாகத்தின்கீழ் காணப்படும் பொது வாகனங்கள் தவிர்ந்த வேறு வாகனங்களுக்கு நியமித்த சில சாரதிகளின் வரவு மற்றும் புறப்படுகை பதியும் பதிவேடு போக்குவரத்து பிரிவில் காணப்பட்ட போதிலும், அந்த பதிவேடு ஒரு முறையான பதிவேடு அல்ல என்பதும் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை உள்ளக நிர்வாகம் பலவீனமாக இருப்பது கணக்காய்வில்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	அவதானிக்கப்பட்டதுடன், அமைச்சிற்கு நியமிக்கப்பட்ட அனைத்து சாரதிகளுக்காகவும் போக்குவரத்து பிரிவில் வரவு மற்றும் புறப்படுகை பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்பதும் அதன்படி லீவு பதிவேடு மற்றும் வெளியேறும் பதிவேடும் பராமரிக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	மருத்துவ கழிவுகள் நிரப்பிய 40 அடி கொள்கலன்கள் 03 உம், 20 அடி கொள்கலன் ஒன்றும் முல்லேரியா எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைந்துள்ள இடத்தில் சிதைவடைந்து வரும் நிலையில் காணப்பட்டன. மருத்துவ கழிவுகள் அடங்கிய இந்த கொள்கலன்களின் கதவுகள் சிதைவடைந்து கழிவுகள் அழுகி சூழலுக்கு வெளியேறிய நிலையில் இருந்தன. இந்த இடத்தில் பராமரிக்கப்பட்டு வந்த மருத்துவ கழிவுகளை அகற்றுவதற்கான எரியூட்டியை இந்த இடத்தில் இருந்து அகற்றி முத்துராஜா வெல பகுதிக்கு கொண்டு சென்றுள்ள போதிலும் மருத்துவ கழிவுகளுடன் கூடிய இந்த கொள்கலன்களை அகற்றாமல் இருந்ததால் இந்த இடத்திலேயே உக்கி போவதையும் மற்றும் மருத்துவ கழிவுகள் பாதுகாப்பற்ற முறையில் சூழலுக்கு வெளிபட்டு வருவதையும் அவதானிக்க முடிந்தது. மருத்துவ கழிவுகளுடன் தொடர்பான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து அகற்றும் போது அதற்கான பணம் செலுத்தப்படுவதால் அரசாங்கம் இந்த பணிக்காக பாரிய செலவை ஏற்ற போதிலும் பொறுப்பானவர்களின் கவனக்குறைவால் அதை அகற்றாமல் இந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	இந்த கழிவுகளை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	முல்லேரியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள கொள்கலன்களை விரைவில் அகற்றுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 2024.01.07 ஆம் திகதி கடிதம் அனுப்பட்டது எனவும், மேலும் அகற்றுவதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் தமக்கு அறிவிக்குமாறு மீண்டும் 2024.02.18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது எனவும், ஒரு கொள்கலனில் இருந்த கழிவுகளை இந்த நிறுவனம் அகற்றியதாக அறிவித்துள்ளது எனவும், எஞ்சிய கொள்கலன்களை அகற்ற செல்வதற்கு அந்த வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ள சிதைவடைந்த வாகனங்கள் இடையூறாக இருப்பதாகவும் அது குறித்து முல்லேரியா வைத்தியசாலை பணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது எனவும்.
(இ)	பெண் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் தனது பதவியில் இருந்து விலகுவதற்கான எழுத்துமூல கோரிக்கையை 2022 மார்ச் 23 ஆம் திகதி தெல்தெனிய ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் ஊடாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அந்த கோரிக்கை தெல்தெனிய ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரின் 2022 மார்ச் 31 ஆம் திகதிய CPC/DBH/TD/A1/SPMO/2022 எனும்	அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த உத்தியோகத்தரினால் 2022.04.22 ஆம் திகதி முதல் அரச சேவையிலிருந்து விலகுவதற்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை 2022.05.26 ஆம் திகதி CPS/PDHS/A/8/14/2022 கடிதம் மூலம் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு தேவையான நடவடிக்கைகளுக்காக அனுப்பிய கடிதம் 2022.06.09 ஆம் திகதியன்று நிர்வாகம்

	இலக்க கடிதம் மூலம் பிராந்திய மற்றும் மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக 02 மாதங்கள் தாமதித்தே அனுப்பப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. தெல்தெனிய ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் 2022 செப்டம்பர் 25 ஆம் திகதிய CPC/DBH/TD/A1/SPMO/2022 எனும் இலக்க கடிதம் மூலம் மருத்துவ அலுவலரின் ராஜினாமா தொடர்பாக பதில் அனுப்பாததால் அவர் சேவையை வெறிதாக்கியதாக கருதி நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பட்டுள்ளது. அரச சேவைகள் ஆணைக்குழு சேவை நடைமுறை விதிகளின் VI வது அத்தியாயத்தின் 56 வது பந்தியின்படி அரச சேவை உத்தியோகத்தர் ஒருவர் பதவியிலிருந்து விலகுவதற்கான கோரிக்கையை முன்வைக்கும் போது அது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளின் XVI வது அத்தியாயத்தின் 201 முதல் 209 வரையிலான பிரிவுகளின்படி கையாளப்படல் வேண்டும் எனினும் அதற்கமைய நடவடிக்கை எடுக்காது பதவியை வெறிதாக்கியதாக கருதி நடவடிக்கை எடுத்துள்ளது.		(மருத்துவ சேவை) II பிரிவிற்கு கிடைத்தது எனவும், அது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தரை தெளிவுபடுத்த முயற்சி செய்த போதும் உத்தியோகத்தரை தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும், எனினும், எதிர்காலத்தில் இது போன்ற தாமதங்களை தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது எனவும், தெல்தெனிய ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரின் 2022.09.25 ஆம் திகதிய CPS/DBH/TD/A1/SPMO/2022 எனும் இலக்க கடிதம் மூலம் மருத்துவ உத்தியோகத்தர் 2022.04.22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதவியை வெறிதாக்கியதாக கருதி நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தின்படி உத்தியோகத்தருக்கு பதவி வெறிதாக்கல் கடிதம் வழங்குவதற்கான அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 2022.04.22 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் பதவி வெறிதாக்கல் அறிவிப்பு வழங்கப்பட்டது எனவும்.
(ஈ)	சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் CFO I/FR/135/2023 எனும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் தொடர்பான சுற்றறிக்கையின் பத்தி 24.2.10 இன்படி மற்றும் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் ஒப்படைத்தல் சுற்றிக்கையின்படி வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்படும் பிற கழிவுகளில் இருந்து பொருளாதார மதிப்புடைய சேலைன் போத்தல்கள், ப்ளாஸ்டிக், கண்ணாடி போத்தல்கள், X-ray card, cardboard, தண்ணீர் போத்தல்கள், மற்றும் பிற பொருட்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2007 நவம்பர் 28 ஆம்		

	திகதிய SA/FA/2005/2/26 உத்தரவின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அதிகபட்ச இலாபம் கிடைக்கும் வகையில் டெண்டர் கோரப்பட்டு விற்க வேண்டும். இது தொடர்பில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி கணக்காய்வுத் தினம் வரையிலான காலத்தில் வைத்தியசாலையினால் பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பொருளாதார மதிப்புள்ள அனைத்து பொருட்கள் விற்கப்படவில்லை என்பதுடன், அவ்வாறு விற்கப்படாத சலைன் போத்தல்கள், ப்ளாஸ்டிக், கண்ணாடி போத்தல்கள், X-ray card, cardboard, தண்ணீர் போத்தல்கள், மற்றும் பிற பொருட்கள் வைத்தியசாலை வளாகத்தில் இருக்கவில்லை. அதன்படி, அவற்றை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் ரூ. 2,438,900 அரச வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வு மாதிரியில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும், அனைத்து சலைன் போத்தல்களும் கழிவுகளாக அகற்றப்படுவதில்லை எனவும், அதில் கணிசமான அளவு மருத்துவக் கழிவுகளுடன் கலக்கப்படுவதாகவும், அவை மருத்துவக் கழிவுகளாக வெளியேற்றப்படுவதாகவும், அதனை பிரித்தெடுப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயை விட சமூகப் பொருளாதார மற்றும் சுகாதாரச் செலவுகள் அதிகமாகும் எனவும்.
	ii. சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின்படி, அரசாங்கத்திற்கு அதிகபட்ச வருவாய் பெறும் வகையில் டெண்டர் கோரப்பட்டு சலைன் போத்தல்கள், ப்ளாஸ்டிக், கண்ணாடி போத்தல்கள், X-ray card, cardboard, தண்ணீர் போத்தல்கள், மற்றும் பிற பொருட்கள் விற்கப்பட வேண்டும் எனினும் அவ்வாறு செய்யப்படவில்லை. அதன்படி, மேற்படி பொருட்கள் தொடர்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விற்பனை விலையுடன் ஒப்பிடும் போது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் சாதாரண விற்பனை விலையை விடவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்த காரணத்தால் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு கணக்காய்வுத் தினம் வரை மொத்தம் ரூ. 4,932,097 இற்கான விற்பனை வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது.	-அவ்வாறே-	இணங்கவில்லை எனவும், தற்போது தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனு கோரப்பட்டு பெறப்பட்ட விலையும் முந்திய விலைக்கு கிட்டிய விலையிலேயே உள்ளது எனவும்.

	iii. வைத்தியசாலையின் பழுதடைந்த பொருட்களைக் களஞ்சியப்படுத்திய இடத்தின் பௌதீக பரிசோதனையின் போது, ஒரு அறையில் வெற்று கண்ணாடி குப்பிகள் நிரப்பப்பட்டு ஒழுங்கற்ற முறையில் குவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் அவற்றை விற்பனை செய்து அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டுவதில் வைத்தியசாலை அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. மேலும், களஞ்சிய அறைக்கு வெளியே அதாவது நோயாளிகள் மற்றும் வெளியாட்கள் பயணிக்கும் நடைபாதையில் கண்ணாடி குப்பிகள் உடைந்து கண்ணாடி துண்டுகள் இடத்திற்கிடம் சிதறிக் காணப்பட்டதால் வைத்தியசாலை வளாகம் பாதுகாப்பற்றதாகவும் மற்றும் மக்களின் உடல் நலத்தில் பாதகமான பாதிப்புகள் ஏற்படுவதை அவதானிக்க முடிந்தது.	-அவ்வாறே-	இணங்குவதாகவும், எதிர்காலத்தில் இதற்காக முறையான ஒரு இடம் நிறுவப்படும் எனவும், அந்த இடத்தை நிறுவுவதல் கராப்பிட்டிய MASTER PLAN இல் கண்டறிந்து நிர்மாணிக்கப்படும் எனவும், முறையான கழிவு முகாமைத்துவம் தொடர்பான கட்டிடம் அமைப்பதற்கு போதிய ஒதுக்கீடுகள் தற்போது இல்லை எனவும், கண்ணாடி குப்பிகள் கொள்வனவு செய்வதற்கு தேசிய போட்டியுடனான விலைமனு கோரப்பட்ட போதிலும் விலைமனுதாரிகள் முன்வரவில்லை எனவும், இதனால் வைத்தியசாலை நடவடிக்கைகளை பராமரிக்க எந்தவொரு தரப்பினருக்கும் அவற்றை இலவசமாக எடுத்துச் செல்ல கொள்ளல் குழுவினால் தீர்மானித்தது எனவும்.
(உ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவில் உள்ள தைராயிட்டு சுரப்பி புற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அயடீன் மருந்து கொள்கலன்களில் இருக்கும் உலோகத்தை வெளியாட்களுக்கு விற்பனை செய்யும் முறையில் காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனமான நிலை காரணமாக அவற்றை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடிய பெருமளவான வருமானத்தை இழந்துள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. 2021 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 2023 மே 10 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் அதன்மூலம் அரசாங்கம் இழந்த வருமானம் ரூ.182,560 என கணக்காய்வு மாதிரி ஆய்வின் போது கண்டறியப்பட்டது.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், ஈயக் கொள்கலன்களில் கதிரியக்க அயடீன் இருப்பதால், அனைத்து கொள்கலன்களினதும் எடை அளவிடப்படுவதில்லை எனவும், ஒரு கொள்கலனின் எடை அளவிடப்பட்டு அந்த எடையின் அடிப்படையில் அனைத்து கொள்கலன்களும் விற்பனை செய்யப்படுகிறது எனவும், தற்போது தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனு கோரல் அடிப்படையில் விற்பனை மேற்கொள்ளப்படுகிறது எனவும்,
(ஊ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் காசநோய் கண்டறிதல் தொடர்பான நோயாளிகளின் சளி மாதிரிகளை பரிசோதிக்கும் காசநோய் ஆய்வுகூடம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		

	i.	ஆய்வுகூடத்தில் உள்ள பரிசோதனை இயந்திரம் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஜூன் 02 ஆம் திகதியான கணக்காய்வுத் தினம் வரை முழு திறனில் இயங்கவில்லை எனவும், அங்கு 04 மாதிரி பரிசோதனை chambers இல் 02 chambers இயங்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. உரிய பரிசோதனை இயந்திரம் முழுத் திறனிலும் பயன்படுத்த மற்றும் இயந்திரத்தின் செயலிழந்துள்ள 02 chambers உம் பழுதுபார்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்காத காரணத்தால், நாளாந்தம் ஆய்வுகூடத்தில் பெறப்படும் அனைத்து மாதிரிகளையும் பரிசோதிக்க முடியாததால் அவற்றை பிற வெளி ஆய்வுகூடங்களுக்கு பரிசோதனைகளுக்காக அனுப்ப நேரிடுவதால் அரசாங்கத்தின் பணம் வீணாக செலவிடப்படுகிறது.	இந்த இயந்திரத்தை அதன் உகர்ந்த திறனில் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த இயந்திரம் 04 chambers களைக் கொண்டுள்ளதுடன் அதில் 03 chambers பழுதுபார்க்கப்பட்ட பிறகு சேவை வழங்குவதற்காக சேர்க்கப்பட்டுள்ளன எனவும், மீதமுள்ள chamber இனை தயாரிப்பதற்காக மதிப்பீடு கோரப்பட்டுள்ளது எனவும், The Global Fund to Fight AIDS, Tuberculosis and Malaria இன் ஊடாக இந்த இயந்திரம் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் மேற்கொள்ளப்படுகிறது எனவும்.
	ii.	ஆய்வுகூடத்தில் கணக்காய்வு தின நிலவரப்படி, TB PCR.TB Culture பரிசோதனைகள் மற்றும் AFB பரிசோதனைகளில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், காச நோய்க்கான சளி பரிசோதனைகள் செய்யவில்லை என்பதும், காச நோய்க்கான சளி பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு சளி மாதிரிகளை காலி அல்லது பத்தேகம வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் அனுப்பப்படுவது அவதானிக்கப்பட்டது. அதன்படி நாளாந்தம் சளி மாதிரிகளை மற்ற வைத்தியசாலைகளுக்கு பரிசோதனைக்காக அனுப்புவதற்கு அரசு அதிக நேரமும், செலவும் செய்ய வேண்டியுள்ளது எனவும், இதனால் நோயாளிகள் நலன் குறைந்து வருவதும் அவதானிக்கப்பட்டது. 2023 ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான கணக்காய்வு மாதிரி பரிசோதனைக் காலத்தில் கராப்பிட்டிய வைத்தியசாலையினால் வெளி	-அவ்வாறே-	சளி மாதிரிகளின் ஆய்வுக்கு (AFB) தேவையான பரிசோதனைகளுக்கான இடம் தயார் செய்யப்பட்டு தேவையான பரிசோதனைகள் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், அனைத்து TB Culture வைத்தியசாலையில் செய்யப்படுகின்றன என்பதுடன், நேர்மறையான மாதிரிகள் மட்டும் மருந்து பரிசோதனைக்காக (DST) வெலிசரைக்கு அனுப்பப்படுகின்றன எனவும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கான அனைத்து பரிசோதனைகளும் தேவைக்கு ஏற்றவாறு செய்யப்படுகின்றன எனவும்.

	வைத்தியசாலைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 2,434 ஆகும்.		
(எ)	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் மருத்துவர்கள் உட்பட மருத்துவ ஊழியர்களினால் சத்திர சிகிச்சை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் விஷேட ஆடைகள் கிருமி நீக்கம் செய்தல் மற்றும் சத்திர சிகிச்சை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நீரை தொற்று நீக்கம் செய்யும் மத்திய தொற்றுநீக்கல் பிரிவில் 06 தொற்றுநீக்கி இயந்திரங்கள் மற்றும் 02 நீர் தொற்று நீக்கி இயந்திரங்கள் காணப்பட்டதுடன் அதில் 04 இயந்திரங்கள் கணக்காய்வுத் தின நிலவரப்படி 01 மாதம் முதல் 05 மாதங்கள் வரையிலான காலம் செயலிழந்து காணப்பட்டதால் வைத்தியசாலையின் நாளாந்த தொற்று நீக்கும் பணிகள் பாதிப்படைந்து காணப்பட்டதுடன், அவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வைத்தியசாலையின் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படவில்லை.	இந்த இயந்திரங்களை திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இணங்கவில்லை எனவும், vertical auto clave (உற்பத்தி ஆண்டு 2011) மற்றும் Getinge Hs 672 High Pressure (உற்பத்தி ஆண்டு 2004) இயந்திரங்கள் தொற்று நீக்கல் பிரிவிற்கு 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வைத்தியசாலைகயின் ஆய்வுகூடங்களில் இருந்து தரப்பட்டன எனவும், இந்த இயந்திரங்களை பழையதாக இருப்பதால் அதன் கதவுகள் சரியாக மூடப்படுவதில்லை என்பதுடன், பல முறை உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் சரிபார்க்கப்பட்டதுடன், உதிரிப் பாகங்கள் பற்றாக்குறையால் தற்போது செயலிழந்துள்ளது எனவும், shinva 91 High pressure sterilizer மற்றும் Matachana High pressure இயந்திரங்கள் தற்போது இயங்குவதாகவும், பழைய செயலிழந்த இயந்திரங்களை அகற்றும் செயல்முறைக்கு பரிந்துரைத்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும், தற்போது 02 இயந்திரங்கள் காணப்படுகின்றன எனவும் அதில் ஒரு இயந்திரம் செயல்படுவதாகவும், மற்றைய இயந்திரம் 17 வருடங்கள் பழையது என்பதுடன், இந்த இயந்திரத்திற்குப் பதிலாக JICA நிதியின் கீழ் புதிய Cath Lab வழங்கப்படவுள்ளது எனவும், தற்போதுள்ள பழைய இயந்திரம் பழுதுபார்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதுடன் பழுது பார்த்த பிறகு எதிர் காலத்தில் சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தங்கள் செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது எனவும்.

(ஏ)	கண்டி தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் பிரிவில் பயன்படுத்தப்படும் 02 இருதய வடிகுழாய் இயந்திரங்கள் மூலம் தினமும் கிட்டத்தட்ட 30 நோயாளிகளை பரிசோதித்தல் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதுடன், 17 வருடங்களுக்கும் மேல் பழைய Siemens Axiom Artis DFC Cath Lab (Machine - SN3542602626) இயந்திரம் 2023 மே 01 ஆம் திகதி முதல் செயல் இழந்துள்ளது. அதனை பழுதுபார்ப்பது பலனளிக்காததால் அதற்குப் பதிலாக ஒரு புதிய இயந்திரத்தை நிறுவத் தவறியதால் தினசரி இருதய பரிசோதனைகள் சுமார் 50 சதவீதத்தினால் குறைந்துள்ளன. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 மே 29 ஆம் திகதி வரை 8024 நோயாளிகள் சிகிச்சைக்காக பதிவு செய்து காத்திருப்போர் பட்டியலில் உள்ளதுடன், இயந்திரம் செயலிழந்த காரணத்தால் காத்திருப்போர் பட்டியலில் நீண்டு கொண்டே செல்வதை அவதானிக்க முடிந்தது.	-அவ்வாறே-	புதிய இயந்திரம் கொள்வனவு செய்வதற்கான ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக தற்போது 17 வருடங்களுக்கும் மேல் பழைய Siemens Axiom Artis DFC Cath Lab இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கு உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு அறிவித்துள்ளதுடன், அந்த பிரிவினால் 2024.04.08 ஆம் திகதி டெமோ தனியார் நிறுவனத்திற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி உரிய உதிரி பாகங்கள் இறக்குமதி செய்வதற்குத் தேவையான உரிமங்களை வழங்குமாறு 2024.04.22 ஆம் திகதிய கடிதத்தில் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுடன், உரிய பழுதுபார்ப்புகள் செய்த பின்னர் நோயாளர் பரிசோதனைகளுக்கு பயன்படுத்தப்படும் எனவும்.
(ஐ)	சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையில் மற்றும் நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய நிலையில் வெளிநாட்டு லீவு பெற்று சேவைக்கு திரும்பாத மற்றும் சேவையை வெறிதாக்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் முறையே 24 மற்றும் 09 பேர்களின் ஒப்பந்த மீறல் மற்றும் உரிய காலத்தில் கடமையை செய்யாமையினால் முறையே ரூ. 12,607,961 மற்றும் ரூ. 4,137,720 என மொத்தம் ரூ. 16,745,681 இனை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என இருந்தபோதிலும் அந்த தொகை அறவிடப்படவில்லை. மேலும், சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையின் மூன்று வைத்தியர்கள் மற்றும் நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் 09 பேர்கள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகையும் கணக்கிடப்படவில்லை.	இது தொடர்பில் ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து தொகையையும் அறவிடுவதற்கும் பொறுப்பை செய்யத் தவறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும்.	அவதானிப்புகளுக்கு இணங்கவில்லை எனவும், மருத்துவர்கள் வெளிநாட்டு லீவு அனுமதி பெறல் மற்றும் ஒப்பந்தம் செய்தல் என்பன சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது எனவும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவைக்கு சமூகமளிக்காமை குறித்து அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டது எனவும், சேவையை வெறிதாக்கல் கட்டளை வழங்கப்பட்டது எனவும், மருத்துவ அலுவலர் திருமதி F.N.A சுபைதீன் இனால் அவர் சேவையை வெறிதாக்கிய அடிப்படையில் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய ரூ. 800,961,00 இனை ஏற்கனவே செலுத்தியுள்ளார் எனவும், எனினும் ஏனைய மருத்துவ உத்தியோகத்தர்கள் பணம் செலுத்தியதாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரினால் அறிவிக்கவில்லை எனவும்.

(ஒ)	சிறிமாவோ பண்டாநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலை சேவையாற்றிய தாதி உத்தியோகத்தர்கள் இருவருக்கு கட்டாய சேவைக் காலத்தை செய்யாத காரணத்தால் அந்த உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிக் காலத்தில் வழங்கப்பட்ட கொடுப்பனவு ரூ. 5,254,709 மற்றும் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவு ரூ. 57,746 உம் பணி முற்பணம் B கணக்கிற்கு அறிவிட வேண்டிய ரூ. 79,898 எம் என மொத்தம் ரூ.5,392,353 மற்றும் ஒப்பந்தத்தின் படி அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகையும் அறவிடப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், தாதி உத்தியோகத்தர்கள் சேவையை வெறிதாக்கியமை தொடர்பில் சுகாதார அமைச்சிற்கு அறிவித்துள்ள போதிலும் அறவிடப்பட வேண்டிய தொகை குறித்தும் அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சினால் இதுவரை அறிவிக்கவில்லைல எனவும், மேலும் பயிற்சி பெற்ற தாதியர் கல்லூரிகளில் இருந்து விபரங்களை கோரியுள்ளது எனவும்.
(ஒ)	சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில் சேவையாற்றிய கதிரியலாளர் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்ட படிப்பிற்காக 2014 நவம்பர் 24 ஆம் திகதி முதல் 2017 டிசம்பர் 31 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு சம்பளத்துடன் கூடிய கற்கை லீவு பெற்றுள்ளார். தாபன விதிக்கோவையின் XV அத்தியாயத்தின் 4.12 பிரிவின் 15 பந்தியின்படி இந்த உத்தியோகத்தர் சம்பளத்துடன்கூடிய கற்கை லீவு பெறும் உத்தியோகத்தர் ஒருவர் கையொப்பமிட வேண்டிய பிணையும், 08 வது பந்தியின்படி ஒப்பந்தத்திலும் கையொப்பமிட்டுள்ளார். ஒப்பந்தத்தின்படி கல்வி நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் 10 வருடங்களுக்கு குறையாமல் சேவையாற்ற வேண்டும் எனினும், சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாமல் சேவைக்கு சமூகமளிக்காத காரணத்தால் கற்கை லீவு காலத்தில் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட ரூ.1,641,282 சம்பளம் மற்றும் 15 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை தொகை ரூ.600,000 இனையும், கற்கைக்காக செலவிடப்பட்ட ஏனைய செலவுகள் உள்ளடங்களாக அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகையை 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் அறவிடப்படவில்லை.	-அவ்வாறே-	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை எனவும், கதிரியலாளரிடமிருந்து அறவிட வேண்டிய பணம் குறித்து சுகாதார அமைச்சிற்கு அறிவித்துள்ளது எனவும், அறவிடுதல் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படும் எனவும்.
(ஓள)	நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் 2016 ஆம் ஆண்டு முதல் 2024 ஜனவரி லரையான காலப்பகுதியில் 8 உத்தியோகத்தர்களின் வீட்டு வாடகை ரூ. 304,576 குறைவாகவும், 2021 மற்றும் 2024 ஜனவரி வரையான காலப்பகுதியில் 96 உத்தியோகத்தர்களின் வீட்டு வாடகை ரூ.	குறைவாக அறவிடப்பட்டதை மீள பெறுவதற்கும் கூடுதலாக அறவிட்டுள்ளதை திருப்பி செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	குறிப்பிடப்பட்டுள்ள எட்டு உத்தியோகத்தர்களின் நிலுவைத் தொகையை 2024 ஜனவரி மாதத்தில் இருந்து குறைக்கப்பட்டுள்ளது எனவும், கூடுதலாக அறவிடப்பட்ட வீட்டு வாடகை வருமானத்தில் இருந்து திரும்பப் பெற்று

	219,940 அதிகமாகவும் அறவிடப்பட்டுள்ள போதிலும் அதனை சரிசெய்திருக்கவில்லை.		சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(க)	2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின்படி, அனைத்து அரச நிறுவனங்களிலும் விரல் அடையாளம் பதிவு இயந்திரங்களை பயன்படுத்தி உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புறப்பாடு பற்றிய பதிவுகளை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2017 மே 12 ஆம் திகதியன்று DMS/0016 எனும் இலக்க திறைசேரி செயலாளரினால் சுகாதார செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில், சுகாதார ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறுதலை உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் 2017 ஜூலை 01 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படாவிட்டால், தற்போதைய சம்பளத்தின்படி மேலதி நேர கொடுப்பனவுகள் வழங்காதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என அறிவித்துள்ளது. எனினும் அமைச்சினால், அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு 31.08 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்ட 213 விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் தற்போதைய சம்பளத்தின் அடிப்படையில் மதிப்பாய்வு ஆண்டில் சம்பளத்திற்காக 44,590.70 மில்லியன் ரூபாவும், மேலதிக நேர மற்றும் விடுமுறை தின கொடுப்பனவாக 38,236.83 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 82,827.53 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு மேலதிக நேர மற்றும் விடுமுறை தின கொடுப்பனவிற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை சம்பளத்தில் 72 சதவீதமாகும்.	சுற்றிக்கை நடைமுறைகளின்படி உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புறப்பாடு பற்றிய பதிவுகளை வைப்பதற்கும் மற்றும் அதற்கு இணங்க உத்தியோகத்தர்களின் மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்	அரச நிர்வாக சுற்றிக்கையின்படி விரல் அடையாள பதிவு இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உள்ளக சுற்றிக்கை மற்றும் பொது கடிதம் வெளியிடப்பட்டது எனவும், ஆனாலும் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு காரணமாக இதுவரை அதனை செயற்படுத்த முடியவில்லை எனவும், உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புறப்பாடு தொடர்பாக அனைத்து திணைக்கள தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும், அந்த உள்ளக கட்டுப்பாட்டை மேலும் பலப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புறப்பாடு மற்றும் கடமை நேரத்தில் வெளியேறிச் செல்லல் குறித்து தொடர்ந்து கண்காணிக்குமாறு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும்.
(ங)	2018 ஆம் ஆண்டின் இலக்கம் 18 எனும் 1990 சுவசெரிய அறக்கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 18(5) மற்றும் 25 (1) இன்கீழ் வாரியத்தினால் அறக்கட்டளை நிதியிலிருந்து பணம் செலுத்தல் தொடர்பில் மற்றும் சட்டங்களை உருவாக்கக்கூடிய முக்கிய 05 விடயங்களில் எந்த விடயம் தொடர்பிலும் சட்டங்கள் உருவாக்கப்படவில்லை.	சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.

(ச)	2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு) சட்டத்தின் 10 (உ) பிரிவின்படி ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கும் வசதிகளுக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்தும் முறையை செயற்படுத்துதல் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் தனியார் மருத்துவ நிறுவனங்களை தர வரிசைப்படுத்தல் பட்டியலை நிறைவு செய்யவில்லை என்பதுடன், இதனால் கட்டண நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் செய்யப்படவில்லை.	-அவ்வாறே-	இணங்குவதாகவும்.
(ஞ)	2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு) சட்டத்தின் 13 (1) பிரிவின்படி வாரியத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் வர்த்தமானியில் வெளியிடப்படும் உத்தரவுகளின் ஊடாக அமைச்சரினால் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கான அங்கீகாரம் செய்வதற்கான முன்மொழிவு முறை செயற்படுத்த வேண்டும் எனவும், அங்கீகாரத்திற்கான அளவுகோல்கள், வசதிகள், சேவை மற்றும் வேறு ஏதேனும் காரணிகளைக் குறிப்பிடும் விபரங்கள் அந்த உத்தரவில் சேர்க்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி இந்த அங்கீகார நடவடிக்கைகள் தொடர்பான உத்தரவுகள் தயாரிக்கப்பட்டு சட்டமாக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ட)	2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு) சட்டத்தின் 18 (2)(உ) மற்றும் 18(2)(1) பிரிவுகளின்படி, ‘‘தொடர்புகள் உள்ள அல்லது பாதிக்கப்பட்ட நபர் ஒரு தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அதனுடன் தொடர்பான நபருக்கு எதிராக செய்யப்படும் முறைப்பாட்டை பெறுவதற்கும் மற்றும் அந்த முறைப்பாடு இறுதியாக அகற்றும் போதும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை’’ தொடர்பாக அமைச்சர் உத்தரவுகளை வழங்கலாம் என்றாலும், அமைச்சரினால் இது தொடர்பான உத்தரவுகள் தயாரிக்கப்படவில்லை என்பதுடன், தனியார் சகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் கவுன்சிலினால் PHSRC Guideline 05- Complain Handling Procedure பெயரில் 2021 மார்ச் 19 ஆம் திகதி 02 பக்கங்கள் கொண்ட (12 விடயங்கள் அடங்கிய) முறைப்பாடுகள் தொடர்பான வழிகாட்டி மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

(ண)	2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு) சட்டத்தின் 18 (1), 18 (2), 18 (3), 18 (4) பிரிவுகளின்படி, உள்ள இந்த சட்டத்தின் பரிந்துரைக்கப்படும் அல்லது உத்தரவுகளை உருவாக்க இந்த சட்டத்தின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அமைச்சரினால் கட்டளைகள் பிறப்பிக்கப்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு பாதிப்பின்றி அமைச்சரினால் வாரியத்தின் ஆலோசனையின் பேரில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 09 காரணிகள் அல்லது அதில் ஏதாவதொரு காரணத்திற்காக கட்டளைகள் பிறப்பிக்கப்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அமைச்சரினால் தயாரிக்கப்படும் அனைத்து கட்டளைகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் எனவும், சட்டத்தின் பிரிவின்படி அமைச்சரினால் தயாரிக்கப்படும் அனைத்து கட்டளைகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் கூடிய விரைவில் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி கட்டளைகள் தயாரிக்கவேண்டிய பிரிவுகள் 09 இல் வர்த்தமானியில் 02 கட்டளைகள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளதுடன், அவற்றை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அனுமதி பெறப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(த)	2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு) சட்டத்தின் 19 (1) மற்றும் 19 (2) பிரிவுகளின்படி, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் அல்லது அதில் ஏதாவது ஒரு காரணி தொடர்பில் வாரியத்தினால் விதிகளை உருவாக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், வாரியத்தினால் உருவாக்கப்படும் எந்தவொரு சட்டமும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடும் வரை நடைமுறைக்கு வராது என்றும் கூறப்பட்டுள்ளது. அதன்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் தயாரிக்க முடியுமான 14 காரணிகளில் எந்தவொரு காரணி தொடர்பிலும் விதிகள் தயாரிக்கப்படவில்லை என்பதுடன், 11 வழிகாட்டல்கள் மட்டுமே தயார் செய்துள்ளது. இந்த வழிகாட்டுதல்களுக்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒப்புதல் பெறப்பட்டது என்பதை உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், இந்த	-அவ்வாறே-	-அவ்வாறே-

	வழிகாட்டுதல்கள் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.		
(ந)	கொடகம – மாலம்பே பிரதான வீதிக்கு மற்றும் வல்கம – அதுருகிரிய பாதைக்கு எல்லையில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 ரூட் 29.70 பேர்ச்சஸ் பரப்புள்ள (சுமார் 2 ½ ஏக்கர்) காணி, 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி 4205 எனும் இலக்க இறுதி உயிலின் மூலம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்பதுடன், அதன் மதிப்பு சுமார் 1,074 மில்லியன் ரூபா ஆகும். இந்த காணியின் சட்டபூர்வ உரிமையாளர் 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி மரணித்துள்ளார் என்பதுடன், அது பற்றி 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி எழுத்துமூலம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது. இந்த காணியை சட்டபூர்வமாக உரிமையை கையகப்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. சிவில் வழக்கு நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 516 இன்படி, இறுதி உயிலின் உரிமையாளர் இறந்த இடத்தின் மாவட்ட நீதிமன்றத்தில் மூன்று (03) மாதங்களுக்குள் அந்த இறுதி உயிலின் அசல் பிரதியை சமரப்பித்து அது இறந்தவரின் இறுதி உயில் என சிவில் வழக்கு நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 524 இன்படி மறுப்புகள் இல்லாமல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனினும், காணியின் சட்டபூர்வ உரிமையாளர் 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி மரணித்த பின்னர் 2024 மார்ச் 31 ஆம் திகதிக்கு 25 மாதங்கள் கடந்திருந்த போதிலும் இல.4205 எனும் இறுதி உயில் மரணித்தவரின் இறுதி உயிலாக மறுப்பு இன்றி உறுதி செய்யப்படவில்லை.	இது தொடர்பில் முழுமையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது எனவும்.
	ii. இவ்வாறு இறுதி உயில் மறுப்பு இன்றி உறுதி செய்ய தாமதம் ஏற்பட்டதற்காக இல.4205 எனும் இறுதி உயிலின் அசல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அல்லது சுகாதார அமைச்சிற்கு அல்லது வாரிசிடம் இல்லாமை, இல.4205 எனும் இறுதி உயிலின் அசல்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	மேலே கூறப்பட்ட தரப்பினரிடம் இல்லை என்பதை உறுதி செய்வதற்கு காணி உரிமையாளர் மரணித்து 06 மாதங்கள் கடந்துள்ளமை மற்றும் கீழே கூறப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் போன்றவை காரணமாக அமைந்தது.		
	➢ காணியின் சட்டபூர்வ உரிமையாளர் மரணித்தமை குறித்து மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2022 பெப்ரவரி 25 ஆம் திகதி சுகாதார அமைச்சிற்கு அறிவித்துள்ள போதிலும், இல.4205 எனும் இறுதி உயில் மரணித்தவரின் இறுதி உயிலாக மறுப்பு இன்றி உறுதி செய்வதற்கு தேவையான சட்ட ஆலோசணைகளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சுகாதார அமைச்சின் சட்ட பிரிவினால் 2022 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அதாவது 188 நாட்கள் தாமதித்தே வழங்கியுள்ளது. காணியின் சட்டபூர்வ உரிமையாளரின் மரணம் குறித்து 2022 பெப்ரவரி 25 ஆம் திகதி சுகாதார அமைச்சு அறிந்து கொண்ட போதிலும் காணியின் சட்டபூர்வ உரிமையை பெறுவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி அதாவது 39 நாட்கள் தாமதித்த பின்னரே அனுப்பியுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ மேற்படி கடிதத்திற்கு பதிலிக்கும் வகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2022 மே 20 ஆம் திகதிய E/113/2022 எனும் இலக்க கடிதத்தின் ஊடாக, இறுதி உயிலை உறுதிப்படுத்தல் மற்றும் மரணித்த காணியின் சட்டபூர்வ உரிமையாளரின் பிற சொத்துகள் தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் சாட்சிய வழக்கு உள்ளதா என்பதைக் கண்டறிந்து தெரிவிக்குமாறு அமைச்சின் உத்தியோகத்தர்கள் இதற்கு முன் அறிவித்துள்ளதாக கூறப்பட்ட போதிலும், இந்த கடிதத்திற்கு பதில்	-அவ்வாறே-	-அவ்வாறே-

		சுகாதார அமைச்சினால் வழங்கியமைக்கான எழுத்துமூலம் உறுதிசெய்யப்படவில்லை.		
	iii.	இந்த காணி தொடர்பாக, காணியின் சட்டபூர்வ உரிமையாளர் இறப்பதற்கு முன்னர் சுகாதார அமைச்சினால் பராமரிக்கப்பட்டு வந்த இலக்கம் LO/192/2015 எனும் கோப்பு மற்றும் காணியின் சட்டபூர்வ உரிமையாளர் மரணித்த பின்னர் திறக்கப்பட்ட LO/113/22 கோப்பு காணாமல் போனதால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv.	2015 ஆம் ஆண்டில் இந்த காணியின் மேம்பாட்டு பணிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொண்டுள்ளதுடன், அதற்காக காணியின் சட்டபூர்வ நிலையை உறுதி செய்வதற்காக நிறுவனத்தில் அப்போது பணியாற்றிய நிர்வாக உத்தியோகத்தரினால் இல. 4205 எனும் இறுதி உயிலின் அசல் மற்றும் 2050 எண் கொண்ட பத்திரத்தின் அசல் என்பன நிறுவனத்தின் கணக்கு பிரிவில் உள்ள பாதுகாப்பான இடத்தில் உள்ளது எனவும், இந்த ஆவணத்தை தம்மிடம் வழங்குமாறு கோரி நிறுவனத்தின் கணக்காளரிடம் MRI/EI/BL.MAI/2014/14 எனும் இலக்கம் மற்றும் 2015 ஏப்ரல் திகதி குறிப்பிடாத கடிதம் கணக்கு பிரிவின் பிரதான அரச முகாமைத்துவ உதவியாளருக்கு பிரதியிட்டு அனுப்பியுள்ள போதிலும், மேற்படி கடிதம் தொடர்பில் நிறுவனத்தின் கணக்கு பிரிவினால் நடவடிக்கை எவையும் எடுக்கவில்லை என்பதுடன், அந்த சந்தர்ப்பத்தில் மேற்படி ஆவணங்களின் அசல் பிரதிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் இல்லாவிட்டால் அதனை சட்டபூர்வ உரிமையாளர் உயிருடன் இருந்த போது பெறுவதற்கு அல்லது பாதுகாவலர் தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், இல. 4205 எனும் இறுதி உயிலின் அசல் மற்றும் 2050 எண் கொண்ட பத்திரத்தின் அசல் பிரதி என்பன நிறுவனத்தின்	-அவ்வாறே-	-அவ்வாறே-

		கணக்கு பிரிவில் உள்ள பாதுகாப்பான இடத்தில் இல்லை என பாதுகாப்பு பெட்டி சாவிக்கு பொறுப்பான கணக்கு பிரிவின் கடமையில் ஈடுபட்டிருந்த அரச முகாமைத்துவ உதவியாளர் - நிதி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தரினால் 2023 ஜூலை 05 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது. அதன்படி, இல. 4205 எனும் இறுதி உயிலின் அசல் மற்றும் 2050 எண் கொண்ட பத்திரத்தின் அசல் பிரதி என்பன மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் பெறப்பட்டு அவை தொலைந்திருக்கலாம் என கணக்காய்வில் அவதானிக்க முடிந்தது.		
	v.	2015 ஆம் ஆண்டு நிலவரப்படி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சட்டபூர்வ உரிமையற்ற இந்த காணியை சுற்றி கான்கிரீட் தூண்களுடன் கூடிய கம்பி வேலி ரூ.176,369 அரசாங்க நிதி மற்றம் 16 அரச உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் 09 நாட்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தால் 2015 ஏப்ரல் மாதத்தில் கட்டப்பட்டுள்ளது. எனவே அரசாங்க வளங்களைச் செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட மேற்படி கொடுக்கல் வாங்கல் சட்டரீதியான கொடுக்கல் வாங்கல்கள் என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vi.	காணியின் சட்டபூர்வ உரிமையாளரினால் 2015 ஒக்டோபர் 11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இந்த காணியை அன்பளிப்பு பத்திரம் மூலம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதுடன், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தால் ரூ.35,000 செலவில் இந்த காணியை அளவீடு செய்து வரைபடம் தயாரித்துள்ளது. மேலும், காணியின் சட்டபூர்வ உரிமையாளரின் 2016 மே 06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வல்கம – அதுருகிரிய வீதியின் அதுருகிரிய அபிவிருத்திக்காக இந்த காணியின் ஒரு பகுதியை கையகப்படுத்தும் பிரச்சனையை தீர்க்கும் வரை அன்பளிப்பு பத்திரம் மூலம் காணியை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை தற்காலிகமாக	-அவ்வாறே-	-அவ்வாறே-

		நிறுத்துமாறு கோரப்பட்டதன் பின்னர் 2016 நவம்பர் 16 ஆம் திகதி வரை காணியின் சட்டபூர்வ உரிமையாளருக்கும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் இடையே கடிதப் பரிமாற்றங்கள் இருந்த போதிலும், அதன் பிறகு காணியின் உரிமையாளர் மரணிக்கும் வரை 5 வருடங்களுக்கும் மேலாக கடிதப்பரிமாற்றங்கள் இருந்ததாக எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறு அன்பளிப்பு பத்திரம் மூலம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் 05 வருடங்களுக்கு மேலாக சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ அதனை பின்தொடரவில்லை.		
	vii.	கணக்காய்விற்காக சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் பற்றிய தகவல்கள் HSM/E/MH/01/INFO/2021/17 எனும் 2021 செப்படம்பர் 29 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டதுடன், அந்த கடிதத்தின் (ஆ) பிரிவின் கீழ் அன்பளிப்பாக காணி மற்றும் கட்டிடங்கள் பெறல் தொடர்பான தகவல்கள் அந்த கடிதத்தின் இணைப்பு இலக்கம் 02 இன்படி கோரப்பட்ட போதிலும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தால் 2023 மே 23 ஆம் திகதி வழங்கிய தகவலின்படி அறுதி உயிலின் மூலம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அன்பளிப்பாக பெறப்பட்ட இந்த காணி தொடர்பில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை என்பதால் கணக்காய்விற்கு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக தவறான தகவல்கள் சமர்ப்பித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 7(1) மற்றும் 42 வது பிரிவிற்கு உங்களது அவதானத்தை செலுத்தி தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சுட்டிக்காட்டுகிறேன்.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	viii. மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பாக முறையான விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும், இல.4205 எனும் இறுதி உயில் மரணித்தவரின் இறுதி உயிலாக எதிர்புகள் இன்றி உறுதி செய்து காணியின் சட்டபூர்வமான உரிமையை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பெறுவதற்கு இனியும் தாமதிக்காமல் துரிதமாக நடவடிக்கை எடுப்பதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறேன்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ப)	சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் CFO I/FR/135/2023 எனும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் தொடர்பான சுற்றறிக்கையின் பத்தி 24.2.10 இன்படி மற்றும் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் ஒப்படைத்தல் சுற்றிக்கையின்படி வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்படும் பிற கழிவுகளில் இருந்து பொருளாதார மதிப்புடைய சலைன் போத்தல்கள், ப்ளாஸ்டிக், கண்ணாடி போத்தல்கள், X-ray card, cardboard, தண்ணீர் போத்தல்கள், மற்றும் பிற பொருட்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2007 நவம்பர் 28 ஆம் திகதிய SA/FA/2005/2/26 உத்தரவின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அதிகபட்ச இலாபம் கிடைக்கும் வகையில் டெண்டர் கோரப்பட்டு விற்க வேண்டும் எனினும், மாத்தறை பொது வைத்தியசாலையினால் இதற்கு இணங்க செயற்படாத காரணத்தால் 2012, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கணக்காய்வுத் தினம் வரையிலான காலத்தில் பொருளாதார மதிப்புள்ள 3 பொருட்கள் (வெற்று சலைன் போத்தல்கள், இரத்த வடிகட்டி திரவ கொள்கலன்கள் 5L, 10L) விற்பனையால் அரசாங்கம் ஈட்டக்கூடிய மொத்த வருவாய் ரூ. 2,638,172 இனை இழந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	வைத்தியசாலைகளில் உருவாகும் நிதி மதிப்பு கொண்ட பொருட்களை அகற்றுவது தொடர்பில் முறையான முறைமைகளை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.	சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2007 நவம்பர் 28 ஆம் திகதிய SA/FA/2005/2/26 உத்தரவின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அதிகபட்ச இலாபம் கிடைக்கும் வகையில் டெண்டர் கோரப்பட்டு வைத்தியசாலை பயன்பாட்டிலிருந்து அகற்றப்படும் பொருட்கள் மற்றும் கொள்கலன்கள் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும், அந்த நடவடிக்கைகள் கொள்ளல் இலக்கம் 2020/212, 2021/261 மற்றும் 2022/222 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதியின் பிரகாரம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், இருப்பினும், இந்த விடயம் முழு வைத்தியசாலை அமைப்பிற்கும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் வைத்தியசாலைகளில் வெற்று கொள்கலன்கள் விற்பனை வருவாயை வசூலிக்க முறையான முறைமையொன்றை தயாரித்தல் தொடர்பில் பிரதான நிதி அலுவலர் 1 இனால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.
(ம)	கணக்காய்வுத் தினமான 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு மாத்தறை பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் மொத்தம் ரூ. 1,934,201 ஆன 37 வகையான காலாவதியான சத்திர சிகிச்சைப் பொருட்கள் 2754 காணப்பட்டன.	இது தொடர்பில் விசாரணை செய்து பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் காலாவதியாவதற்கு முன் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அந்த பிரிவிற்கு

	தேவைக்கு அதிகமாக கையிருப்பு வைத்துள்ளதால் காலாவதியாவதற்கு முன் மேலதிக இருப்புகளை, மற்ற வைத்தியசாலைகளுக்கு பகர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காததால் இவ்வாறு சத்திர சிகிச்சைப் பொருட்கள் அழிந்து போவதுடன், வைத்தியசாலையில் சிறந்த கையிருப்பு கட்டுப்பாட்டு முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		பொறுப்பான மருந்தாளரினால் எடுக்கப்பட வேண்டும்.
(ய)	மாத்தறை பொது வைத்தியசாலையில் இருந்து கம்புருகமுவ புதிய வைத்தியசாலை வரையில் ஊழியர்களுக்கான போக்குவரத்து ஒரு பயணம் (வருதல் மற்றும் செல்லல்) இற்காக 20 கிலோமீற்றர் தூரம் பயணிக்கிறது எனவும், நாளொன்றுக்கு ஏறக்குறைய 8 பயணங்கள் NE 1037 மற்றும் NF 1038 இலக்கம் கொண்ட பேருந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கணக்காய்வு மாதிரி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2023 பெப்ரவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையிலான 09 மாதங்களில் எண் NE 1037 பேருந்து 1387 பயணங்களையும், NF 1038 பேருந்து 1093 பயணங்களையும் மேற்கொண்டுள்ளது. அதன்படி சேவை நிலையங்களுக்கு இடையே பயணிப்பதற்கு அரசாங்க வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு மொத்தம் ரூ.4,151,031 எரிபொருள் செலவு செய்வதற்கான நியாயமான காரணங்கள் கணக்காய்வில் தெளிவாகவில்லை என்பதுடன் அது தொடர்பான செலவுகள் பயனுள்ள செலவாக கணக்காய்வில் கருத முடியவில்லை.	முறையான அனுமதியின் கீழ் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.	2013 ஆம் ஆண்டு மாத்தறை வைத்தியசாலையின் துணை நிறுவனமாக கட்டி முடிக்கப்பட்ட புதிய வைத்தியசாலை மகப்பேறு மற்றும் புதிதாக பிறக்கும் சிசுகளுக்கான வைத்தியசாலையாக KOICA உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டதுடன், அது 2023 ஜனவரி மாதம் வரை அதன் பிரதான நோக்கமான மகப்பேறு மற்றும் புதிதாக பிறக்கும் சிசுகளுக்கான சுகாதார சேவைகளை வழங்கும் வைத்தியசாலையாக ஆரம்பிக்க முடியாமல் போனதற்கான காரணம் முக்கியமாக இந்த வைத்தியசாலை மாத்தறை நகரில் இருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைந்த சூழலில் அமைந்துள்ளது எனவும், 24 மணித்தியாலங்களும் சேவை புரியும் சுகாதார பணியாளர்கள் பல்வேறு கால இடைவெளியில் சேவை சுழற்சியில் ஈடுபடும் ஊழியர்கள் மாத்தறையில் இருந்து காலி வீதியின் தங்காலை வரையும், மாத்தறை தெனியாய, மாத்தறை ஹக்கமன, மாத்தறை ஊருபொக்க போன்ற பிரதான வீதிகளில் மாத்தறை நகருக்கு வரும் ஊழியர்களுக்கு புதிய வைத்தியசாலை வளாகத்திற்கு செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் முடியாததால் கம்புருகமுவ புதிய வைத்தியசாலையின் முக்கிய சேவைகளை ஆரம்பிக்க முடியாமல் போனது எனவும், இது

			தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சில அதிகாரிகளும் வைத்தியசாலை ஊழியர்களுடன் நடத்திய கலந்துரையாடலில், நகரங்களுக்கிடையே போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படும் வரை வைத்தியசாலைக்கு திட்டத்தினால் வழங்கப்பட்ட இரண்டு பேருந்துகளையும் பிரதான நகருக்கும் கம்புருகமுவ வைத்தியசாலைக்கும் இடையே ஊழியர்களை கொண்டு செல்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது எனவும், அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, போக்குவரத்து சேவைகள் ஒழுங்காக இயங்காத சந்தர்ப்பங்களில் சேவை அவசியத்திற்கு ஏற்ப கம்புருகமுவ சந்தி மற்றும் புதிய வைத்தியசாலைக்கு இடையில் பேருந்துகளை பயன்படுத்தி ஊழியர்களை கொண்டு செல்வதற்கு 2024.03.01 ஆம் திகதி முதல் இந்த NE 1037 மற்றும் NF 1038 இலக்கம் கொண்ட பேருந்துகளை பயன்படுத்தி மாத்தறை நகர் மற்றும் கம்புருகமுவ வைத்தியசாலைகளுக்கு இடையே ஊழியர்களை கொண்டு செல்வதை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது எனவும், 2024.03.10 ஆம் திகதி முதல் 2024.05.07 ஆம் திகதி வரையிலான காலத்தில் இந்த பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், 2024.05.04 ஆம் திகதி கௌரவ சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண அவர்களின் கண்காணிப்பு விஜயத்தின் போது வைத்தியசாலை ஊழியர்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு மிக கட்டாய சந்தர்ப்பங்களை உள்ளடக்கும் விதத்தில் நாளொன்றுக்கு 04 பயணம் என 2024.07.07 ஆம் திகதி வரை மாத்திரம் சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டது எனவும்.

(ர)	2023 முதலாவது அரை ஆண்டில் அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் அதிகார பிரதேசத்தில் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக இலங்கை திரிபோஷா நிறுவனத்தினால் பெறப்பட்ட ரூ. 26,065,432 மதிப்புள்ள திரிபோஷா தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்லரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. திரிபோஷா பகிர்ந்தளிக்கும் திட்டம் தொடர்பில் மேற்படி முகாமைத்துவத்தினால் கணக்காணிக்கப்படாமை, பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாமை, திரிபோஷா பகிரந்தளிக்கும் போது கையெழுத்துப்பிரதிகள் பயன்படுத்தியமை, புகையிரத்தில் கொண்டு செல்லப்படும் திரிபோஷா தொகையை உடனடியாக பகிர்ந்தளிப்பதற்கான திட்டங்கள் காணப்பாடாமை போன்ற திரிபோஷா பகிர்ந்தளித்தல் தொடர்பில் காணப்பட்ட குறைபாடுகளினால் ரூ. 1,094,657 மதிப்புள்ள திரிபோஷா 30 பக்கட் அடங்கிய 77 பெட்டிகள் காணாமல் போதல் அல்லது மோசடி மற்றும் ரூ. 23,497,597 மதிப்புள்ள 30 திரிபோஷா பக்கட் அடங்கிய 1750 பெட்டிகள் 02 மாதங்களுக்கும் மேலாக விடுவிக்கப்படாமல் அனுராதபுரம் புகையிரத நிலையத்தில் ஒரு குவளையில் வைத்திருக்க இடமளிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	நாடளாவிய ரீதியில் திரிபோஷா பகிர்ந்தளித்தல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.	திரிபோஷா பகிர்ந்தளித்தல் தொடர்பில் போதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறை காணப்பாடாமையும், விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் உரிய பணிகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், தற்போது சிறந்த புரிந்துணர்வுள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவருக்கு இந்த விடயம் ஒப்படைக்கப்பட்டது எனவும், கையெழுத்துப்பிரதிகள் தொடர்பில் தற்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வரகிறது எனவும், அதனை பூர்த்தி செய்து கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், நெடு காலமாக திரிபோஷா பகிந்தளித்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெறவில்லை என்பதை சுட்டிக்காட்டிய கணக்காய்விற்கு நன்றி தெரிவிப்பதாகவும், பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு தேவையான முறைமைகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், எதிர் காலத்தில் திரிபோஷா பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்வதற்கு உரிய தரப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்.
	ii. புகையிர பெட்ணயில் திரிபோஷா இருந்த போது, 45 பாகை வெப்பத்தில் திரிபோஷாவின் தரம் குறைவதற்கான அவதானம் காணப்பட்டதாகவும்,	-அவ்வாறே-	-அவ்வாறே-

	உரிய காலத்தினுள் புகையிரத நிலைய குவளையில் இருந்து திரிபோஷாவை வெளியில் எடுக்காததால் தாமதக் கட்டணமாக ரூ. 1,080,000 புகையிரத நிலையத்திற்கு செலுத்த நேரிட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.		
	iii. 26 மில்லியன் ரூபா மதிப்புள்ள திரிபோஷாவை பயனாளிகளுக்கு கிடைக்கும் போது காலாவதி தினத்தை நெருகியிருந்தது. அதன்படி, அந்த திரிபோஷா தொகை அதிக வெப்பநிலையில் காணப்பட்டமை மற்றும் காலாவதி தினத்தை நெருங்கும் போது அதன் எதிர்பார்க்கப்பட்ட தரம் பயனாளிகளுக்கு கிடைக்கும் என்பது உறுதிபடுத்தப்படவில்லை எனவும், கடந்த காலங்களில் திரிபோஷா பகிரந்தளித்தல் திட்டத்தை உரிய பொறுப்பான தரப்பினர் மற்றும் பிரிவினால் கணக்காணிக்கவில்லை போன்ற காரணங்களால் அனுராதபுர மாவட்டத்தில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலங்கள் 22 இல் 05 வயதிற்குக் குறைந்த குழந்தைகளின் போஷாக்கு நிலையை ஆராய்ந்த போது 2023 ஜூன் 30 ஆம் திகதிக்கு மந்த போசணையுடைய குழந்தைகளின் எண்ணிக்கை 13326 என அறிக்கையிடப்பட்டுள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ல)	சுகாதார அமைச்சிற்குரிய மருத்துவ விநியோகப் பிரிவினால் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து அனுராதபுரம் புகையிரத நிலையத்திற்கு 2023 பெப்ரவரி முதல் ஜூன் வரையான வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அனுப்பப்படும் மருந்துகள் அனுராதபுரம் புகையிரத நிலையத்தில் இருந்து புகையிரத கட்டண விடுவிப்பு காலத்தினுள் உரிய பொறுப்பான உத்தியோகத்தர்களினால் விடுவிக்காத காரணத்தால் புகையிரத நிலையத்திற்கு செலுத்த வேண்டிய தாமத கட்டணங்களின் மொத்த பெறுமதி ரூ. 4,603,900 ஆகும். மேலும், இந்த மருந்துகள் 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் 45 பாகை வெப்பநிலையில்	நாடளாவிய ரீதியில் மருத்துவ விநியோக நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.	ரயில் வண்டிகள் மூலம் மருத்துவ விநியோக சத்திர சிகிச்சைப் பொருட்கள் பகர்ந்தளித்தல் நடைமுறை சாத்தியமற்றது என தோன்றினாலும், அரசாங்கத்திற்கு மிக இலாபகரமானது மற்றும் வசதியான முறை இது என்பதுடன், உரிய பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கு மருத்துவ விநியோகப்பிரிவில் போதியளவு லாரி வசதிகள் காணப்படாமை மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் வருடாந்த மதிப்பீட்டுக்குரிய தொகையை எடுத்துச் செல்லாத காரணத்தால்

	புகையிரத பெட்டிகளில் இருந்து வெளியே எடுக்காது வைக்கப்பட்டிருந்ததால் இந்த மருந்துகளின் தரம் குறைவதற்கான அவதானம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.		களஞ்சியங்களில் அதிகளவு இருப்புகள் சேருவதன் மூலம் பெறப்படும் இருப்புகளை களஞ்சியப்படுத்துவதற்கு போதியளவு இடவசதி இல்லாததால் ரயில் வண்டிகள் மூலம் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது எனவும், எனினும், காணப்படும் சிக்கல்களை தீர்த்து நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவ விநியோகப் பிரிவு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களை பெற நடவடிக்கை எடுத்துள்ளது எனவும்.
(வ)	உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் மருத்துவ உபகரணங்களுக்காக முறையான உயிர் தரவுகளுடன் சேவை ஒப்பந்தங்கள் பராமரிக்கப்படவில்லை. மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்த பின்னர் விநியோகத்தர் வழங்கிய உத்தரவாத காலம் முடிந்த பின்னர் பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் தொடங்குவதற்குரிய மருத்துவ உபகரணங்கள் ஆவணப்படுத்தப்பட்ட தரவுகள் இல்லாததால் அனைத்து மருத்துவ உபகரணங்களுக்கும் பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் செயற்படுத்துவதற்குரிய கணினி தரவு அமைப்பின் தேவையை இனங்கண்டு ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக செயற்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவு 42 வைத்தியசாலைகளுக்கு 2023 ஆம் ஆண்டில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் உட்பட பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் செய்வதற்கு தேவையான 1,647.3 மிலிலியன் ரூபா ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்த ஒதுக்கீடு மீது செய்யப்பட்ட பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் தொடர்பான தகவல்கள் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவில் காணப்படவில்லை. உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் Excel sheet தரவுகளின்படி548 சேவை ஒப்பந்தங்கள் செய்யாத மருத்துவ உபகரணங்களின் எண்ணிக்கை 234 அதாவது மொத்த எண்ணிக்கையில் 43 சதவீதம் ஆகும்.	அனைத்து சுகாதார நிறுவனங்களும் கொள்வனவு செய்யும் மற்றும் நன்கொடையாக பெறும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் அனைத்து தகவல்களும் சேர்க்கப்பட்ட முறையான தரவு அமைப்பை பராமரித்தல் வேண்டும்.	மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் ஊடாகவும் அதேபோல் வைத்தியசாலைகளினாலும் மேற்கொள்ளப்படுவதுடன், மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் கொள்வனவுகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் உரிய விலைமனு ஆவணங்களில் பராமரிப்பு மற்றும் சேவை விலைகள் உள்வாங்கப்பட்டு விலைகளின் அடிப்படையில் எஞ்சிய ஆண்டுகளுக்கான பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடைகளாக மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலைகளுக்கு பெறப்படுகின்றன எனவும், அவ்வாறு நன்கொடையாக பெறப்படும் உபகரணங்களுக்கு பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தங்கள் இல்லை என்பதால் மேற்கொண்டு பராமரிப்பு மற்றும் சேவைகள் செய்யும் போது பிரச்சனைகள் எழுந்துள்ளன எனவும், காணப்படும் தகவல்களை அடிப்படையாக் கொண்டு பராமரிப்பு மற்றும் சேவைகள்

			வைத்தியசாலை மட்டத்திலும் மற்றும் எமது பிரிவினாலும் முறையாக பராமரிக்கப்பட்டு வருவதுடன், எதிர்காலத்தில் தகவல்கள் தரவு அமைப்பை உருவாக்குவதற்கு கொள்ளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அனைத்து தரவுகளும் உள்ளவாங்கப்பட்ட தரவு அமைப்பை பராமரிக்க முடியும் எனவும்.
(ழ)	2022 ஆம் ஆண்டில் மஹமோதர போதனா வைத்தியசாலையினால் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு மருத்துவ விநியொகப்பிரிவிற்கு அனுமதிக்காக 26 சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட மொத்தம் ரூ. 1,496,937 மதிப்புள்ள 6,228 அலுகுகள் Pronto கணினி அமைப்பின் ஊடாக அனுமதி வழங்குவதற்கு 02 நாட்கள் முதல் 20 நாட்கள் வரை தாமத காலம் எடுத்துள்ளதுடன், 08 சந்தர்ப்பங்களில் 695 அலகுகள் வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்ததற்காக மொத்தம் ரூ. 923,555 மதிப்புள்ள ஆர்டர்களை விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு விநியோக நடவடிக்கைகளுக்கு 02 முதல் 73 நாட்கள் வரை தாமத காலம் விநியோகத்தர்களினால் எடுக்கப்பட்டுள்ளது.	இந்த தாமதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	2022 ஆம் ஆண்டில் மஹமோதர போதனா வைத்தியசாலையினால் 06 சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் மற்றும் 17 வகை மருத்துவப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான அனுமதி மருத்துவ விநியோகப் பிரிவினால் Pronto கணினி அமைப்பு மற்றும் MSMIS அமைப்பின் ஊடாக எடுக்கப்பட்டதாகவும், அந்த ஆண்டுக்காக 17 வகை மருந்துகள் பிராந்திய கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது எனவும்.
(ள)	2023 ஆம் ஆண்டில் மஹமோதர போதனா வைத்தியசாலையினால் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு மருத்துவ விநியொகப்பிரிவிற்கு அனுமதிக்காக 40 சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட மொத்தம் ரூ. 2,437,930 மதிப்புள்ள 1,485 அலுகுகள் Pronto கணினி அமைப்பின் ஊடாக அனுமதி வழங்குவதற்கு 02 நாட்கள் முதல் 25 நாட்கள் வரை தாமத காலம் எடுத்துள்ளதுடன், 18 சந்தர்ப்பங்களில் 627 அலகுகள் வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்ததற்காக மொத்தம் ரூ. 1,070,300 மதிப்புள்ள ஆர்டர்களை விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு விநியோக நடவடிக்கைகளுக்கு 02 முதல் 30	-அவ்வாறே-	2023 ஆம் ஆண்டில் மஹமோதர போதனா வைத்தியசாலையினால் 4 சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் மற்றும் 28 வகை மருத்துவப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான அனுமதி மருத்துவ விநியோகப் பிரிவினால் Pronto கணினி அமைப்பு மற்றும் MSMIS அமைப்பின் ஊடாக எடுக்கப்பட்டது. உரிய அனுமதி பெறப்பட்ட பின்னர் பிராந்திய கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது எனவும்.

	நாட்கள் வரை தாமத காலம் விநியோகத்தர்களினால் எடுக்கப்பட்டுள்ளது.		
(ற)	மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்குரிய காணி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட அளவை அளவீட்டுத் திட்டம் (Survey Plan) இன்படி அபேக்ஷா வைத்தியசாலை கட்டிடங்கள் அமைந்துள்ள 14 ஏக்கர் 03 ரூட் 2.70 பேர்ச் பரப்பைக் கெண்டது. எனினும், இந்த அளவீட்டுத் திட்டம் தயாரிக்கும் போது இந்த காணிக்குரிய உரிமைப் பத்திரம் வைத்தியசாலையில் இருக்கவில்லை என்பதால் அளவீட்டுத் திட்டம் மூலம் இனங்காணப்பட்ட காணியின் பரப்பு சரியானதா என்பது குறித்து உறுதி செய்யப்படவில்லை. மேலும் வைத்தியசாலைக்கு அன்பளிப்பு பத்திரம் மூலம் பெறப்பட்ட சுமார் 02 ரூட் பெலன்கஹகுபர எனும் காணிக்குரிய பத்திரமும் காணாமல் போன நிலையில் இந்த காணின் எல்லைகள் தீர்க்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.	இது குறித்து முழுமையான விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், இந்த இடத்தை துரிதமாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இந்த வைத்தியசாலையின் தற்போது தொலைந்த பத்திரத்தின் ஒரு பிரதியை பெறுவதற்காக வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் சட்டத்தரணிக்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டன எனவும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக மஹரகம பிரதேச செயலகத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன எனவும், இதைத்தவிர வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியின் உரிமம் மற்றும் அதன் எல்லைகள் குறித்து தீர்வு காண்பதற்கு சட்டத்தரணி ஒருவருக்கு தகவல்களை வழங்கியுள்ளதாகவும், அதன்மூலம் வைத்தியசாலையின் பிரதான பத்திரம் தயாரிக்கும் பணிகள் மற்றும் வைத்தியசாலைக்கு அன்பளிப்பு மூலம் பெறப்பட்ட பெலன்கஹகுபர எனும் காணிக்குரிய பத்திரத்தின் பிரதியை பெறுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும்.
	ii. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 315 வது பிரிவின்படி அரசிற்கு சொந்தமான மதிப்புள்ள எதையும் பாதுகாப்பாக வைத்து பராமரிப்பதற்கு போதுமான ஏற்பாடுகளை திட்டமிட்டு கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற ரீதியில் வைத்தியசாலையின் பாதுகாப்பு பெட்டியில் வைத்திருந்து நி.ஒ 316 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனினும், வைத்தியசாலை காணி பத்திரம் தொடர்பில் அவ்வாறு செயற்படவில்லை. எனவே மேற்படி	-அவ்வாறே-	-அவ்வாறே-

	காணி பத்திரம் தொலைந்தமை தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு, பொறுப்பான தரப்பினர்களை கண்டறிந்து அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் வைத்தியசாலைக்குரிய காணிகளின் சட்டபூர்வ உரிமையை உறுதிப்படுத்துவதற்கு உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.		
(ன)	2024 பெப்ரவரி 14 ஆம் திகதி மதியம் 12.30 மணியளவில் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பழைய வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்தின் RG 07 குளிரூட்டி மருந்து அறையில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் அதன் வெப்பநிலை 14.2 செல்சியஸ் என இயற்பியல் பிரிவினால் வழங்கப்படும் வெப்பநிலை அளவிடும் மானியில் காணப்பட்டதுடன், குளிரூட்டி அறையின் வெளிப்புறமாக பொருத்தப்பட்டிருந்த வெப்பநிலை மானியில் அது 12.2 பாகை செல்சியஸ் என பதியப்பட்டுள்ளது. இது குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. 2008 மருந்துகள் முகாமைத்துவம் தொடர்பான கையேட்டில் இரண்டாம் திருத்தத்தில் 9வது அத்தியாயத்தில் 6 வது பிரிவின்படி உற்பத்தியாளரினால் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தடுப்பூசிகள், sera மற்றும் Antipyretic மருந்துகள், குளிரூட்டி அறையில் அல்லது குளிர்சாதனப் பெட்டியில் உரிய வெப்பத்தின் கீழ் (சாதாரணமாக 2 பாகை செல்சியஸ் முதல் 8 பாகை செல்சியஸ்) வைக்கப்பட வேண்டிய 06 வகை தடுப்பூசிகள் 13,990 அலகுகள் மேலே கூறப்பட்ட வேளையில் இந்த குளிரூட்டி அறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது.	இது குறித்து முழுமையான விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், இவ்வாறான நிலைமையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	உரிய மருந்து அலகுகள் 13990 அளவு இந்த சந்தர்ப்பத்தில் RG 07 குளிரூட்டி மருந்து அறையில் வைக்கப்பட்டிருந்ததுடன், பொதுவாக எந்தவொரு குளிர் மருந்துகளும் 24 மணித்தியாலங்கள் அறையின் வெப்பநிலையில் வைத்திருந்தாலும் அந்த மருந்துகளின் தரம் பாதிக்கப்படுவதில்லை எனவும்.

	ii.	மேலும் 2008 மருந்துகள் முகாமைத்துவம் தொடர்பான கையேட்டில் இரண்டாம் திருத்தத்தில் 9வது அத்தியாயத்தில் 6 vi வது பிரிவின்படி அனைத்து குளிர்சாதன பெட்டிகள்/ குளிரூட்டி அறைகள் காலை 9.30 மற்றும் மாலை 3.30 இற்கு இருக்க வேண்டிய வெப்பநிலை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், RG 07 குளிரூட்டி மருந்து அறை உட்பட வைத்தியசாலையின் மற்றைய குளிர்சாதனப் பெட்டிகள் தொடர்பில் இவ்வாறு வெப்பநிலை குறித்து குறிப்புகள் பராமரிக்கப்படவில்லை. இதனால் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மருந்துகளுக்குத் தேவையானவாறு குளிரூட்டி அறைகளின் வெப்பநிலை பராமரிக்கப்பட்டதா என்பது எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.	-அவ்வாறே-	இது குறித்து எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் இல்லாத போதிலும், ஒவ்வொரு நாளும் காலை மற்றும் மாலை இதன் வெப்பநிலை அளவிடப்படுகிறது எனவும், அதற்காக என்னால் தனிப்பட்ட முறையில் பெறப்பட்ட வெப்பநிலை மற்றும் குளிரூட்டி அறைகளில் பின்பக்கத்தில் பொருத்தப்பட்ட வெப்பநிலை மானி பயன்படுத்தப்படுகிறது எனவும், இந்த சம்பவத்தின் பின்னர் எழுத்துமூல பதிவேடுகள் பயன்படுத்தப்படுகின்றன எனவும், குளிரூட்டி அறைகளுக்கு வெளிப்புறமாக “digital reading” பெறக்கூடியவாறு வெப்பமானிகள் பொருத்தப்பட்டுள்ளன எனவும்,
	iii.	அவ்வாறே குளிரூட்டி அறை உரிய வெப்பநிலையில் இல்லாத போது அது குறித்து வைத்தியசாலை முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுவதற்கான முறைமையொன்று இருக்கவில்லை என்பதுடன், குளிர் அறை உரிய வெப்பநிலையில் இல்லாத போது களஞ்சியப்படுத்தப்படும் மருந்துகள் பொருத்தமானதா/ பொருத்தமற்றதா என்பதை தீர்மானிக்கும் முறைமைகளும் வைத்தியசாலையில் காணப்படவில்லை. இவ்வாறான நிலைமையின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட 14.2 பாகை செல்சியஸ் வெப்பநிலையின் கீழ் களஞ்சியப்படுத்தப்பட்ட 2- 8 பாகை செல்சியஸில் வைக்கப்படவேண்டிய தடுப்பூசிகள் நோயாளர்களுக்கு பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	பொதுவாக வைத்தியசாலை முகாமைத்துவத்திற்கு புகார் புத்தகத்தின் ஊடாக அறிவிக்கப்படுகிறது எனவும், அந்த குளிரூட்டி அறையை பொறுப்பேற்று மதற்தடவையாக பிரச்சனைகளுக்கு 2021.11.16 ஆம் திகதியன்று முகங்கொடுக்க நேரிட்டது என்பதுடன், அன்றை தினம் வைத்தியசாலை முகாமைத்துவதற்கு அறிவித்ததும் அதற்காக மின்சார சபையின் தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்டது எனவும், அதன் பின்னர் பிரச்சனைகள் எழும் போது மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாக மின்சாரசபையினால் அதனை சரி செய்யப்படுவதாகவும், கடந்த காலங்களில் பல தடவைகள் குளிரூட்டி அறையின் வெப்பநிலை அதிகரிப்புக்கு உட்பட்ட போது அது குறித்து அறிவிக்கப்பட்டது எனவும், புற்றுநோய் மருந்துகளை பரிசோதிப்பதற்கான முறைமைகள் தற்போது இலங்கையில் காணப்படுவதில்லை எனவும், இந்த மருந்து தொகை ஒரு மாதம்

			அல்லது ஒன்றரை மாதத்திற்குள் வைத்தியசாலையினால் பயன்படுத்தப்படுகிறது எனவும், இந்த மருந்து பாவணையால் நோயாளர்களுக்கு எவ்வித அசௌகரியங்கள் குறித்தும் வைத்தியசாலையினால் அறிக்கையிடப்படவில்லை எனவும், மேலும், பல குளிர் மருந்துகள் சுமார் 24 மணித்தியாலங்கள் அறை வெப்பநிலையில் வைத்திருக்க முடியும் எனவும்.
	iv. இவ்வாறு உரிய வெப்பநிலையில் இல்லாமல் களஞ்சியப்படுத்திய மருந்துகளை நோயாளர்களுக்கு பயன்படுத்தவது பொருத்தமானதா இல்லையா என்பதை பரிசீலிக்காமல் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டமை மருந்துகள் எதிர்பார்க்கப்படும் தரத்தில் இல்லாமல் நோயாளர்களுக்கு வழங்குவது அவதானத்திற்குரியது என்பது கணக்காய்வில் தவிர்க்க முடியாது.	-அவ்வாறே-	அதற்கு முன்னைய தினமும் அன்றைய தினம் காலையிலும் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டது என்பதுடன், சில மணித்தியாலங்கள் ஏற்பட்ட இந்த வித்தியசத்தால் மருந்துகளின் தரத்தில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது எனவும்.
	v. 2008 மருந்துகள் முகாமைத்துவம் தொடர்பான கையேட்டில் இரண்டாம் திருத்தத்தில் 9 வது அத்தியாயத்தில் 6 vii வது பிரிவின்படி குளிரூட்டி அறையின் வெப்பமானியின் துல்லியத்தன்மை குறித்து சரியான நேரத்தில் பரிசீலிக்கப்பட வேண்டும் எனினும், அவ்வாறு பரிசீலிக்கப்பட்டதற்கான எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் இருக்கவில்லை. அதன்படி கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் அதன் வெப்பநிலை 14.2 பாகை செல்சியஸ் என வைத்தியசாலையின் இயல்பியல் பிரிவினால் வழங்கப்பட்ட வெப்பமானியில் குறிக்கப்பட்டுள்ளமையும் குளிரூட்டி அறைக்கு வெளிப்புறமாக பொருத்தப்பட்டிருந்த வெப்பமானியில் 12.2 பாகை செல்சியஸ் என குறிக்கப்பட்டுள்ளதால் குளிரூட்டி அறைக்கு வெளிப்புறமாக பொருத்தப்பட்டிருந்த வெப்பமானியின் துல்லியம் குறித்து கணக்காய்வில் சிக்கலாக உள்ளது.	-அவ்வாறே-	பொதுவாக முறைப்பாடு செய்யும் சந்தர்ப்பங்களை தவிர மின்சார சபையினால் மாதத்திற்கு ஒரு தடவை அதனை பரிசீலிக்கப்படுவதாகவும், அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களினாலும் வெப்பம் அளவிடப்படுவதுடன், தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தப்படும் வெப்பமானியால் அடிக்கடி வெப்பநிலை பரிசீலிக்கப்படுகிறது எனவும், மேலும் குளிரூட்டல் அறையின் கதவு திறக்கப்படும் போது அது வெளி வெப்பநிலையில் திறக்கப்படுகிறது என்பதால் வெப்பநிலை உடனடி மாற்றம் காட்டுவதாகவும், வெளிப்புறமாக வெப்பநிலையை பரிசோதிக்கும் போது குளிரூட்டல் அறையின் கதவுகள் திறக்கப்படுவதில்லை என்பதால் அதன் சரியான வெப்பநிலையை பெறுவதற்கு அது காரணமாக அமைகிறது எனவும்.

	vi. இந்த குளிரூட்டல் அறையின் குளிரூட்டல் அமைப்பை சேவை மற்றும் பராமரிப்பு மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் குளிரூட்டல் அறையின் குளிரூட்டல் அமைப்பை சுற்றி உறைந்திருந்த பனிக்கட்டிகளினால் நீர் அறையினுள் கசிதல் மற்றும் குளிரூட்டல் அறை கதவை இறப்பர் சீல் இட்டு சரி செய்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் தவறி உள்ளமை அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	குளிர் மருந்துகளை களஞ்சியப்படுத்தும் அறையில் நீர் கசிவு காணப்பட்டதுடன், அதற்கு காரணம் வாயு கசிவு என அவர்கள் குறிப்பிட்டுள்ளதாகவும், அதன் பின்னர் தொழில்நுட்ப உத்தியொகத்தரினால் அது சரி செய்யப்பட்டது எனவும், அது மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் புதிய இறப்பர் பட்டை கோரப்பட்டுள்ளதுடன், அதனை விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும்.
(ஜ)	மஹரகம போதனா வைத்தியசாலையினால் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கான குளிர் கொள்கலன் ரூ. 5,439,108 செலவில் 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வைத்தியசாலை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. எனினும், இந்த குளிர் கொள்கலன் வைத்தியசாலை தேவைக்கேற்றவாறு செய்யப்படவில்லை என மருந்தாளர்கள் குறிப்பிட்டு அதில் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதை தொடர்ந்து நிராகரித்துள்ளனர். அதன்படி மருந்தாளர்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு மேலும் ரூ.2,679,794 செலவில் அதனை 2022 நவம்பர் 28 ஆம் திகதி மறுசீரமைத்தல் நிறைவு செய்துள்ளதுடன், அது தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையை 16 மாதங்கள் தாமதித்து 2024 மார்ச் 16 ஆம் திகதியே பெறப்பட்டுள்ளது. எனினும், 2024 ஏப்ரல் 30 நிலவரப்படி மருந்துகளை களஞ்சியப்படுத்த வைத்தியசாலையினால் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. எனவே, ரூ. 8,118,902 பாரிய செலவில் நிறுவப்பட்ட இந்த குளிர் கொள்கலன் 5 வருடங்களுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. மேலும் 2020 பெப்ரவரி 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட HSM/F/MAH/2019/AQ-03 எனும் கணக்காய்வு விசாரணை மூலமும் இந்த குளிர் கொள்கலன் பயன்படுத்தப்படாமல் இருப்பது குறித்தும், அதனை விரைவாக சரி செய்து பயன்படுத்துமாறும் சுட்டிக்காட்டியுள்ள போதிலும், இன்றைய தினம் வரை அதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி பாரிய செலவு செய்யப்பட்ட இந்த குளிர் கொள்கலனை மேலும் தாமதிக்காமல் உரிய நிலைக்கு	இது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், இதுபோன்ற செயற்பாடுகளை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	உரிய குளிரூட்டி கொள்கலன் முதலில் நிறுவும் போது மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கு மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என மருந்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர் எனவும், அந்த நடவடிக்கைகளுக்கு டெண்டர் கோரப்பட்டு 15 மாதங்கள் கடந்தன எனவும், அதன்படி, சேவை பராமரிப்பு ஒப்பந்தம் பிரதான அதி குளிரூட்டி இயந்திரத்திற்கும் மேலதிக அதி குளிரூட்டி இயந்திரத்திற்கும் இடையே பரிவர்தண செய்தல் என்ற விடயம் நிறைவு செய்த பின்னர் இந்த கொள்கலனை பொறுப்பேற்பதற்கு மருந்தாளர்களினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது எனவும், குறைபாடுகளை சரிசெய்த பின்னர் இந்த குளிரூட்டி கொள்கலனை மருந்துகள் களஞ்சியப்படுத்தலுக்காக மருந்தாளர்களிடம் ஒப்படைக்கப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

	கொண்டு வந்து மருந்துகளை களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுட்டிக்காட்டுகிறேன்.		
(க)	களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு அருகில் நிறுவப்பட்டுள்ள கிணறுகளுக்கு பொருத்தப்பட்டிரந்த நீர் மோட்டர்கள் இயங்காததால் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையின் நீர் திட்டத்தின் ஊடாக நீரை பெறுவதற்கு வைத்தியசாலை பணிப்பாளரினால் எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக 2023 ஜனவரி மாதம் முதல் 2023 ஏப்ரல் மாதம் இறுதி வரையான காலப்பகுதிக்கு மாதாந்த நீர் கட்டணம் 4 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை அதிகரித்துள்ளது. இக்காரணத்தால் இந்த காலப்பகுதிக்குள் சுமார் 30 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது.	இவ்வாறான தீர்மனம் எடுப்பதற்கு காரணமான விடயங்களை உறுதி செய்து எழுத்துமூல தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	2023 பெப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரையான காலத்திற்குரிய நீர் கட்டணம் அதிகரிப்பதற்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணம் இந்த காலப்பகுதியல் மழை குறைவாக காணப்பட்டதால் கிணற்று நீர் குறைந்து நீருடன் சேறு கலப்பதால் எனவும், இக்காரணத்தால் 2023/03/03 ஆம் திகதி நீரை பரிசோதனை செய்யப்பட்டது எனவும், இந்த நீர் பருகுவதற்கு பொருத்தமான நிலையில் காணப்படவில்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், மீண்டும் 2023 மே மாதம் நீரை பரிசோதித்த போது பருகுவதற்கு பொருத்தமானது என அறிக்கை வழங்கப்பட்டது எனவும், ஆகையால் 2023 ஜனவரி முதல் ஏப்ரல் இறுதி வரை கிணற்று நீரை பயன்படுத்துவதை இடைநிறுத்த நேரிட்டது எனவும், இந்த காலத்தினுள் 300 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட புதிய நீர்த் தாங்கிகக்கான நீரை நிரப்ப நேரிட்டதால் நீர் கட்டணம் உயர்வதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது எனவும், நீர் கட்டணம் உயர்ந்ததையடுத்து நீர் வழங்கல் சபை உத்தியோகத்தர்கள் வந்து நிலத்தடி குழாய்களை ஆராய்ந்த போது நிலத்தடி குழாய்களில் நீர் கசிவுகளை பலவற்றை கண்டறிந்து அவற்றை சரி செய்தனர் எனவும், இதுவும் நீர் கட்டணம் உயர்வதற்கு காரணமாக இருந்தது எனவும், மேலும் இந்த காலப்பகுதியில் மழை இல்லாத காரணத்தால் வைத்தியசாலை வளாகத்தில் உள்ள பூச் செடிகளுக்கு நீர் பாய்த்ததாலும் இவ்வாறு நீர் பயன்பாடு அதிகரித்தது எனவும்.

4.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம்

	கணக்காய்வு அவதானிப்புகள் ----------	பரிந்துரை ----------	பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள் ----------
சுகாதார அமைச்சுக்கான 31 நிலையான அபிவிருத்தி குறிகாட்டிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 16 குறிகாட்டிகள் மதிப்பாய்வில் உள்ள ஆண்டுக்கான முன்னேற்றத்தை அறிக்கையிடவில்லை. முன்னேற்றம் பதிவாகிய பின்வரும் குறிகாட்டிகள் தேவையான செயல்திறன் அளவை எட்டவில்லை.			
(அ)	குறியீட்டு எண் 3.2.1 இன்படி, 5 வயதிற்கு குறைந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் 2030 ஆம் ஆண்டுக்குள் 100,000 இற்கு 7 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2023 டிசம்பர் 31 நிலவரப்படி 10.5 ஆக இருந்த அந்த மதிப்பு 2023 டிசம்பர் 31 அன்று 12.3 வரை பாதகமாக அதிகரித்துள்ளது.	2030 ஆகும் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதற்கு வருடாந்தம் பின்தொடர்தல்கள் மேற்கொண்டு தேவையான முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிலையான அபிவிருத்தி இலக்குகளின் சில மதிப்புகள் நிலையான மதிப்பில் காணப்படுவதுடன், இதற்கான பல மீளாய்வு கூட்டங்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் நடத்தப்பட்டன எனவும், அதன் போது நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு தேவையான ஏனைய நிறுவனங்களுடன் (சுகாதார அமைச்சு தவிர்ந்த) இது குறித்து மேற்கொண்டு செய்யவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது எனவும், இதற்கான அறிவுறுத்தல்கள் பெறப்பட்டன எனவும், மேலும் நிகழ்ச்சித் திட்டங்களை நெறிப்படுத்துவதற்கு தேவையான மனித வள பற்றாக்குறை இருப்பதாகவும், Covid 19 நாட்டின் பொருளாதாரத்திற்கு தாக்கம் செலுத்தியது எனவும்.
(ஆ)	குறியீட்டு எண் 3.2.2 இன்படி, புதிதாக பிறக்கும் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 1000 நேரடி பிறப்புகளுக்கு 4 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 6.5 ஆக இருந்த அந்த மதிப்பு 2023 டிசம்பர் 31 அன்று 7 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

(இ)	குறியீட்டு எண் 3.3.2 இன்படி, காச நோய் பரவல் விகிதம் 2030 ஆம் ஆண்டுக்குள் 100,000 இற்கு 13 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 29.7 ஆக இருந்த அந்த மதிப்பு 2023 டிசம்பர் 31 அன்று 41.6 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஈ)	குறியீட்டு எண் 3.3.5.1 இன்படி, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் 21,000 ஆக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 35,924 ஆக இருந்த அந்த மதிப்பு 2023 டிசம்பர் 31 அன்று 89,799 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(உ)	குறியீட்டு எண் 3.3.5.2 இன்படி, மனித ரேபிஸ் இறப்புகளின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் பூச்சியமாக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில் அது 16 ஆக அதிகரித்துள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஊ)	குறியீட்டு எண் 3.3.5.3 இன்படி, 2030 ஆம் ஆண்டளவில் யானைக் கால் நோய் தொடர்பான புதிய நிணநீர் அழற்சி சந்தர்ப்பங்கள் பூச்சியமாக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 இல் 322 ஆக இருந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் அது 908 ஆக அதிகரித்துள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(எ)	குறியீட்டு எண் 3.3.5.4 இன்படி, சிகிச்சைக்காக தொழுநோயாளிகளின் வருகை 2030 ஆம் ஆண்டளவில் 1,000 என்ற மதிப்பை பேணுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் 993 எனும் சிறந்த மதிப்பாக இருந்த இலக்கு 2022 ஆம் ஆண்டில் 1,580 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஏ)	குறியீட்டு எண் 3.3.5.5 இன்படி, தொழுநோயான Leishmaniasis அறிக்கையிடப்படும் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 100,000 இற்கு 1 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலுமஎன்ற குறைந்த மதிப்பில் பேணுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் 2637 ஆக	-அவ்வாறே-	-அவ்வாறே-

	இருந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 4277 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.		
(ஐ)	குறியீட்டு எண் 3.8.1.9 இன்படி, சிகிச்சை நிலை எதுவாக இருந்தாலும்18 வயதிற்கு மேற்பட்ட பெரியவர்களிடையே அதிகரிக்காத இரத்த அழுத்தத்தின் வயது தரப்படுத்தப்பட்ட பரவல் (Age ——Standardized Prevalence of Non-raised blood pressure) இன் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 80 போன்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 65.2 சதவீதமாக இருந்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஒ)	குறியீட்டு எண் 3.8.1.10 இன்படி, 18 - 69 வயதுக்கு உட்பட்ட பெரியவர்களின் நிர்ணய ப்ளாஸ்மா குளுகோஸ் (Age Standardized mean fastiring plusma glucose(mg/dl) இன் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 80 mg/d1 மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 104 mg/d1 சதவீதமாக இருந்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஓ)	குறியீட்டு எண் 3.8.1.11 இன்படி, 15 வயதுக்கு மேற்பட்டவர்களின் கடந்த 30 நாட்களில் புகைப்பிடிக்காதவர்களின் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 90 போன்ற மதிப்பில் பேணுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 73.8 சதவீதமாக இருந்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஔ)	குறியீட்டு எண் 3.a.1 இன்படி, வயது 18 – 69 இடையே நபர்களுக்கிடையே தற்போதைய புகையிலை பயன்பாட்டின் வயது தரப்படுத்தப்பட்ட பரவல் 2030 ஆம் ஆண்டளவில் 10 சதவீத மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 26.2 சதவீதமாக இருந்தது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

5. மனிதவள முகாமைத்துவம்

5.1 இணைக்கப்பட்ட பணியாளர்கள், பேச்சு பணியாளர்கள் மற்றும் தனிநபர் சம்பளத்திற்கான செலவு

இது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள் ----------	**பரிந்துரை** ----------	**பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துகள்** ----------
(அ)	சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்கள் மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்கான 2023 ஜூன் 30 ஆம் திகதி நிலவரப்படி ஊழியர்கள் தொடர்பாக திட்டமிடல் பிரிவினால் 2023 நவம்பர் 24 மற்றும் 27 ஆம் திகதி மின்னஞ்சல் ஊடாக கணக்காய்விற்கு அனுப்பப்பட்ட தகவல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	i. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்களுக்குரிய 2023 ஜூன் 30 ஆம் திகதி நிலவரப்படி ஊழியர்கள் தகவல்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	➢ சம்பள விகிதங்களின்படி மொத்த ஊழியர்கள் 95,948 மற்றும் அன்றைய தின நிலவரப்படி உண்மை ஊழியர்களின் எண்ணிக்கை 81,915 ஆகும். அதன்படி மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் 14,033 ஊழியர்கள் பற்றாக்குறை நிலவியது. எனினும் வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின்படி சமர்ப்பிக்கப்பட்ட ஊழியர்கள் பற்றிய தகவல்களின்படி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின்	சேயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு அத்தியவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் அதிகரிக்காமல்	ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படும் வெற்றிடங்கள் மற்றும் மிகை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிவுகளின் தலைவர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது எனவும்.

		எண்ணிக்கை 95,950 மற்றும் உண்மை ஊழியர்களின் எண்ணிக்கை 81,904 என்பதுடன், பற்றாக்குறை 14,046 ஆகும்.	உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாட்களை நியமித்தல் வேண்டும்.	
		➢ டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் முறையற்ற விதத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கள நுளம்பு ஒழிப்பு உதவியாளர்கள் சுமார் 1,103 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், ஊழிர்கள் பற்றிய தகவல்களில் சேர்க்கப்பட்டுள்ள பதவிகள் 5 மட்டுமே ஆகும். மாதாந்தம் சுமார் ரூ. 27,000 சம்பளத்தின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இந்த பதவிகளின் எண்ணிக்கைக்காக 2024 மார்ச் வரையிலும் இதற்கான முறையான அனுமதி பெறப்படவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	ii.	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி 49 பதவிகளுக்குரிய 14,307 உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவிய போதிலும், 2,942 உத்தியோகத்தர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த மிகை மற்றும் பற்றாக்குறையை சமநிலைப்படுத்தாமல் இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்படுவது முகாமைத்துவ பலவீனம் என அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iii.	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி மேற்படி மிகை மற்றும் பற்றாக்குறை நிலவிய பதவிகளுக்கு மேலதிகமாக மேலும் 201 பதவிகளுக்கு 2,932 உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவியது. இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டு உரிய பதவிகளை தொடர்ந்து பராமரிக்க தேவையெனின், அந்த பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தேவையற்ற பதவிகளை	-அவ்வாறே-	-அவ்வாறே-

	நீக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.		
	iv. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மேற்படி மிகை மற்றும் பற்றாக்குறை காணப்படும் பதவிகளுக்கு மேலதிகமாக மேலும் 26 பதவிகளுக்கு 283 ஊழியர்கள் மேலதிகமாக காணப்பட்டனர். இவ்வாறு அங்கீகாரமற்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் மற்றும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு பெறப்பட்ட அதிகாரம் குறித்து கணக்காய்வில் சிக்கலாக இருந்ததுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக செயலாளர் (பொறியியல் சேவை) பதவி அங்கீகாரம் பெறப்படாத பதவி என குறிப்பிடப்பிடப்பட்டுள்ளமை சிக்கலாக உள்ளது. இந்த பதவி முறையாக அங்கீகாரம் பெறப்பட்ட பதவி என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2017 நவம்பர் 07 ஆம் திகதி அமைச்சிற்கு பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) எனும் பெயரில் இலங்கை திட்டமிடல் சேவையில் விஷேட தரத்திற்குரிய ஒரு பதவிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், கணக்காய்வுத் தினம் வரை அந்த பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(ஆ)	கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பல பதவிகளுக்கு ஊழியர் பற்றாக்குறை நிலவியமை அவதானிக்கப்பட்டது. இந்த பற்றாக்குறை நிலவிய பதவிகளில் 22 பதவிகளுக்கு 13,868 ஊழியர்கள் பற்றாக்குறையாக காணப்பட்டது. சுகாதார சேவையின் தரத்தை பராமரித்து பாதுகாத்து பொது மக்களுக்கு சிறந்த சேவைகள் வழங்குவதை உறுதி செய்வதற்கு இந்த பதவிகளில்	-அவ்வாறே-	-அவ்வாறே-

	காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதன் அவசியம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		
(இ)	சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விஷேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை திருத்தம் தொடர்பாக (முன்மொழியப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 2015 வரை) எனும் தலைப்பில் சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை அமைச்சினால் 2009 ஆகஸ்ட் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2010 பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி தேசிய சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவினால் NSCC/03/04/Cabinet Decision மற்றும் 2010 ஜனவரி 25 ஆம் திகதிய அமைச்சரவை செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பரிந்துரைகளுக்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.		
	i. விஷேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கையை 2837 ஆக அதிகரிப்பதற்கு பத்தாண்டு திட்டத்தின் கீழ் அங்கீகரித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உதவி சேவைகளின் ஒருங்கிணைந்து திட்டமிடுவதற்கும்	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன், எதிர்கால தேவைக்கு ஏற்றவாறு விஷேட மருத்துவர்களை பயிற்றுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.	CA/AQ/FCC05/INFO/2023/42 மற்றும் 2024.01.03 ஆம் திகதி பதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
	ii. உரிய இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மருத்துவ நிபணத்துவத்தை உருவாக்குவதற்கும்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iii. விஷேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கையை மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைக்கேற்ப 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் நிரப்ப திட்டமிடுவதற்கும்.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	iv. விஷேட மருத்துவ நிபணர்களுக்கான தேவைக்கு ஏற்ப மருத்துவர்களுக்கு பட்டப்பின்பட்ட மருத்துவ பயிற்சி சிரேஷ்ட பதிவாளர் மட்டத்தில் வழங்குவதை ஒரு கொள்கையாக அங்கீகரித்தல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	இந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் திட்டமிட்டபடி நாட்டிலேயே விஷேட மருத்துவர்களை பயிற்றுவித்தல், சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் 2020 ஆண்டுக்குப் பின்னர் புதிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு தேவையான திருத்தங்கள் போன்றவற்றுக்கான அனுமதி பெறப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		
(ஈ)	மொத்த சுகாதார சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பணியமர்த்தப்பட்ட விஷேட மருத்துவ நிபுணர்கள் பற்றிய தகவல்களைப் பெறுவது எனும் தலைப்பில் உங்களுக்கு அனுப்பப்பட்ட எனது இலக்கம் MED/B/MH/01/INFO/2023/33 மற்றும் 2023 ஜூலை 28 ஆம் திகதிய தகவல்கள் சேகரித்தல் கடிதத்திற்கு கணக்காய்வுத் தினம் வரையிலும் பதில்கள் வழங்கப்படவில்லை என்பதுடன், பணிப்பாளர் மூன்றாம் நிலை பராமரிப்பு பிரிவினால் எனக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட தகவல்களுடன் மேற்கொள்ளப்பட்ட சரிபார்ப்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	i. அமைச்சரவை அனுமதியின்படி விஷேட துறைகள் 58 இற்கு அங்கீகரிக்கப்பட்ட விஷேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை 2837 என்றபோதிலும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி விஷேட துறைகள் 50 இற்கான அந்த எண்ணிக்கை 2740 ஆகும். இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	ii. விஷேட மருத்துவ துறைகள் 08 தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட 66 பதவிகளுக்கு மருத்துவர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	iii.	விஷேட துறைகள் இரண்டிற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட தகவல்களின்படி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கைக்கும் இடையே 31 பதவிகள் வித்தியாசம் காணப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	iv.	அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதமாகும் போது விஷேட துறைகள் 35 இற்கான 972 விஷேட மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. நாட்டில் தரமான சுகாதார சேவையை பேணுவதற்கு இந்த நிலைமை சாதகமற்றது என்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	v.	மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விஷேட துறைகள் 35 இற்கான 972 விஷேட மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவிய அதேவேளை விஷேட துறைகள் 12 இற்கு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விட 113 விஷேட மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் விஷேட மருத்துவ நிபுணர்களை பணியமர்த்துவதற்கு பெறப்பட்ட அங்கீகாரம் மற்றும் அவர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு பெறப்பட்ட ஒப்புதல் என்ன என்பது குறித்து கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கவில்லை.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	vi.	அமைச்சரவை அனுமதியைப் பெறும் போது அடையாளம் காணப்படாத மற்றும் பின்னர் இந்த விஷேட துறைக்காக விஷேட மருத்துவர்களை பணியமர்த்துவதற்கான முறையான அனுமதி பெறப்படாத 12 விஷேட பிரிவுகளில் 141 விஷேட மருத்துவ நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அனுமதி பெறப்படாத விஷேட துறைகளுக்கு விஷேட மருத்துவ நிபுணர்களை பணியமர்த்துவதற்கு பெறப்பட்ட அங்கீகாரம் மற்றும் அவர்களுக்கான சம்பளம் மற்றும்	-அவ்வாறே-	-அவ்வாறே-

		கொடுப்பனவுகள் வழங்குவதற்கு பெறப்பட்ட ஒப்புதல் என்ன என்பது குறித்து கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கவில்லை.		
	vii.	அமைச்சின் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 ஜூன் 30 ஆம் திகதி அன்று ஊழியர்கள் தொடர்பான தகவல்களின்படி, மத்திய அரசிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களின் கீழ் 2023 ஜூன் 30 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட விஷேட மருத்துவர்களின் எண்ணிக்கை 2018 எனவும், உண்மையான எண்ணிக்கை 1915 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மூன்றாம் நிலை பராமரிப்புப் பிரிவு வழங்கிய தகவல்களின்படி 2023 நவம்பர் நிலவரப்படி மத்திய அரசிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்ட விஷேட மருத்துவர்களின் எண்ணிக்கை 1618 என குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 5 மாத காலப்பகுதியில் விஷேட மருத்துவர்கள் 297 இனால் வேறுபட்டமை ஏற்றுக் கொள்ளமுடியாது என்பது அவதானிக்கப்பட்டது. இதன்படி இரண்டு பிரிவுகளினாலும் முன்வைத்த தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகவும் அதன்படி இந்த தகவல்களின் சரியான தன்மை சிக்கலாக இருப்பது அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	viii.	திட்டமிடல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி 2023 ஜூன் 30 நிலவரப்படி 50 வைத்தியசாலைகள்/ நிறுவனங்களில் 226 விஷேட மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறை உள்ளனர். இவ்வாறு 226 விஷேட மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறை காணப்பட்ட நிலையில் 23 வைத்தியசாலைகள்/ நிறுவனங்களில் 123 விஷேட மருத்துவ நிபுணர்கள் மிகையாக உள்ளனர்.	-அவ்வாறே-	-அவ்வாறே-

	ix.	2009 ஆகஸ்ட் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய அந்த தினமாகும் போது 971 ஆக இருந்த அங்கீகரிக்கப்பட்ட விஷேட மருத்துவர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டுக்குள் 2837 வரை அதிகரிப்பதற்கு ஒப்புதல் கோரப்பட்டுள்ளதுடன், இந்த விஷேட மருத்துவர்களின் எண்ணிக்கை விஷேட மருத்துவ துறைகளுக்கு அமைய மற்றும் வைத்தியசாலைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட இணைப்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், அமைச்சினால் இந்த 2837 விஷேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையாக கருத்தில் கொண்டு விஷேட துறைகளை பொருட்படுத்தாமல் பணியமர்த்தப்படுவது அவதானிக்கப் பட்டது. அதன்படி, திட்டமிடல் பிரிவினால் ஊழியர்கள் தொடர்பான விபரங்களைத் தயாரிக்கும் போது Consultant Dental Surgeon மற்றும் Medical Consultant என்ற இரு பிரிவுகளின் கீழ் மட்டுமே தகவல்கள் சமர்ப்பித்துள்ளன. இது சரியான தகவல் அல்ல என்பதுடன், அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட விஷேட தரத்தின் கீழ் பணியாளர் தகவல்கள் தயாரிக்கப்பட வேண்டும். மேலும் விஷேட மருத்துவர்களை பணியமர்த்தும் போது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் அவர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். ஏதேனும் திருத்தம் தேவை எனில், முறைப்படி ஒப்புதல் பெற்ற பின்னரே செய்ய வேண்டும்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	x.	அமைச்சரவை அங்கீகாரம் பெறும்போது முதன்மை நோக்கமாக மருத்துவர்களின் விருப்பத்திற்கேற்ற அன்றி தேவைக்கேற்ப விஷேட துறைகளை தெரிவு செய்வதை தீர்மானிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அமைச்சினால் அதனை பின்பற்றாது மருத்துவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப விஷேட துறைகளை தேர்ந்தெடுப்பதற்கு அனுமதித்துள்ளமை	-அவ்வாறே-	-அவ்வாறே-

		அவதானிக்கப்பட்டது. இந்த நிலமையின் கீழ் சில விஷேட துறைகளில் பற்றாக்குறை நிலவும் போது சில விஷேட துறைகளில் மிகையாக காணப்பட்டனர்.		
	xi.	மேற்படி அவதானிப்புகளின்படி, நாட்டில் சுகாதார சேவையின் தரத்தை பேணுவதற்கு பின்வரும் விடயங்களில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	-அவ்வாறே-	-அவ்வாறே-
		➢ சுகாதார சேவையில் உள்ள விஷேட மருத்துவ நிபுணர்கள் தொடர்பில் முறையான தரவு அமைப்பை உருவாக்கி புதுப்பித்து பராமரித்தல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
		➢ நிகழ்காலத்திற்கு ஏற்ற வகையில் விஷேட மருத்துவ நிபுணர்களின் தேவையை கண்டறிந்து அதற்குத் தேவையான முறையான அனுமதிகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
		➢ குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்குத் தேவைப்படும் விஷேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கையைக் கணித்து அதற்கான முறையான அனுமதியைப் பெற்று உரிய விஷேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கையை உருவாக்க முறையான திட்டத்தை தயாரித்து செயற்படுத்தல் மற்றும் அந்த திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
		➢ தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப விஷேட மருத்துவ துறைகளை தேர்ந்தெடுத்து பட்டப்பின்பட்ட மருத்துவ பட்டப்படிப்பை முடிப்பதற்கு அனுமதிப்பதற்கு பதிலாக, எதிர்கால தேவைகளுக்கு (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ப) பொருந்தும் வகையில் சுகாதார சேவைக்கு தேவையான விஷேட மருத்துவர்களை உருவாக்க தேவையான பின்னணியை தயாரித்தல் மற்றும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப விஷேட மருத்துவ துறைகளை தேர்ந்தெடுக்கும் விஷேட மருத்துவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவி	-அவ்வாறே-	-அவ்வாறே-

	எண்ணிக்கையை விட மேலதிகமாக ஆட்சேர்ப்பு செய்வதை தவிர்த்தல், அவ்வாறே உள்நாட்டு தேவைக்கு அப்பால் விஷேட மருத்துவர்களை பயிற்சிகளுக்கு பரிந்துரைக்கப்படுவதாயின் சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து அவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைக் கண்டறியும் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.		
	➢ அதிக வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் காணப்படும் மற்றும் அதிக ஊழியர் வருவாய் உள்ள விஷேட துறைகளை கண்டறிந்து அந்த துறைகளுடன் தொடர்புடைய அதிகளவான விஷேட மருத்துவ நிபுணர்களை உருவாக்குவதற்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ முறையான திட்டத்தின்படி தற்போதுள்ள விஷேட மருத்துவ நிபுணர்களை பணியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், இதன்போது மேலதிகமாக பணியமர்த்தப்பட்ட விஷேட மருத்துவ நிபுணர்களை பற்றாக்குறை நிலவும் வைத்தியசாலைகளில்/ நிறுவனங்களில் பணியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், இதற்காக நியாயமான வெளிப்படையான ஒரு இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்தல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ 2009 ஆம் ஆண்டில் திட்டமிட்ட விஷேட துறைகள் மற்றும் அந்தந்த விஷேட துறைகளுக்காக 2015 ஆம் ஆண்டிற்குள் உருவாக்குவதற்கு அமைச்சினால் திட்டமிடப்பட்ட விஷேட மருத்துவர்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ள போதிலும், அந்த திட்டம் 2024 ஆண்டிலும் சாத்தியப்படுத்த	-அவ்வாறே-	-அவ்வாறே-

	முடியவில்லை என்பதால் காணப்படும் தடைகள் மற்றும் வரம்புகளை கண்டறிந்து எதிர்காலத் திட்டத்தை தயாரித்தல், அதனை யதார்த்தமாக்க அதனுடன் இணைந்ததாக பின்தொடர்தல் பொறிமுறைகளையும் திட்டமிட்டு செயற்படுத்தல்.		
	➢ தற்போது உள்ள மற்றும் எதிர் காலத்தில் உருவாக்கப்படும் விஷேட மருத்துவர்களை நாட்டினுள் தக்கவைப்பதற்கு பொருத்தமான ஊக்கமளிக்கும் திட்டத்தை தயாரித்து செயற்படுத்தல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
	➢ நிர்வாக சேவைகளில் பணிபுரியும் விஷேட மருத்துவர்களை அந்தப் பதவிகளில் இருந்து நீக்கி அவர்கள் நிபுணத்துவம் பெற்ற துறைகளில் பணியமர்த்தல்.	-அவ்வாறே-	-அவ்வாறே-
(உ)	அமைச்சின் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவைக்குரிய 14 சேவைகளுக்காக 2023 ஜூன் 30 ஆம் திகதிக்கு மாகாண சபையின் கீழ் மற்றும் மத்திய அரசின் கீழ் சேவையாற்றுவதாக குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 17,238 என்பதுடன், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் 3) இனால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி அந்த சேவைகளுடன் தொடர்பான 2023 ஜூன் 30 ஆம் திகதிக்கு மாகாண சபையின் கீழ் மற்றும் மத்திய அரசின் கீழ் சேவையாற்றுவதாக குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 6,418 ஆகும். இதன்படி இந்த இரு பிரிவுகளினாலும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பது அவதானிக்கப்பட்டது.	அமைச்சின் கீழ் உள்ள அனைத்து சேவைகள் தொடர்பான முறையான புதுப்பித்த தரவு அமைப்பை நியமன அதிகாரியினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் பராமரிக்கப்பட வேண்டும் என்பதுடன், சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலத்திற்குரிய அறிக்கைகள் உருவாக்கப்படுவதையும் தடுப்புப் பட்டியலில் சேர்க்கும் செயல்முறைகள் சரியான முறையில் செயற்படுத்தப் படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.	பிரதிப் பணிப்பாளர் நாயகம் திட்டமிடல் பிரிவினால் 06 மாதங்களுக்கு ஒருமுறை முழு ஊழியர் பற்றிய தகவல்களையும் புதுப்பிக்கப்படுகிறது எனவும், ஆனாலும் துணை மருத்துவ சேவைக்குரிய ஊழியர்கள் பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் கிளையின் தேவைக்கேற்ப மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன என்பதுடன், சேவையை வெறிதாக்கல், ஓய்வு பெறல், இடமாற்றம் போன்ற காரணங்களால் ஊழியர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் பி.ப.நா (திட்டமிடல்) பிரிவின் தகவல்களுடன் ஒப்பிடும் போது எண்ணிக்கை வேறுபடலாம் எனவும்.

(ஊ)	அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டத்தின் XVIII அத்தியாயத்தின் 244 வது விதிமுறையின்படி ஒவ்வொரு அரச ஊழியர்களும் இடமாற்றங்களுக்கு உட்பட்டவர்கள் எனவும், 247 வது விதிமுறையின்படி ஒவ்வொரு அரச ஊழியர்களையும் இடமாற்றம் செய்யும் போது பல்வேறு நோக்கங்களை அடைவதற்காக அனைத்து அரச ஊழியர்களும் இடமாற்றம் செய்வதற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் எனினும், 2158 உத்தியோகத்தர்கள் 06 வருடம் முதல் 39 வருட காலமாக சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையில் சேவையாற்றி வருவது அவதானிக்கப்பட்டது.	அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பதில் வழங்கப்படவில்லை.
(எ)	சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையில் பல் சிகிச்சைப் பிரிவு நிறுவப்படாத நிலையில் மற்றும் வைத்தியசாலையின் கோரிக்கையின்றி தற்போது போதியளவு வைத்தியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள எலும்பு பல் மருத்துவ கிளினிக்கிற்கு உதவி பல் சத்திர சிகிச்சைநிபுணர்கள் இருவர் 2022 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டுள்ளனர்.	உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தின் போது உரிய உத்தியோகத்தரை பயன் பெறக்கூடியவாறு பணியமர்த்துவதற்கு தேவையான பௌதீக மற்றும் ஏனைய மனித வளங்கள் அந்த நிறுவனத்தில் உள்ளதா மற்றும் அந்த நிறுவனத்தினால் உத்தியோகத்தரின் தேவை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.	இந்நியமனம் அமைச்சினால் தயாரித்த D/DS/F/Misc/160/2019 மற்றும் 2021.07.06 ஆம் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டின் பல் சத்திர சிகிச்சை நிபுணர்களின் இடமாற்ற ஆவணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன், இந்த இடமாற்ற ஆவணத்திற்கு முறையாக அரச சேவைகள் ஆணைக் குழுவின் இல. HSC/TRA/DEN/14/06/2019 (Vol 1) மற்றும் 2021.07.02 எனும் கடிதத்தின் மூலம் அதற்கான அனுமதி பெறப்பட்டது எனவும், மேலும், 2023 ஆம் ஆண்டில் இந்த வைத்தியசாலைக்கு இவ்விரு மருத்துவர்களின் சேவை அவசியமற்றது என அறிவிக்கப்பட்டதையடுத்து இவ்விரு மருத்துவர்களும் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும்.

(ஏ)	கடந்த சில வருடங்களாக புதிதாக நிறுவப்பட்டுள்ள புதிய பிரிவுகள் மற்றும் காணப்பட்ட பிரிவுகளின் சேவைகள் விரிவாக்கத்துடன் இணைந்ததாக போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு தேவையான ஊழியர்களை அதிகரிப்பதற்கு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 2018 செப்டம்பர் 25 ஆம் திகதி முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு மதிப்பாய்வு ஆண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொறுப்பான உத்தியோகத்தர்களினால் இது குறித்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2018 ஆம் ஆண்டின் பின்னர் பல தடவைகள் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோரி முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு பல கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை ஊழியர்களின் எண்ணிக்கையில் திருத்தம் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை.

பீ. மாசகோரல
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்திற்காக

அத்தியாயம் 4

செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

சேவைகளை வழங்குவதில் அதிக செயல்திறன் மற்றும் வினைத்திறனை அடைவதற்கு சுகாதாரப் பராமரிப்புத்துறைக்கு செயல்திறன் பகுப்பாய்வு முக்கியமான தொன்றாகும். . தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகளைப் பயன்படுத்தி செயல்திறனை அளவிடுவதன் மூலம் சுகாதார நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைக் காலப்போக்கில் கண்காணிக்க முடியும். இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சு ஒரு தேசிய சுகாதார செயல்திறன் கட்டமைப்பினை அடையாளம் கண்டுள்ளது. இந்த குறிகாட்டிகள் சுகாதார மேம்பாடு மற்றும் அடிப்படை மூலோபாய முடிவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் அடித்தளமாக பயன்படுத்தப்படும்.தேர்ந்தெடுக்கப்பட்ட சில முக்கியமான குறிகாட்டிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

குறிகாட்டி	*2019*	*2020*	*2021*	*2022*	*2023*
தாய் இறப்பு விகிதம் 100,000 உயிர் பிறப்புகளுக்கு (குடும்ப சுகாதார பணியக தரவு))	*28.83*	*30.2*	*47.04**	தரவு இறுதி செய்யப்படவில்லை	தரவு இறுதி செய்யப்படவில்லை
சிசு இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு (குடும்ப சுகாதார பணியக தரவு)	*10.1*	*8.4*	*9.1*	*10.1*	
ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு (குடும்ப சுகாதார பணியக தரவு)	*11.0*	*9.8*	-	*12.3*	*12.3*
காசநோய் சிகிச்சை நல்விளைவு விகிதம்(காசநோய் மற்றும் மார்பு நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய திட்டம் தரவு)	*84.1%*	*84.2 %*	*79.4*	*78.1*	தரவு கிடைக்க பெறவில்லை
டெங்கு நோய் இறப்பு விகிதம் (டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு)	*0.15*	*0.11*	*0.08*	தரவு கிடைக்கபெறவில்லை	
(15 வருடங்களுக்கும் குறைவானது) தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் (தொழுநோய் எதிர்ப்பு வேலைத்திட்டம் தரவு)	*181*			தரவுகிடைக்க பெறவில்லை	
தற்போது ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சையைப் பெறும் எச்.ஐ.வி உடன் வாழும் மக்களின் சதவீதம் (தேசிய பாலியல் நோய் / எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் தரவு)	*51*	*51.72*	*66.59*	*68.00*	
1000 தொற்று பாதிக்கப்படாத மக்களில் எச்.ஐ.வி தொற்றப்பட்ட மக்களின் எண்ணிக்கை(தேசிய பாலியல் நோய் / எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் (NSACP)தரவு)	*0.01*	*0.01*	*0.01*	*0.01*	*0.01*

சுகாதார பணியாளர் திணிவு (10,000 நபர்களுக்கு) (வருடாந்திர சுகாதார அறிக்கை)	மக்கள் தொகை 21,803,000	மக்கள் தொகை 21,919,000	மக்கள் தொகை 22,156,000	மக்கள் தொகை 22,181,000	மக்கள் தொகை 22,037,000
மருத்துவ நிபுணர்கள்	1.19 (2,606)	1.125 (2,730)	1.33 (2,950)	1.33 (2,959)	தரவு கிடைக்க பெறவில்லை
மருத்துவ உத்தியோகஸ்தர்கள் (மருத்துவ நிர்வாகிகள் & மருத்துவ நிபுணர்கள் தவிர)	8.09 (17,652)	8.45 (18,520)	8.77 (19,432)	9.07 (20,122)	தரவு கிடைக்க பெறவில்லை
பல் மருத்துவ உத்தியோகஸ்தர்கள்	0.71 (1,561)	0.71 (1,564)	0.79 (1,757)	0.76 (1.689)	தரவு கிடைக்க பெறவில்லை
தாதி உத்தியோகஸ்தர்கள்	21.5 (46,841)	21.2 (46,385)	22.5 (49,765)	23.0 (51,046)	தரவு கிடைக்க பெறவில்லை
மருந்தாளர்கள் மற்றும் மருந்து கலவையாளர்கள்	1.61 (3,501)	1.67 (3,673)	1.68 (3,716)	1.66 (3,676)	தரவு கிடைக்க பெறவில்லை
மருத்துவச்சிகள் உள்ளிட்ட மேற்பார்வை மருத்துவச்சிகள் மற்றும் மருத்துவமனை மருத்துவச்சிகள்	3.97 (8,666)	4.02 (8,817)	4.22 (9,347)	4.1 (9,100)	தரவு கிடைக்க பெறவில்லை
ஆதார மற்றும் அதற்கு மேட்பட்ட வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கும் தன்மை (SARA சர்வே தரவு)					தரவு கிடைக்க பெறவில்லை
5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் வளர்ச்சி குன்றியவர்கள் (குடும்ப சுகாதார பணியக தரவு)	8.4 (ஆர் .எச் .எம் .ஐ .எஸ்)	8.2 (ஆர் .எச் .எம் .ஐ .எஸ்)	8.3	9.2	10.3*
5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் நிறை குறைந்தவர்கள் (குடும்ப சுகாதார பணியக தரவு)	9.9 (ஆர் .எச் .எம் .ஐ .எஸ்))	8.6 (ஆர் .எச் .எம் .ஐ .எஸ்))	7.8	10.1	10.0*

குறிகாட்டி	2019	2020	2021	2022	2023
குழந்தை நோய்த்தடுப்பு: மூன்று அளவுகளைக் கொண்ட டிஃப்தீரியா-டெட்டனஸ்-பெர்டுசிஸின் தடுப்பூசி பெறும் குழந்தைகளின் சதவீதம் (தொற்று நோயியல் பிரிவு தரவு)	98% (தோற்றுநோய்பிரிவு)	<95	<95	<95	<95
இருதய நோய், புற்றுநோய், நீரிழிவு நோய் அல்லது நாள்பட்ட சுவாச நோய் ஆகியவற்றால் ஏற்படும் இறப்பு விகிதம் (உலகளாவிய சுகாதார ஆய்வக தரவு)	தரவுகிடைக்கபெறவில்லை				
10,000 மருத்துவமனை- நோயாளி நாட்களுக்கு எம்.ஆர்.எஸ்.ஏ பாக்டீரியா நோய் விகிதம்	சராசரி 1.14 IQ வரம்பு0.52-1.56	சராசரி 0.7 IQ.56-1.81			
எல்.எஸ்.சி.எஸ்அறுவை சிகிச்சையின் பின் தள நோய்த்தொற்று வீதத்தின் சதவீதம்	சராசரி 0.67% ஐ.கியூ வரம்பு 0.34%-1.4%	சராசரி 0.5% ஐ.கியூ வரம்பு 0.20%-0.86%			
அறுவை சிகிச்சை நிலைய பட்டியலின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சைகளின் விகிதம் ஒரு மாதத்தில் ஒத்தி வைக்கப்படுகிறது அல்லது குறியிடப்பட்ட அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கும் நேரம்	4.995%	2.85%			
அறுவை சிகிச்சை பாதுகாப்பு சரிபார்ப்பு பட்டியலைப் பின்பற்றும் வீதம்	91.1%	89.89%			
ஆய்வக பரிசோதனைகள் இல்லாமல் OPD இல் காத்திருக்கும் நேரம் (நிமிடங்கள்)	48.5	44.15			

சுதேச மருத்துவத்துறையின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

- உள்நாட்டு மருத்துவ சேவைகளின் தரம்
- தரமான மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் தரமான தரப்படுத்தப்பட்ட மருந்துகள் மருந்துகளை உற்பத்தி செய்தல்
- பாரம்பரிய மருத்துவம் மற்றும் மருத்துவ அறிவைப் பாதுகாத்தல்
- துறையில் ஆராய்ச்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்
- ஆரம்ப சுகாதாரம் மற்றும் தொற்றாத நோய் கட்டுப்பாடு ஆகியவற்றில் உள்நாட்டு மருத்துவத்தின் பங்களிப்பு

குறிகாட்டி	மருத்துவமனையின் பெயர்											
	இலங்கை தேசிய வைத்தியசாலை	தேசிய வைத்தியசாலை கண்டி	போதனா வைத்தியசாலை அனுராதபுரம்	போதனா வைத்தியசாலை பதுளை	போதனா வைத்தியசாலை .	போதனா வைத்தியசாலை கொழும்பு வடக்கு	போதனா வைத்தியசாலை கொழும்பு தெற்கு	போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்	போதனாவைத்தி யசாலை களுத்துறை	போதனா வைத்தியசாலை கராபிட்டி	போதனா வைத்தியசாலை குருணாகல்	போதனா வைத்தியசாலை தருநாகல்
ஆண்டிற்கான டெங்கு மரண விகிதம்	0.09	0.155	0	0.05	0.057	0.04	0.038	0.05	0.00	0.18	0	0.05
வருடத்தில் மாரடைப்புடன் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் இறப்பு விகிதம்	..	9.6	9.62	10.20	12	12.3		16.64	11.22	9.6	1.70	8.37
கட்டில்களின் எண்ணிக்கை	3,318	2741	1983	1486	1257	1815	1249	1,350	1169	1,980	679	2571
கட்டில்களை பாவித்த விகிதம்	74	60	66	67.30	67.4	64.5	95	77.70	62	71.53	61.87	61
ஆண்டில்மேற்கொள்ளப் பட்ட பிரதான சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை	39956	18304	16281	18324	24255	9478	6214	15005	6523	12877	5187	15768
தொற்றா நோய்களுக்கான சிகிச்சைக்காக தேவைப்படும் அத்தியாவசிய மருந்துவகைகளில் ஆண்டு முழுவதும் கிடைக்கப் பெறும்	In-door 53 Out-door 29	68.42	100	73.6	87.5	89.5	85.7	78.95	60.0	84.61	79.54	87.5

மருந்துகளின் சதவீதம்												
குறிகாட்டி	**இலங்கை தேசிய வைத்தியசாலை**	**தேசிய வைத்தியசாலை கண்டி**	**போதனா வைத்தியசாலை அனுராதபுரம்**	**போதனா வைத்தியசாலை பதுளை**	**போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு**	**போதனா வைத்தியசாலை கொழும்பு வடக்கு ராகம**	**போதனா வைத்தியசாலை கொழும்பு தெற்கு**	**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்**	**போதனாவைத்தியசாலை கஜுத்துறை**	**போதனா வைத்தியசாலை கராபிட்டி**	**போதனா வைத்தியசாலை குளியாபிட்டிய**	**போதனா வைத்தியசாலை குருநாகல்**
மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ஒருவரினால் மாதமொன்றுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை	*50069*	*28728*	*30293*	*38855*	*54656*	*69108*	*55984*	*37374*	*42082*	*29058*	*28763*	*57326*
மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகையில் உள்ளூர் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்ட சதவீதம்	*19.3*	*48.03*	*98.50*	*0.76*	*7.01*	*4.46*	*93*	*100*	*8.71*	*0.905*	*68.82*	*7.14*
ஆண்டில் சிசேரியன் சத்திரசிகிச்சைகளின் விகிதம் (100 உயிர்ப்பிறப்புகளில் மேற்கொள்ளப்பட்ட சிசேரியன் சத்திர சிகிச்சைகளின்	தரவு கிடைக்க பெறவில் லை	*43*	*35.45*	*44.6*	*35*	*47.3*	*44.9*	*39*	*39.33*	தரவு கிடைக்க பெறவில் லை	*45*	*55.86*

எண்ணிக்கை)												

குறிகாட்டி	இலங்கை தேசிய வைத்தியசாலை	தேசிய வைத்தியசாலை கண்டி	போதனா வைத்தியசாலை அனுராதபுரம்	போதனா வைத்தியசாலை பதுளை	போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு	போதனா வைத்தியசாலை கொழும்பு வடக்கு ராகம	போதனா வைத்தியசாலை கொழும்பு தெற்கு	போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்	போதனா வைத்தியசாலை கலுத்துறை	போதனா வைத்தியசாலை கராபிட்டி	போதனா வைத்தியசாலை தெனியாபிட்டிய	போதனா வைத்தியசாலை தருநாகல்
ஆண்டில் சிசேரியன் சத்திர சிகிச்சைகளின் பின்னரான தொற்று விகிதம்	NA	1.6	1.63	0.51	0.61	0.84	3.11	தரவு கிடைக்க பெறவில்லை	0.32	தரவு கிடைக்க பெறவில்லை	1.21	1.42
ஊழியர் வகுதிக்கு அமைவாக ஆண்டில் ஆகக் குறைந்தது ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்திலாவது கலந்து கொண்ட உத்தியோகத்தர்களின் சதவீதம்												
1.மருத்துவ உத்தியோகத்தர்கள்	94.7	56	0	81	60	14	2.1	79	51.38	45	13.53	17
2.தாதி உத்தியோகத்தர்கள்	142	78.5	0	80	65	40	0	50	57.61	68	11.11	226
3.வேறு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	51.17	24.35	0	52	0	4	0	18	51.36	64	19.80	35

4.கனிஷ்ட பணியாட்தொகுதி	*47*	*31*	*0*	*51.7*	*0*	*26*	*0*	*34*	*52.96*	*26*	*11.60*	*28*
ஒரு நாளைக்கு ஒரு மருத்துவ உத்தியோகத்தரினால் பரிசோதிக்கப்படுகின்ற வெளி நோயாளர்களின் சராசரி எண்ணிக்கை	*19*	*55*	*34*	*48*	*37*	*67*	*25*	*17*	*33*	*81*	*60*	*50*

குறிகாட்டி	**மருத்துவமனையின் பெயர்**		**வாரியத்தினால் நிர்வகிக்கப்பட்ட மருத்துவமனைகள்**		
	போதனா வைத்தியசாலை பேராதனை	**போதனா வைத்தியசாலை இரத்தினபுரி**	**ஸ்ரீ ஜெயவர்தனபுரா பொது மருத்துவமனை**	**விஜய குமாரதுங்க நினைவு மருத்துவமனை**	**டாக்டர்நெவில்பெர்னாண்டோ வைத்தியசாலை, மாலபே**
ஆண்டிற்கான டெங்கு மரண விகிதம்	0.004	0			
வருடத்தில் மாரடைப்புடன் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் இறப்பு விகிதம்	11.45	8.36			
கட்டில்களின் எண்ணிக்கை	1000	1383			
கட்டில்களை பாவித்த விகிதம்	73	75.90			
ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை	5440	29117			

தொற்றா நோய்களுக்கான சிகிச்சைக்காகதேவைப்படும்அத்தியாவசிய மருந்துவகைகளில் ஆண்டுமுழுவதும்கிடைக்கப்பெறும் மருந்துகளின் சதவீதம்	53.84	78			
மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ஒருவரினால் மாதமொன்றுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை	41210	70.2			
மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகையில் உள்ளூர் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்ட சதவீதம்	5.07	82.74			

குறிகாட்டி	மருத்துவமனையின் பெயர்		வாரியத்தினால் நிர்வகிக்கப்பட்ட மருத்துவமனைகள்		
	போதனா வைத்தியசாலை பேராதனை	போதனா வைத்தியசாலை இரத்தினபுரி	ஸ்ரீ ஜெயவர்தனபுரா பொது மருத்துவமனை	விஜய குமாரதுங்க நினைவு மருத்துவமனை	டாக்டர்நெவில்பெர்னாண்டோ வைத்தியசாலை, மாலபே
ஆண்டில் சிசேரியன் சத்திரசிகிச்சைகளின் விகிதம் (100 உயிர்ப்பிறப்புகளில் மேற்கொள்ளப்பட்ட சிசேரியன் சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை)	48	44.05			
ஆண்டில் சிசேரியன் சத்திர சிகிச்சைகளின் பின்னரான தொற்று விகிதம்	0.0002	0.30			
ஊழியர் வகுதிக்கு அமைவாக ஆண்டில் ஆகக் குறைந்தது ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்திலாவது கலந்து கொண்ட உத்தியோகத்தர்களின் சதவீதம்					
1.மருத்துவ உத்தியோகத்தர்கள்	17.29	70.39			
2.தாதி உத்தியோகத்தர்கள்	89.79	140.54			
3.வேறுதொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	73.78	238.91			
4.கனிஷ்ட பணியாட் தொகுதி	80.75	74.17			
ஒரு நாளைக்கு ஒரு மருத்துவ உத்தியோகத்தரினால் பரிசோதிக்கப்படுகின்ற வெளி நோயாளர்களின் சராசரி எண்ணிக்கை	22	52			

குறிகாட்டி	அபேக்ஷா மருத்துவமனை வைத்தியசாலை	காசல் வீதி பெண்கள் மருத்துவமனை	பெண்களுக்கான டி சோய்சா மருத்துவமனை	சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை	இலங்கை தேசிய பல் வைத்தியசாலை	தேசிய கண் வைத்தியசாலை	தேசிய தொற்று நோய்கள் நிறுவனம்	உள சுகாதார தேசிய நிலையம் - அங்கொடை	தேசிய சிறுநீரக, குருதி சுத்திகரிப்பு மற்றும் மாற்றீடு நிறுவனம் - மாளிகாவத்தை
ஆண்டிற்கான டெங்கு மரண விகிதம்	0	0		0.12	NA	NA	0.21	NA	
வருடத்தில் மாரடைப்புடன் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் இறப்பு விகிதம்	NA	0		0	NA	NA	5.42	தரவு கிடைக்க பெறவில் லை	
கட்டில்களின் எண்ணிக்கை	1012	469		1048	32	503	300	1341	
கட்டில்களை பாவித்த விகிதம்	68.37	57.50		57.10	75.43	44.75	56.52	75	
ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை	2735	3036		2397	189	25801	NA	NA	
தொற்றா நோய்களுக்கான சிகிச்சைக்காகதேவைப்படும்அத்தியாவசிய மருந்துவகைகளில் ஆண்டுமுழுவதும்கிடைக்கப்பெறும் மருந்துகளின் சதவீதம்	85	89.47		87.5	NA	100	75	49.93	
மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ஒருவரினால் மாதமொன்றுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை	32994	2115		23667		12723	26430	13824	
மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகையில் உள்ளூர் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்ட சதவீதம்	2.29	98.83		100	100	152	30	3.85	

குறிகாட்டி	அபேக்ஷா வைத்தியசாலை மஹரகம	காசல் வீதி பெண்கள் மருத்துவமனை	பெண்களுக்கான டி சோய்சா மருத்துவமனை	சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை	இலங்கை தேசிய பல் வைத்தியசாலை	தேசிய கண் வைத்தியசாலை	தேசிய தொற்று நோய்கள் நிறுவனம்	உள நகாதார தேசிய நிலையம் - அங்கொடை	தேசிய சிறுநீரக, குருதி சுத்திகரிப்பு மற்றும் மாற்றீடு நிறுவனம் - மாளிகாவத்தை
ஆண்டில் சிசேரியன் சத்திர சிகிச்சைகளின் விகிதம் (100 உயிர்ப்பிறப்புகளில் மேற்கொள்ளப்பட்ட சிசேரியன் சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை)	தரவு கிடைக்க பெறவில்லை	36.79		தரவு கிடைக்க பெறவில்லை		தரவு கிடைக்க பெறவில்லை	தரவு கிடைக்க பெறவில்லை	தரவு கிடைக்க பெறவில்லை	
